


## மத்திய மாகாண

# தமிழ் சாகித்திய விழா - 2003



ஒக்டோபர் 11 ஆம், 12 ஆம் திகதிகளில்
நுவரெலியா புதிய நகரசபை மண்டபத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறப்பு மலர்....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய மாகாண

# தமிழ் சாகித்திய விழா 2003

# சிறப்பு மலர்

மலர் ஆசிரியர்
*சு. முரளிதரன்*

**வெளியீடு**
**கல்வி, இந்துகலாசார, கைத்தொழில், சுரங்க, கனிப்பொருள் அபிவிருத்தி, சமூக சேவைகள், புனருத்தாபன, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கால்நடை அலுவல்கள் அமைச்சு**
**மத்திய மாகாணம் - கெட்டம்பே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிச் சோறுநிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்றுநினைத் தாயோ?

ஐயம் தீர்ந்துவிடல் வேண்டும் - புலை
அச்சம் போயொழிதல்வேண்டும் - பல
பையச் சொல்லுவதிலுங் கென்னே! - முன்னைப்
பார்த்தன் கண்ணனிவர் நேரா - எனை
உய்யக் கொண்டருள வேண்டும் - அடி
உன்னைக் கோடிமுறை தொழுதேன் - இனி
**வையத் தலைமை**யெனக் கருள்வாய் - அன்னை
வாழி! நின்னதருள் வாழி!



## பாரதி

---

**சாகித்திய விழா கீதம் 2003**

இராகம் : கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

உழைக்கின்ற தமிழர் செதுக்கிய மலைகளில்
உலவிட வருகின்றாள் தமிழ் மகளே - இன்று
உலவிட வருகின்றாள் தமிழ் மகளே
மலைத் தமிழ் முழக்கம் அவனியில் ஒலிக்கும்
வனப்பினை காணப்போம் இத்தினமே - நாம்
வனப்பினை காணப்போம் இத்தினமே
(உழைக்கின்ற தமிழர்)

அனுபல்லவி

மாவலியில் நனைந்த மலைத் தாய் சிலிர்த்து
மாண்புறுத் தமிழர் தாயுள் கலந்திடும் அழகு பார்
ஆவலுடன் அதில் ஆனந்தம் காணுவதை
பாவலர் காவியம் செய்து நிற்பார் - பலர்
பாவலர் காவியம் செய்து நிற்பார்

(உழைக்கின்ற தமிழர்)

சரணம்
வீரம் ஓங்கிய தியாகத்தின்மலையகம்
வெற்றி நினைந்து புதுப் பாதை வகுத்திடுமே
தீரம் சொல்லும் சாகித்திய விழா நாளில்
**வையத் தலைமைக் கொள்ள எழுந்திடுமே** - நம்
**வையத் தலைமைக் கொள்ள எழுந்திடுமே**

(உழைக்கின்ற தமிழர்)
பாடல் வடிவம் : சு. முரளிதரன்
இசை வடிவம் : தி. பார்த்தசாரதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| ஆசிச் செய்திகள் | 01-15 |
| தமிழ் சாகித்திய விழாவும் - தமிழர் உணர்வும் பேராசிரியர் பொன். சக்திவேல் | 16-17 |
| புறப்படு மலைத்தமிழா ! -கவிஞர் க. லிங்கதாசன்- | 17-17 |
| Indian Origin in Sri Lanka- Their Plight and Struggle for Survival - V. Radhakrishnan | 18-21 |
| நுவரெலியாவும் இதிகாசத் தொடர்புகளும் திருமதி. நிர்மலா பத்மநாதன் | 22-24 |
| மலையில் வளர்ந்த நாடகக் கலை கே. ஆர். இராமையா, | 25-27 |
| மலையக கலை இலக்கிய வளர்ச்சிக்கு இராகலை கலைஞர்களின் பங்களிப்பு மலையரசன் டி. ஆர். எஸ் | 28-30 |
| மலையக பண்பாட்டு விழுமியங்கள் பி. எம். லிங்கம் | 31-32 |
| விடியல் - வண்ணச்சிறகு- | 32-32 |
| மலையக பாடசாலைகளில் ஆரம்பக்கல்விச் சீர்த்திருத்த அமுலாக்கலில் அதிபரின் நடிபங்கு - பொ. இராமதாஸ் | 33-36 |
| தேயிலைத் தோட்டங்களில் பெண்கள்- ஓர் அவுஸ்ரேலிய பெண்ணின் பார்வை. - டானியல் எற்கின்ஸ் | 37-40 |
| அமரர் தொண்டமான் பதிவுகள் | 41-43 |
| வரையப்படாத வரலாறானார் - இரா.பாலகிருஷ்ணன் | 43-43 |
| நாடாளுமன்றத்தில் ஒலித்த தனித்துவ குரல்! | 44-47 |
| சகுனம் - லபுகலை சி.ராமச்சந்திரன் | 48-51 |
| சொந்த மண் - அட்டன். மகேந்திரன் | 51-51 |
| மலைகளின் மக்கள் - மு.சிவலிங்கம் | 52-55 |
| திக்கற்றோர் - பாலா சங்குப்பிள்ளை | 56-57 |
| குமரிக் காடு -மல்லிகை. சி. குமார்- | 58-59 |
| கோளயா - மொழிவரதன்- | 60-62 |
| முரண்பாடு - பி.மரியதாஸ்- | 63-66 |
| சி.வி-மலையக இலக்கிய வரலாற்றில் மறக்கப்பட முடியாத முகம் -அந்தனி ஜீவா- | 67-68 |
| பண்பிலே தெய்வமாய் அமரர் எஸ். திருச்செந்தூரன் பற்றிய ஒரு நெடுங்குறிப்பு - வ. செல்வராஜா M.A - | 69-74 |
| மலையக கல்வியும் மாணவர் இடைவிலகலும் நுவரெலியா மாவட்டம் ஒரு கண்ணோட்டம் - திருமதி.ராதிகா கணபதி, | 75-78 |
| ஒப்புநோக்கில் மலையக நவீன கவிதை வளர்ச்சி - கலாநிதி. செ. யோகராசா | 79-80 |
| குறிஞ்சித் தென்னவனை புரிந்துகொள்ளல். - பேராசிரியர் க.அருணாசலம் | 81-82 |
| புத்துலகம் படைத்திடுவோம் - குறிஞ்சி தென்னவன் - | 83-83 |
| காலத்தின் காலடியில் கேள்விக் கணைகளுடன் இன்றைய மலையகம் -பரசுராமன் சங்கர்- | 84-85 |
| நுவரெலியா ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலய வரலாறு -வே.சதாசிவம்- | 86-86 |
| மலையக படைப்பிலக்கியத்தின் பயன்பாட்டுவாதம் லெனின் மதிவாணம் | 87-89 |
| கவ்வாத்து -நூரளை சண்முகநாதன்- | 90-93 |
| பூதம் விழுந்து கிடக்கும் மலை - வ.ஐ.ச.ஜெயபாலன் - | 94-94 |
| ஈழத்தமிழ் இலக்கியத்தில் தனித்தன்மை வாய்ந்த மலையக இலக்கியம் - ஜே.சற்குருநாதன்- | 95-96 |
| காணி நிலம் வேண்டும் -காணி நிலம் | 96-96 |
| அழுது கழித்த இரவுகள் -சாரல்நாடன்- | 97-100 |
| அடையாளம் - தி. இரா.கோபாலன்- | 101-104 |
| மறைந்த எங்கள் எஸ். கிருஷ்ணனைப் பற்றி என். பாலசுந்தரம் | 105-106 |
| நானும் நான்கு சாகித்திய விழாக்களும் - வி. சாந்தகுமார்- | 107-116 |
| விஜேரட்ணம் அல்பர்ட் விஜேரத்தினசிங்கம் - இரா. பாலகிருஷ்ணன் ஜே.பி. | 117-117 |
| நுவரெலியா மாநகர சபை உறுப்பினர்கள் | 118-118 |
| உயிர்க்கும் நாட்களும்... மறிக்கும் நாட்களும்... சு. முரளீதரன் | 118-118 |
| மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா குடும்பத்தினர் | 119-119 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி ஆத்மகனானந்தா அவர்களது ஆசிச் செய்தி

எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் நுவரெலியாவில் நடைபெறவிருக்கும் தமிழ் சாகித்திய விழா வெற்றியுடன் அமைய வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

'உள்ளத்தனையனது உயர்வு' என்பது ஞானியர் வாக்கு. சிந்தனைகள் உயர்ந்து, விரிவடையும் அளவிற்கு மனித வாழ்க்கை அர்த்தமுடையதாகவும், வளமுடையதாகவும் ஆகிறது. அந்நிலையில் மனித நேயமும் வளர்கிறது. மனித நேயம் இல்லாதவன் மனிதப்பதர் என்றே கருதப்படுகிறான். இத்தகையவன் வாழ்ந்தும், 'இறந்தவர்க்கு சமம்' என்பார் சுவாமி விவேகானந்தர்.

கல்வியும், சமயமும் மனிதனது சிந்தனைகளை நெறிப்படுத்தும் இரு பெரும் சக்திகள் ஆகும். நெடுங்காலந்தொட்டு இவை மனித குலத்தை சன்மார்க்கத்தில் வழி நடத்தி வந்துள்ளன. உலகியல் மேம்பாடும், பண்பாட்டு வளர்ச்சியும் கல்வியின் இரு கண்கள் எனலாம். கல்வியைப் போன்றே சமயமும் இவ்விரு நோக்கங்களைக் கொண்டதாகும்.

ஆனால் இன்று கல்வி, பெரும்பாலும் உலகியல் வளாச்சியில் மட்டுமே அதிக கவனமும், நாட்டமும் கொண்டதாக உள்ளது. வாழ்க்கையில் பிறரோடு இணைந்து வாழும் பக்குவத்தைக் கற்றுக் கொடுக்காத இன்றைய கல்வி முறையால், மனித குலத்தை இன்று வாட்டி வதைக்கும் பெரும் யுத்தங்களை எங்ஙனம் தீர்த்து வைக்க இயலும் ?

இன்று உலக சமயங்களின் நிலைப்பாடும் இங்ஙனமே கேள்விக்குரியாகியள்ளது. அன்பையும், தியாகத்தையும் இன்னும் இதைப் போன்ற பல்வேறு நல்லியல்புகளையும் வளர்த்தெடுத்து, மக்களை இணைத்து வாழ வழி சமைக்க உதவாத சமயங்கள் தேவைதானா? ஆனால் தவறு சமயத்தில் இல்லை. தவறு மக்களிடம் தான் உள்ளது. புறச் சடங்குகளுக்கும், சமயக் கொள்கைகளுக்கும் அதி முக்கியத்துவத்தை அளித்து, இவையே உயர்ந்த சமயம் என்ற போதனைகளின் விளைவை இன்று உலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தங்கள் வாயிலாக மக்கள் உணாந்து கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையை மாற்றியமைக்க வேண்டுமெனில், உயாந்த சிந்தனைகளையும், இலட்சியங்களையும் வளர்க்க உதவும் செயற்பாடுகளை மக்களிடையே அதிகம் புகுத்த வேண்டும். தரமான நூல்களை வெளியிடல், கலைகளை ஊக்குவித்தல், பொதுப் பணிகளில் ஈடுபடல், கூட்டுப் பிரார்த்தனைகளை நடாத்தல். மன ஒருமைப்பாட்டுப் பயிற்சிகளை வளர்த்தல் என்பன அத்தகைய பயனுள்ள செயற்பாடுகளில் ஒரு சில.

மத்திய மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த தமிழ் சாகித்திய விழா மேலே குறிப்பிடப்பட்ட வகையில், மக்களிடையே நல்ல தாக்கங்களை ஏற்படுத்தும் என எதிர்ப்பார்க்கலாம். இவ்விழாவை முன்னின்று நடத்தும் கௌரவ அமைச்சர் திரு இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், அவரது அமைச்சு அதிகாரிகளுக்கும் எங்கள் மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

**சுவாமி ஆத்மகனானந்தா**

இராமகிருஷ்ண மிசன்,

கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கை ஜனாதிபதி
## President of Sri Lanka

I am very pleased to send a message felicitating the Sahithiya Vizha 2003 sponsored by Central Provincial Ministry of Hindu Cultural Affairs. Interest in ones culture and language is important to humanbeings because culture gives the central norms and determines values and attitudes of that particular society. In this sense, the sahithya Vizha organised by the central Provincial Ministry of Hindu Cultural Affairs is praiseworthy.

The sahithya Vizha, I am informed will provide a forum for songs, dances, literary works and oratorical contests based on the traditional culture of the up country Tamil community. The preservation and promotion of ones cultural values will invariably pave the way for a human and humane way of life for our people. Besides, this will help a great deal in resolving our political and social problems too.

I congratulate the Hon. Minister V. Radhakrishnan, officials in the Ministry of Hindu Cultural Affairs and every one who contributed to the success of this festival.

**Chandrika Bandaranayake Kumaratunga**
President


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மத்திய மாகாண ஆளுனர் எம். சி. கோபல்லாவ**
**மத்திய மாகாண கல்வி அமைச்சு நடத்தும் தமிழ் சாகித்திய விழாவுக்கான வாழ்த்துச் செய்தி**

## Message From the Hon. Governor – Central Province

It gives me great pleasure to send a message for the souvenir published on the occasion of the Tamil Sahitya viza – 2000 which is now being held annually by the Ministry of Cultural Affairs.

I find that the Hon. Minister of Education, Social services & Reconstruction, Mines and Mineral Resources Development, Estate Infrastructure and Animal Husbandry – V. Radhakrishnan has taken a very keen interest in staging this cultural Event annually. It has been growing rapidly and becoming a very popular event year by year. Art and Culture is part of our day life. This has been clearly shown by the sahitya Viza celebrations held annually. this occasion has given an opportunity for all sections of the Tamil Community to show their talents whether it be in dancing, singing, Writing or for the matter in every field of Art & Culture.

I am also glad to not that respected educationists, learned personalities and Artists who have rendered memorable service to the Tamil Community in the Central Province are rewarded on this occasion.

I Congratulate the Hon. Minister V. Radhakrisnan and his officials for holding this successful event annually and wish them all success.

*M.C. Gopallawa*
**Governor of Central Province**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கல்வி, இந்துகலாசார, கைத்தொழில், சுரங்க, கனிப்பொருள் அபிவிருத்தி, சமூக சேவைகள், புனருத்தாபன, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கால்நடை அலுவல்கள் அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் அவர்களின்மத்திய மாகாண கல்வி அமைச்சு நடத்தும் தமிழ் சாகித்திய விழாவுக்கான வாழ்த்துச் செய்தி**

மலையக மக்களின் பாரம்பரியக் கலை, கலாசாரங்கள் மிக வேகமாக அழிந்து வரும் இந்தச் சூழ்நிலையிலே, சாகித்திய விழாக்கள் போன்ற நிகழ்வுகள் அவசியமானதாகவே உள்ளது. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மலையக மக்களின் பண்பாட்டு அம்சங்களை ஒன்று திரட்டி சாகித்திய விழா ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

கடந்த மூன்று ஆண்டு காலமாக மத்திய மாகாணத்திலே ஹட்டன், மாத்தளை, கண்டி ஆகிய நகரங்களிலே வெகு சிறப்பாக நடந்தேறிய இவ்விழா, இம்முறை தமிழ் மக்கள் செறிந்து வாழும் நுவரெலியா மாவட்டத்திலே கோலாகலமாக நடைபெறுவதையிட்டு மனமகிழ்ச்சி கொள்கிறேன்.

நுவரெலியா நகரிலே இவ்விழா சிறப்பாக நடைபெறுவதற்கு தம்மை அர்ப்பணித்துத் தொண்டாற்றிய மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், நகர சபை உறுப்பினர்கள், கிராமசேவகர் பிரிவுகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கோயில் பரிபாலன சபையினர், அறநெறிப் பாடசாலை உறுப்பினர்கள், தோட்ட அதிகாரிகள், அங்கத்தவர்கள், தொழிலாளர்கள், பொதுமக்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு இன்றேல் இச்சாகித்திய விழாவினை இவ்வளவு சிறப்புற எம்மால் நடத்தியிருக்க முடியாது என்பது உண்மை.

இவ்விழாவைப் பொருத்தவரையிலே இலைமறைக்காயாய் மறைந்திருக்கும் ஆற்றல் மிகு சாதனையாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோருக்கு விருது வழங்கி கௌரவித்து வருவதிலே மன நிறைவும், மனமகிழ்ச்சியும் கொள்கின்றேன்.

தமிழர்களின் பண்பாடு, கலாசாரம், தனித்துவம், கலை போன்ற அனைத்து அம்சங்களையும் பாரெல்லாம் பரவச்செய்யும் வண்ணம் வெகு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் சாகித்திய விழாவினை மேலும் சிறப்பாக செய்யும் வகையிலே வெளியிடப்படும் சாகித்திய விழா மலர் மற்றும் மலையகத் தமிழர் வரலாற்று நூல் வெளியீட்டாளர்களுக்கும் எனது பாராட்டுக்கள் உரிதாகட்டும்.

எனவே இவ்வாறான சிறந்த விழாக்கள் மூலம் மலையக மக்களின் மாண்பு மென்மேலும் சிறக்க வாழ்த்துவதோடு மலையக மக்களின் பண்பாடு பல்லாண்டு காலம் வாழ்ந்து மணம் பரப்ப எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வே. இராதாகிருஷ்ணன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்**
**தி.மகேஸ்வரன் பா.உ அவர்களின்**

## மத்திய மாகாண கல்வி அமைச்சு நடத்தும் தமிழ் சாகித்திய விழாவுக்கான வாழ்த்துச் செய்தி

மத்திய மாகாண கல்வி அமைச்சர் மாண்புமிகு வே. இராதாகிருஷ்ணன் அவர்கள் தனது அமைச்சின் மூலம் தமிழ் சாகித்திய விழாவினை ஆண்டுதோறும் மிகச் சிறப்பான முறையில் நடாத்தி வருவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அமைச்சரின் செயற்திறனுக்கு எனது உளம் கனிந்த பாராட்டுகள்.

இவ்வாண்டு தமிழ் சாகித்திய விழா நுவரெலியா நகரில் நடைபெற ஏற்பாடகியுள்ளது. தமிழ் கலாசாரத்தின் பரிணாமங்களை எடுத்தியம்பும் இவ்விழா மலையகத்தை தாயகமாகக் கொண்டு வாழ்ந்துவரும் இலட்சக்கணக்கான தமிழ் மக்களுக்கு அளவற்ற மகிழ்ச்சியை அளிக்கும் என்பது திண்ணம். இவ்விழாவின் மூலம் மக்களிடையே சகோதரத்துவத்தை வளர்க்கும் பாங்கு வேண்டத்தக்கது. அதே நேரம் அச்சமூகத்தின் பெருமையையும் அவர்கள் தமது கலாசாரத்தில் கொண்டுள்ள அபிமானத்தையும் எடுத்துக்காட்ட வழிவகை செய்வது அவசியம். மலையக மக்கள் கல்வியறிவில் மேம்பாடுற்று ஏனைய சமூகத்தவர்களுடன் சரிசமமான நிலையில் வாழவேண்டும் என்பது எனது அபிலாஷை. சாகித்திய விழா இதற்கு ஒரு உந்துசக்தியாக அமையும் என்று நம்புகின்றேன்.

2003ஆம் ஆண்டு தமிழ் சாகித்திய விழா எல்லா வகையிலும் சிறப்புற்று அமைய வாழ்த்துகிறேன்.

**தி.மகேஸ்வரன் பா.உ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கமத்தொழில் கால்நடைகள் பிரதி அமைச்சர்**
**கௌரவ முத்து சிவலிங்கம் பா.உ.**
**அவர்களின் மத்திய மாகாண கல்வி அமைச்சு நடத்தும் தமிழ் சாகித்திய விழாவுக்கான வாழ்த்துச் செய்தி**

ஆண்டுதோறும் அளப்பரிய சேவையாய் சிரமேற்கொண்டு வெற்றிகரமாக தமிழ் சாகித்திய விழாவினை எடுத்து வரும் மத்திய மாகாண சபை, இம்முறை இயற்கை எழில் கொஞ்சும் மலையகத்தின் இதயமாய் திகழும் நுவரெலியா மாநகரத்திலே '2003 தமிழ் சாகித்திய விழா' இனிதே நடந்தேற மேற்கொண்டுள்ள தொண்டிற்கும், இப்பெரும் விழா மாபெரும் வெற்றியுடன் தனி மிகச் சிறப்பாக மிளிர எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் எல்லையில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.


வரையிலா நீண்டதொரு வரலாற்றுச் சுவடுகளிலே பதிக்கப்பட்டுள்ள, பண்டைய இலக்கிய கலைகளிலே நாட்டுப் பாடலும், கூத்தும் போன்ற பல்வேறு கலை அம்சங்களை பேணி போற்றி எம்மை பெருமைக் கொள்ளச் செய்வது மலையக மக்களின் சாகித்தியம். இவர்களின் இவ்வழி நடத்தலே நாம் இன்று இத்தகையான சாகித்திய விழாக்களை வெற்றிகரமாக நடாத்துவதற்கு ஏதுவாகின்றது. எமது தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் அபிலாசையும், கனவுமாக இருந்த மலையக மக்களின் பங்கேற்பு இத்தகைய நிகழ்ச்சிகளில் முக்கிய இடம் வகிக்க வேண்டும் என்பது சாகித்திய விழா போன்றவற்றாலேயே நனவாகி மலர ஏதுவாகின்றது.

மலையகத்தின் பெருமையை பறைசாற்றி அதன் சிறப்பினை மேம்படுத்த தம்மை அர்ப்பணித்து பங்காற்றி வந்துள்ள பல இலக்கிய மேதைகள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் போற்றி கௌரவிக்கப்படுவது என்னை பெரும் உவகையிலாழ்த்துகின்றது. நாடும் ஏடும் போற்றற்கரிய இவ்வாறான நற்பணிகளை சிறப்பாக வருடந்தோறும் நடாத்தி வரும் மத்திய மாகாண சபைக்கும், மத்திய மாகாண கல்வி கலாச்சார அமைச்சுக்கும், அமைச்சருக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் இவ்வேளையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**முத்து சிவலிங்கம் பா.உ.**
கமத்தொழில் கால்நடைகள் பிரதி அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மத்திய மாகாண சபைத் தலைவர் கௌரவ துரை மதியுகராஜா அவர்களின் மத்திய மாகாண கல்வி அமைச்சு நடத்தும் தமிழ் சாகித்திய விழாவுக்கான வாழ்த்துச் செய்தி**

கலைகளும், இலக்கியங்களும் ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிவரும் பங்களிப்புக்கள் காலத்தால் அழியாதவை. அந்த வகையில் எமது மலையக சமூகத்தின் வளர்ச்சிக்கு மலையக கலை இலக்கியங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன. அத்தகைய கலை இலக்கியங்களையும் தனித்துவத்தையும் எடுத்துக்காட்டி அவற்றைப் பேணிப் பாதுகாத்து வளர்த்து கட்டிகாக்க ஒரு உந்து சக்தியாக மத்திய மாகாண சாகித்திய விழா அமைந்தள்ளது என்றால் மிகையாகாது.

யுகங்கள் பல மாற்றங்களுக்குள்ளாகி மிகவும் வேகமாக இயங்கிக்கொண்டிருக்கின்ற இன்றைய தொழிநுட்ப யுகத்தில் எமது கலை, கலாசார, பாரம்பரிய, பண்பாட்டு விழுமியங்கள் பாதுகாக்கப்படவேண்டியது காலத்தின் தேவயையாகவுள்ளது.

எமது தமிழ் மொழியானது வழுவும், வளமும், வனப்பும், செழுமையும் நிறைந்த மொழியாகும். எமது சமூகத்தால் தமிழுக்கு எடுக்கப்படும் இவ்விழா அனைத்து தமிழ் மக்களுக்கமே ஒரு பெரு விழாவாகவும், திருவிழாவாகவும் அமைகின்றது.

எனவே இவ்விழாவானது மிக சிறப்பாக நடைபெற எனது வாழ்த்துக்களையும், ஆசிகளையும் வழங்குவதில் பெருமைப்படுகின்றேன்.

***துரை மதியுகராஜா***
***மத்திய மாகாண சபைத் தலைவர்***



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



**மத்திய மாகாண சபை பிரதித் தலைவரும் மாகாண சபை உறுப்பினருமான கௌரவ மு.சிவலிங்கம் அவர்களின் மத்திய மாகாண கல்வி அமைச்சு நடத்தும் தமிழ் சாகித்திய விழாவுக்கான வாழ்த்துச் செய்தி**

எமது கலை இலக்கிய பெருமைகளை இந்நாட்டின் ஏனைய இனத்தவர் அறிந்திடச் செய்தல் வேண்டும்.

நாம் தென்னாட்டு வழித் தோன்றல்கள், இந்திய பெருநிலத்தின் தென்பகுதி கலாசார வாழ்வு முறை கொண்டவர்கள் 'வயிற்றுக்காக வாழ்க்கையை தேடி வந்தார்கள்' என்ற ஓர் வரலாற்று களங்கத்தையும் கொண்டவர்கள்....

வறுமையையும், கண்ணீரையும் மடியில் கட்டிக் கொண்டு கொந்தளித்த கடல் மேல் ஏறிய கூட்டம் கொள்ளை போனது.... மிஞ்சிய உயிர்கள் கரையேறின. அன்று பிடித்த துயரம் இன்றுவரை கலைந்து போகவில்லை. இருந்தும் வேதனையிலேயே விளைந்த ஓர் கூட்டம் இன்று வேர் ஊன்றி விழுதுகளை பரப்பிக் கொண்டது.

தென்னாட்டுத் தமிழர் என்ற நாமம் திரை கடலோடியதால் பிறப்படையாளங்கள் தொலைந்து போயின.

இறப்பர் தோட்டம், கோப்பித் தோட்டம், குயினாத் தோட்டம், தேயிலைத் தோட்டம், தென்னந் தோட்டம் என்ற பணப்பயிர்களின் பட்டமளிப்பால் 'பெருந்தோட்டத் தமிழர்' ஆனோம்.

அரசியல் வஞ்சனைகள், இனவாத தீண்டாமை, ஒரு தாய்மொழி பேசும் உறவுகளின் ஒதுக்குமுறை போன்ற துரதிஷ்டவசங்களால் தனிமைப்படுத்தப்பட்ட நாங்கள்.... எங்கள் உழைப்பின் பெருமையால் இன்று தனித்துவமாகி விட்டோம் !

குளிர்ந்த மலையகம் இன்று கோலோச்சும் ஒரு நிலை பெற்றது. சமுதாயத்தின் அந்தஸ்தும் கௌரவமும் அதன் கல்வி வளர்ச்சியில் நிர்மாணிக்கப்படுகின்றது. அவ்வளர்ச்சியின் சான்றுகளாய் கலையும் இலக்கியமும் - இசையும் கூத்தும் - சிற்பமும் ஓவியமும் - சங்கீதமும் நடனமும் - தொழில்நிலை அந்தஸ்தும் வாழ்க்கை விழுமியங்களாய் வளர்ந்து செழிக்கவேண்டும்.

அந்த சவாலை எட்டிப் பிடித்த பெருமையில் இன்று மலையகம் இறுமாப்படைகின்றது. வறுமையில் நெரிக்கப்பட்ட குடிகளாய் வாழ்க்கை நலிந்திருந்தாலும் அதற்குள் குமிழியிட்டுக் கொண்டிருக்கும் ஆவேசமான எழுச்சியும், வளர்ச்சியும் இன்னும் ஒரு தசாப்தத்தில் எங்களை சூழ்கொண்ட இந்த மலைகளின் உயரத்தையே மிஞ்சிவிடும்!

அந்த நம்பிக்கையின் ஒளிப்பிழம்பே இந்த இலக்கிய விழா அர்ப்பணம் செய்யும் சான்றுகள்....!

கல்வி அமைச்சரின் கலை இலக்கிய பணிகள் சிறப்புற வாழ்த்துகிறேன்.

**மு.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கௌரவ இரா.யோகராஜன் பா.உ. அவர்களின் மத்திய மாகாண கல்வி அமைச்சு நடத்தும் தமிழ் சாகித்திய விழாவுக்கான வாழ்த்துச் செய்தி**

ஈழத்திருநாட்டில் தமிழ் எழுச்சி பெற ஆங்காங்கு தமிழ் விழாக்கள் நடைப்பெற்றாலும் மாகாண ரீதியாக மாவட்ட ரீதியாக தமிழ் சாகித்திய விழாக்களை நடத்தி தமிழ் அன்னைக்கு இயல், இசை, நாடக மூலம் தொண்டு செய்யும் அறிஞர்களை, கலைஞர்களை, எழுத்தாளர்களை, படைப்பாளிகளை இனம் கண்டு அவர்களுக்கு கௌரவங்கள், பட்டங்கள், சன்மானங்கள் வழங்குவதுடன் மேலும் தமிழுக்கு தொண்டாற்ற உறுதுணை புரியும் விதத்தில் தொடர்ச்சியாக தமிழ் சாகித்திய விழாக்களை நடத்திவரும் மத்திய மாகாண கல்வி இந்து கலாசார அமைச்சினையும் அதன் அமைச்சர் கௌரவ. வே. இராதாகிருஷ்ணன் அவர்களையும் பாராட்டுகின்றேன்.

மேலும் மலையக கலாசார பாரம்பரியங்களையும் அதன் வரலாற்று உண்மைகளையும் உலகிற்கு எடுத்துக் காட்டப் போகும் இந்நிகழ்விற்கும் அதன் பொருட்டு வெளியிடப்படவுள்ள நினைவு மலருக்கும் எனது நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த வகையில் எனது பாரம்பரியங்களையும், கலை கலாசாரங்களையும் கட்டி காத்து பேணி வளர்க்கும் நன்நிலமாம் மலையக மக்கள் செறிந்து வாழும் நுவரெலியா மாவட்டத்தில் இந்த தமிழ் சாகித்திய விழா' 2003 நடப்பது பெருமைக்கும், போற்றுதற்குரியதுமாகும். இவ்வாறான தமிழ் விழாக்களை ஏற்பாடு செய்து தமிழுக்கு ஆற்றிவரும் சேவை அளப்பரியது. இதன் பொருட்டு நாம் பெருமிதம் அடைகிறோம்.

இவ்வாறாக தமிழுக்கு பெருமை சேர்க்கும் விழாக்கள் தொடர்ச்சியாக நடைபெற வேண்டுமென கூறி எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வாழ்க தமிழ்! வளர்க நம் மொழி!

இராமையா யோகராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## මධ්‍යම පළාතේ අධ්‍යාපන ලේකම්තුමාගේ පණිවුඩය

වෙනත් වර්ෂ වල මෙන් මෙවරද උත්කර්ෂවත් අන්දමින් පවත්වනු ලබන "මධ්‍යම පළාත් දමිළ සාහිත්‍ය උළෙල - 2003 " සඳහා සුභපතන්ට අවස්ථාවක් ලැබීම ඉතා අගය කොට සලකමි.

කදුරට දමිළ ජනතාවගේ ඉතිහාසය සහ සංස්කෘතිය මනා ලෙස පිළිබිඹු කෙරෙන මෙම සාහිත්‍ය උත්සවය සාමය, සහෝදරත්වය, යන සංකල්පයන් වචනයේ පරිසමාප්ත අර්ථයෙන්ම සැබෑ කරමින් මධ්‍යම පළාත තුල ජීවත් වන සියළු ජන වර්ගයන් එකරාශී වී හින්දු සාහිත්‍ය හා සංස්කෘතික අංගයන් සමරණ අවස්ථාවක් බව පැහැදිලි වේ. ඒ සඳහා සැබෑ නායකත්වයක් දුන් මධ්‍යම පළාත් අධ්‍යාපන, කර්මාන්ත, පතල් හා ඛණිජ සංවර්ධන, පුනරුත්ථාපණ, සමාජ සේවා, වතු යටිතල පහසුකම් හා සත්ව පාලන කටයුතු පිළිබඳ ගරු අමාත්‍ය වී. රාධාක්‍රිෂ්ණන් මැතිතුමන් මෙහිදී ගෞරවයෙන් සිහිපත් කරමි.

සාහිත්‍යය වු කලී ඕනෑම ජන වර්ගයක යථාර්තය නිරූපණය කරන්නා වු හා ඔවුන්ගේ අභිමාණය, පෞඩත්වය මතුකර දක්වන්නා වු අංගයකි. එසේම එමගින් එම ජනවාර්ගිකයන්ට දැනුම, ආශ්වාදය, ලබා දෙන්නා සේම, ඔවුන්ගේ සමාජ ජීවිතය සාර්ථකත්වයට පත් කිරීමටද උපකාරීවේ. එබැවින් සාහිත්‍යය අංගයන් ඒ අයුරින්ම රැකගැනීම අප සැමගේ යුතුකමක් හා වගකීමක්ද වන්නේය.

අද දින පවත්වන්නා වු මෙම "දමිළ සාහිත්‍යය උළෙල 2003" සර්වප්‍රකාරයෙන්ම සාර්ථක වේවායි පතමි.

**විජිත බණ්ඩාර ඒකනායක**

ලේකම්,

මධ්‍යම පළාතේ අධ්‍යාපන හා කර්මාන්ත අමාත්‍යාංශය


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கௌரவ அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் எம்.துரைசாமி அவர்களின் ஆசிச்செய்தி**

கடந்த மூன்று ஆண்டு காலமாக வெகு சிறப்பாகவும் அனைவரும் மெச்சும் விதத்திலும் தமிழ் சாகித்திய விழா சிறப்பாகவும், கலை அம்சத்துடனும் நடைபெற்றுக் கொண்டிருப்பது நாம் அனைவரும் அறிந்ததே இவ்வாண்டும் மலையகத்தில் நுவரெலியா மாநகரிலே மலை முகடுகள் எங்கும் தமிழ் முழங்கச் செய்திருக்கின்றது இச்சாகித்திய விழா என்றால் மிகையாகாது.

தமிழ் இலக்கியம் எனும் போது அது இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றையும் உள்ளடக்குகின்றது. இவ்வகையிலே மலையகத்திலே நடைபெறும் இச்சாகித்திய விழாக்கள் மலையக மக்களின் பாரம்பரிய பண்பாட்டு கலைகளை மிளிரச் செய்யும் சிறந்த விழாவாகவே அமையச் செய்வதைக் காணலாம்.

பொதுவாக நோக்குகின்ற போது கலைகளும், பண்பாட்டு பாரம்பரியங்களுமே ஓர் இனத்தின் அடையாளமாகின்றது என்பதை உறுதிப்படுத்தி, மலையகத்திலே மறைந்து கிடக்கும் பழங்கலைகளையும், மலையகத்தின் பல பாகங்களில் இருந்தும் வரவழைத்து, அவை அழியவிடாமல் பாதுகாக்கும் பெருமை சாகித்திய விழாவுக்கே உண்டு.

மலையக மக்களின் கலை கலாசார விழுமியங்கள் அனைத்தையும் பேணுகின்ற ஆவணமாகத் திகழ்வது இவ்விழாவிலே வெளியிடப்படும் சாகித்திய விழா மலரும், மலையகத் தமிழர் வரலாற்று நூலும் ஆகும். இவ்விழாவும், இந்நூலும் சிறப்புற்று மலையகம் எங்கும் தேமதுரத் தமிழோசை முழங்க வேண்டும் என உளமாற வாழ்த்துகின்றேன்.

**எம்.துரைசாமி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்து கலாசார அலுவல்கள் - இணைப்பதிகாரி வீ. சாந்தகுமார் அவர்களின் ஆசிச்செய்தி

ஏறக்குறைய மிகத் தொன்மையான வரலாற்றுப் பூர்வீகத்தினைக் கொண்ட மலையக மக்கள் இந்நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் மட்டுமின்றி அயரா உழைப்பிற்கு மத்தியிலே கலை உணர்வை கட்டியெழுப்புவதற்கும் பேரார்வம் கொண்டவர்கள். இவ்வாறான ஆர்வத்தின் வெளிப்பாடாகத்தான் இவ்வாண்டு சாகித்திய விழா அமைந்திருக்கின்றது என்பதைக் காணலாம்.

எமது மக்களின் கலை கலாசாரங்கள் பண்பாட்டு அம்சங்கள் நலிந்து வருகின்ற இக்காலத்திலே இவற்றை அழியவிடாமல் பேணவேண்டும் என்ற ஆர்வமே சாகித்திய விழாவாகப் பரிணமித்திருப்பதைக் காணலாம். இம்மக்களின் உழைப்போடு ஒட்டிய பாரம்பரியக் கலைகளை அழியவிடாமல் பாதுகாப்பதற்கு இவ்விழா களம் அமைத்துக் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மலையகத்திலே ஆற்றலுள்ள எழுத்தாளர்கள் சாதனையாளர்கள் கலைஞர்கள் ஆகியோருக்கான விருது வழங்கி அவர்களை ஊக்குவித்து வருவது இவ்விழாவின் சிறப்பம்சமாகும். அத்தோடு மலையக மக்களின் கலாசார விழுமியங்களை எதிர்கால சந்ததியினரும் அறிந்துக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்திலே சிறப்பாக வெளிவந்திருக்கின்றது, சாகித்திய விழா மலரும் மலையகத் தமிழர் வரலாற்று நூலும் என்றால் மிகையாகாது.

இவ்விழா சிறப்புற மிளிர அனைத்து வழிகளிலும் ஆற்றலுடனும், திறமையுடனும் செயலாற்றிய அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கௌரவ அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் அவர்களின் துடிப்புள்ள வழிகாட்டலின் கீழ் இவ்வருடத்திற்கான சாகித்திய விழா தனியம்சம் வாய்ந்த கலையுருவாக வேரூன்றி ஓங்கி வளர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

வீ. சாந்தகுமார்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## கௌரவ அமைச்சரின் இணைப்பு செயலாளர் ஆர்.முத்துராமன் அவர்களின் ஆசிச்செய்தி

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமது கலை, கலாசாரப் பண்புகளை உலகிற்கு எடுத்துக்காட்டியவர்கள் தமிழர்கள். தாம் உலகின் எப்பாகத்தில் வாழ்ந்துக் கொண்டிருந்தாலும் தமக்கேயுரிய சிறப்பான பண்பாட்டு அம்சங்களை நழுவவிடாது பேணி பாதுகாப்பதிலே தமிழருக்கு நிகர் தமிழர்கள் என்றால் மிகையாகாது.

இவ்வாறான பெருமைமிக்க தமிழ் இனத்தின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் ஓர் அம்சமாகவே வருடா வருடம் சாகித்திய விழாக்கள் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஹட்டன், மாத்தளை, கண்டி என புகழ் பெற்ற நகரங்களிலே விழாக்கோலம் கண்ட இச்சாகித்திய விழா இம்முறை தமிழர்கள் செறிந்து வாழும் நுவரெலியா மாவட்டத்திலே சிறப்பாகக் கொண்டாடப்படுவது அனைவரது மனத்திலும் குதூகலத்தை ஏற்படுத்துகின்றது.

எமது மக்களின் இலக்கியம், அதையொட்டிய கலாசார பண்பாட்டு அம்சங்கள் மிகவும் தொன்மை வாய்ந்தது இப்பண்பாட்டு அம்சங்களை அழியவிடாமல் பாதுகாப்பதிலே இச்சாகித்திய விழாக்கள் பெரிதும் துணை புரிகின்றன. அதுபோலவே இவ்விழாவிலே வெளியிடப்படும் சாகித்திய விழா மலரும் மலையக தமிழர் வரலாற்று நூல் ஆகியனவும் மலையக மக்களின் பண்பாட்டை எடுத்தியம்புவதைக் காணலாம்.

எனவே நான்காவது முறையாக சிறப்புக் காணும் இவ்விழா சிறப்புற அமைய எனது உளங்கனிந்த நல்லாசிகளை நல்குகின்றேன்.

- ஆர். முத்துராமன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நுவரெலிய மாநகர பிரதி முதல்வர் பொ.சிவராஜா அவர்களின் மத்திய மாகாண கல்வி அமைச்சு நடத்தும் தமிழ் சாகித்திய விழாவுக்கான வாழ்த்துச் செய்தி

மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா இம்முறை எழில் கொஞ்சும் நுவரெலியா மாநகரில் நடைபெறுவது குறித்து பெருமிதம் கொள்கின்றேன். இருண்ட காடுகளாக இருந்த மலையகத்தை வளமாக்கி இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பிய இந்திய வம்சாவளி மக்கள் கடல் கடந்து வந்த போதும் தமது தாய் மொழியையும், கலாசாத் தொடர்புகளையும் மறக்கவில்லை. தாலாட்டு, கும்மி, கோலாட்டம், தெம்மாங்கு தப்பு என்பன நம் மலையக மக்களுக்கே உரித்தான அழகுக் கலைகள். பழைமை வாய்ந்த நமது மலையக மக்களின் கலை கலாசார விழுமியங்கள் காலத்தால் மறக்கப்பட்டுவிடாது காப்பாற்ற இது போன்ற சாகித்திய விழாக்கள் அடிக்கடி நிகழ்த்தப்பட வேண்டும் என்பது என் அவா. தமிழ் சாகித்திய விழா சிறப்புற என் இதய வாழ்த்துக்கள்.

**பொ.சிவராஜா**



## கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மா.செ. மூக்கையா அவர்களின் வாழ்த்துச் செய்தி

நுவரெலியா பிரதேச சாகித்திய விழாவினையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துறையை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

கலையும் கலாசாரமும் அருகிவரும் இந்நாளில் அதைப் பேண பிரதேச மட்டத்திலும் சாகித்திய விழாக்களை நடத்தி ஊக்கப்படுத்தி வருகின்ற ஆரோக்கியமான சூழலில் நுவரெலியா பிரதேசத்தில் நடைபெற்று வருகின்ற சாகித்திய விழாவும் விழாவினை ஒட்டி சிறப்புமலர் வெளியிடுகின்ற இம்முயற்சியும் பாராட்டப்பட வேண்டியதும் தொடரப்பட வேண்டியதுமாகும்.

இலைமறைகாயாக உள்ள எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரின் திறமைகள் வெளிப்படுவதற்கு இச்சிறப்புமலர் வெளியீடு வழிவகுக்குமென்று நம்புகின்றேன்.

இவற்றினூடாக இளம் தலைமுறையினர் எமது பாரம்பரிய கலாசார விழுமியங்களையும், இலக்கிய சிறப்புகளையும் உணர்ந்து கொள்வார்களென்று எதிர்பார்க்கின்றேன்.

வாழ்த்துக்களுடன்,
**பேராசிரியர். மா.செ. மூக்கையா,**
துணைவேந்தர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ் . முரளிதரன்
B.Sc (Hons), M.Ed(York), SLEAS II
செயல் நிறைவேற்று பீடாதிபதி
ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி
பத்தனை

# மலராசிரியரின் மனதிலிருந்து...........

மத்திய மாகாண மட்டத்தில் முதலாவதாக நடத்தப்பட்ட சாகித்திய விழாவுக்கு மலையகக் கலை இலக்கிய பேரவை அப்போது அமைச்சராகவிருந்த கௌரவ வீ. புத்திரசிகாமணிக்கு பெரிதும் அனுசரணையாக விளங்கியது. பேரவையின் முக்கிய உறுப்பினர் என்ற வகையில் நானும் அந்தனி ஜீவாவும், சாரல்நாடனும் அதன் வெற்றிக்கு உறுதுணையாக இருந்ததோடு சாகித்திய விழாவை மலையக தமிழ் ஆராய்ச்சி மாநாடு வரையில் கொண்டுசென்றதை இத்தருணத்தில் நினைத்துப் பார்க்கின்றேன்.

இந்த சாகித்திய விழாவில் சிறப்பு மலருக்கு ஆசிரியராக செயலாற்றும் பணியை கௌரவ அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் எனக்கு வழங்கிய போது பாரிய பொறுப்பிலிருக்கும் நான் அதை தட்டிக் கழிக்க முடியாததாகிவிட்டது. மலரை ஆக்கும்போது நுவரெலியா மாவட்டம் சார்ந்தவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும் என்ற கட்டுப்பாடு ஒரு பரந்த மலையக மலராக மிளிரும் சாத்தியத்தை குறைக்கக்கூடும் என்றாலும் இயன்றவரை கடந்தகால மற்றும் இக்கால மலையகத்தை சித்தரிக்க முயற்சிசெய்துள்ளேன்.

இம்மலருக்கு ஆக்கங்கள் தந்தவர்களுக்கும், ஆக்கங்களைப் பெற்றுக்கொள்ள உதவிய சஞ்சிகைகளுக்கும் மற்றும் வெளிவருவதில் உதவிய அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள்!.

சு. முரளிதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சாகித்திய விழாவும் - தமிழர் உணர்வும்

*பேராசிரியர் பொன். சக்திவேல்*

மத்திய மாகாணசபை தமிழ் மொழிக்கான சாகித்திய விழா ஒன்றினை நுவரெலியாவில் 'வையத் தலைமை கொள்வோம்' எனும் மகுடத்தின் கீழ் ஒக்டோபர் 11,12 திகதிகளில் நடத்தவுள்ள வேளையிலே தமிழ் பேசும் மக்களிடையே தமிழ் உணர்வு இயல்பாகவே அமைந்திருக்க வேண்டியது அவசியம்.

மொழி என்பதன் பொருள் ஒருவருடைய எண்ணங்களை வெளிப்படுத்தக்கூடிய 'கருத்துச் சாதனம்' என்கின்றது. இக்கருத்து மொழியின் பண்பாட்டுத் தன்மையை மட்டுமே குறிக்கின்றது. ஆனால் மொழியின் இயல்புகள் இன்னும் ஆழமானவை விரிவானவை; வளர்ந்தவை. மொழி எண்ணுவதை எடுத்துரைக்கும் கருவி மட்டுமல்ல, எண்ணத்தை அறிவிக்கும் கருவியும் ஆகும். மொழியின் மூலம் அம்மொழியாளரின் வாழ்க்கை வழியையும் உணரமுடியும்.

மொழி ஒரு தேசிய இனத்தின் பண்பாட்டுக் கருவூலம். தொன்மைத் தொடர்பு, அவ்வினத்தின் வாழ்முறை, கருத்தோட்டங்கள், சிந்தனை ஊற்றுக்கள், செவ்வியல் வேர்கள் போன்றவற்றின் சீர்த்திறம்; சமூக வளர்ச்சி - தளர்ச்சிகளைக் காட்டும் திசை காட்டி, வழிவழியினதான சமுதாயப் போக்குகளின் இணைப்புப் பாலம், எனவே ஒரு தேசிய இனத்தின் உயிரோட்டமாக திகழும் மொழி காக்கப்பட வேண்டியது அவசியமாகும். அத்துடன் வளர்க்கப்படவும் வேண்டியதாகும்.

ஒரு நாட்டை அடிமைப்படுத்தவோ, ஓர் இனத்தைச் சிதைத்து விடவோ அவர்களின் மொழியை அழித்து விடு என்ற ஆட்சியின் கொள்கைகளைக் கடைப்பிடித்த அரசுகளின் வரலாறுகள் அறிவோம். ஓர் இனமாகத் தம்மை உயர்த்தி தம் உரிமை வாழ்வைப் போற்றி வாழும் மக்களை அனைத்து புலங்களிலும் இணைக்கும் மொழி அழிந்திடுமானால் அம்மக்கள் எழுச்சி குன்றி உருக்குலைந்து ஒடுங்கிவிடுவர். அந்நாட்டினை அடிமைப்படுத்தல் எளிதாகிவிடும். சர்வாதிகாரியான 'ஹிட்லர்' ஒரு நாட்டை வீழ்ச்சியுறச் செய்ய வேண்டுமெனில் முதலில் அவர் தம் மொழியை அழிக்கும் வழியைக் கான வேண்டும் என்றார். ஆனால் அயர்லாந்து விடுதலை வீரர் 'டிவேலரா' என் நாட்டின் உரிமையை இழந்தாலும் மொழியை இழக்க மாட்டேன் என்றார். ஏனெனில் மொழியைக் காத்தல் அடிமையுற்ற நாட்டினையும் ஒருநாள்மீட்க முடியும் என்பது அவரது திடமான நம்பிக்கை. எனவே ஒரு தேசிய இனத்தின் தாய்மொழிப் புறக்கணிப்பு அம்மக்களின் தற்கொலையையே குறிக்கும்.

தேசியம் என்பது ஒரு நாட்டு மக்களிடையே தோன்றக் கூடிய பொதுப் பற்றினை அல்லது நாட்டுடன் ஒன்றிய உணர்வினை 'தேசியம்' அல்லது 'நாட்டுப் பற்று' எனலாம். ஒரு நாட்டு மக்களின் மொழி, இலக்கியம், ஒத்தமரபுகள், நெடிய வரலாறு, பொருளியல் நிலை, வாழ்வியல் முறை, பொதுப்பண்பாடு, இன உணர்வு என்பன தமது நாட்டுக்கு தாமே சொந்தக் காரர் என்று தன்னுரிமை போன்றவற்றுடன் அந்நாட்டுடன் ஒன்றிய இயல்பையே 'பற்றுறுதி அல்லது தேசியம்' எனலாம். தேசிய இனங்களிடையே நாட்டினது அமைவு (Nation hood) இருந்த போதும் தனித் தன்மை கொண்ட சில விந்தை வரலாற்றுச் சூழ்நிலை காரணமாக அவை முழுத்தன்னுணர்வுடன் (Full Conscience) வளரவில்லை, ஒரு நாட்டு மக்களின் பற்றுறுதி ஆணிவேர் பழமை மக்களின் போர் உணர்வாகும். இதனை ஒவ்வொரு நாட்டுக்கும் உரிய நாட்டியல்புப் பண்பு (Nativity) எனலாம். இந்நாட்டியல்புப் பண்பே 'பண்டைத் தேசியம்' எனப்படும்.

ஒருவன் தன் வழிவழியாக வாழ்ந்து வரும் நிலப்பகுதியானது தனக்குப் பிறப்பிலேயே உரிமைப்பட்ட வாழ்விடம் என்ற உள்ளார்ந்த உணர்வோடு பொது நிலையில் நாட்டுடனும், அந்நாட்டு இயல்புடனும் அதன் அரசுடனும் இயல்பாகக் கொள்ளும் பற்றுறுதியே பண்டைய தேசியம் எனப் படுகின்றது. பற்றுறுதி என்பதை கூறுமிடத்து வீரம் என்ற திருக்குறள் அதிகாரம்

புறந்தார்கண் நீர்மல்கச் சாகிற பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து - (குறள் - 780)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவனின் கண்ணீர் பெருக வருந்துமாறு இறப்பது விரும்பத்தக்க சாவாகும். இதனையே பற்றுறுதி எனப்படுகின்றது. வீரம் என்பது பேராண்மை. அவ்வீரம் முறையோடு வெளிப்பட வெற்றியை நாட்ட தேவைப்படுவது படைக்கலன். தான் சார்ந்த நாட்டை ஆளும் தன்மையே அப்படைக்கலன்.

'பேராண்மை என்ப தறுகண் ஒன்ற உற்றக்கால்
ஊராண்மை மற்று அதன் எஃகு' (குறள் - 773)

ஒவ்வொரு பொது மகனும் தான் யார்? தனது மொழி எது? தனது இனம் எது? என்பன போன்றவற்றை அறிந்து கொள்ள தேவையான அடிப்படையான அறிவு கூட பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து வழங்கப்படாததால், அறியாமை இருளில் பல தலைமுறைகள் மூழ்கிவிட்டதால், அறிஞர்கள் பலரால் இயற்றப்பட்ட பல அரிய அறிவுத் துறை இலக்கியங்கள் மக்களின் அறிவுக்கும், உணர்வுக்கும் தொடர முடியாததால் பண்டைய பண்பாட்டின் அறிவூற்றத்தின் வீச்சு இன்றும் நீறு பூத்த நெருப்பாகவுள்ளது.

தமிழர்களாகிய நாம் 'நாம் அனைவரும் தமிழர்கள்' என்ற ஒருங்கிணைப்புடன் இன உணர்வை பெறுவதுடன் தமிழ் மொழி இலக்கியங்கள், கலைகள், சிந்தனைகள் நூல்கள், கருத்துநிலை, கல்வி பண்பு, சமூக அமைப்பு, சமுதாய ஒழுக்கம், வாழ்க்கைமுறை, வழிவழியான மரபுகள் என்பவற்றையும் உள்ளீடாகக் கொண்டு பண்பாட்டுடன் மிளிர வேண்டும். மொழி உணர்வு என்பது மூச்சுக் காற்றைப் போன்றது. அது தடைப்படும் போதுதான் அதன் உயிரியல்பும் இன்றியமையாமையும் புரியும். தமிழ் மக்களிடையே தமிழ் உணர்வு இயல்பாக இருக்கவேண்டும். தமிழுக்கும், தமிழியலுக்கும், தமிழர் பொருளியல் வாழ்க்கைக்கும் புற அழுத்தங்கள், போரின் கெடுபிடிகளே. இயல்பான அத்தமிழுணர்வு தீர தன்மையுடன் பீறிட்டு கிளம்பியமையின் விளைவே இன்றைய சமாதானமும், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பனவாகும்.

தமிழரின் பண்பாட்டு இலக்கியத்தையும், அவர்தன் தொன்மையையும் ஈராயிரம் வருடங்களுக்கு நெடிய ஈழத்து வரலாற்று அரசியல், சமூகம், இலக்கியம் என்ற முப்பெரும் பகுப்புகளின் அடிப்படையில் ஆய்வு செய்தால், அரசியல் வரலாறும், சமூகவியல் வரலாறும் ஏறத்தாழ இணைந்து செல்கின்றன. சமூகத்தின் தேசிய அடிநாதமான மொழிவரலாறு மட்டும் தனிவழியே அவ்வப்போது பிணங்கியும் நெருங்கியும், இணங்கியும் இயங்கி வந்ததை மறப்பதற்கில்லை. தமிழ் வழியே வளர வேண்டிய கலைகளும், பண்பாட்டுக் கூறுகளும் வளர வழிவகுப்பது கடமையாகும்.

புறப்படு மலைத்தமிழா !

எங்கு மின்பத் தமிழோங்க
இன்றே தமிழன் வாழ்வுயரச்
சங்கம் வளர்த்த சான்றோரின்
சைவம் நன்றே தழைத்தோங்க
எங்கள் இளையோர் எழுச்சியுடன்
இன்பப் பணிசெய முன்னேறிப்
பொங்கி யெழுந்தே நீயுதவப்
புறப்படு இன்றே மலைத்தமிழா!

தூங்கிக் கிடந்த தமிழினத்தின்
துயரை இன்றே போக்கிவிட
ஏங்கித் தவித்தே யுரிமைக்காய்
இருந்து வாடும் நிலைபோக்க
ஓங்கும் உணர்ச்சிப் பெருக்காலே
உள்ளம் துடிக்கும் இளையோரைத்
தாங்கிப் பிடித்து நீயுதவத்
தவறாதே நீ மலைத்தமிழா!



மங்கும் மறத்தமிழ்க் கல்விநிலை
மறையும் நற்கலைப் பண்பெல்லாம்
ஏங்கும் ஏற்றம் பெற்றிடவே
இளையோர் செய்யும் பணிக்கென்றும்
திங்கள் வளரும் வளம் போலே
தினமும் நன்றே வளர்ந்தோங்க
எங்கள் உயிரும் தருவோமென்று
இன்றே புறப்படு மலைத்தமிழா!

-கவிஞர் க. லிங்கதாசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Indian Origin in Sri Lanka- Their Plight and Struggle for Survival

**எனும் தலைப்பில் கடந்த பெப்ரவரி மாதம் மும்பையில் நடைபெற்ற**

## World Council of Elders of the Ancient Traditions and Cultures

**அமைப்பின் முதலாவது சர்வதேச மகாநாட்டில்**

## (First International Conference and Gathering of the Elders)

**அமைச்சர் கௌரவ வே.இராதாகிருஷ்ணன்**

**ஆற்றிய உரையின் தமிழ் வடிவம்.**

பல்லின கலாசார சூழலைக் கொண்ட இலங்கையில் இந்திய வம்சாவளியினரின் குடித்தொகை 7.5 வீதத்தை அண்மித்துள்ளது. இம்மக்கள் சிறுபான்மையாகக் கருதப்பட்டாலும் இலங்கையின் பெருந்தோட்ட பொருளாதாரத்தின் முதுகெலும்பாக கொள்ளத்தக்க வகையில் 70வீத தொழிலாளர்கள் அவர்களில் அடங்கியுள்ளார்கள் என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும். இத்தகு முக்கியத்துவமான இவ்வினக்குழுமம் சார்ந்த வரலாற்று சுவடுகள், கலாசாரம் மற்றும் மரபுகள் தொடர்பாக மீட்டுவது தற்போது அவசியமாகும்.

பேராசிரியை சிறிமா சிறிபமுன, இலங்கையானது அமைவிடச் சூழலில் இந்தியாவுக்கு அண்மித்திருப்பது தென்னிந்தியர்கள் முற்காலத்தில் புலம் பெயர வாய்ப்பளித்தது. அது மாத்திரமன்றி இலங்கையின் இனவரைவில் பெருமளவு தாக்கமேற்படுத்த அதுவே செல்வாக்கு செலுத்தியிருந்ததென்பதில் சந்தேகத்தக்கு இடமில்லை என குறிப்பிட்டது கவனிக்கத் தக்கதாகும்.



விஜயன் தென்னிந்திய பாண்டிய இளவரசியை மணமுடித்து இலங்கை வரும்போது அவர்களோடு பதினெட்டு குலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆயிரம் குடும்பங்கள் இலங்கைக்கு புலம்பெயர்ந்ததாக இலங்கை தொன்மை வரலாற்று குறித்து எழுந்த முக்கிய நூலான மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

கி.பி. 11ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பல்லவ மன்னனான நரசிம்மவர்மனின் ஆளுகைக்குள்ளான தமிழ்ப்படையினரின் அனுசரணையுடன் இளவரசன் மானவர்மன் முடிசூடிய காலந்தொட்டு இலங்கையின் அநுராதபுர இராஜ்ஜியம் தொடர்ந்தேர்ச்சியாக தென்னிந்தியாவின் செல்வாக்குக்கு உட்படலாயிற்று.

கி.பி. 993 இல் சோழப்படையெடுப்புடன் தமிழ் நாட்டிலிருந்து அனுப்பப்பட்ட சோழமன்னனின் உத்தியோகஸ்தர்கள் இலங்கையின் மத்திய மற்றும் தென்பிராந்தியங்களை நிர்வகித்தனர்.

விஜய நகர சாம்ராஜ்ஜிய நாயக்க வம்ச மன்னர்கள் ஆந்திர பிரதேசத்தில் நிலை கொண்டு தமிழ் நாட்டையும், இலங்கையையும் செல்வாக்குக்கு உட்படுத்தியிருந்தனர். அது கண்டிய அரசர்களின் இடைக் காலப்பகுதியாக இருந்தது. இதன்போது, மணவினைத் தொடர்புகளின் ஊடாட்டங்களில் நாயக்கர் வழி அரச பரம்பரையினரின் குடும்பங்களில் மணமகள்களை பெற்றுக் கொள்ள விழைந்தனர். அவ்வாறான மருமகள் வருகையோடு அவர்களோடு குடும்ப உறுப்பினர்களுடன் நண்பர்கள் குழாமும் இலங்கை வந்து குடியேறுவது சகஜமாகியிருந்தது. மேலும் நாயக்கர் வம்சம் இலங்கையில் அது வலுப்பெறவும் வழிவகுத்தது.

நாகேந்திர சிம்மனின் (1707 - 1739) மறைவின் பின் மதுரை நாயக்கர் வழிவந்த விஜயராஜ சிம்மன் (1731 -1747) கண்டியின் மன்னனானான். அவனின் மறைவின் பின் அவனின் மச்சினன் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் முடிசூடினான். அவனின் மறைவின் பின் மருமகனான ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் 1815ஆம் ஆண்டு மன்னனானான். இதே காலப்பகுதியில் 18ஆம் திகதி பெப்ரவரி மாதம் 1815ஆம் ஆண்டு கண்டி பிரித்தானியரின் ஆளுகைக்கு உட்பட்டதுடன் அவன் கைது செய்யப்பட்டான்.

இவ்வாறு கண்டி இராஜ்ஜியம் பிரித்தானியர் வசமான பின் ஆரம்பிக்கப்பட்ட பெருந்தோட்டங்கள் தென்னிந்திய தொழிலாளர்களின் வருகைக்கு அடித்தளமிட்டன.

பெருந்தோட்ட பயிர்ச்செய்கையின் முன்னோடியான ஜோர்ஜ் பேர்ட்டின் வேண்டுகோளுக்கு ஏற்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கால பிரித்தானிய ஆளுனர் சேர். எட்வேர்ட் பான்ஸ் தென்னிந்திய திருநெல்வேலி மற்றம் தஞ்சாவூர் பகுதியிலிருந்து வேலை செய்ய ஆட்கொணர்ந்தார் என பேராசிரியர் பஸ்ரியாம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு இந்திய வம்சாவளி தமிழர்கள் இலங்கைக்கு நுழைய திறக்கப்பட்ட நுழைவாயில் அவர்களின் வருகைக்கு மாத்திரமின்றி அம்மக்களின் கலாசார நிலைபேற்றுக்கும் கால்கோளிட்டதெனலாம்.

தென்னிந்திய கிராமிய சமுதாய அமைவுக்கு ஒப்புவமை காட்டும்வண்ணமாக இலங்கைப் பெருந்தோட்டங்களில் குடியேறியவர்களின் சமூக அமைப்பும் உருவாகியுள்ளது. குறிப்பாக இச்சமூகத்தின் மரபு அமைப்புகள் செல்வாக்குப் பெற்ற கோலம் வாழ்விட, வதிவிட கலாசாரத்தில் பங்கேற்றமையைக் காணலாம்.

பெருந்தோட்ட செயற்பாடுகளின் மையநிலையமாக தோட்டத் தொழிற்சாலை திகழும். தேயிலைத் தொழிற்சாலையும் அதனை அண்மித்துக் காணப்படும். தோட்ட அலுவலகமும் பெரும்பாலும் தோட்டத்தின் மையச் சூழலில் அமைந்திருக்கும். இவற்றைச் சூழ அவற்றில் பணிபுரியும் லிகிதர்கள், தொழிற்சாலை அதிகாரிகள் கணக்குப்பிள்ளைகள் மற்றும் மேற்பார்வைகளுக்கான குவார்ட்டஸ் என அழைக்கப்படும் குடிமனைகள் அமைந்திருக்கும். தோட்டத்துரையினதும் அவரது உதவியாளரதும் பங்களாக்கள் தோட்டப் பரப்பில் தோட்ட அலுவலகத்துக்கு அண்மிக்கக்கூடியதான அழகான தனிப்படுத்தப்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும். தோட்டத் தொழிலாளர்கள் குடியிருக்கும் லயன்கள் தொழிற்சாலைக்கு சற்று தூரமாகவே கட்டப்பட்டவைகளாக இருக்கும்.

இந்த லயக் குடியிருப்பிலும் முன்லய வரிசையை குடியிருப்பாக கொண்டிருப்போருக்கும் தூரமாக அமைந்துள்ள லயங்களில் குடியிருப்போருக்கும் தொழிற்றன்மை, தொழில் உறவு, சமூக அந்தஸ்து என்ற வித்தியாசங்கள் இருந்தமையை கடந்த காலங்களில் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. என்றாலும் இங்கு வாழும் எல்லோரும் வழக்காறுகள், மரபுகள், சடங்குகள் மற்றம் பண்டிகைகள் என்பவற்றில் பெரும்பாலும் ஒரே நடைமுறைகளை அனுசரிப்பவர்களாக விளங்குகின்றனர்.

தமது மரபார்ந்த வாத்தியக் கருவியாக தப்பு எனும் தோல் கருவியை பயன்படுத்துவதும், காவடி - கரகம் - கும்மி போன்ற நாட்டார் ஆட்டங்கள் பயிலப் பெறுவதும் பொன்னர் - சங்கர், அருச்சுனன் தபசு மற்றும் காமன்கூத்து போன்ற கூத்துக்கள் ஆடப் பெறுவதும் நாட்டார் கலைகளிலொன்றான சிலம்படி வழக்கிலிருப்பதும் இந்திய வம்சாவளி தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களிடத்தே இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

இம்மக்கள் நிரந்தரமாக வறுமைக்குட்பட்டவர்களாகவும், தொடர்ச்சியாக சுரண்டப் பட்டவர்களாகவும், ஒடுக்குமுறைகளுக்கு உட்பட்டவர்களாகவும், இனவாதமுறைகளுக்கு குரூரமாக பலியாக்கப்பட்டவர்களாகவும் இருக்கும் சூழ்நிலைகளிலுங் கூட இத்துயரங்களை பொருட்படுத்தாது தமது கலாசார விழுமியங்களையும், மரபுரிமைகளையும், கலைவடிவங்களையும், தனித்துவ அடையாளங்களையும் உறுதியுடன் பேண முனைவது பாராட்டப் படவேண்டியதாகும்.

பெருந்தோட்ட தமிழ்த் தொழிலாளர்கள் கடனாளியாகவே பிறந்து கடனாளியாக இறப்பார்கள் என்று வழமையாகச் சொல்லப்படுவதுண்டு. அத்தகைய நிலையிலும் தமது தன்னடையாளங்களை பேண பாரம்பரிய சமய வழிபாடுகளையும் நம்பிக்கைகளையும் கைக்கொள்வது அவர்களில் காணும் சிறப்பாக இருக்கின்றது.

தென்னிந்திய இந்து சமய நம்பிக்கைகளே அன்றாட வாழ்க்கையை வழிநடத்த ஊட்டமளித்த சக்தியாக இருக்கத் தலைப்பட்டிருந்ததை அவர்கள் குடியேறிய தோட்டங்கள், கிராமங்கள் மற்றும் சிறுநகரங்களில் கோவில்கள் அமைத்தும் சிறுதெய்வ வழிபாட்டு மேடைகள் அமைத்தும் செயற்பட்டமை உறுதிப்படுத்துகின்றது. முதலில் அடர் விருட்சங்களான ஆல அல்லது அரச மரம் போன்றவைகளின் கீழ் முக்கோண வடிவக் கல் அல்லது உருவம் அல்லது திரிசூலம் அல்லது வாள் வைத்து வழிபட்டனர். சிவன், பார்வதி, விஷ்னு, மகாலட்சுமி, சரஸ்வதி, முருகன், வள்ளி, தெய்வானை மற்றும் பிள்ளையார் போன்ற பெருந்தெய்வங்களும் அவர்களின் அவதார வடிவங்களும் இவ்வழிபாடுகளின் இறையம்சங்களாக இருந்தன.

பெருந்தோட்டங்களில் தொழிலாளர்களாக அவர்கள் பணிபுரிய தென்னகத்திலிருந்து குடிபெயர்ந்து மன்னார் வந்து அங்கிருந்து குருணாகல் வழியாக கண்டியை அடைவதற்கிடையில் மாத்தளையில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பு முகாமில் ஒரு வாரம் வரை வைக்கப்படுவது வழக்கம். இங்கு அவர்களுக்கு ஏற்படும் கொலரா மற்றும் மலேரியா நோய்கள் அவதானிக்கப்பட்டு தடுப்பு மருந்துகள் வழங்கப்படும். அவ்வாறு அங்கு தங்கியோர்கள் முகாமிலிருந்த வில்வ மரத்தின் அடியில் கல்லொன்றை வைத்து மாரியம்மனாக 1820ஆம் ஆண்டு வழிபடத்தொடங்கிய இடம் 1852ஆம் ஆண்டு பிரசித்த மாத்தளை முத்து மாரியம்மன் ஆலயமாக உருவெடுத்தது.

வணிக சமூகமாக குடியேறிய நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கதிரேசன் வழிபாடு செய்வதை அறிமுகப்படுத்தி மாத்தளையில் கதிரேசன் கோவிலை அமைத்தனர். அதன் வருடாந்த உற்சவம் ஜூலை மாதந்தோறும் இடம் பெறுகின்றது. இவ்வாறு மலையகத்தில் செல்வாக்குப் பெற்ற முருக வழிபாட்டின் மற்றுமொரு பிரதான அம்சம் தென்னிலங்கையில் அமைந்துள்ள கதிர்காமத்துக்கு அக்கால பெருந்தோட்ட தமிழ்த் தொழிலாளர்கள் கால்நடையாக யாத்திரை சென்று கதிர்காமக் கந்தனை வழிபட்டு மீள்வதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபாவளி, பொங்கல், புத்தாண்டு போன்ற இந்துப் பண்டிகைகளை அவ்வாறாகவே பெருந்தோட்ட இந்திய வம்சாவளித் தமிழர்கள் கொண்டாடி வருகின்றனர். அதே சமயம் குலவழக்கப்படியாக சிறு தெய்வங்களை தாம் வாழும் தோட்டங்களில் வைத்து வழிபடுவதும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. வருடந்தோறும் தத்தம் குலதெய்வங்களுக்கு குறிப்பிட்ட நாட்களில் சைவ அல்லது அசைவ படையலிட்டு வணங்கி விழாவெடுக்கும் மரபு நிலவுகின்றது. பெரும்பாலும் தீபாவளிக்கு முதல்நாள் இரவு இதற்காக தெரிந்தெடுக்கப்படுவதுண்டு. மாடசாமி, முனியாண்டி, காளி, மதுரைவீரன், சங்கிலிகருப்பன், வால்ராஜா வைரவர், வீரபத்திரன், சுடலைமாடன், நாகபூசனி அம்மன் மற்றும் ரோதை முனி என்பன இவ்வகை சிறு தெய்வங்களாகும்

தற்போது கண்டி மாவட்டத்தில் 153 பதிவு செய்யப்பட்ட இந்து ஆலயங்கள் உள்ளன. அதே போல நுவரெலியா மாவட்டத்தில் 104 கோவில்களும், மாத்தளை மாவட்டத்தில் 62 கோவில்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. மத்திய மாகாண சபை ஊடாக பதிவு செய்யப்பட்ட அறநெறி பாடசாலைகளாக பல பாடசாலைகள் இயங்குகின்றன. நுவரெலியா மாவட்டத்தில் 22 பாடசாலைகளும் கண்டி மாவட்டத்தில் 54 பாடசாலைகளும் மாத்தளை மாவட்டத்தில் 11 பாடசாலைகளும் தற்போது சிறப்பாக நடைபெறுகின்றன.

குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் இந்து மன்றங்களும், நிறுவனங்களும் தற்போது ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அவை செயற்பாட்டு ரீதியாக தீவிரமடைந்து வருகின்றன. ஆனாலும் மதமாற்ற அச்சுறுத்தல் இந்து சமயத்தை பாதித்துவருமொன்றாக இருப்பதுவும் அவதானிக்கப்பட்டுள்ளது. பல இந்துத் தொழிலாளர்கள், கிறிஸ்தவர்களாகவும் கத்தோலிக்கர்களாகவும் இஸ்லாமியர்களாகவும் மதமாற்றப்பட்டு வருகின்றனர். சாதிய முறை வலுப்பேற்றின் உந்தல் காரணமாக மதமாற்றத்தினூடாக பிறந்த சமூக அந்தஸ்து மற்றும் கல்வியறிவு பெற இம்மார்க்கம் அமையப் பெறலாம் என்ற பின்னனி இதிலே பொதிந்திருக்கலாம். விஸ்வ இந்து பரிசத் போன்ற இந்து அமைப்புகள் இதற்கெதிராக செயற்படுவது இந்துக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக அமைகின்றது.

இத்தருணத்தில், உலக இந்து அமைப்புக்களுக்கும் இந்து அமைப்புகளின் இளைஞர் பிரிவுகளுக்கும் சர்வதேச இந்து நிறுவனங்களுக்கும் எனது பணிவான வேண்டுகோளாக முன்வைப்பதென்னவெனின் வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டு, புறந்தள்ளப்பட்டு தத்தளிக்கும் இந்திய வம்சாவளி இந்துகளாக இலங்கையில் வாழும் மக்களுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டுமென்பதாகும். சமய அமைப்புகளை உருவாக்குதல், ஆன்மீக முகாம்களை நடத்துதல், தியான செயலமர்வுகளை ஒழுங்கமைத்தல் என்பவற்றூடாக சிறந்த சமயம் மற்றும் சமூக பெயர்வடைந்த நல்வாழ்க்கையை மேற்கொள்ள பொருளுதவி கிடைக்குமானால் மதமாற்றமென்பதூடாக இந்துக்களை பிற மதங்களுக்கு இழுத்துச் செல்வதை நலிவடையச் செய்யலாம்.

இந்திய தமிழ் மக்கள் அனைவரும் தொழிலாளர் வர்க்கம் சார்ந்தவர்களாக இருக்கின்றார்கள். அவர்களில் மிகச் சிறிய பகுதியினர் வர்த்தகர்களாகவும் மிகக் குறுகிய எண்ணிக்கையினர் உயர்தொழில் செய்பவர்களாகவும் உள்ளனர். பிரித்தானியர் அவர்களை தொழிலாளர்களாக மாத்திரம் கருதி அழைத்து வந்தாரேயன்றி, அவர்கள் தம் பிள்ளைகளின் கல்விக்கான கவனத்தை சரிவர முன்னெடுக்காமையும் அலட்சிய மனோபாவமும் இந்திய வம்சாவளி மக்களை கல்வியில் பின்தங்கிய சமூகமாக இன்றுவரை வைத்திருக்கின்றது. இச்சமூகம் பெருந்தோட்டம் என்ற வட்டத்தை இட்டு மூடிவைக்கப்பட்டுள்ள சமூகமாக இருக்கின்றது. இந்திய சமூகம் இலங்கை நாட்டின் பொருளாதார ஏற்றத்துக்கு பங்களித்து வந்தாலும் தனக்கான பொருளாதார சமூக அந்தஸ்த்தில் தாழ்வுற்றே இருக்கின்றது. தனிப்பட்டதாகவும் முடக்கப்பட்டதாகவும் இலங்கையில் மத்திய பகுதிகளில் வாழும் இவர்கள் மொழிப்பரிச்சயமின்மை காரணமாக மலைகளுக்கு அண்மையிலுள்ள சமவெளிகளில் அமைந்துள்ள சிங்கள கிராமத்தவர்களிடமிருந்துங்கூட தொடர்பறுந்திருக்கின்றனர். அவர்களது வாழ்க்கையை தோட்ட துரைமார்களே தீர்மானிக்கும் அளவிற்கு கொத்தடிமைத் தொழிலாளர் நிலைக்கு உதாரணமாக இருந்து வந்தனர் எனக் கூறலாம். சமூக உறவு அல்லது கலாசார பிணைப்பு என்பன அவர்களுக்குள்ளாகவே இருக்கின்றது. அல்லது இன்னும் இந்தியாவோடு தொடர்புள்ளதாகவே இருக்கின்றதெனலாம்.

நாற்பதுகளில் தொழிற்சங்க இயக்கச் செயற்பாடுகள் முடுக்கப்பட்டு இத்தொழிலாளர்களை போராடும் தொழிலாளர் அணியாக மாற்றத் தொடங்கியது. பிரித்தானியர்களுக்கே பெரிதும் உடமையாக இருந்த பெருந்தோட்ட கம்பனிகளின் சுரண்டல்களிலிருந்து விடுதலை பெறுவதற்காக சமசமாஜக்கட்சியுடன் கை கோர்த்தனர்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின் நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் தோட்டத் தொழிலாளர்களிலும் பெரிதும் மாற்றங்களை விளைவித்தது. முதலாவது சுதந்திர பாராளுமன்றத்தில் தேர்தலூடாக இந்திய வம்சாவளி மக்களின் ஏழு பிரதிநிதிகள் இடம்பெற்றனர். இத்தேர்தலில் இம்மக்கள் இந்தியவம்சாவளி தமிழ் அபேட்சகர்கள் அல்லத சமசமாஜக் கட்சி அபேட்சகர்களுக்கு வாக்களித்திருந்தனர். கலாநிதி. என்.எம்.பெரேரா, சமசமாஜக் கட்சியின் தலைவர், எதிர்க்கட்சி தலைவராகி பாராளுமன்றத்தில் அமர்ந்தார். ஐக்கிய தேசியக் கட்சியை அடுத்து இரண்டாவது பெரிய கட்சியாக சமசமாஜக் கட்சி பாராளுமன்றத்தில் பரிணமித்திருந்தது. முதலாவது பிரதமரான டி.எஸ். சேனநாயக்கா எதிர்காலத்தில் மார்க்சியர்கள் அரசினை பொறுப்பேற்கும் சாத்தியம் வலிதாக இருப்பதை இதனூடாக கண்ணுற்று மார்சிய கட்சிகளையும் அதன் துணை அமைப்புகளையும் சிதைக்கும் பணியைத் தொடக்கினார். அவர் 1948இல் இலங்கை பிரஜாவுரிமை சட்டத்தை அறிமுகப்படுத்தினார். இதன் மூலம் இந்திய தமிழர்கள் நாடற்றவர்களானார்கள். அல்லது குடியுரிமை பறிக்கப்பட்டவர்களாயினர். விளைவாக இலங்கையின் தேசிய அரசியல் நீடோட்டத்தினின்று ஒதுக்கப்பட்டவர்களாகவும் இலங்கை அரசியலில் அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீண்டத்தகாதவர்களாகவும் கணிக்கப்பட்டு வரத் தொடங்கினர்.

தமக்கென ஒரு பிரதிநிதியை பாராளுமன்றத்தில் கொண்டிருக்க முடியாமல் பாராளுமன்ற அரசியலில் தம்மைக் குறித்து கவனத்தை ஈர்க்க முடியாமல் 1948- 1964 வரை மறைக்கப்பட்ட மக்கள் சமூகமாக வாழவேண்டிய அவலநிலை ஏற்பட்டது. வாழ்வு வெறுமே கழிய இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் துணைகொண்டு தனக்கென சாதகமான மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளமுடியாது தத்தளித்தனர். வீடமைப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி என்பவற்றில் விருத்திநிலைகளில் ஏற்பட்ட சாதக மாற்றங்கள் தொழிலாளர்களை முற்றாக புறக்கணித்தன. சிசு மரணவீதம் இவர்களில் மிக உயர்வான சூழ்நிலையில் இலங்கையில் அழிந்தொழிந்து போகும் இனக்குடும்பமாக மாறியிருந்தனர்.

இலங்கையில் 1931ஆம் ஆண்டு அனைவருக்குமான வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டு மக்களின் பௌதீக சமூகநல மேம்பாட்டு சுட்டிகள் இலங்கை வளர்ச்சியை சுட்டினாலும் அது இந்த கைவிடப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் நிலை குறித்த தகவல்களை உள்வாங்கிக் கொள்ளாமல் மறைத்து வெளிப்படுத்தப்பட்டவைகளே. இலங்கையின் அந்நிய செலாவணியை பெருமளவில் ஈட்டித் தருவதற்கான மலிவு ஊழிய அல்லது குறை வேதன தொழிலாளர்களாக அவர்கள் பயன்கொள்ளப்படுகின்றனர். 18ஆம் நூற்றாண்டு இலங்கைக்கு வந்து தொழில் செய்யத் தொடங்கியதன் பின் 1927அம் ஆண்டே அவர்களுக்கு சம்பளம் வழங்குதல் தொடர்பான முறைமையொன்றை ஸ்தாபிக்க பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டது.

1933இல் நாட் சம்பளம் 33சதமாக இருந்த நிலைமை தொழிற்சங்க கோரிக்கைகள் வழியாகவும் போராட்டங்களுடாகவும் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு 1983 இல் ரூ.17.83 ஆகவும் 1993 இல் ரூ.72.24 சம்பளம் 1998 இல் ரூ.101 ஆகவும் காணப்பட்டது. 1984 லிலேயே ஆண் பெண் தொழிலாளர்களுக்கிடையேயான சம்பள பேதம் நீக்கப்பட்டு சம சம்பளம் வழங்கப்படுவதானது. இன்றும் கூட அவர்கள் பெற்றுக் கொள்ளும் வேதனம் வாழ்க்கைச் செலவுகளை ஈடுசெய்வதற்கு போதுமானதாகவில்லை. அன்றாட தேவைகளை பூர்த்திசெய்ய கடன் வாங்க வேண்டியுள்ளது. இது அவர்களை வறுமையும், சமூக பின்தள்ளலும், அரசியல் புறக்கணிப்பும், இனரீதியான பயமுறுத்தலுக்கும் உட்பட்ட நிலையை பேணுகின்றது.

1972ஆம் ஆண்டு காணி சீர்த்திருத்த சட்டத்தின் கீழும் 1975ஆம் ஆண்டு அதன் சீர்த்திருத்தத்தின் கீழும் பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டன. அரச மயமான தோட்டங்கள் பெருந்தோட்ட மயமாக்கம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை என்பவற்றினூடாக நிர்வகிக்கப்பட்டன. தேசிய மயமாக்கம் தொழிலாளர்களின் வாழ்வில் எவ்வித அடிப்படை மாற்றத்தையும் செய்ததாக கருதுவதற்கில்லை. அரசானது தோட்ட தொழிலாளர்களின் சுகாதாரம் வீடமைப்பு மற்றும் பொது நல மேம்பாட்டு நடவடிக்கைகளில் தீவிரமாக அக்கரைக் காட்ட வேண்டுமென்ற எதிர்பார்ப்பு மட்டுமே எஞ்சியிருந்தது.

என்றாலும் தோட்ட பாடசாலைகள் அரசமயமாகி பொதுக் கல்வி முறைக்கு கீழ் கொண்டுவரப்பட்டதோடு SIDA நிதி உதவியோடு பிற்காலத்தில் புதிய கட்டடங்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இது கல்வி அறிவு வீதத்தை சிறிது உயர்த்த பெரிதும் பயன்பட்டது. மற்றும் பெருந்தோட்டப் பகுதியில் கற்ற இளைஞர்களை ஆசிரியர் பணிக்குள் உள்வாங்கவும் உதவி செய்தது.

பெருந்தோட்டத் துறையில் ஏற்பட்டிருக்கும் வேலையின்மை அதிகரிப்பு இளைஞர்களை வேறு துறை குறித்து கவனத்தை திருப்பவேண்டியுள்ளது. கணிசமான இந்திய தமிழ் யுவதிகள் ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளார்கள். சிலர் அக்கரைப் பச்சையென மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்களாக தொழில் பெற்றுள்ளார்கள். ஆகவே இந்திய தமிழர்களை தற்போது இலங்கையின் நகர்ப்புறங்களில் மாத்திரமின்றி வெளிநாடுகளிலும் கூட காணக்கூடியதாகவுள்ளது.

1964ஆம் ஆண்டு ஸ்ரீமா- சாஸ்திரி ஒப்பந்தத்தின் வழிதுணை ஒப்பந்தமான ஸ்ரீமா-இந்திரா ஒப்பந்தம் 1974ஆம் ஆண்டு கைச்சாத்தாகி 600,000 நபர்களுக்கு தாயகம் திரும்புவதற்கும் மற்றைய 375,000 நபர்களுக்கு இலங்கை பிரசையாக்குவதற்கும் உடன்பட்டது. இது அவர்களை மறுபடியும் அரசியலில் ஈடுபட வாய்ப்பளித்தது. என்றாலும் இந்திய தமிழர் சமூகம் தனித்துவ கலாசார அடையாளத்தோடு வளர்ந்திருந்த சூழலை தளம்பலடையச் செய்து குடித் தொகையில் மாற்றத்தை ஏற்படுத்தியதெனலாம். ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும் இப்பரம்பரை தமது கல்வி வாய்ப்புக்கும் கலாசார அடையாளங்களுக்கும் அங்கிகாரம் கோரி உரத்த குரல் எழுப்பி இருந்தது. இதனை இம்மக்களில் இருந்து உருவாகி கல்வி வாய்ப்பு பெற்ற ஆசிரியர்கள், தொழிற்சங்க வாதிகள் மற்றும் உயர்தொழில் வாண்மையினர் என்பவர்களைக் கொண்ட அணியினர் முன்வைத்திருந்தனர். இது உருவாக்கிய தெளிவான மலையக சமுதாயம், சமுக சீர்கேடுகளுக்கெதிராகவும் கல்வி வாய்ப்புகள் மறுப்புக்கெதிராகவும் குரல் கொடுத்து இலங்கையே தமது தாயகம் என வலியுறுத்தியது. விளைவாக இந்திய கடவுச்சீட்டுகளைக் கிழித்தெறிந்து இலங்கை பிரசையாக அங்கீகரிக்கக் கோரியும் தேசிய தலைமைத்துவத்துக்கு உடன்பட்டும் வாழ முற்பட்டமையின் விளைவாக வாக்குரிமையை மீளப்பெற்ற சமூகமாகி பாராளுமன்றத்தில் கணிசமான பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்வதானது. இதன் விளைவாக இனிவருங்காலங்களில் பெறக்கூடிய பலன்களை சாதகமாக எதிர்நோக்கலாம்.

**(தமிழ்ப்படுத்தல் அனுசரணை சாந்தி முரளிதரன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரெலியாவும் இதிகாசத் தொடர்புகளும்

*திருமதி. நிர்மலா பத்மநாதன்*
*உதவி கல்வி பணிப்பாளர்- நுவரெலியா*

தமிழ் கற்ற அறிஞர்கள் மனம் கொண்ட ஒரு காவியம் கம்பராமாயணம். இதிகாசங்களில் ஒன்றான இராமாயணத்தில் இந்தியாவின் தென்திசை நாடாகக் குறிக்கப்படும் இலங்காபுரியும் அதில் நிகழ்வுற்ற சம்பவங்களும் வியக்கத்தக்க ஒரு திருப்பு முனையாகும். இராமன் காடேகவில்லையென்றால் அனுமன் இலங்காபுரியை தேடியிருக்க மாட்டான். திருஞான சம்பந்தர் தன் திருவாயால் 'இராவணன் மேலது நீறு' என புகழ்ந்துரைத்த சிவபக்தனும் சீரிய அரசனுமான இராவணனை நாம் அறிந்திருக்க மாட்டோம். இதிகாசக் கால இலங்காபுரி செல்வச்செழிப்பும், மாடமாளிகைகளும், சகலவுணர்வும், அரசாட்சித் திறனும், வலிமையும் இன்றும் தமிழக ஆராய்ச்சியாளர் பலரால் ஆராயப்பட்டுக் கொண்டிருப்பது வியப்பானதாகும். இவ்வாராய்ச்சிக்கு அடிநாதமே இராமாயணம்.

சாதாரண மனித வாழ்வு முதல் அரசர் ரிஷிகளுடைய வாழ்வியல் முறைகளையும், பண்புகளையும் சித்தரிக்கும் ஓர் அரிய காவியம். இக்காவியம் காட்டும் இலங்கையில் இராமாயணக் காலப் பிரதேசம், மக்கள் பிரிவு, ஆட்சியமைப்பு, சமயநிலை, அக்காலத்தில் இலங்கையில் தொன்மை பெற்றத் திருத்தலங்கள், சிவவழிபாடுகள் போன்றவற்றை இராமாயணத்தை மேற்கோள் காட்டி உய்த்துணரக் கூடியதாகவுள்ளது.

இக்காவியம் இந்தியா, இலங்கை மட்டுமன்றி பர்மா, இந்தோனேசியா, சீனா, மலாயா, தாய்லாந்து, லாவோஸ், வியட்நாம், மாலைத்தீவு போன்ற நாடுகளின் பாடப்புத்தகங்களில் உள்ளீர்க்கப்பட்டும், கர்ணப்பரம்பரை கதைகளாகவும், நாடகம், கவிதைகளில் ஊடுருவியும் போற்றப்பட்டு வருகிறது. இதனை அறிந்த அனைத்து நாட்டவரும் சீதையை இராவணன் சிறை வைத்த இடம் இலங்கை என்பதை தெட்டத்தெளிவாக மனங்கொண்டுள்ளனர். எனவே இராவணேஸ்வரன் அரசோச்சிய இலங்காபுரி என்பதால் இராமாயணத்துடன் மிக நெருங்கிய தொடர்புடைய நாடு இலங்கை. அதுவும் நுவரெலியா பிரதேசம் என்பது யாவரும் அறிந்த உண்மை.

சீதையை சிறைப்பிடித்த இராவணன் தன் புஸ்பக விமானத்தில் ஏற்றி தென்திசை நோக்கி சமுத்திரத்தைக் கடந்து தனது நாடான இலங்காபுரியில் மத்தியில் அமைந்த அசோகவனத்தில் சிறை வைத்தான் என்று இராமாயணப் பாடல்கள் கூறுகின்றன. இவ் அசோகவனம் நுவரெலியாவில் வெளிமட பாதையில் 5 கி. மீ தொலைவில் அமைந்துள்ளது. 'ஹக்கல என்ற இடத்திலுள்ள சீத்தா எலிய என்ற இடமாகும். இது சீதையின் இடம் என்றே பொருள்படும். எலிய என்பது சிங்களமொழியில் மலை, இடம், பகுதி எனப் பொருள்படும் சொற்களாகும். அசோக மரங்களால் சூழப்பட்ட அடர்ந்த, இருண்ட காடுகளுடன் கூடிய பகுதி என பாடல்களால் வர்ணிக்கப்பெற்றது. சீதை வடித்த கண்ணீரே இன்றும் இப்பகுதியின் குளிர்ச்சிக்கு காரணம் எனக் கூறுவோரும் உளர். எதிரிகள் நுழையமுடியாத இறுக்கமான அரண்கள், காற்று நுழையமுடியாத அடர்ந்த வனம், இயமனின் பார்வைக்கூட நுழையமுடியாத இருட்டு என பாடல்கள் கூறும் அசோகவனம் சீதையின் சோகத்தைக் கூறுமாப்போல் ஆழ்ந்த அமைதியும் குளிர்ச்சியும் மிகுந்து காணப்படுகிறது.


இங்கு காணப்படும் அழகும் செழிப்பும் மிகுந்த அசோகமரம் பழங்கதைகளின் 'கடவுளின் புனித படைப்பு' எனக் கூறப்படுகிறது. வெப்பம், குளிர்ச்சி, இனிமையான மணம், நோய் நீக்கும் குணம் என்பனவற்றை அதன் இலைகளுக்கிடையிலே வைத்துள்ளது. அது உலகின் காட்டுப்பகுதியை வரையறுத்துக் கூறும் போது புவியியல் அறிஞர்களால் இலங்கையின் மத்தியில் காணப்படுவதாக உறுதியாகக் கூறியுள்ளமை தெளிவாகிறது. இவ்வசோகவனம் என்ற சொல் இராமாயணத்தின் யுத்தகாண்டத்தின் மையப்பகுதியாகக் குறிப்பிடப்படுவதை அவதானிக்கலாம்.

இராவணன் காலத்திற்கு பின் கட்டப்பட்டதாகக் கூறப்படும் சிறு ஆலயமும், சீதை, இராமன், இலக்குவனன், அனுமனின் கற்சிலைகளும் இங்கு காணப்பட்டன. இவ்வாலயத்தின் அருகே குளிர்ச்சி பொருந்திய உமா ஓயா என்ற ஆறு ஓடுகிறது. சீதை நீராடிய புனிதமான ஆறு என்பது ஐதீகம் ளளஇராமாயணத்திலும் இச்சிற்றோடைப் பற்றி வர்ணிக்கப்பட்டுள்ளது. இவ்வாற்றின் குறுக்கே பல மடிப்புக்களுடைய வழவழப்பான பெரிய கற்பாதை காணப்படுகிறது. இம்மடிப்புக்களுக்கிடையே ஒரு நீர் சுரங்கம் இருப்பதாகவும் இன்றும் பலராலும் கூறப்படும் ஒரு விடயமாகும். சீதை தினமும் நீராடியப்பின் இராமனைத் தியானித்து 'என்னை அழைத்துப் போக வருவாரா மாட்டாரா' என்பதை உறுதிப்படுத்த வெண்ணிற, செந்நிற மலர்களை இச்சுரங்கத்தில் இடுவாராம். அதில் வெந்நிறப் பூவே சுரங்கத்தைக் கடந்து முதலில் ஆற்றில் விழுமாம். இதனைக் கண்டே என்றோ ஒருநாள் என் நாதன் என்னை அழைத்துப்போக நிச்சயம் வருவாரென மனதில் உறுதிகொள்வாளாம் சீதை. அதற்குப் பிற்பட்ட காலங்களிலும் வேறு இடங்களில் உள்ள மக்களும் கூட தாம் நினைத்த காரியம் வெற்றி பெறுமா என்பதை அறிய இவ்வாலயத்திற்கு வந்து சீதையை தியானித்து நீரில் மலரிட்டு மனக்கிலேசம் போக்கிச் சென்றதாக கூறுகின்றனர். அண்மை காலங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் இத்தொன்மை வாய்ந்த சுரங்கப்பாதை தூர்ந்துப்போயுள்ளது. இப் பழமையான நம்பிக்கைக்குரிய இச்சுரங்கப்பாதையை நுவரெலியா இந்துக்கலாசாரப் பேரவை புனர்நிர்மானம் செய்ய சிந்தைக் கொண்டுள்ளது வரவேற்கத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமாயணத்தில் கூறப்படும் அசோகவனம் நுவரெலியாவிலுள்ள 'ஹக்கலை பிரதேசமாகும். இலங்கை மாநகரின் மத்தியில் ஓர் மலைக்குன்றின் மீது அடர்ந்திருந்தது. இப்பகுதி முழுவதும் பச்சைப் பசேல் எனக் கம்பளம் விரித்தாற்போல் பசுமை படர்ந்திருந்தது. திரும்பிய பக்கமெல்லாம் பல வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கின. பூஞ்செடிக்கொடிகள் தீஞ்சுவை கனிவர்க்கங்கள் மலர்ச்சியுடன் காணப்பட்டு மலர் வாசனையுடன் கனிகளின் வாசனையும் சேர்ந்து இப்பிரதேசமே சுகந்த மணம் பரவி காணப்பட்டது. வசந்தத்தின் ஆட்சி பூரணப் பொலிவுடன் திகழ்ந்த போதும் எங்கும் காணாத சோகமும் அமைதியும் ஆட்சிப்பெற்றிருந்ததாக அனுமனின் கூற்றாக பாடல் வரிகள் சுட்டிக்காட்டுகின்றன.

அவ்வசோகவனத்தில் ஓர் மரத்தடியில் சோகமே உருவாக சீதாப்பிராட்டியார் தென்பட்டார். பல காவல் அரக்கியர் மத்தியில் இராமபிரானின் நினைவைத் தவிர வேறு எதிலும் தன் சிந்தனையை சிதறவிடாது சீதா ஏகாந்தமாக அமர்ந்திருந்ததை பார்த்த அனுமன்



*'நங்கை கண்டேன் அல்லேன்*
*இப்பிறப்பு என்பதொன்றும்*
*இரும்பொறை என்பதொன்றும்*
*கற்பிலும் பெயரதொன்றும்*
*களிநடம் புரியக் கண்டேன்'*

என இராமாயணத்தில் புளகாங்கிதம் கொள்வதை காணலாம். சீதையுடன் தன்னையாரென அடையாளப்படுத்தியப்பின் இராமனது கணையாழியை கையளித்து சீதையின் சூடாமணியை பெற்றுக் கொண்ட அனுமன் அவ்வசோகவனத்து அழகையே அழித்து தான் இராம தூதன் என்பதை அரக்கர் குழாத்திற்கு வெளிகாட்ட முனைகிறான். சினத்துடன் மரங்களையும், பூஞ்செடி கொடிகளையும் பிடுங்கி வீசி கனிமரங்களை வேருடன் சாய்த்து அவ்வழகையே துவசம் செய்கிறான். சீதாப்பிராட்டி இருந்தப்பகுதித் தவிர அனைத்தையும் நாசம் செய்தான். அழகிய சோலை சூறாவளியால் சின்னாப்பின்னமாக்கப்பட்டது போல் காட்சியளிப்பதை கம்பர்

*முடிந்தன பிளந்தன முரிந்தன நெரிந்த*
*மடிந்தன பொடிந்தன மறிந்தன முறிந்த*
*இடிந்தன நகர்ந்தன எரிந்தன கரிந்த*
*ஒடிந்தன ஒசிந்தன உதிர்ந்தன பிதிர்ந்த*

என சுந்தரக்காண்டத்தில் கூறுகிறார். இன்றும் ஹக்கலை மலைக்குன்று அழகிழந்தே காட்சியளிப்பது இதற்கு சாட்சியாகும்.

அழகை பாழ்படுத்திய அக்குரங்குக்கு தியூட்டும்படி இராவணன் ஏவ அரக்கர் குழாம் அனுமனை பிடித்து வாலில் பந்தம் கட்டி தீமூட்டினர். சீதையின் பிரார்த்தனையால் அனுமனை அத்தீ ஒன்றும் செய்யவில்லை. அனுமன் தன் விசுவரூப வாலைத்தூக்கி அப்பிரதேசம் முழுவதையும் எரியூட்டினான். அத்தீ அப்பிரதேசத்தையே சுடுகாடாக்கி பலநாட்கள் கனன்றுக் கொண்டிருந்தது. அரக்கர்கள் பயப்பீதியுடன் இராவணனிடம் கூறிக்கொண்டிருந்தனர். அனுமன் இட்டத் தீ இன்னும் நூரலை, நூரலை என புலம்பி முறையிட்டனர். இராவணனும் இன்னும் நூரலையா என அனைவரிடமும் விசாரித்து சினம் கொண்டான். இச் சொல்லே மருவி நூரலையா என்றும் நூரளை என்றும் நுவரெலியா என்றும் வழங்கப்படுவதாக கூறப்படுகிறது.

போரில் இராவணனது புதல்வனாகிய இந்திரசித்துவின் பிரமாஸ்த்திரத்தால் இராமனது படைகள் பெரும் சேதமடைந்தன. இராம இலக்குமணரும் மூர்ச்சையாயினர். பலர் இறந்தும் காணப்பட்டும், சின்னாப்பின்னமாயினர். இதனைக் கண்டு துயருற்ற அனுமன் ஜாம்பவானின் ஆலோசனைப்படி விசுவரூபமெடுத்து கடலைக் கடந்து பறந்து போய் கைலாச கிரியின் ஒரு மடிப்பாக சஞ்சீவி மலையின் ஒரு பகுதியை பெயர்த்தெடுத்து வந்தான் அதிலுள்ள மூலிகைகளை கொண்டு இறந்தவரை உயிர்ப்பித்தும் அங்க சேதமுற்றவரையும், காயமுற்றவரையும் குணப்படுத்தியும் படையணிக்கு புத்தூக்கமும் மறுவாழ்வும் கொடுத்தான். அன்று சிதறிய அரிய மூலிகைகள் இன்றும் இவ்வசோகவனத்தில் பல இடங்களில் தேடிப்பயன் கொள்வாரின்றி காணப்படுகிறது.

இன்று கெப்பட்டிப்பொல என பெயர்வழங்கப்படும் இடத்திலுள்ள இராமலங்கா என்ற சமவெளியிலேயே இராம இராவண யுத்தம் நடந்ததாகக் கூறப்படுகிறது. யுத்தக்களத்தின் வர்ணனைகளை பார்க்கும் போது இவ்விடத்திற்கும் யுத்த பூமிக்கும் நிறைய தொடர்புகள் நேரிடையாகவே காணப்படுகிறது. சுற்றி உயர்ந்த சிறு குன்றுகளுக்கு மத்தியில் படர்ந்த சமவெளிப்பகுதியாகும். இவ்விடத்திலேயே போர் நடைபெற்றதாக தற்போது அங்கு வசிக்கும் பெரும்பான்மையின மக்கள் நம்பி வாயுறுகின்றனர். இதில் தான் இராமன் இராவணனை சங்கரிக்கிறார். இதனை கம்பர்

*திக்கோடும் உலகு அனைத்தும் செருக்கடந்த*
*புயவலியும் நின்று மார்பில்*
*புக்கு ஓடி உயிர் பருகிப்புறம் போயிற்று*
*இராகவன் தன் புனித வாளி!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறி கரிய இராவணன் படை இறந்து குவிந்துக் கிடந்ததையும் அவ்வுயர கரிய மலைக் குன்றுகளையும் தொடர்புபடுத்தி யுத்தகள வர்ணனையாக கூறுகிறார். இப் பிரதேசம் போரினால் சின்னாப்பின்னமாக்கப்பட்டு உருகுலைந்து பாழடைந்துவிட்டதால் இராமாயணக் காலத்தின் பின் இவ்விடம் 'பாழுகம' பாழடைந்த கிராமம் என்றே அண்மைகாலம் வரை பெயர் வழங்கப்பட்டு வந்தது. மனித நடமாட்டம் இல்லாத வெறிச்சோடிய பாழடைந்த பகுதியை இன்று புணர்நிர்மானம் செய்து கெப்பட்டிபொல என பெயர் சூட்டி மக்கள் வாழும் இடமாக மாற்றியுள்ளனர். போர் நடைபெற்ற காலத்தில் இராவணனது மனைவி இராவணனுக்கும் படையினருக்கும் அசிரிக்கொழுக்கட்டை தயாரித்து போர்க்களத்துக்கு அனுப்பினாளாம். படைகள் தோல்விமேல் தோல்வியை தழுவிக்கொண்டிருக்கும் போது உணவா வேண்டும் என சினத்துடன் இராவணன் அவற்றை தூக்கி எறிந்தாராம். அவை மண்ணில் சிதறி இன்றும் இப்பகுதியில் மழைக்காலத்தில் மண்ணுருண்டைகள் போன்று காட்சியளிக்கும் அரிசியுருண்டைகள் மேல் வருகின்றன. இதனை அப்பிரதேச மக்கள் இராவணன் கொழுக்கட்டை என்றே கூறுகின்றனர். இது நோய் தீர்க்கும் ஔடதமாக பயன்படுவதாக சித்த மருத்துவர்கள் கூறுகின்றனர். இவ்வுருண்டையின் உள்ளே பழுதுபடாத அசிரி இருப்பது பெரும் ஆச்சரியமாகும். இப்பகுதியில் பலர் வீடுகளில் இவ்விராவணன் கொழுக்கட்டை வைத்துள்ளனர். . இதுவும் இராமாயணத்தின் தொடர்பாகும்.

இப்பிரதேசத்திலுள்ள இராமாயணத்தோடு ஆதாரமாகக் காட்சியளிக்கும் இன்னொரு இடம் 'திவுரும்வெல' என்ற இடமாகும். இது தொன்மையின் இருப்பிடமாகும். போர் முடிந்து பின் சீதையை அழைத்துப் போகுமுன் இராமன் சீதையின் கற்பை சந்தேகக் கண்கொண்டு பாராமல் ஊரால் கண்ணில் அவளது புனிதம் பதிய வேண்டுமென்ற திண்ணிய எண்ணம் கொண்டு சீதையின் கற்பை நிலையிறுத்த தீக்குளிக்கச் செய்கிறான். இலக்குவணனால் வளர்க்கப்பட்ட அக்கினியில் சீதை புகுந்து தான் பதிவிரதை என்பதை மகாலட்சுமி அவதாரமாக காட்சியளித்து சத்தியம் செய்கிறாள். சீதையே ஓர் கற்புக் கனல் . கனல் கனலை எரிக்குமோ. இதனைக் கண்ணுற்ற அக்கினி தேவனே அதிர்ந்து அத்தீயில் தன்னை மாய்த்துக்கொண்ட இடமே இன்றைய திவுரும்வெல என்ற இடமாகும். இவ்விடத்தில் 'திவுரும்வெல புராதன விகாரை' என்ற பெயர்ப்பலகையுடன் ஒரு விகாரைக்கு அருகில் சீதை, இராமர், இலக்குவணன், அனுமனின் கற்சிலைகள் காணப்படுகின்றன. 'சீதை அம்மால் சத்தியம் செய்த இடம்' என்ற கல்வெட்டு அத்தாட்சிப்படுத்துகிறது. இவையெல்லாம் இராமாயணம் கூறும் செய்தி. இவற்றின் சாட்சியங்களாக இவ்விடக்காட்சிகளும் அமைந்து நுவரெலியாவின் தொன்மையை சான்று கூறுகிறது.

அனுமனால் எரிக்கப்பட்டும், சீதைக்காக தீமூட்டப்பட்டும் இப் பிரதேசம் இன்றும் சுட்ட மண்ணாகிய கரிய மண்ணையே தரைத்தோற்றமாக கொண்டுள்ளது. சிவபூமியாகிய இராவணன் பூமி செழிப்பு மிகுந்த பூமியாக இன்றைக்கு இலங்கையின் மரக்கறிப் பயிர்ச் செய்கையின் தன்னிறைவை பெற்றுத் திகழ்வது உண்மைச்சான்றாகும்.

யுத்தத்தோடு சம்பந்தப்பட்ட இன்னுமொரு இடம் 'பொரகஸ்' என்ற இடமாகும். இது ஆதிகாலத்தில் போர்க்கல், பொரக்கல் என்றெல்லாம் வழங்கப்பட்டதாக அப்பகுதி முதியவர்கள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. இராம இராவணபடைகள் போர்க்குரிய முக்கிய ஆயுதமாக கற்களையே பெருமளவில் பயன்படுத்தினர். இதனை கம்பரும் 'வாரங்கள் வீசிய கல்மழை உறுமிக்கொண்டு கொட்டியது' என வர்ணிப்பதை இராமாயணத்தில் யுத்தகாண்டப் பாடல்களில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இன்றும் இப்பகுதியில் பெருமளவு கைகளில் தூக்கக் கூடியதாகவுள்ள ஆங்காங்கே சிதறியுள்ள கற்குவியலை காணக்கூடியதாகவுள்ளது. இதனாலேயே இவ்விடம் 'போர்க்கல்' என வழங்கப்பட்டு இன்று திரிபடைந்து பொரகல் என்று பின் பொரகஸ் என வழங்கப்படுவதாக பலராலும் கூறப்படுகிறது.

இன்றும் இலங்கையில் இராவணனையும் சீதையின் கதையையும் கூறும் தடங்கள் பல இடங்களில் காணப்படுகின்றன. சீத்தா எலிய, பொரகல், பாழுகம, நூரலயா (நுவரெலியா) இராவணன்கொட (கொத்மல) இராவணன் வெட்டு (திருகோணமலை) இராவணன் பட (கிரிந்த தெற்கு) இராவணன் எல்லை (பலாங்கொட) இராவனேஸ்வர தீர்த்தம் (திருகோணமலை) போன்ற இடங்கள் இதற்கு நற்சாட்சியாகும். பல்லாயிரக்கணக்கான வருடங்களின் பின்பும் இன்றும் இதிகாச யுக இராவணன் நினைவை இவ்விடங்கள் துல்லியமாக நம்பவைக்கின்றன.

இவ்வாறு இராமாயணத்தில் கூறப்பட்ட இலங்காபுரியின் அசோகவனம் நுவரெலியாவில் அமைந்திருந்தது நுவரெலியா பெற்ற சிறப்பே ஆகும். சீத்தா எலிய என்ற இடம் சீதை வாழ்ந்த இடமென்பது யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. இச்சிறிய கோயிலை மத்திய மாகாண இந்துகலாசார அமைச்சு 1998 ஆக முறையுடன் அழகிய கோயிலாக அமைத்துக் கொடுத்து நுவரெலியாவை பெருமைப்படுத்தியுள்ளது. இலங்கை இராணுவத்தினர் ஆஞ்சநேயருக்கென தனியாக ஒரு கோவிலையும் அமைத்துக்கொடுத்து இராமாயணத்துக்கு ஆதாரம் சேர்த்துள்ளமை பெருமைக்குரியது.

இவ்வாறு அநேக விடயங்களில் இராமாயணம் நுவரெலியாவோடு தொடர்புற்றுள்ளதை யுத்தகாண்ட பாடல் காட்சிகளுடாக அறியும் வாய்ப்பு நிறையவே உள்ளது. நுவரெலிய வாழ் மக்களால் மட்டுமன்றி அகில இலங்கை ரீதியாகவும் உலக இந்துக்களாலும் இன்று அடையாளம் காணப்பட்டு வழிபாடு நடத்தும் இடமாக மாறிவருவதை அவதானிக்கலாம். அண்மை காலத்தில் இந்திய வைணவர்களின் பஜனை கோலாகலமாக நிறைவேறியது. அனுமன் இராமனின் கணையாழி மூலம் சீதையை அறிந்த நிகழ்வை நினைவு கூறும் வகையில் வருடம் தோறும் சித்திரை மாதம் இவ்வாலயத்தில் மோதிரத் திருவிழா நடைபெற்றுவருகிறது. ரம்பொட ஆஞ்சநேயர் மோதிரத்துடன் சீத்தா - எலிய சீதையம்மன் ஆலயத்திற்கு வருகை தருவார் பல்லாயிரக்கணக்கான மக்கள் இதனை கண்டுகளிப்பர்.

இவ்வாறாக இதிகாசப் பெருமையும் சிறப்பும் பொருந்திய பகுதியே நுவரெலியாவாகும். இதிகாசத்தோடு பின்னிப்பிணைந்த பகுதி நுவரெலியா என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஸ்ரீ ராமஜெயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையில் வளர்ந்த நாடகக் கலை

**கே. ஆர். இராமையா,**
**அதிபர், மெதடிஸ்ட் தமிழ் மகா வித்தியாலயம்,**
**கந்தப்பளை.**

உலகில் எங்கெல்லாம் மக்கள் வாழ்கின்றார்களோ அங்கே அவர்களுக்கென தனித்துவமான வரலாற்று பின்னணியுண்டு ஒரு தனித்துவமான கலாச்சாரம் உண்டு. தம் உழைப்பால் பல சாதனைகளை படைத்து மக்கள் கூட்டம் கலையம்சங்களிலும் தம் எண்ணங்களை பிரதிபலித்துள்ளமையை மறுக்க முடியாது.

தமது இன்பம், துன்பம், எதிர்பார்ப்பு, இயலாமை, மகிழ்வு, நகை போன்ற பல்வேறு வாழ்வியல் அம்சங்களை கலைகளாக படைத்துள்ளனர். இவற்றை இலக்கியம் எனக் கொண்டால் 'இலக்கியமானது கலாசாரத்தைக் காட்டும் கண்ணாடியாக' திகழ்ந்து வந்துள்ளது, வருகிறது.

தமது கருத்துக்களை எழுத்துக்களாக சொல்வதை விட பார்வையாளர்களின் முன்பு நாடகமாக நடிப்பது சக்தி வாய்ந்த ஊடகமாக அமைகிறது. மேலும் நாடகமானது இயல், இசை, நடிப்பு ஆகிய மூன்றையும் உள்ளடக்கியுள்ளமையும் பார்ப்பவர் மனதை பரவசப்படுத்தி சிந்தனையை தட்டி எழுப்பி மனதைவிட்டகலாத வடிவில் சமூக மாற்றத்திற்கே நாடகத்தை ஊடகமாக பயன்படுத்திய சேக்ஸ்பியர் போன்றோரை பின்பற்றி பலரும் பல கோணங்களில் நாடக கலையையும் அத்தோடு தாம் சொல்ல வந்த விடயங்களை மக்களிடம் கொண்டு சென்று ஏதோ ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். மகிழ்வூட்டலும், நகைச்சுவையும் கூட மக்கள் மனதைவிட்டகலாது நிலைபெற்றுள்ளது.

அந்த வகையில் இந்தியாவிலிருந்து கூலிகளாக அழைத்து வரப்பட்ட எம்மக்கள் மலையகத்தில் பல்வேறு பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டனர். அவ்வாறு குடியமர்த்தப்பட்டவர்கள் தமது எண்ணங்களை நாட்டார் பாடலாக, நாடகமாக வெளிக்காட்டத் தவறவில்லை.

இவ்வாறு மலையக மக்கள் வெளிக்காட்டியவற்றை சமயம் சார்ந்த கூத்துக்கள் வரலாற்று நாடகங்கள், அரச நாடகங்கள், சமூக நாடகங்கள் என வகைப்படுத்தலாம்.

அந்தவகையில் தேயிலைமலை என்ற தோட்டத்தினை ஆதாரமாக கொண்டு இக் கட்டுரை எழுதப்படுகிறது.

தேயிலைமலை அல்லது கந்தப்பளை டிவிசன் என அழைக்கப்படும் இத்தோட்டம் நுவரெலியாவின் கந்தப்பளை நகரத்திலிருந்து 2.5 கிலோ மீற்றர் தோட்டத்தில் அமைந்திருக்கிறது.

பல மூத்த கலைஞர்களையும் சிறந்த நடிகர்களையும் நாடகத்தோடு தொடர்புடைய இசைக்கலைஞர்கள், வாத்திய கலைஞர்கள், உடையலங்கார கலைஞர்கள் (மேக்கப்) மற்றும் திரைச்சீலை சித்திரக்காரர்கள் என பலரை இத்தோட்டம் தன்னகத்தே கொண்டுள்ளது. இங்கு கலைவாணி அரங்கம் என்ற பெயரில் ஓர் அமைப்பு 1960 களில் உருவாக்கப்பட்டு இன்றுவரை நடைபயில்கிறது. ஆரம்பக் கால ஸ்தாபகராக திரு. கிருஸ்ணனும் அதன் பின் திரு. மோகனதாஸ் அவர்களும் இக் கலைஅரங்கினை வழிநடத்தி வந்துள்ளனர். திருவாளர்கள் இராமசாமி, தம்பிதுரை, காளிமுத்து, கூடலூர் இராசையா, விஜயகுமார் என்போர் முக்கிய உறுப்பினர்களாவர். பலர் இந்தியா சென்றுவிட்டனர். பலர் தேயிலைக்கே உரமாகிவிட்டனர்.

இத் தகவல்களை சக ஆசிரியர் நண்பர் திரு. யு. இராஜேந்திரன் அவர்களுடன் சென்றபோது அன்புடன் வரவேற்று பல விடயங்களை உணர்ச்சி மேலீட்டோடு எங்களிடம் தெரிவித்தவர் திரு. விஜயகுமாராவார். 1960 களுக்கு முன்பு சமயம் சார்ந்த கூத்துக்களே இடம் பெற்றுள்ளன. அருச்சுணன் தபசு, பொன்னர் சங்கர், காமன் கூத்து போன்றவை மிக பக்தியோடு படைக்கப்பட்டுள்ளன. இக் கூத்துக்களில் பங்கேற்பவர் அக்கூத்து முடிந்து பூசை முடியும்வரை மாமிசம் உண்ணாமல், மது அருந்தாமல், தாம்பத்தியத்தில் ஈடுபடாமல் தெய்வ சிந்தனையோடு குருவின் (மாஸ்டர்) கட்டளையை ஏற்று நடந்துக்கொள்ளல் வேண்டும். இவற்றில் பங்கேற்று நடிப்பதை பெரும் பேறாகவும், மரியாதையாகவும் இவர்கள் நினைத்து வந்தனர்.

தோட்டங்களுக்கு தோட்டம் இக் கூத்து அமைப்பில் சிற்சில வேறுபாடுகள் உண்டு. எனினும் கதைக் கரு ஒன்றாகவே அமைந்துள்ளது. தோட்ட (லயங்களில்) வீதிகளில் தினமும் வலம் வந்து இறுதி நாளன்று இரவு முழுதும் நடந்து விடிந்ததும் நிறைவுபெறும்.

ஊசி முனையில் பாசுபதம் வேண்டி அருச்சுனன் தவம் செய்வதும், தங்களுக்கு கிளிபிடிக்க பொன்னர் செல்வதும், மன்மதன் சிவனுக்கு மலர் அம்பு எறிவதும் இக்கூத்துக்களின் உள்ளடக்கம்.

தாளக்கட்டு, ஆட்டம், பாடல், இடையிடையே ஓரிரு வசனங்கள் கொண்டதாக இக்கூத்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளன. அதிகமாக பாடல்கள் பல்வேறு மெட்டுக்களில் அமைந்திருப்பது இக் கூத்திற்கேயுரிய தனியம்சமாகும். ஆட்டங்கள் பல்வேறுபட்ட ஒழுங்கில் அமைந்துள்ளன. பாத்திரத்தின் தன்மைக் கேற்பவும் பாத்திரத்தின் உணர்ச்சிகளுக்கேற்பவும் ஆட்டமும், பாடலும், தாளமும் வித்தியாசப்படும். ஆடுபவரே பாடிக்கொண்டு ஆடுவார். முதல் அடியை ஆடுபவர் பாட மீண்டும் அதே அடியை (வரியை) ஒரு குழுவினர் பாடுவர்.

ஆர்மோனியம், தாளம், மிருதங்கம், டோலக், உடுக்கு, தப்பு போன்ற கருவிகள் பயன்படுத்தப்படும் உடையலங்காரங்களும் மற்றும் அவற்றோடு தொடர்புடைய பொருட்களை இவர்களே ஆக்கிக் கொள்வார்கள். சில காட்சி அமைப்புகள் மிகநுட்பமாக அமைந்திருக்கும் மன்மதன் மலரம்பினை சிவனை நோக்கி எறிவது சிவன் நெற்றிக் கண்ணால் மன்மதனை எரிப்பது போன்ற காட்சிகள் தத்துவரூபாக அமைந்தவை போல இருக்கும். பார்ப்பவரை மெய்க் கூச்செறிய செய்யும்.

பல தோட்டங்களிலும் உள்ள மக்கள் இரவில் வந்து கூத்து நடைபெறும் பொட்டலில் அமர்ந்து பயபக்தியோடு பார்வையிட்டு செல்வர். அதிகமாக சமயம் சார்ந்த கூத்தாக இது அமைந்திருந்த போதிலும் காட்சியின் இடைவெளியின் போது அதாவது ஒரு காட்சி முடிந்து மறுகாட்சி ஆரம்பிக்கும் போது பபூன் அல்லது கோமாளி எனக் கூறப்படும் ஒருவர் மகிழ்வூட்ட வந்துவிடுவார். இவர் அந்தந்த நேரத்தில் பாட்டை கட்டி பாடுவார். தோட்டங்களில் நடைபெறும் அந்தரங்க விடயங்கள் நிர்வாகத்தின் ஊழல்கள் மற்றும் கெடுபிடிகள் முதலானவற்றை அம்பலத்துக்கு கொண்டுவந்து விடுவார். இவரது ஆட்டமும், பேச்சும், பாடலும் மிக நகைச்சுவையாக அமைந்திருக்கும். இவர் மூலமே சமுதாய பிரச்சினைகள் அக்காலத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. பிரச்சினையை மாத்திரம் இவர் கூறுவார். அவற்றை தீர்ப்பதற்கான வழிமுறைகளை இவர் கூற மறுப்பார். சில சமயம் ஏனைய தோட்டங்களில் தீர்க்கப்பட்ட பிரச்சினைகளை கூறுவார். பார்ப்பவர்கள் சிரித்து மகிழ்வர். மகிழ்வூட்டல் அதிகமாக இவற்றில் இடம்பெற்றமையால் அதன் உள்ளார்ந்த கருத்துக்கள் பலமிழந்தவையாயின எனலாம்.

ஒவ்வொரு வருடமும் நடந்துவந்த கூத்துக்கள் காலம் செல்ல செல்ல மிக அருகிவிட்டன. இன்னும் ஓரிரு தோடடங்களில் அத்திபூத்தாற் போல இவை இடம்பெற்றுவிடுகின்றன.

மலையக நாடகக் கலைஞர்களால் இக் கூத்துக்கள் மேடையேற்றப்பட்டுள்ளன. மேடை நாடகமாக வடிவமைத்து மேடையேற்றுவது சுலபமான காரியமல்ல. பாடசாலைகளில் தமிழ் மொழித்தினம் இக்கூத்துக்கள் மேடையமைப்பை பெறுவதற்கு வாய்ப்பளித்தன. எனினும் மற்றும் நேரக்கட்டுப்பாடு துறைசார்ந்த நடுவர் பஞ்சம் முதலானவை இக்கூத்துக்களின் மகோன்னத தன்மையை இழக்கச் செய்துவிட்டன.

பொன்னர் சங்கர் மேடையேற்றப்பட்டுள்ளது. காமன் கூத்து போற்றி எஸ்டேட் ஹெலன் அவர்களால் சிறப்பாக மேடையேற்றப்பட்டுள்ளது. நாட்டார் பாடல்கள் ஒரு கதையம்சத்தோடு பெயர்லோன் தமிழ் வித்தியாலய ஆசிரியர்கள் திரு. ஆர். இராமையா, ஆர். இராமர், என். வரதராஜ் ஆகியோரால் மேடையேற்றப்பட்டது. அருச்சுனன் தபசு மேடையேற்றப்படவில்லை. ஒரு வேளை எங்காவது எமக்கு தெரியாமல் மேடையேற்றப்பட்டிருக்கலாம்.

கூத்துக்களின் சிறப்பினை அழியாமல் காக்க வேண்டுமெனில் அவற்றை மேடையமைப்பு முறைக்கு மாற்றுதல் அவசியம் எனினும் வீதிகளில் நடைபெறும் இக் கருத்துக்களை மேடையேற்றப்படும் போது அதன் முழு அம்சங்களையும் காட்டமுடியாமல் போவதும் மறுக்க முடியாததாகும்.

1960களுக்கு பின்பு தேயிலை மலை கலைவாணி அரங்கம் பல நாடகங்களை மேடையேற்றி வந்துள்ளது. அரச நாடகங்களே முதன் முதலில் அரங்கேற்றப்பட்டுள்ளன. 'பண்டார வண்ணியன்' என்ற நாடகத்தை 'ஈழவேந்தன்' என்றபெயரில் மேடையேற்றியுள்ளனர். 'தர்மசீலன்' என்ற நாடகம் பலரது பாராட்டை பெற்றுள்ளது. 'பராசக்தி' என்ற படத்தை அப்படியே வெகு சிரமப்பட்டு மேடையேற்றியுள்ளனர். கலைஞர் கருணாநிதிக்கு இந்நாடக பிரதியை அனுப்பி அவரது பாராட்டையும் கடிதம் மூலம் இக்குழு பெற்றுள்ளது.

அரச நாடகங்களுக்கு பிறகு 'சோக்கிரடீஸ்' நாடகம் சிறப்பாக பலமுறை மேடையேற்றப்பட்டுள்ளது. கிரேக்க நகரங்களில் காணப்படும் கட்டிடங்கள் எவ்வாறு அமைந்திருக்கும் என்று கற்பனை செய்து சுமார் மூன்று மாதகாலம் திரைச்சீலைக்கு சித்திரம் தீட்டியமையும், சோக்கிரடீஸ் நாடகத்தில் சோக்கிரடீஸ் அவர்களின் தாடியை மூன்று மாதத்திற்கு மேல் வடிவமைத்தமை பற்றி திரு. விஜயகுமார் கூறுகையில் நானும் நண்பர் யு. இராஜேந்திரனும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தோம்.

அதன்பிறகு சமுக நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன. 'தூயவள்' 'துணிவே துணை' போன்ற நாடகங்கள் சிறந்த நாடகங்களாக விளங்கின. இந்நாடகத்தில் பிரதான பாத்திரமேற்று நடித்த திரு. இராசையா சிறந்த நடிகராக போற்றப்பட்டார். தற்போது இந்தியாவில் கூடலூரில் வசித்துவருகிறார். நாடகத்திற்கான எல்லா ஏற்பாடுகளும் நடந்தேறிய பின்பு நாடகத்திகதியும் நிர்ணயிக்கப்பட்டு எல்லா இடங்களிலும் பிரசாரங்களும் செய்யப்பட்டுவிட்டன. நாடகம் மேடையேற்றும் தினம் திரு. இராமையாவின் தாயார் இறந்துவிட்டார். நாடகத்தினை பின் போடுவதற்கு எல்லோரும் தீர்மானிக்க திரு. இராசையா இல்லை நாடகத்தை பின் போடவேண்டாம். நான் நடிக்கிறேன் என முன்வந்து நடித்ததை தேயிலை மலை மக்கள் இன்னும் புகழ்ந்து பேசுகிறார்கள். இவரது பொறுப்பினை புகழாமல் இருக்க முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோல ஒரு சம்பவம் எனக்கு ஞாபகம் வருகிறது. மஸ்கெலியாவில் மொக்கா தோட்டத்தில் ஏகா என்ற ஒரு கரப்பந்தாட்ட வீரர் அவரது குழந்தை இறந்துவிட்டது. அதனை அடக்கம் செய்துவிட்டு அன்றைய மிக முக்கியமான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் பங்குபற்றி அவரை வெற்றிபெற வைத்தமையும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் தம் கடமையில் கொண்ட பொறுப்புணர்வை நாம் மனம் கொள்ளல் அவசியமாகும்.

நாடக தயாரிப்பில் 15 பேர்வரை அங்கம் வகித்துள்ளனர். நாடகத்தினை எழுதி முழுகதையையும் நாடக குழுவினருக்கு விளக்கமளித்த பின்னர் நடிகர் தேர்வு இடம் பெறும். அதன்பின்னர் அவர்களுக்கான வசனங்களை அவர்கள் எழுதி மனனம் செய்தல் வேண்டும். முழு பாத்திரங்களும் மனனம் செய்த பிறகே நடிப்பு சொல்லித்தரப்படும். குறிப்பிட்ட நேரத்தில் வருகை தராதவர்கள் சிறப்பாக நடிப்பு மற்றும் வசனங்களை பேசாதவர்களுக்கு பதிலாக வேறு நடிகர்கள் சேர்க்கப்படுவர். நாடகமாஸ்டர் மிக திறமையானவராக திகழ்ந்துள்ளார். அவரின் கட்டளைக்கு கீழ்பணியாதவர்கள் நாடகக்குழுவிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

வசனங்கள் இலக்கிய தமிழ் சார்ந்ததாகவே அமைந்துள்ளன. பேச்சுத் தமிழ் பேசுவது குற்றமாக கருதப்பட்டுள்ளது. நாடக வசனங்களை யாருக்கும் தெரியாமலே மனனஞ் செய்தல் வேண்டும். நாடகம் அரங்கேற்றுவதற்கு முன்னர் அவ் வசனங்களை வெளியில் யாராவது பேசினால் அந்நாடகம் ரத்துச்செய்யப்படும். வேறு நாடகம் அரங்கேற்றப்படும். அத்தோடு நடிகர் மூலம் அந்நாடக வசனம் வெளியில் சென்றிருப்பின் அவர்கள் நாடக குழுவிலிருந்து நீக்கப்படுவார்கள். மேடையமைப்பில் மிக சாதுரியமான முறையினை இவர்கள் கையாண்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இரு மேடைகள் அமைத்து ஒரு மேடையில் ஒரு காட்சி முடிவடைந்ததும் திரை மூட அடுத்த மேடை திரை விலக நாடகம் தொடர்ந்து நடைபெற்றுள்ளது. இவை ஏனைய தோட்டங்களில் இடம்பெறாத ஒரு முயற்சியாகும். உண்மை பொருட்களை கொண்டே நாடகம் நடித்துள்ளனர். சைகை குறியீடு முதலானவை பயன்படுத்தப்படவில்லை. பபூன் அல்லது கோமாளி நகைச்சுவைக்காக ஒரு கதையோட்டத்துடன் மக்கள் மகிழ்ச்சியடைய செய்துள்ளார். இவர்களின் பேச்சிலேயே சமூக கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. சமூக நாடகங்களில் கற்பு, கல்வியின் அவசியம், நேர்மை, உண்மை, உழைப்பு முதலானவையே கருவாக அமைந்துள்ளது. தோட்ட நிர்வாக கெடுபிடிகள் முதலானவற்றை நாடகத்தில் புகுத்தியமை மிக குறைவு. அவ்வாறு நடித்தவர்களை பற்றுசீட்டு கொடுத்து வேறு தோட்டங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மேலும் தோட்ட உத்தியோகஸ்தர்கள் பெரிய கங்காணிமார் நாடகத்திற்கு நிதியுதவி செய்துள்ளனர். பொதுமக்களும் வசூல் செய்து கொடுத்துள்ளனர். பல சுவாரசியமான சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. ஒரு காட்சியில் வேலைக்காரி சுடச்சுட இட்டலி கொண்டுவர கதாநாயகன் கோபத்தில் இட்டலி தட்டை எத்தி தள்ளிவிட வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் பிரதம விருந்தினராக வருகைத்தந்த பெரிய கங்காணியின் மடியில் இட்டலி சென்று விழுந்துவிட்டது. ஒருவாறு சுதாகரித்துக்கொண்டு பெரிய கங்காணி நாடகத்தை சிறிதுநேரம் பார்த்துவிட்டு சென்றுவிட அவருடன் ஒரு கூட்டமே சென்றுவிட்டதாகவும் சுமார் ஒரு மாதம் வரை இட்டலி விவகாரம் நாடககுழுவினரை வாட்டியதாகவும் திரு. விஜயகுமார் கூற வயிறு குலுங்க சிரித்தோம். இவ்வாறான நாடகத்தினை நடித்த நடிகர்கள் நாடக மாஸ்டர் அனைவரும் தோட்டத் தொழிலாளர்களே 6ம், 7ம் வகுப்புவரை படித்தவர்கள். அவர்களின் கடுமையான உழைப்பின் வெளிப்பாடே இந் நாடகங்களின் வெற்றிக்கு காலாயின. வேலைத் தளங்களில் சக நடிகர்களுடன் வேலை செய்து கொண்டே தம் வசனங்களை மனனம் செய்துள்ளனர். நாடகத்திற்கு தேவையான பொருட்களை நாடக குழுவினரே தயாரித்துள்ளனர். இசை கருவிகள் மற்றும் வாத்திய கருவிகள் முதலானவற்றையும் இவர்களே கையாண்டுள்ளனர். ஒப்பனையில் பெயர்போனவர்களும் இருந்துவந்துள்ளனர்.

இவ்வாறாக வளர்ச்சியடைந்த தேயிலை மலை நாடகக்கலை தற்போது ஆமை வேகத்தில் செல்கிறது. தற்போது நாடகங்களை மேடையேற்றுவது மிகக்குறைவு பலர் குடும்பச்சுமை என ஒதுங்கிக் கொண்டனர். இப்போதுள்ள இளைஞர்கள் கட்டுப்பாடற்றவர்கள். கீழ்பணிவில்லை என்பது ஒரு சாராரின் கருத்து. ஊடகத்துறை வளர்ச்சி எங்களது நாடகத்தினை பாதித்துவிட்டது என்று ஒருசிலர் அங்கலாய்க்கின்றனர். அவ்வப்போது சரஸ்வதி பூசை காலங்களில் கலைவிழாக்களை இவ்வரங்கு நடாத்தி வருகிறது.

பழைய நடிகர்கள் இன்றும் ஆர்வமாக இருக்கிறார்கள். நவீன நாடக யுத்திகளை அவர்கள் ஏற்பது குறைவு. தலைமுறை இடைவெளி இதற்கு காரணம் எனலாம். எவ்வாறாயினும் மீண்டும் தோட்ட நாடகக்கலை வளர்ச்சிபெற ஆவனஞ் செய்யவேண்டியது அனைவரதும் கடமையாகும். பல தோட்டங்களிலும் ஏன் மலையகம் முழுதும் பயனுள்ள பொழுது போக்காக ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புக்குள் இளைஞர்களை நாடகக்கலை வளர்ந்து வந்துள்ளது. பல அனுபவங்களை இவர்கள் பெற்று தம் வாழ்வை வளம்படுத்திபுள்ளனர். இன்றைய இளைஞர்களின் உணர்வுகளை மதித்து அவர்களை வழிப்படுத்தி ஓர் ஒழுங்கமைப்புக்குள் கொண்டு செல்லக்கூடிய தகைமையானவர்கள். தோட்டங்களில் இருந்தும் அவர்கள் தலைமைத்துவத்தை ஏற்காமை தோட்ட இளைஞர்கள் சமுகம் ஏற்றுக்கொள்ளாத செயல்களில் ஈடுபட வழிவகுக்கிறது. எனவே மீண்டும் நாடகக்கலையின் வளர்ச்சி மலையக சமுகத்தினை கலை இலக்கியத்துறையில் இனம்காட்ட வழிசமைக்கும். அதற்கு உதவுவது கலைத்துறையில் ஆர்வமுள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக கலை இலக்கிய வளர்ச்சிக்கு இராகலை கலைஞர்களின் பங்களிப்பு

*மலையரசன் டி. ஆர். எஸ்*

'ரா கல' என்றால் சகோதர மொழியான சிங்களத்தில் 'கள்ளு கலசங்கள்' என்ற அர்த்தத்தையோ அல்லது 'கள்ளுள்ள கற்பாறை' என்ற அர்த்தத்தையோ அது அர்த்தப்படுத்தும் பெயராகும் !

சிற்றரசர்கள் காலத்தில் கற்களுக்கு மத்தியில் கள் என்ற மதுவினை வழமையாக அருந்தியதால் 'ராகல' என்று வந்ததாக வாய்வழிக்கதைகளுமுண்டு. பின்னர் இப்பெயர் மருவி இராகலையானதெனக் கூறுவதுமுண்டு.

மற்றொரு செவிவழிக்கதையும் கூறப்படுவதுண்டு இராமாயணக்காலத்தில் இராவணன் இங்கு மக்களிடமிருந்து துன்பம் நீங்க, இராகு கலைய வேண்டுமென்று தவமிருந்ததாகவும் அதுவே இராகலையென பெயர் பெற்றதாகவும் பேசப்படுவதுமுண்டு.

இலங்கையின் இறுதி முடியாட்சியான கண்டி இராஜ்ஜியம் அந்நியர் ஆதிக்கத்துக்கு அடிபணிந்த காலக்கட்டத்தில் அதாவது 1817 நவம்பர் மாதத்தில் பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளைத் தொடர்ந்தும் எதிர்த்து வந்த போராட்ட மைந்தர்கள் வலப்பனை பிரதேசத்தில் வாழ்ந்து வந்துள்ளதற்கான அத்தாட்சிகள் இருக்கின்றன. இதற்கு கி.பி. 1817 நவம்பர் மாதத்தின் 4ஆம் நாளன்று கவனர் ரொபர்ட் பிரவுன்றிக் கண்டியினின்றும் ஏகாதிபத்தியவாதிகளின் காலனித்துவ 'கொலோனியல்' செயலகத்து அனுப்பி வைத்துள்ள 248ஆவது இலக்கம் கொண்ட அறிக்கை ஒரு சிறந்த ஆதாரமாயிருக்கின்றது.

அவ்வறிக்கையில் 'துர்ரதிஷ்டவசமாக இக்காலத்தில் போராட்டம் வலப்பனை வரை வியாபித்திருந்தது. இது சரியாக கண்டியிலிருந்து பதுளைவரை நீண்டுள்ள பாதையில் அமைந்துள்ள பிரதேசமாகும்' என்றவோர் குறிப்புள்ளது.

அதுமட்டுமல்லாமல் அவ்வறிக்கையில் 'இம் மாதம் 8ஆம் திகதி 65 வீராங்கனை உள்ளடக்கிய படையணியொன்று லைதன் ரேமன்ட் தலைமையின் கீழ் ஊவாவின் கம்பஹாவிலிருந்து வலப்பனை வரை சென்றது' என்றும் 'அயல் கிராமங்களின் மக்கள் உடனடியாக சரணடைந்தார்கள் இவரது முயற்சியின் பயனாக பிரித்தானியர்களின் ஆதிக்கம் வியாபித்தது' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு போராட்டங்களை அடக்குவதற்காக லைதன் ரேமன்ட் மேற்கொண்ட முயற்சியை அடுத்து கெப்டன் கிளேதர் 16.10.1818 இல் ஹங்குராங்கெத்த தொடங்கி பன்னால வரை மேற்கொண்ட மேற்பார்வை படையணி பயணத்தினால் முற்றிலும் மக்கள் பிரித்தானியர் வசமாயினர் என்ற குறிப்பும் 20.02.1818 இல் பிரவுன்றிக் போர்தஸ்ட் பிரபுவுக்கு வழங்கியுள்ள அறிக்கையில் 'வலப்பனை, பதுளை திப்பட்டுகொட, பன்னல ஆகிய இடங்களில் இருந்த வீரர் முகாம்களில் நோய்கள் ஏற்பட்டபடியால்' என்ற குறிப்பும் அக்காலத்தில் கண்டியினின்றும் பதுளைக்கு (ஊவாவுக்கு) படையணிகள் பயணித்த வழியின் பிரதான சந்தி ராகலையாய் இருந்திருக்க வேண்டும் என்பதை நிச்சயித்துக்கூற வைத்திருக்கின்றது.

இதனால் கண்டியை அண்மித்துள்ள வலப்பனையைப் பார்க்கிலும் இராகலையின் வளர்ச்சி அக்காலத்திலேயே சற்று முன்னேற்றம் கண்டிருக்க வேண்டும். ஆம்! இராகலை அக்காலந்தொட்டே எப்பொழுதும் எதற்கும் மக்கள் கூடும் ஒரு மத்திய சிற்றூராக பரிணமித்துள்ளது. இதனால் கள்ளுக்கடைகளும் காலப்போக்கில் கண்டியினின்றும் பதுளைக்கு மாட்டுவண்டிகளில் நாட்கணக்காக பயணித்தவர்களுக்கு சிறந்த வரவேற்பை அள்ளி வழங்கியுள்ளன.

நாளடைவில் இராகலை ஒரு பட்டணமாக மாறிய போதோ சுற்றிலுமிருந்த கோப்பித் தோட்டங்கள் மாறி தேயிலைத் தோட்டங்களும் தொழிலாளர்களின் பெருக்கங்களும் கிராமவாசிகளின் சந்தைகளும் இந்நகரை மேலும் சிறப்படையச் செய்துள்ளன.

கண்டியினின்றும் பதுளைக்கு மாட்டுவண்டிகளில் நாட்கணக்கான பயணங்களை மேற்கொண்ட வியாபாரிகளும், வர்த்தகர்களும் இராகலை நகரில் இராத்தங்கும் நாட்களில் பொழுதுபோக்குக்காக இரவு வேளைகளில் பல கலை நிகழ்ச்சிகளில் சிங்கள கிராமத்துப் பாடல்களைப் பாடி, ஆடிக்கழித்துள்ளதாகவும் 'கிந்துரு செல்லங்' போன்ற 'தெருக்கூத்துக்களை' நிகழ்த்தியுள்ளதாகவும் பல சரித்திர ஏடுகளில் பதிவாகியுள்ளன. (மந்தாரம்புர புவத்த)

காலப்போக்கில் சுற்றிலுமுள்ள தோட்டங்களில் நமது சமூகத்தவர் நடாத்திவந்துள்ள தெய்வ வழிபாடுகளிலும், திருவிழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் நகரிலுள்ள வர்த்தகர்கள் நாட்டங் கொண்டனர்.

பின்னர் இவர்கள் தங்கள் தேவையினை உணர்ந்து சகல வைபவங்களுக்கும் தங்கள் ஆதரவை வழங்கி வந்துள்ளதோடு, நகரத்திற்குள் முன்கூட்டியே அமைந்திருந்த இராகலைத் தோட்ட ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி ஆலய திருவிழாவிற்கும் இதனை யொட்டி நகருக்குள் பெருக்கெடுத்த ஏனைய கோவில்களின் காவடியாட்டம், கோலாட்டம், கரகாட்டம், கும்மியாட்டம் போன்ற ஆட்டங்களுக்கும் தப்பு, தம்புரு, உருமி, மேளம் போன்ற தாளங்களுக்கும் கிளாரினட், பேண்ட், நாதஸ்வரம் போன்ற நாதங்களுக்கும் காமன் கூத்து, தெருக் கூத்து போன்றவற்றிற்கும் ஊக்கமளித்து வாய்ப்பளித்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நகரில் பாதைகள் சீரமைக்கப்பட்டு தேரோடிய பாதைகளிலெல்லாம் காரோடியபோது இங்கு மாட்டு வண்டிகளில் 'தவலம்' வருகின்ற கிராமவாசிகளின் வரவும், கிராம வர்த்தகர்களின் இராத்தங்கல்களும் குறைந்து இவர்களால் இவர்களுக்காகவே ஆங்காங்கு கற்பாறைகளில் மறைத்து வைக்கப்பட்ட கள்ளு கலசங்களும் மறைந்து, சுற்றிலுமுள்ள தோட்டங்களின் திருவிழாக்களால் இராக்கலைகளுக்கு பெயர்ப்பெற்ற இடமாகி இராகலையாகிவிட்டது.

இந்நகர் திருவிழாக்காலங்களில் அக்காலத்தில் தோட்டங்களில் புராணக் கதைகளுக்கு வசனம் எழுதி நாடகங்களாக்கி கற்றுக் கொடுத்து வந்துள்ள நாடகாசிரியர்கள் 'சூமாஸ்டர்கள்' தோட்டங்கள் தோறும் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களின் அக்காலத்து நாடகங்களில் மலையக மக்களின் அன்றாட வாழ்க்கையோடு பின்னிப் பிணைக்கப்பட்டுள்ள தாலாட்டுகளும், தெம்மாங்குகளும் துயரக்காட்சிகளில் ஒப்பாரிகளும் கூட சேர்க்கப்பட்டு வந்துள்ளன.

நாளடைவில் நாட்டார் பாடல்களாக அறிமுகமான வாழ்க்கைச் சூழலை வடிவமைத்துக் கூறும் கூத்துப் பாடல்கள் அக்காலத்தில் வாய்மொழி இலக்கியங்களாக இராகலை வாழ் தொழிலாளர் பரம்பரையினரால் பேணப்பட்டு வந்துள்ளன.

இதனால் ஈர்க்கப்பட்ட பல படித்த கலைஞர்களும், இளைஞர்களும், முத்தவர்களும் இராகலையில் கலை இலக்கிய வளர்ச்சிக்கு தங்களது பங்கினை செலுத்த முற்பட்டனர்.

1926 ஆம் ஆண்டு இராகலையில் 'தமிழர் அபிவிருத்தி சங்கம்' என்று ஒரு அமைப்பு இருந்ததாக அறியமுடிகிறது. அதற்கான தடங்கள் இன்றும் இருக்கின்றது. இவ்வமைப்பின் விரிவானப் பணி தெளிவாகத் தெரியாதப் போதும் இராகலையில் அப்போதிருந்த பழனியப்ப செட்டியார், எம். கே. விஜயசுந்தரம், எம். கே. சண்முகம் போன்றோர் இதனை நெறிப்படுத்தியதாகத் தெரிய வருகின்றது. இவர்களது பணியும் தமிழ்க் கலை இலக்கியத்தோடு தொடர்புடையதாகவே இருந்திருக்கவேண்டுமென்று யூகிக்க முடிகிறது.

1940ஆம் ஆண்டு காலத்தில் 'பெரிய கங்காணி மார்' பரம்பரையினரின் ஆதிக்க நேரத்தில் தோட்டங்களில் நல்ல தங்காள், ஹரிச்சந்திரா போன்ற நாடகங்கள் இராகலையை உரசிக் கொண்டிருக்கும் சூரியகாந்தி மற்றும் ஹைபொரஸ்ட், உடப்புசலாவ, அதிகாரவத்தை, மஹாஊவா பகுதிகளில் தோட்டத்து பிரமுகர்களாலும், பொதுமக்களாலும் சிறந்த மேடையமைப்புகளுடனும் மேக்கப்புடனும் மேடையேற்றப்பட்டிருக்கின்றன. இந்த நாடகங்களின் விமர்சனங்களை 60,70 ஐ தாண்டிவிட்ட முத்தவர்கள் வாய்கள் இன்றும் முணுமுணுக்கின்றன.

1950 காலங்களில் ஆடிப்பூசை, தீபாவளி, பொங்கல் நாட்களில் கலைநிகழ்ச்சிகளும் களியாட்டங்களும் தொடர்ச்சியாக நடைபெற்றே வந்திருக்கின்றன. காமன்கூத்துக்கலைகளும் அந்தந்த காலங்களில் தலைதூக்கி இன்றுவரை நிலைத்துள்ளன.

1960 - 1970களில் இராகலை இளைஞர் மன்ற அமைப்பினூடாக இலக்கிய பணி இனிதாக பரவிக் கொண்டிருந்தது. இதனது சூத்திரதாரியாக சி. தாயுமாணவன், பிலிப் இராமையா, எஸ். சந்திரசேகரன் (Australia), துரைசாமி, அமரர் எஸ். இராஜரட்ணம், பாரதி கனேசன் இன்னும் சிலரும் இயங்கியுள்ளனர். அவர்களால் பாரதி விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்திருந்தது. இந்த பாரதி விழா வில் பிரதம அதிதியாக, பேச்சாளராக கலந்து கொள்ள அமரர்கள் இரா. சிவலிங்கம், திருச்செந்தூரன் அழைக்கப்பட்டிருந்தனர்.

உயர்ந்த சிந்தனையுடன், ஆக்கப்பூர்வமாக நிறைவேற்ற நினைக்கும் காரியங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதற்கு ஒரு சுயநல கும்பல் என்றுமே இருக்கும். ஆம் ! அப்போதுமிருந்து 'தடை' பாரதி விழா பொலிசாரால் தடை செய்யப்பட்டது.

இளைஞர்கள் மனம் குமுறியது. பின்னர் இவ்விழாவினை இராகலைத்தோட்டத்தில் உத்தியோகஸ்தர் ஒருவரின் இல்லத்தில் இரகசியமாக நடாத்துவது போன்று நடாத்தியது.

பாரதியாரின் பேத்தி விஜயபாரதி அவரது துணைவர் சுந்தரராஜன், கு. அழகிரி சாமி, தீபம் ஆசிரியர் நா. பார்த்தசாரதி அவர்களது இலக்கிய இனிய பணி உரை இனிதாக இராகலையில் ஒலித்ததும் இந்த செயற்பாட்டால்தான். இராகலையில் 'சாரதிமார் சங்கம்' நா. பார்த்தசாரதியின் தலைமையில் அப்போது ஜெமினி படமாளிகையில் அமைக்கப்பட்டு இன்றுவரை இயங்கிக்கொண்டிருக்கிறது.

இராகலை ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி ஆலய பரிபாலன சபையின் அழைப்பின் பேரில், தமிழகத்திலிருந்து குன்றக்குடி அடிகளார், பித்துக்குளி முருகுதாஸ் வித்துவான் வேலனார் மற்றும் பிற்காலத்தில் இளம்பிறை மணிமாறன், சோ. சத்தியசீலன், கி. பெ. விஸ்வநாதன் அழைக்கப்பட்டு பக்தி இலக்கிய நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டன. இலங்கை திராவிட முன்னேற்றக் கழக செயற்பாடுகளும் இங்கு அவ்வப்போது தலைக்காட்டியிருந்தன.

இராகலை த.ம.வி ஆசிரியராக கடமையாற்றிய உடப்பூர் பெரி. சோமாஸ் கந்தர், இராகலை இசைமன்றத் தலைவர் வித்துவான் இலட்சுமண செட்டியார் இவர்களது இலக்கிய பணிகள் பல வருடங்களாகத் தொடர்ந்தது.

அமரர் வி. டி. தர்மலிங்கம், அமரர் ப. கோபாலன் (தமிழகம்), டி. ஆர். செல்வராஜ், பி. சுதந்திரராஜ், சி. சுப்பிரமணியம், வி. ரெங்கராஜ் (தமிழகம்), கே. தங்கவேல் பலரும் இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடிப்பாற்றலுடன் மலைமகள் நாடக மன்றத்தை தோற்றுவித்து பல முற்போக்கு கருத்துக்களை கலையினூடாக பரப்பி வந்தனர்.

இந்த அணியினரின் ஓர் உன்னத படைப்பான 'தூக்குக்கயிறு' நாடகம் சமூகத்துரோகிகளின் முகமூடிகளை கிளித்தெறியும் கருவினை உள்ளடக்கி இருந்த காரணத்தினால் வந்தது வினை. இதற்கும் பொலிசாரின் தடை. இப்பகுதி இளைஞர்களின் அமோக ஆதரவைப் பெற்று அரங்கேற்ற முயற்சித்த வேளையில் காவல் துறையினரை கடுமையாக செயல்படவைக்க ஒரு கருங்காலிக் கூட்டம் காத்தே கிடந்தது. கடைசிவரை 'தூக்குக்கயிறு' தடையானது. அமரர் வி. டி. தர்மலிங்கத்தின் துரித துடிப்பான செயற்பாடுகளினால் பேச்சுக்கலை, நாடகக்கலை கணிசமானளவு வளரத் தொடங்கியது.

நடுகணக்கு அமரர் சுப்பிரமணியம் மாஸ்டர் அணியின் சிலம்பாட்டம் 'கம்படி' யும் தொடர்ந்தது. இவரது படைப்புக்கள் தமிழகத்திலிருந்து நுவரெலியாவிற்கும், இராகலை டெல்மார் தோட்டத்திற்கும் வருகைத்தந்திருந்த மறைந்த தமிழக முதல்வர் மக்கள் திலகம் எம். ஜி. இராமச்சந்திரர், சரோஜா தேவி முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது.

பீ. ஏ. காதர், கே. வேலாயுதம் (M.P), டி. ஆர். செல்வராஜா மூவரும் இணைந்து கே. வி. எஸ். நாடக மன்றத்தை உருவாக்கி தலைநகரில் அரங்கேற்றும் நாடகத்திற்கு இணையான நாடகங்களை பெருத்தபொருட் செலவில் **டாக்டர் சந்திரமோகன், ஐந்து அசடுகள், அன்பு, பயங்கரம்** இன்னும் பல நாடகங்களை அரங்கேற்றி வந்தது. இராகலை த.ம.வி., பதுளை மகளிர் மகா வித்தியாலயத்திற்கு இந்நாடக மூலம் கட்டிடங்களுக்கு நிதி வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை தமிழ் சினிமா நட்சத்திரங்களான கலைச்செல்வன், டீன்குமார், லீலா ரோகிணி மற்றும் இங்குள்ள கலைஞர்களும் இந்நாடகங்களில் நடித்து வந்தனர். இக்காலக்கட்டத்திலேயே இன்னொரு பக்கம் இராகலை டி. ஆர். எஸ்., கே. தங்கவேல், எம். பாக்கியநாதன் (Australia), எம். விஸ்வலிங்கம் ஆகியோருடன் செயல்பட்டது. மூவர் மாத்திரமே பங்கேற்கும் இசையும், கதையும் என்ற நிகழ்ச்சி ஐம்பதிற்கும் மேலான தடவைகள் அரங்கேற்றப்பட்டுள்ளன. சமூக சீர்கேடுகளை கோடிட்டு காட்டி பரிகாரம் கான முனைந்தது. இந்தக் கலைக் குழு கண்டி, திருக்கோணமலை மற்றும் பல்வேறு இடங்களிலும் அரங்கேற்றம் நடந்தது.

சில்வர் கண்டியில் வசித்த அமரர் பேகம் ஜூ பர் தானியின் 'கலைமலர்' என்ற புத்தகமும் அமரர் ம. தொ சோமசுந்தரத்தின் 'திறவுகோல்' வாராந்த பத்திரிகையும் பல வருடங்களாக வெளிவந்தன. கவிஞர் மலைவாணனன், அமரர் எம். இராமலிங்கம், பூண்டுலோயா தர்மலிங்கம் ஆகியோரின் இலக்கிய பணி போற்றவதற்குரியதாக இருந்தது. 1980 - 1990 காலப்பகுதியில் இராகலை த.ம.வி. பழைய மாணவர் சங்கத்தின் அழைப்பின் பேரில் விஜயம் செய்திருந்த முன்னாள் அமைச்சர் இராஜதுரையின் இலக்கிய சொற்பொழிவுகளும் ஆங்காங்கே சிற்சில கலைப்படைப்புகளும் தலைக்காட்டினவே தவிர பெரிதாக குறிப்பிடும் வகையில் நிகழ்வுகளின்றி ஒரு தேக்கநிலை தென்பட்டது.

1990 முதல் இன்றுவரை (2003) பி. மரியதாஸ் டி. ஆர். செல்வராஜா, எம். இராமலிங்கம், பி. அருள்மொழிச் செல்வன், எஸ். பிரமன், சி. சுப்பிரமணியம் பலரும் இணைந்து இராகலை கல்வி கலை இலக்கிய அமையத்தை உருவாக்க அது இன்றுவரை அதன் பெயருக்கேற்ப அத்துறைகளில் இப்பகுதியில் முனைப்பாக செயல்பட்டு வருகின்றது.

தேசிய இளைஞர் சேவைகள் வலப்பனை, ஹங்குராங்கெத்த அதிகாரி கே.எம்.கே. ஞானசேகரத்தின் பணி அவ்வமைப்பினூடாக பத்து வருடத்திற்கு மேலாக காத்திரமாகவே கல்வி கலைத்துறைகளில் நடைபெற்று வருகின்றன.

இராகலை பன்னீரின் புதிய தலைமுறையும் மை. பன்னீரின் ஆறு ஐந்தாக மாறும் கவிதைத் தொகுதியும் வெளியாகின. தேசிய கலை இலக்கிய பேரவையின் இராகலை மாவட்ட அமைப்பு அதனது பணியினைத் தொடர்கின்றது. சிவ. இராஜேந்திரன், எஸ். பன்னீர்செல்வன், சற்குருநாதன், எம். நாகராஜ், வி. மகேந்திரன், ஜே. ஜெயசீலன், கே. சுகேசன், எஸ். ஜெயராஜ் மற்றும் பலரும் இதனோடு இணைந்து புதிய சிந்தனையுடன் இப்பகுதியில் கலை, இலக்கிய பணியில் காத்திரமாக செயல்பட்டு, இளம் எழுத்தாளர்களுக்கு ஊக்குவிப்பு, எழுத்தாளர்கள் கௌரவிப்பு, நாடக மூலம் சமூகச் சாபக்கேடுகளை வெளிச்சத்திற்கு கொண்டுவருதல் இப்படி இன்னோரன்ன இனிய பணிகளைத் ர தொடர்ந்து வருகின்றர். இதனது வீதிநாடகம் நாட்டில் யாழ்ப்பாணம் மற்றும் பல்வேறு பகுதிகளிலும் அரங்கேற்றப்பட்டு வருகின்றது. இந்தியாவிலிருந்து சுபமங்களா ஆசிரியர் அமரர். கோமல் சுவாமி நாதனின் முற்போக்கு சிந்தனை ஒலிகளை இராகலையும் கேட்பதற்கும் இது வழி சமைத்தது. இவர்களது பணி தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இங்கு பாரதி மன்றம், மலைச்சுடர் மன்றம் போன்ற பல அமைப்புக்கள் தொடர்ந்தது என்றில்லாவிட்டாலும் அவ்வவ் காலங்களில் அதனது பங்களிப்பினை செய்தே வந்திருக்கின்றது. இராகலை கலை, இலக்கிய வளர்ச்சிக்கு தலையான பணியினை மேலும் தொடர்ந்து ஆற்றுவதற்கு இளம் உள்ளங்கள் அணித்திரள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக பண்பாட்டு விழுமியங்கள்

*பி. எம். லிங்கம்*

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி அதன் பண்பாடுகளின் மூலந்தான் கணிக்கப்படுகின்றது. அந்த வகையில் மலையக மக்களின் வருகையும், அதன் தாக்கங்களும் இரு நூறு ஆண்டுகால வரலாறாகும். மரக்கலம் மூலமாக நமது முன்னோர்கள் 22 மைல் தொலைவிலிருந்து மாந்தோட்டை வந்து சேர்ந்தனர். ஒரு வார கால கால்நடையாக மத்திய மலைநாடான மாத்தளையை வந்தடைந்தனர்.

வந்தவர்களில் பாதித்தொகையினர் நோயினாலும், பசியினாலும் வழியில் மாண்டனர். மிகுதியானோர் தமது பாரம்பரிய தெம்மாங்கும், நாட்டார் பாடலுடன் மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் என்ற ஒன்றை உருவாக்கி ஆலமரநிழலில் அமர்ந்து பாடிகளித்தனர். பின்னர் உணவு சமைத்து சாப்பிட்டுவிட்டு அயர்ந்து தூங்கினர். மறுநாள் கால்நடையாக மத்தியமலை நாட்டின் தலை நகரான கண்டியை வந்தடைந்தனர். தட்டு முட்டுச் சாமான்களை சுமந்து வருகின்றபோது களைப்பும், சோர்வும் ஏற்படுவது இயற்கை தானே! ஆயாசம் தீர தெம்மாங்கை எடுத்துவிடுவார்கள். முதலில் வந்தவர்களில் அதிகமானவர்கள் ஆண்களே! அவர்கள் பாடி மகிழ்வதைத் தவிர வேறு ஒன்றும் அவர்கள் கைவசமில்லையே!

மாத்தளையில் மாரியம்மன் நிலை நிறுத்திவிட்டனர். கண்டியில் மாயாவ பகுதியில்தான் வந்தவர்களின் தங்குமிடம். அங்கு வந்தவர்களுக்கான அம்பலம் என்றிருந்தது.' அங்கு சோறும், கறியும் கிடைத்தது.

ஆயாசம் தீர கங்காணியும் வந்தவர்களும் தெம்மாங்கும் பாடி மறுபடி பயணம் தொடர்ந்தது. இப்படித்தான் மறுநாள் அவர்களது பயணம் கினிகத்தெனை ஒத்தகடையை நோக்கி நகர்ந்தது. அப்போதுதான் 'கண்டி கருப்பாய் -ஒத்தக் கடை இராமாய்' என்ற சொற்றொடர் உருவாகியுள்ளது. மாத்தளைக்கு வந்தவர்களில் ஒரு பகுதியினர் காடுகளைத் தோட்டங்களாக்கினர். கோப்பித் தோட்டங்களை உருவாக்கினர். கண்டியிலிருந்து கலகா, ஹேவாஹெட்டை போன்றப் பகுதிகளுக்கும், கம்பளைப் போன்றப் பகுதிகளுக்கும் தமிழகத்திலிருந்து வந்த விவசாயிகள் உழைக்கும் மக்களாக்கப்பட்டனர்.

நாவலப்பிட்டிப் பகுதிக்கு வந்தவர்கள், கினிகத்தேனை, அட்டன் - மஸ்கெலியா, கொட்டியாக்கொலை என ஒதுங்கினர். டிக்கோயாப்பகுதிக்கு ஒதுங்கியவர்களுக்கென டிக்கோயா அம்பலம் ஒன்று உருவாக்கப்பட்டது. அட்டனிலிருந்து மலையக மேல் பகுதிக்குப் போகவே புகையிரத நிலையம் ஏற்படுத்தப்பட்டது. முதலில் வந்து தங்கிய எம்மவர்கள் மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயத்தை ஏற்படுத்தியதுப்போல, ஆங்காங்கு தோட்டங்கள் என்ற வரையறைக்கு வந்தப்போது முத்துமாரியம்மன் ஆலயங்கள் உருவாக்கப்பட்டன.

அம்மையும், கொப்பளிப்பானும் மக்கள் குடியிருக்கும் தோட்டங்களில் ஏற்பட்டன. இவைகள் எல்லாம் மாரியம்மன் கோபமே காரணமென்று கற்பிக்கப்பட்டது. அந்த நோயைப் போக்க ஆலமரத்திற்கு குடம் குடமாக நீர்வார்க்க வேண்டுமென்றும் கங்காணியாலும், பெரியவர்களாலும் காரணம் கற்பிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்துதான் வருடத்தில் ஒருநாள் மாசிமகத்தன்று திருவிழா ஆரம்பமானது. சாமி அழைக்க பெண்கள் குரவை போடுதலும், கும்மி கொட்டுவதும், தெம்மாங்கு பாடுவதும் உருவாகின. தப்பிசையும், மேளம், தமுரு, உடுக்கு , உறுமி வாத்திய கருவிகளும் தேவைப்பட்டன. மாரியம்மன் திருவிழா ஆரம்பமாகி முடியும் வரையில் தப்பிசையும், உடுக்கும் அங்கு ஆட்சி செய்தன. அவைகள் காலப்போக்கில் பெரட்டுத் தப்பு, மதியத் தப்பு, வேலைவிடும் தப்பு, காதுகுத்து, ருது சாந்தி, மாரியம்மன் திருவிழா, சாவு தப்பு போன்ற நிகழ்ச்சிகளுக்கு தப்பிசை பெரிதும் உதவியாகவிருந்தது.

குடிபெயர்ந்து வந்த தமிழக மக்கள் விவசாயிகள் என்ற போர்வையிலிருந்து தோட்டத் தொழிலாளர்களாக மாறினர். வறுமையும், நோயும் வேலைக்கேற்ற கூலியின்மையாலும் அல்லலுருவதை யாரிடஞ் சொல்லி அழுவது என்ற மனக்கிலேசத்தில் மாரியம்மன் வழிபாடு உச்ச கட்டத்தை அடைந்தது.

திருவிழா ஆரம்பமாகின்ற போதும் தைப்பொங்கல், தீபாவளி வருகின்ற போதும் கும்மி, கோலாட்டம், தெம்மாங்கு பாடலுக்கு இசையமைக்க தப்பு, தமுரு, உடுக்கு, உறுமி, மேளம், தாளம் தேவைப்பட்டன. அதுவே பண்பாட்டு விழுமியங்களாகவும், இந்த மக்களின் தீராத அவாவாகவும் இருந்தன. ஏடறிந்தோர் வரில் குடில்களில் எங்காவது ஒருவரிருப்பார். அவர்களே இரவு வேளைகளில் கங்காணி வீடு அல்லது பொது இடமான கோவிலிருந்து இராகம் போட்டு கம்பராமாயணம், மகாபாரதம், அல்லிஅருச்சுனா போன்ற கதைகளைப்படிப்பர். அனைவரும் ஆர்வத்தோடு கேட்டு பொழுதுபோக்குவதோடு மகிழ்வர். 16ஆம் நாள் அல்லது 18 ஆம் நாள் பட்டாபிசேகம் நடத்துவார்கள் சிறியோர் முதல் பெரியோர் வரை சுண்டல், பொங்கல் சாப்பிட்டுவிட்டுச் திண்ணைவழி மேடையிலிருந்தே பெரியவர்கள் முன்னிலையில் ஆராபவனர் செய்வதோடு, பக்தி பரவசத்துடன் நடத்தப்படும் சடங்காகவும், சம்பிரதாயமாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. இது ஒரு வாழையடி வாழையான சம்பவமாக மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்தக்காலக்கட்டத்தில் தாயகம் திரும்பி மீண்டும் குடும்பம் என்ற மனைவியோடு பலர் வந்து சேர்ந்தனர். அவர்கள் வருகின்றபோது பாகவதர்கள் என்ற போர்வையில் நாட்டு கூத்து வாத்தியார்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெம்மாங்கு பாடல் பாடும் கவிஞர்கள் வந்து சேர்ந்தனர். அவர்களைக் கொண்டு கங்காணி தொழிலாளர் பெருங்குடியினரின் மகிழ்ச்சி ஆரவாரத்தை மெருகூட்டி வந்தனர். இதுவே தொழிலாளர்களின் ஏக்கத்தை போக்கும் மருந்தாக மேற்கொள்ளப்பட்டது.

தாம் எந்த கிராம சூழலிலிருந்து வந்தார்களோ, அதே சூழல், காமன் கூத்தும், தப்பிசையும், தமுரு இசையும், உறுமி இசையும், மலையகமெங்கும் எதிரொலித்தன. ஊர் வாசிப்பும் என்றும் பேசும் மொழியும் பண்பாட்டின் சிகரமாக அமைந்தது. ஆனால் அமைதியும், அபிவிருத்தியும், முன்னேற்றமும் இந்த மக்களின் எட்டாக்கனியாக இன்றும் இருந்து வருகின்றது.

பண்பாட்டு விழுமியங்கள் இடத்திற்கு இடம் மாறுபட்டாலும், விழுமியங்கள் ஒன்று என்பதை அச்சுறுத்திக் கொண்டே இருக்கின்றன.

உதாரணமாக காமன்கூத்து, காமாண்டியாகவும், ரதி-மதன், தூதன், பரமசிவன், (ஈசுவரன்) வெட்டியான், வெட்டிச்சி என்ற பேதம் மாத்தறைக்கும், மலையக நடுப்பகுதிக்கும் வேறுபாடாகவுள்ளது. இந்தப்பகுதியில் காமன்கூத்து ரதி-மன்மதன், ஈஸ்வரன் (பானம் தொடுப்பவர்) என்றும் சொல்லப்படுவதுமுண்டு. ஆனால் இவைகள் எல்லாம் ஊர் வாசனை என்ற அடிப்படையில் அமைத்துக் கொள்ளப் பட்டதாகும். அவைகள் அனைத்தும் கால ஓட்டத்துடன் செல்லுகின்றனவா? என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

எது எப்படியிருந்தபோதிலும் தமிழகத்தின் கோட்பாடுகளும், எழுந்த வாய்மொழிப் பாடல்களானாலும், அவைகள் பழைய தலைமுறையின் மத்தியில் நிலைத்து நிற்கின்றன. பண்பாட்டு விழுமியங்கள் சறுக்கி விழ்ந்து விடுமோ என்ற அச்சம் இருக்கத்தான் செய்கின்றது. இருந்தாலும், வரலாற்றை நோக்குகின்றபோது அவைகளை மறுக்க மனம் வரவில்லை. இன்றைய தலைமுறையினரின் பண்பாட்டு நாகரிகங்கள் படிப்படியாக மாறிவருவதை உன்னிப்பாக கவனிக்க வேண்டியுள்ளது. குறிப்பாக சாவீட்டில் இழவு தப்பிசைப்பதில்லை. மயானத்திலும், மரண வீட்டிலும் வெள்ளைக் கொடிகளின் அலங்கரிப்பை காணுகின்றோம். எங்கும், எதிலும் மாற்று (பெரும்பான்மை) இனத்தின் நாகரிக பண்பாட்டை பின்பற்றுகின்றோம். ஆகவே கால ஓட்டத்தோடு, எமது பண்பாட்டு விழுமியங்கள் போட்டிப்போட முடியவில்லை. செத்தவீட்டில் கூட வேட்டி சால்வையை காணமுடியவில்லை. வழிப்பாட்டுத்தளங்களில் கூட இதே நிலை. திருமணத்தில் கூட மேலை நாட்டு நாகரிகத்திற்கு, இளம் தலைமுறைச் செல்வதைப் பார்க்கின்றோம்.

பழைய தலைமுறையினர் விடாப்பிடியாக, நமது பண்பாட்டு விழுமியங்களை அழுங்குப்பிடியாக பிடித்திருந்தாலும், இளம் தலைமுறையினர் முன்னோக்கிச் செல்வதைப் பார்க்கின்றோம். இதுவே எமது பண்பாடுச் சீரழிவிற்கு காரணமாக அமைகின்றன.

திருக்குறளை அழித்துவிட்டு, புதுமையை உண்டாக்க முடியமா? ஐம்பெரும்காப்பியங்களான சிலப்பதிகாரத்தையும், சீவகசிந்தாமணியையும், மணிமேகலையையும், வளையாபதியையும், குண்டலகேசியையும் அழித்து, ஒழித்துவிட்டு, புது காப்பியங்களை உண்டாக்கத்தான் முடியுமா? எமக்கென வரலாறு உண்டு, பண்பாடுண்டு. நாகரிக மோஸ்தரில் எம்மை அழித்துவிட்டு, புதிய சமுதாயத்தை தோற்றுவிக்கத்தான் முடியுமா?

மேலைநாட்டினர் எமது வைத்தியத்தையும், பண்பாட்டையும், கணிப்பீட்டையும் துருவி துருவி ஆராய்கின்றனர். ஆகையினால் எமது பண்பாட்டு விழுமியங்களை பேணிப் பாதுகாப்போம்.

## விடியல்

நிச்சயமற்றுப் போயின
நம் இரவுகள்
அன்பே!
படுக்கைக்கு போகுமுன்
இறுதி அர்த்தங்களுடன்
பார்த்துக் கொள்வோம்

குழந்தைகளின் கன்னங்களில்
அழுத்தமான உன் உதடுகளை
ஒரு முறை பதித்துவை
அப்புறமாய்,
நம் உறவுகளை
ஒரு முறை நினைத்துக் கொள்வோம்!

இறுதியாக
மாறி, மாறி
நம் கண்ணீர்த்துளிகளை
நாமே துடைத்துக் கொள்வோம்!

இந்த இரவில்
நாம் எரியாதிருந்தால்
விடியலில்,
பனி முத்துக்கள் தாங்கும்
தேயிலைத் தளிர்களில்
விரல்கள் பதிப்போம்!

- வண்ணச்சிறகு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக பாடசாலைகளில் ஆரம்பக்கல்விச் சீர்த்திருத்த அமுலாக்கலில் அதிபரின் நடிபங்கு


*பொ. இராமதாஸ்*

**விரிவுரையாளர் (ஸ்ரீபாத தே.க.க)**


இன்றுள்ள எமது கல்விக் கொள்கையில் ஆரம்பப் பாடசாலைக் கல்வி முறை முழுமையாக மீளாய்வு செய்யப்பட வேண்டிய ஒரு அம்சமாக உள்ளது என ஆணைக்குழு மிக உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. (இளைஞர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை - 1990 மார்ச்சு)

இலங்கையின் ஆரம்பக்கல்வி அடைவு மட்டத்தை மதிப்பீடு செய்வதற்கு பெரும்பாலும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் பயன்படுத்தப்படுகின்றன. 1994 ஆம் ஆண்டு ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் முடிவுகளை நோக்கும்போது ஆரம்பக் கல்வியின் அடைவுகள் திருப்திகரமற்றவை என்பதை அறியமுடியும். இவ்வாண்டில் தாய்மொழியான தமிழில் 23.8 சதவீதமானவர்கள் 10க்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். கணித பாடத்தில் தமிழ் மொழிமூல மாணவர்களினால் 23.4 சதவீதத்தினர் 10க்கு குறைவான புள்ளிகளைப் பெற்றுள்ளனர். 35 புள்ளிகளுக்கு குறைவாக பெற்றவர்களின் சதவீதம் தமிழ் மொழியில் 62.8 சதவீதமாகவும், கணிதத்தில் 71.1 சதவீதமாகவும் காணப்படுகின்றது. அதேபோல் 50 புள்ளிகளுக்கும் கூடுதலாக பெற்றவர்களின் சதவீதம் தமிழ்மொழியில் 21.4 ஆகவும், கணிதத்தில் 16.6 ஆகவும் காணப்படுகின்றது. (பெரமக - 1996) மேற்படி புள்ளி விபரங்கள் இலங்கையில் ஆரம்பக் கல்வி மேம்படுத்த வேண்டும் என்ற உண்மையை தெளிவுப் படுத்துகின்றது.

1994ஆம் ஆண்டு தேசிய கல்வி நிறுவகத்தின் கணிப்பீட்டுத் துறை 5 வருடம் ஆரம்பக் கல்வியை பூர்த்தி செய்தவர்களின் மொழித்தேர்ச்சி, கணித மற்றும் வாழ்க்கைத் திறன்கள் தொடர்பான தேர்ச்சி மட்டங்களை அளவீடு செய்வதற்கு அடைவுப் பரீட்சை ஒன்றை நடத்தியது. அந்த அடைவுப் பரீட்சையில் சராசரி புள்ளிகள் காணப்பட்டன. மொழித் தேர்ச்சியில் 61.8 ஆகவும், கணித தேர்ச்சியில் 45.0 ஆகவும், வாழ்க்கை திறன்கள் தொடர்பான தேர்ச்சியில் 26.7 ஆகவும் சராசரி புள்ளிகள் காணப்பட்டன. இச்சராசரி பள்ளிகள் மூலம் வாழ்க்கைத் திறன்கள், கணிதம் போன்ற தேர்ச்சிகளில் அடைவு மட்டம் மிகவும் குறைவாக இருப்பது தெளிவாகின்றது. (பெரமக - 1996)

தேசிய கல்வி நிறுவகம் ஆரம்பக் கல்வியை பூர்த்தி செய்து கொண்டவர்களில் எதிர்பார்க்கப்படும் அடைவு மட்டத்தை அடைந்த மாணவர்கள் சம்பந்தமாக நடத்திய மற்றுமொரு ஆய்வு முடிவு பின்வருமாறு காணப்படுகின்றது. மொழித்தேர்ச்சியில் உச்சரிப்பில் 33.2 சதவீதமானவர்களும் விளக்கம்இல் 26.8 சதவீதமானவர்களும் எழுத்து இல் 21.1 சதவீதமானவர்களும், கணித தேர்ச்சியில் எண்கள் பற்றிய விளக்கம் - 31.7 சதவீதமானவர்களும், கணித செய்கை பற்றிய விளக்கம் - 13.0 சதவீதமானவர்களும், பிரச்சினைத் தீர்த்தல் - 8.8 சதவீதமானவர்களும், வாழ்க்கைத்திறன்கள் தொடர்பான தேர்ச்சிகளில் பொறுப்பேற்றலும் வகைக்கூறலுக்குமான திறன்கள் - 43.2 சதவீதமானவர்களும், ஆரம்ப விஞ்ஞானம் - 9.4 சதவீதமானவர்களும், சுற்றாடல் திறன்கள் - 13.4 சதவீதமானவர்களும், சுகாதார பழக்கவழக்கங்கள் - 20.4 சதவீதமானவர்களும் பெற்றுள்ளனர். (பெரமக-1996 இணைப்பு 1). மேற்படி புள்ளிவிபரங்களின் மூலம் அறியக் கூடியது. கணிதம், மொழி மற்றும் வாழ்க்கைத் திறன்கள் தொடர்பான தேர்ச்சிகளை அடைந்துள்ள மாணவர்கள் மிகச் சிலரே என்பதாகும். ஆரம்பக் கல்வி அடைவு மட்டத்தில் இத்தகைய திருப்திகரமற்ற நிலை காணப்படுவதற்கு பல்வேறு காரணங்கள் ஏதுவாகின்றன. கல்விக்கான வளங்கள் பகிரப்படுவதில் காணப்படும் ஏற்றத்தாழ்வு, சகலருக்கும் சம கல்வி என்ற அந்தஸ்த்து கிடைக்கப் பெறாமை, பாடசாலை கலைத்திட்டம், கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள், மாணவர், ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடுகள் பாடசாலை முகாமைத்துவ குறைப்பாடுகள் போன்றவைகளாகும். (பெரமக - 1996-5)

மேற்கண்ட பிரச்சினைகள் பொதுவாக சகல பாடசாலைகளிலும் காணப்பட்டாலும் குறிப்பாக ஆரம்பப் பாடசாலைகளில் கீழ்வரும் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

1. பாடசாலை முகாமையாளர்கள் மற்றும் ஆசிரியர்களிடத்தில் காணப்படும் மறையான மனப்பாங்கு.
2. மனப்பாங்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 ஆசிரியர் வரவின்மை

4 மாணவர் வரவின்மை

5 கற்பித்தற் செயற்பாட்டின் குறைபாடு

6 பாடசாலை பௌதீக வளப் பற்றாக்குறையும் கற்றல் செயற்பாட்டிற்காக இருக்கின்ற வளங்கள் உச்ச மட்டத்தில் பயன்படுத்தாமையும்

7 மாணவர்கள் மீது அதிபர்களும், ஆசிரியர்களும் கவனஞ்செலுத்தாமையும் ஆதரவு காட்டாமையும்.

8 பாடசாலையிலும், வகுப்பறையிலும் மாணவர்களை அவமதிப்பிற்கும், அதைரியப்படுத்தலுக்கும், மனதை பாதிப்படையச் செய்யக் கூடியதாகவும் செயற்படும் ஆசிரியர்கள் காணப்படல்.

9 மாணவர்களின் பயிற்சிப் புத்தகங்கள், செயற்பாடுகள் மற்றும் வீட்டு வேலைகள் ஆசிரியர்களால் முறையாக திருத்தப்படாமை.

இலங்கையில் ஆரம்பக்கல்வி தொடர்புபட்ட பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. 1994 ஆம் ஆண்டில் 5-14 வயது பிரிவினரில் 5 சதவீதமானவர்கள் ஒரு நாளும் பாடசாலைக்கு செல்லாதவர்கள். மீளக் கற்போர்

1991ஆம் ஆண்டில் 9.25 சதவீதமாகும். ஆரம்பக்கல்வியிலிருந்து இடைவிலகுவோர் 4.3 சதவீதமாகும். தேசிய மட்டத்தில் இந்த சதவீதம் இன்னும் கூடியே காணப்படுகின்றது. (சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்-1994)

ஆரம்பக் கல்வியை பூர்த்தி செய்து கொண்டவர்களில் 21சதவீதமானவர்களே சரியாக எழுதக் கூடியவர்களாகவும், எழுதவும், வாசிக்கவும் தெரிந்தவர்கள் 23 சதவீதத்தினராகவும், கணித பாடம் தெரிந்தோர் 13 சதவீதத்தினராகவும் காணப்படுகின்றனர். (தினகரன் 24-11-1999. யுனேஸ்கோ, கல்வி மைச்சு கணக்கெடுப்பு)

ஆரம்ப மட்டத்தில் ஆசிரியர் விகிதம் 31:1 ஆக தேசிய மட்டத்தில் காணப்பட்டாலும் இவ்விகிதம் மாவட்ட மட்டத்தில் 25-100 வரை பரந்து காணப்படுகின்றது. இதன்படி ஆரம்பப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருப்பது தெளிவாகின்றது. மேலும் தனி ஆசிரியர், இரண்டு ஆசிரியர் கடமையாற்றும் பாடசாலைகள் மாவட்டங்கள் தோறும் 60 ஆக காணப்படுகின்றது. (பெரமக - 1996 -5)

இலங்கையில் காணப்படும் 10191 பாடசாலைகளில் 9703 பாடசாலைகளில் அதாவது 96மானவற்றில் ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள் காணப்படுகின்றன. இலங்கையின் முழு மாணவர் தொகையில் 46 சதவீதமானவர்கள் ஆரம்ப வகுப்பு மாணவர்கள் முழு ஆசிரியர் தொகையில் 40 சதவீதத்தினர் ஆரம்பப் பிரிவு வகுப்பக்களில் கற்பிப்பவர்கள். ஆரம்ப வகுப்பு காணப்படும் பாடசாலைகளின் மாணவர் தொகை 50-6000 வரை வேறுபட்டு காணப்படுகின்றது. (பாடசாலை தொகை மதிப்பு கல்வி உயர்கல்வி அமைச்சு - 1994)

ஒரு நாட்டின் எதிர்காலம் அந்நாட்டின் வகுப்பறையிலேயே நிர்ணயிக்கப்படுகின்றது கலாநிதி பி.ஜி.திலக் -1986 (இந்திய கல்விக் குழு அறிக்கை) இக்கூற்றை 1992 ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழு முதலாவது அறிக்கையுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது எமது நாட்டு வகுப்பறைகளில் கீழ்வரும் விரும்பத்தகாத நிலைமைகள் ஆணைக்குழு உறுப்பினர்களால் அவதானிக்கப்பட்டுள்ளன.

1 வகுப்பறைத் தொழிற்பாடு ஒரேபாங்காய் ஒரே தொனியில் அமைந்திருந்தது.

2 வகுப்பறைகளிற் சோம்பற் கதை அமர்வுகளே அதிகமாய் இருந்தன. வகுப்பு வேளையில் 70 சதவீதத்திற்கு மேலானது இவ்வியல்வினதாகும். முயற்சி சிறிதளவே காணப்பட்டது, கரும்பலகையும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டது.

3 ஆசிரியர் முற்று முழுக்கப் பள்ளிமாணவரின் பாடப்புத்தகத்தையே நம்பியிருந்தார்.

4 பள்ளி மாணவரின் கவனத்தை ஈர்க்க சிலவேளை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பள்ளி மாணவரைக் கற்றலில் ஈடுபடுத்தலுக்கான அற்ப சான்றுகளே கிடைத்தன.

5 ஒரு சில பள்ளி மாணவர் முயற்சிகளும் சில ஆசிரியர் செய்து காட்டல்களும் பார்க்கப்பட்டன ஆயின் சிறந்த வசதிகளுடைய பாடசாலைகளிலும் இத்தகைய நிகழ்ச்சிகள் ஒப்பளவிற் குறைவாகவும் ஒரு சில இடங்களில் நடைபெறுவனவாகவும் இருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு பொருட்களின்மை காரணமன்று. பெரிய பாடசாலைகளில் பொருட்கள் கிடைக்கப் பெறுகின்றன.

6 சிரேஷ்ட ஆசிரியர்களும், அதிபர்களும், வருகைத் தரும் முகாமைத்துவ அதிகாரிகளும், வகுப்பறை முயற்சிகளைக் கரிசனையுடன் மேற்பார்வை செய்தல் முற்றாக இல்லாதிருந்தது. வகுப்பறைக் கல்வி முறைமையினால் மறக்கப்பட்டுள்ளதாகக் காணப்படுகின்றது.

7 பல நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. ஆயின் இவை சமூக அரசியல் நோக்கமுடையவை

8 இவைஅறிவூட்டக்கூடியனவாய் இருக்கலாம் ஆயின் இவ்வமிசம் உரிய முறையிற்காணப்பட்டதாகத் தெரியவில்லை.

வகுப்பறை பாடசாலையொன்றின் மைய இடமாகும். வகுப்பறை முயற்சிகளின் பாங்கு முறை அதிகம் விரும்பத்தக்கதாயில்லை. இந்த நிலைமை ஆழ்ந்த கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது. (தேசிய கல்வி ஆணைக்குழு முதலாவது அறிக்கை 1992 - பக்கம் 80)

இலங்கையில் 10,191 அரச பாடசாலைகளில் 41,94,448 மாணவர்கள் கல்வி பயிலுகிறார்கள். கற்பித்தலில் ஏறத்தாழ 190,000 ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர். அரசாங்கம் வருடாந்தம் பாடசாலை கட்டட அமைப்பிற்கு 3000 மில்லியன் ரூபாவும் பாடசாலை மாணவர் சீருடைக்காக 525 மில்லியன் ரூபாவும், மாதாந்தம் ஆசிரியர் சம்பளத்திற்காக 7500 மில்லியன் ரூபாவும், வேறு பல்வேறு உபகரணங்களுக்காகவும் சேவைகளை வழங்குவதற்காகவும் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்கின்றது. இத்தகைய பெருமளவு பணத்தைச் செலவு செய்யும் எமது நாட்டின் ஆரம்பக்கல்வியின் அடைவு மட்டம் திருப்திகரமானதாக அமையவில்லை.

மேற்கண்டவாறு ஆரம்பக்கல்வியில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. அடைவு மட்டம் மிகவும் திருப்திகரமற்றதாக காணப்படுகின்றது. இதனால் ஆரம்பப் பிரிவு கலைத்திட்ட அமுலாக்கலை மேம்படுத்துதல் தொடர்பாகவும், அதில் அறிவுறுத்தல் தலைவர் என்ற வகையில் அதிபரின் பங்கு எவ்வாறு காணப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் ஆராய வேண்டியது மிக மிக அவசியமாகும்.

நாட்டின் தேசிய கல்வி இலக்குகள், பாடசாலை இலக்குகள் என்பவற்றைத் தெளிவாக விளக்கி அவ்விலக்குகளை அடையும் விதத்தில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல் கல்வி அபிவிருத்தித் தலைமைத்துவத்தின் பிரதான கடமையாகும். மா.செல்வராஜ் - 1995

இதற்கேற்ப அதிபர்கள் ஆரம்ப வகுப்பு கலைத்திட்ட அமுலாக்கலை மேம்படுத்த அறிவுறுத்தல் தலைவர் என்ற வகையில் எவ்வெவ் பங்களிப்புகளை செய்யலாம் என்பது தொடர்பான ஆய்வு இன்று அவசியப்படுகின்றது.

ஆரம்ப வகுப்புகளுக்கான கலைத்திட்ட அமுலாக்கலில் ஈடுபட்டுள்ள அதிபர்களுக்கும், ஆரம்ப பிரிவுகளுக்கு பொறுப்பான பகுதித் தலைவர்களுக்கும், ஆரம்பவகுப்பு பிரிவு கற்பித்தலில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கும், பாடசாலையின் பௌதிக, மானிட வளங்களை கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டிற்கு சிறப்புற ஒழுங்கமைத்து கலைத்திட்ட அமுலாக்கலை மேம்படுத்த செயற்படும் சகல பிரிவினருக்கும் பிரயோசனமானதாக அவ்வாய்வு அமையும்.

"சமூகத்தினதும், பொருளாதாரத்தினதும் அபிவிருத்தித் தேவைகளை ஈடுசெய்ய சகலருக்கும் ஆரம்பக் கல்வி வழங்கப்படுவது முக்கியமானது" (சோ. சந்திரசேகரம் - 1995). இன்று நாட்டினது பொருளாதாரத்திற்கு உயர் கல்வித் தகைமைகளை கொண்டவர்களை விட ஆரம்ப மற்றும் இடைநிலை கல்வியைப் பெற்றுக் கொண்டவர்களே குறிப்பிடத்தக்களவு பங்கினை நல்குகிறார்கள். இந்நிலையில் ஆரம்பக் கல்வி கலைத்திட்ட அமுலாக்கம் மேம்படுத்தப் பட வேண்டும்.

21ஆம் நூற்றாண்டில் புதிதாக கைத்தொழில் மயமான நாடு என்ற இலக்கை நோக்கி நடைபோடும் இலங்கை விஞ்ஞானம், தொழில் முறையியல் ஆகியவற்றை அவர்களுடைய பாடசாலை வாழ்க்கையின் ஆரம்ப வருடங்களிலேயே அறிமுகஞ் செய்தல் முக்கியமானது. பெரும்பாலான மாணவர்கள் ஆரம்பக் கல்வியின் இறுதியிலேயே பாடசாலையைவிட்டு நீங்குவதால் வேலை உலகு பற்றிய கல்வியை இடைநிலைப் பாடசாலைக்குப்பின் போடுதல் பொருத்தமாகாது. தொழில் முறையியல் சார்ந்த கல்வியை ஆரம்பப் பாடசாலையிலேயே அறிமுகம் செய்தலானது அவர்கள் தம்மை சூழ்ந்துள்ள உலகை நன்கு விளங்கிக் கொள்ளவும், பிழையான கருத்துக்களை வலுவிழக்கச் செய்யவும், கைத்தொழில் வாழ்வுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ள தொடர்பை அறியவும், தொழில் முறையியலின் பயன்பாடு ஆகியவற்றை அறிந்துக் கொள்ளவும் வேலை உலகு தொடர்பான எதிர்மறையான மனப்பாங்குகள் மாற்றமடையவும் உதவும். (சோ. சந்திரசேகரம் - 1995) இவ்வாறு ஆரம்பக் கல்வி முக்கியமான இடத்தை வகிப்பதால் இதுவரை ஆரம்பக் கல்வியில் காணப்பட்ட ''மனனம் செய்யும் கல்வி முறைக்கு அதிகம் கொடுப்பதிலிருந்து'' விடுபட்டு முற்றுமுழுதாக செயற்பாடுகளை மையமாகக் கொண்ட ஆரம்பக்கல்விச் சீர்த்திருத்தத்தை 1999ஆம் ஆண்டு முதல் நாடளாவிய ரீதியில் அரசு அமுல்படுத்துகின்றது. இந்நிலையில் பாடசாலை அதிபர்கள் இச்சீர்த்திருத்தங்களுக்கு ஏற்ப ஆரம்ப வகுப்புக்களில் சிறப்பான கற்றல்- கற்பித்தலை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு தேவையான தகவல்களை இவ்வாய்வு வழங்க வேண்டி இருக்கும்.

''கற்பதற்குக் கற்றல்'' என்னும் புதிய கல்வி சிந்தனையை அண்மைக் காலத்தில் பாட ஏற்பாட்டு வல்லுனர்கள், அறிவுசார் உளவியலாளர்கள், கல்விசீர்த்திருத்தங்களை முன்வைப்போர் போன்றோர் பெரிதும் கவனத்திற் கொண்டுள்ளனர். கட்டாயக் கல்வியைப் பெறும் ஆரம்பக் கல்விக் காலத்திலேயே அவர்கள் கற்பதற்கு கற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். அதனை உணர்ந்த எமது நாட்டு கல்வியலாளர்களும் புதிய ஆரம்பக் கல்விச் சீர்த்திருத்தத்தில் ஆரம்பக் கல்வி பிரிவிற்கென இனங்கண்ட 5 தேர்ச்சி மட்டங்களில் ''கற்பதற்குக் கற்றல்'' என்ற புதிய கல்வி சிந்தனைக்கு முக்கிய இடமளித்துள்ளனர். இந்த ''கற்பதற்கு கற்றல்'' என்ற எண்ணக்கருவானது நவீன தொழிநுட்ப சமுதாயத்தில் வாழ்க்கை நீடித்தகல்வி, தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் திறன்கள், புதிய அறிவையும் திறன்களையும் சுயமாகக் கற்றுக் கொள்ளல், புதிய விஞ்ஞான தொழில்நுட்ப சமுதாயத்தில் இணங்கி வாழ்தல் போன்ற அம்சங்களை உள்ளடக்கியுள்ளன. மேற்படி உள்ளடக்கங்களை ஆரம்பக் கல்வி மாணவர்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக வகுப்பறை கற்றல்- கற்பித்தலுக்கு எவ்வாறு அறிவுறுத்தல்களை வழங்கலாம் என்பதையும் இவ்வாய்வு உணர்த்த வேண்டும்.

ஆரம்பப் பிரிவில் மாணவர் ஆசிரியர் விகிதம் தேசிய மட்டத்தில் 31:1 ஆக காணப்பட்டாலும் ஆரம்பப்பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மாவட்ட ரீதியாக 25 தொடக்கம் 100 வரை வேறுபட்டு காணப்படுகின்றன. அதன் மூலம் ஆரம்பப்பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை மிகவும் கூடுதலாக காணப்படுகின்றது. (பெரமக 1996). இவ்வாறு ஆரம்பப் பயிற்சி பெறாத ஆசிரியர்கள் பிள்ளை வளர்ச்சி பற்றிய உளவியலாளர்களின் கருத்துக்களை அறியாதவர்களாக உள்ளனர். அவர்களுக்கு இன்றைய ஆரம்பக் கல்விச் சீர்திருத்தத்திற்கேற்ற செயல் முறைக் கற்பித்தல், விளையாட்டு முறைக்கற்பித்தல், குழுமுறைக் கற்பித்தல், பரிகாரக் கற்பித்தல், பங்குபற்றல் கற்பித்தல்,போன்ற கற்பித்தல் முறைகள் பற்றிய அறிவோ விளக்கமோ இல்லை. பாடத்திட்டம், பாடக்குறிப்பு, கற்பித்தல் உபகரணங்கள், வகுப்பறை ஒழுங்கு மதிப்பீட்டு முறை போன்றவற்றை பற்றிய போதிய விளக்கம் பெறாதவர்களாக உள்ளனர். இத்தகைய நிலையில் உள்ள ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி ஆசிரியர்களின் கற்பித்தலையும் மாணவர்களின் கற்றலையும் மேம்படுத்த இந்த ஆய்வு உதவும்.

பாடசாலைகளின் கல்விசார் நடவடிக்கைகளின் இதயமாக விளங்குவது கலைத்திட்டமாகும். அக்கலைத்திட்டத்தை பாடசாலை மட்டத்தில் அமுல்படுத்துவதில் பிரதான பங்கை வகிக்கும் அதிபர், பிரதி அதிபர், பகுதித்தலைவர், சிரேஷ்ட ஆசிரியர் போன்றோரை உள்ளடக்கிய கலைத்திட்ட அமுலாக்கல் குழுவினருக்கும் ஆரம்ப வகுப்பாசிரியர்களுக்கும் இந்த ஆய்வு பயனுள்ளதாக அமையும்.

இலங்கையில் காணப்படும் 10191 பாடசாலைகளில் 9703 பாடசாலைகளில் அதாவது 96% மானவற்றில் ஆரம்பப்பிரிவு வகுப்புகள் காணப்படுகின்றன. இலங்கையில் முழு மாணவர் தொகையில் 46% சதவீதமானவர்கள் ஆம்பப்பிரிவு மாணவர்கள். முழு ஆசிரியர் தொகையில் 40% சதவீதத்தினர் ஆரம்பப்பிரிவு வகுப்புக்களில் கற்பிப்பவர்கள். (பெரமக. 1996). மலையகத்தில் சுமார் 833 பெருந்தோட்டப் பாடசாலைகளில் சுமார் 300 ஆசிரியர் பாடசாலைகளின் பௌதீக கட்டமைப்பு இன்னமும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

இப்பாடசாலைகள் அனைத்திலும் ஆரம்பப்பிரிவு வகுப்புகள் காணப்படுகின்றன. இப்பாடசாலைகளில் சுமார் 3000 ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. மலையகச் சமூகத்தில் பாடசாலைக் கல்வியைத் தவிர்ப்போரின் வீதம் 21.2% ஆகவும் தேசிய மட்டத்தில் இது 3.7% சதவீதமாகவும் காணப்படுகின்றது. இங்கு அதிகரித்த இடைவிலகல் வீதமும், மீளக் கற்போர் வீதமும் காணப்படுகின்றது. எழுத்தறிவு வீதம் தேசிய மட்டத்தில் 90% சதவீதத்திற்கு அதிகமாக இருக்க மலையகச் சமூகத்தில் 66.1% சதவீதமாக இருக்கிறது. மலையகத்தில் சில பிரதேசங்களில் ஆசிரியர் மாணவர் விகிதம் 1:100 வரை பரவி சதவீதமாக காணப்படுகின்றது. இந்நிலைமைகள் மலையக பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி அமுலாக்கம் மேம்படுத்த வேண்டும் என்பதை உணர்த்துகிறது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேயிலைத் தோட்டங்களில் பெண்கள்-
# ஓர் அவுஸ்ரேலிய பெண்ணின் பார்வை.

*டானியல் எற்கின்ஸ்*

இலங்கைத் தேயிலைத் தோட்ட மக்கள் தனித்தன்மைகளைக் கொண்ட ஒரு சமூகமாக விளங்குகின்றனர். பொருளாதார மாற்றங்களும் அதிகரித்த தொழிநுட்ப அபிவிருத்திகளும் ஒரு சமூகத்தின் கருத்துப்பாங்குகளில் மாற்றத்தை ஏற்படுத்துவன. நாட்டின் ஏனைய பகுதிகள் இம்மாற்றங்களின் விளைவாக நிலைமாற்ற மெய்தியிருப்பது போல, தோட்டப் பகுதிச் சமூகத்தில் பெருமளவுக்கு இவற்றின் பாதிப்பு ஏற்படவில்லை. பதிலாக அவர்கள் தமது மரபு வழி வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பதிலேயே ஆழமாக ஊறிப்போயிருக்கிறார்கள். அவ்வாழ்க்கை முறையில், ஒரு பெண்ணின் முதலாவதும், முக்கியமானதுமான கடமை மற்றவர்களுக்கு ஊழியம் புரிவதேயாகும்.

1998 ஒக்டோபரில், அவுஸ்திரேலிய வெளிநாட்டுத் தொண்டர் சேவையின் கீழ், நான் இலங்கைக்கு வந்தபோது, மலையகத் தேயிலைத் தோட்டப் பெண்கள் மத்தியில் பணியாற்றும் வாய்ப்பு எனக்கு வழங்கப்பட்டது. கீழ் நிலையிலுள்ள இப்பெண்களை உயர்வடையச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்ட ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தில் இணைந்து அடுத்த 12 மாதங்களும் நான் இப்பெண்கள் மத்தியில் கடமையாற்றினேன். மாதம் ஒரு தடவை பயிற்சி அளிப்பதும் பயிற்சிப்பட்டறைகளை நடத்துவதும் இந்நிறுவனத்தின் பிரதான கருத்திட்டமாக இருந்தது. 10 வெவ்வேறு தோட்டங்களில் இருந்து சுமார் 20 தேயிலை கொய்யும் பெண்கள் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். பெண்கள் என்ற வகையில் தோட்டங்களில் அவர்களுக்கு கிடைத்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், சுதந்திரமானதும் துணிவானதுமான சூழ்நிலையில் ஒருவர் மற்றொருவரின் வேலைகளையும் அதிலுள்ள பிரச்சினைகளையும் அறிந்து கொள்ளவும், அவர்களின் சொந்த பொருளாதார, சமூக, கலாசாரச் சூழ்நிலை மாற்றத்துக்கமைய, முகவர்களாக செயலாற்றுவதற்குத் தேவையான தேர்ச்சித் திறத்தைப் பெற்றுக் கொள்வதற்குமென மாதம் ஒரு தடவை பயிற்சி அளிக்கப்பட்டது.

இதில் கலந்து கொண்ட பயிற்சியாளர்களின் வயது இளம்பெண் பருவம் தொடக்கம் 41,42 வரை வேறுபட்டது. இவர்களில் சிலர் மணம் முடித்தவர்கள், சிலர் தாய்மார்கள், ஏனையோர் மகள்மார்கள், சிலருக்கு எழுத வாசிக்கத் தெரியும்.

மற்றவர்கள் எழுத்தறிவற்றவர்கள் இவர்களில் பலர் இந்துக்கள், சிலர் கிறீஸ்தவர்கள். எனினும் இவர்களிடம் ஒரு பொதுத்தன்மை இருந்தது. அதாவது, பாரம்பரிய கலாசார, பொருளாதார, சமய, அரசியல் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்களினூடாக இப்பெண்கள் அனைவருமே ஒடுக்கப்பட்டவர்கள்.

இவர்களை நான் சந்திப்பதற்கு முன்பு தேயிலைத் தோட்ட வாழ்க்கை எப்படியிருக்கும் என்ற எனது மனப்பதிவு, அவுஸ்திரேலியாவிலிருந்து புறப்படு முன் நான் வாசித்த ஒரு வரலாற்று நூலினூடாகவே ஏற்பட்டது. தேயிலை கொய்யும் பெண்கள் எதிர்நோக்கும் நிலைமைகளைப் பற்றி எனது சக தொண்டர்கள் கூறியவற்றை அறிந்தபின், சமத்துவத்துக்காகப் போராட்ட உணர்ச்சியோடு ஆவேசங் கொண்டு நிற்கும் பெண்களைச் சந்திக்கப் போகிறேனே என எண்ணி என்னைத் தயாராக்கிக் கொண்டேன்.

எனினும், இச்சமூகத்தினர் எனக்கு அறிமுகமாகியதும், தமது சமூகப் பழக்கவழக்கங்களில் வாழப்பழக்கப் பட்டவர்களாகவும் அவர்களிடமிருந்து ஒரு மாறாத தன்மையான கருத்துப்போக்குகள் ஆழமாகச் செயற்படுவதையும் உடனே என்னால் உணரமுடிந்தது. ஆண்கள் அனுபவிப்பதாகக் கருதப்படும் உரிமைகள் வாழ்க்கையில் தமக்கும் அளிக்கப்பட வேண்டும் என இப்பெண்கள் விரும்புவது உண்மைதான். ஆனால் இவை கிடைக்கவில்லையே என்ற சினத்தையோ, இவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற உறுதியையோ இவர்கள் வெளிப்படையாக காட்டிக் கொள்ளாதது இவை அவர்களிடம் ஏற்படுமென எதிர்பார்த்திருந்த எனக்கு ஆச்சரியத்தையும் அதற்கான காரணத்தை அறிய வேண்டும். என்ற ஆவலையும் ஏற்படுத்தியது. இப்படியான நிலைமை ஏன் நிலவுகிறதென்பதை அறிந்து கொள்வதற்கு, அச்சமூகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று கலாசாரப் பின்னணியைப் பார்ப்பது அவசியமாகிறது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தேயிலைத்தோட்டத் தொழிலாளர்கள் தென்னிந்தியாவிலிருந்து கூட்டி வரப்பட்டனர். இலங்கையில் தமக்கு சிறந்த எதிர்காலம் இருக்கும் என அளிக்கப்பட்ட உறுதி மொழியை நம்பி, வறுமைக்கும் ஜாதிப்பாகுபாடுகளுக்கும் ஆளாகியிருந்த இந்த இந்திய தமிழ்த் தொழிலாளிகள் தமது சொந்த நாட்டைவிட்டு உடனே புறப்பட்டுவந்து விட்டனர். பெண்கள் விவேகமில்லாதவர்கள் எனக்கருதப்பட்டதாலும், தாராளமாகக் கிடைக்கக்கூடிய மலிவான கூலிகள் என்பதாலும், அவர்கள் எதிர்காலத்துக்குத் தேவையான தொழிலாளர்களை உற்பத்தி செய்யக்கூடியவர்களென்பதாலும், பெருந்தோட்டங்களிலிருந்து கிடைக்கும் இலாபங்களால் அக்காலத்தில் பெரும் பயனைப் பெற்றுக் கொண்டிருந்தவர்கள், தென்னிந்தியாவிலிருந்து பெண்களை இலங்கைக்கு பயணத்தை மேற்கொள்ளும்படி தூண்டினர்.

பெண்கள் ஆண்களுக்கு இரண்டாம் பட்சமானவர்கள் என்ற ஆணாதிக்க கருத்துநிலைப்பாடு பெருமளவில் பெருந்தோட்டப்பகுதிகளில் நிலவுகிறது. பெண்கள், ஆண்களை எல்லா மட்டங்களிலும், எல்லா நேரங்களிலும் மதிக்க வேண்டுமெனக் கற்பிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் மனமுவந்து தங்களை ஆண்களின் கட்டுப்பாட்டுக்குள் விட்டு விடவேண்டும். எனவே பெண்கள் தமது சொந்தக் கணவன்மார், தந்தைமார், சகோதரர்கள் என்போர் ஆதிக்கம் செலுத்துவதை எதிர்நோக்குவதோடு - தோட்டத்தில் வேலையை மேற்பார்வை செய்பவர், கங்காணிமார், தோட்டச் சொந்தக்காரர் முதலியோர் மேலாட்சி செலுத்துவதையும் எதிர் நோக்க வேண்டியுள்ளது. பெண்களை அடக்கி இரண்டாம் பட்சமாக வைத்திருப்பதற்கான சமூக வாழ்க்கை முறைமை, சமூகத்திலுள்ள பொருளாதார சமய, கல்வி, அரசியல் கட்டமைப்புகளினாலும் நிலை நிறுத்தப்படுகின்றது.

இன்றும் கூட பெண், ஆண் செய்கிற அளவு வேலையைச் செய்து முடித்தாலும், ஆணுக்குக் கொடுக்கப்படும் சமமான கூலியைப் பெண் பெறுவதில்லை. 150 வருடங்களுக்கு முன் ஆணுக்கு கொடுக்கப்பட்ட கூலியில் 25வீதம் குறைவாகவே பெண்ணுக்கு கிடைத்தது. 1980இல் 16வீதம் குறைவாக பெண்ணுக்கு கொடுக்கப்பட்டது. மிகத் தெளிவான இக்கூலி வித்தியாசம் இன்னும் நடைமுறையில் இருக்கிறது. பெறுகின்ற சம்பளம் மாதத்தில் வேலை செய்த நாட்களின் அடிப்படையிலேயே கணக்கிடப்படுகிறது. தேயிலைத் தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டவுடன், கிடைக்கின்ற வேலையின் அளவு எப்பொழுதும் உத்தரவாதப் படுத்தக்கூடியதாக இருப்பதில்லை. தோட்டங்களில் நிலவும் நடைமுறைப்படி, ஒருவர் குறைந்த அளவான சம்பளத்தை பெறுவதற்கு கூட அதற்கு முன் குறிக்கப்பட்ட தொகைத் தேயிலைக் கொழுந்துகளைக் கொய்து ஒப்படைக்க வேண்டும் என்ற கட்டாயம் உண்டு. இந்த நியாயமற்றவர் நடைமுறையை எதிர்க்க வல்லமையற்றவர்களாக தாம் இருப்பதை பல பெண்கள் உணருகின்றனர் என்னும் முடிவில் எவ்வித வெகுமதியுமில்லாமல் பெண்கள் நாள் முழுவதும் வேலை செய்ய வேண்டியுள்ளது. இப்பெண்கள் அவர்களின் கடுமையான உழைப்பில் அருகதையுள்ளவர்களென்பது உண்மையற்றது.

பொதுவான வழக்கமென்னவெனில், உதாரணமாக, பெண்கள் தனது சம்பளத்தை கணவர்மாரிடமோ, சகோதரர்களிடமோ, பெற்றோரிடமோ கொடுத்து விட வேண்டியது. எப்படி அதைச் செலவிடவேண்டுமென்பதை அந்த ஆண்களே தீர்மானித்துக் கொள்வர்.

அந்தப் பணத்தைக் கொண்டு அவளுக்கென துணிமணி அல்லது சேலையொன்றை வாங்கிக் கொள்ளக் கூடிய அதிர்ஷ்டம் அவளுக்கு கிடைக்கும் எனில், அவள் எதை வாங்கிக் கொள்ளவேண்டும் என்பதை அவளின் பாதுகாவலர்களே தீர்மானிப்பர். ஒரு தோட்டத்தில் கடைபிடிக்கப்படும் நடைமுறையின்படி, சம்பளத்தினன்று, தமது குடும்பத்தவர்களின் சம்பளப்பணத்தை அவர்களின் சார்பில் பெற்றுக் கொள்வதற்காக ஆண்களுக்கு நேரம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டு வருகிறது. (ஆண்கள் தாங்களே வேலை செய்யாமல் இருந்தாலும் கூட, தமது குடும்பத்தவர்களின் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளலாம்). குடும்ப அங்கத்தவர்களின் உழைப்பு நேரம் குழம்பிவிடாமலிருப்பதற்காக உள்ள ஏற்பாடு இது! பெருந்தோட்டத் தொழிலாளர்களிடம் மதுப்பாவனைப் பழக்கம் அதிகரித்துக் காணப்படுவதனால், ஆண்கள் இவ்வாறாகப் பெறும் சம்பளப்பணம், எப்பொழுதும் குடும்பத்தினரின் உணவு, உடை தேவைகளுக்காகவே பயன்படுத்தப்படும் என்பதில்லை. மீளவும் பெண்கள் புத்தி சாதுரியம் இல்லாதவர்கள், பொறுப்புணர்ச்சி இல்லாதவர்கள், தமது சுற்றாடலை கட்டுப்படுத்த இயலாதவர்கள் என்ற ஊகம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. இவ்வாறான வழக்கத்தின் காரணமாக, தம்முடைய கடுமையான உழைப்பினால் கிடைக்கும் பணத்தைக் கூட பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவிக்கமுடிவதில்லை. (தேயிலை கொய்வதற்கு நாட்கூலி சுமார் ரூ.75) பதிலாக ஆண்கள் குடும்பத்தில் ஆதிக்க இடத்தை வகிப்பவர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். பாற்பண்பின் காரணமாக கிடைத்த உரிமை இது.

இதைப்பற்றி விவாதிப்பதற்கான வல்லமை அவர்களுக்கு இல்லை என்ற எண்ணம் நிலவுவதுடன், இந்தச் சமூகக் கட்டமைப்பு மாற்றப்படவேண்டுமென்பதற்கான அறிவோ, அதற்கான அரசியல் பலமோ அவர்களுக்கில்லை. இலங்கையின் எல்லாப்பகுதிகளிலும், எழுத்தறிவுள்ளவர்களின் வீதம் அதிகரித்துக் காணப்படுகின்றபோதிலும், தோட்டப் பகுதிகளில் எழுத்தறிவின்மை மிகக் கூடுதலாக உள்ளது. 80வீதம் தோட்டப்பெண்களுக்கு எழுத்தறிவில்லை ஏனையவர்களின் 4ஆம் தரத்துக்குப்பின் பொதுவாகப் பாடசாலைக்குச் செல்லாவர்கள். பொருளாதாரத் தேவை காரணமாக 14 வயதிலேயே சிறுமிகள் வேலைக்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் அல்லது வீட்டிலுள்ள குழந்தைகளைக் கவனிப்பதற்காக பாடசாலையிலிருந்து நிறுத்தப்படுகின்றனர் அல்லது இளம் பராயத்தை எட்டுவதற்கு முன்பே வீட்டுப் பணியாளாக வீடுகளில் வேலை செய்வதற்காக தோட்டத்துக்கு வெளியே அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

கல்வியறிவில்லாத இந்த நிலைமையினால், பெண்கள் பிழைத்து வாழ்வதற்கு ஆண்களிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்படுகின்றனர். பெண் சுதந்திரமானவள் என்றும் சுயமாகச் சிந்திக்கக் கூடிய தனிப்பிறவி என்பதும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அவள் தொழிற்சங்கங்களில் கலந்து கொண்டு பங்களிப்புச் செய்யாமலிப்பதிலிருந்து இது தெளிவாகிறது.

தொழிற்சங்கங்களில் சேர்ந்துள்ள பெண்கள், அவர்களின் தகப்பன்மார் அல்லது கணவன்மார் அங்கம் வகிக்கின்ற தொழிற்சங்கங்களில் தாமாகவே பதிவு செய்யப்பட்டவர்கள். தனது வீட்டுக் கடமைகளோடும், வெளிவேலையோடும் பெண்கள் தட்டுத் தடுமாற வேண்டியிருப்பதனால், தொழிற்சங்கக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கு நேரமோ, சக்தியோ வெகு அரிதாகவே கிடைக்கிறது.

அவள் கூட்டத்தில் கலந்து கொண்டால் கூட, அவளைப் பேசுவதற்கு யார் அனுமதிக்கப் போகிறார்கள்? தொழிற்சங்கங்களும் பெண் தொழிலாளர்களை திருப்திப்படுத்துவதில் அக்கறை காட்டுவதில்லை. ஆணின் வாக்கைப் பெற்றுவிட்டால் இயல்பாகவே பெரும்பாலும், அவனின் மனைவியுடைய வாக்கையும் அவர்களால் பெற்றுவிட முடிகிறது. எழுத்தறிவின்மை காரணமாக சமூக அரசியல் தொடர்பான விடயங்களில் பங்களிக்கவோ அல்லது அவை பற்றி விமர்சிக்கவோ முடியாத பின்னடைவுக்கு பெண்கள் உள்ளாகின்றனர்.

அரசியற் செயற்பாடுள்ளவர்களாக பெண்கள் ஊக்குவிக்கப்படாதமையினால், பெண்களின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரத்தை ஆண்கள் எடுத்துக் கொண்டனர். இதனால் அவர்களின் சொந்த வாழ்க்கையைப் பற்றித் தீர்மானித்து முடிவு செய்வதில் பங்கு பற்றவோ, கருத்துப் பங்களிப்புச் செய்யவோ உள்ள உரிமை பெண்களுக்கு மறுக்கப்படுகிறது. தோட்டப் பகுதிகளிலுள்ள பெண்களுடன் சேர்ந்து பணிபுரியும் ஒருவர், இச்சமூகத்தினர் மத்தியில் ஆணாதிக்க நடைமுறை எவ்வளவு கடுமையாக செயல்படுகின்றது என்பதை அறிந்து கொள்ள முடியும்.தோட்டப் பகுதியைச் சேர்ந்த சமூகத்துக்கு குறிப்பாக பெண்களுக்கு எவ்வாறு நாமெல்லோருமாகச் சேர்ந்து உதவி புரியலாம் என்பதைப் பற்றி ஆலோசிப்பதற்காக, எமது பயிற்சியாளர்கள் ஒரு தோட்டத்தில் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

அங்கு நாம் சென்றபோது, அந்த அறையில் ஒரு மேசையும், நாங்கள் உட்காருவதற்காக சில கதிரைகளும் மேலதிகமாக சில கதிரைகளும் சுற்றிவரப் போடப்பட்டிருந்தன - அந்தக் கதிரைகளில் உடனே ஆண்கள் போய் உட்கார்ந்து கொண்டனர். அந்தக் கூட்டம் - பெண்களால் - குறிப்பாக பெண்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட தென்பதால், பின்புறமாக நின்றுக் கொண்டிருந்த பெண்களை உட்கார வைப்பதற்காக மேலதிக கதிரைகளைக் கொண்டுவருமாறு அப்பெண்களைக் கேட்டுக் கொண்டோம்.

மேலதிக் கதிரைகளும் கொண்டுவரப்பட்டன. அவற்றிலும் எஞ்சியிருந்த ஆண்கள் அமர்ந்து விட்டனர். நின்று கொண்டிருந்த பெண்களும் அங்குவந்து ஆண்களுடன் உட்காருவதில் தவறொன்றும் இல்லை என நாம் வாய்விட்டுச் சொல்லும் வரை, அப்பெண்கள் தயங்கியபடி நின்று கொண்டிருந்தனர். கூட்டத்தின்போது அங்கு சமூகமளித்திருந்த ஆண்களே கருத்துக்களைத் திணித்துக் கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அறைக்குள் மேலும் ஆண்கள் வந்தபோது, அவர்களுக்கு இடம்கொடுப்பதற்காக கதிரைகளில் அமர்ந்திருந்த பெண்கள் எழுந்து இடம் கொடுத்ததை அவதானித்தபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இதை அவர்கள் பயத்தினால் அல்லது மனமுவந்து செய்தார்களோ எனக்குத் தெரியாது தேநீர் பரிமாறப்பட்டபோது - அதையும் பெண்களே செய்தார்கள் - முதலில் ஆண்களுக்கு கொடுத்த பின்னரே, மீதி இருந்ததை பெண்களுக்கு பரிமாறினர் - இப்பெண்களில் சிலர் அப்போதுதான் தோட்டத்தில் வேலைமுடித்துவிட்டு, வீட்டுக்குப் போகாமல் களைப்போடு நேராக அக்கூட்டத்துக்கு வந்திருந்தனர்.

ஆண்கள் கலந்து கொள்ளாத கூட்டங்களில் மட்டுமே பெண்களிடமிருந்து சிறப்பான மறுமொழிகளை எம்மால் பெற்றுக் கொள்ளமுடிந்தது.

தமது அபிப்பிராயத்தை எவ்வாறான அபிப்பிராயத்தை கொண்டுள்ளவர்களாக அவர்கள் கருதப் படாவிட்டாலும் தெரிவிப்பதில் முழு நம்பிக்கை கொண்டவர்களாக அவர்கள் காணப்படாத போதிலும், கலந்துரையாடலிலும், தீர்மானங்களை எடுப்பதிலும், தூரிதமான அணுகு முறை அவர்களிடம் காணப்பட்டது.

பயிற்சிக் களத்தின்போது கூட, மனம்விட்டு சுதந்திரமானவகையில் கலந்துரையாடி செயல் பூர்வமான பங்ளிப்பை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு பெரிதும் உற்சாகமூட்ட வேண்டியிருந்தது. தாமாகவே நினைத்து சுயமாக அதனைச் செய்ய முடியாமல், மற்றவர்களின் ஏவல்களின்படி செயலாற்றும் வகையில் வாழ்க்கை முழுவதும் அவர்கள் பழக்கப்பட்டு விட்டதால், எதையாவது செய்வதற்கோ சொல்வதற்கோ அவர்கள் அடிக்கடி அவ்வாறான உத்தரவுகளுக்கு காத்திருப்பது போல காணப்பட்டனர். இதன்விளைவாக பெண்கள் பொறுப்புகளை ஏற்பதற்கு தகுதியில்லாதவர்கள் என அச்சமூகத்தில் நிலவும் நம்பிக்கையை இடை இடையே அவர்கள் வெளிக்காட்டிக் கொண்டனர்.

பயிற்சியாளர்களை, ஆண்களுக்குரிய குணாம்சங்களையும் பெண்களுக்குரிய தனித்துவமான குணாம்சங்களையும் விபரிக்குமாறு பயிற்சிக் களத்தின் செயற்பாடுகளின்போது கேட்கப்பட்டபோது, சொன்னபடிதான் செய்யவேண்டுமென்ற அவர்களின் நம்பிக்கைகள் வெளிப்பட்டன. இப்பயிற்சிப் பெண்கள், பெண்களைப் பற்றி - வதந்திகளைப் பரப்புவர்கள், நம்பத்தகாதவர்கள், ஆசைக்காட்டி ஏய்ப்பவர்கள், பலகீனமானவர்கள் என்றும், ஆண்களைப் பற்றி - தைரியமானவாகள், சக்திமிக்கவர்கள், குடிகாரர்கள் என்றும் முத்திரை குத்த முனைந்தனர். நல்லொழுக்கம் சார்ந்த சிறப்பியல்புகள் பாலின் தன்மைக்கு மட்டுமே உரியவை என ஒதுக்கிவைத்து விடுவதனால், தனிமனிதநிலையிலான தனிக்கூறுகள் பால்வகையில் பொதுவானவை என்ற தன்மையை ஒப்பக் கொள்வதில் தோல்வி ஏற்பட்டதாக அமையும். இது சமுகத்தால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு நம்பிக்கையே அல்லாமல் ஒருவரின் பாரபண்பில் தங்கியிருக்கும் இரசாயன சமதன்மையற்ற தொன்றல்ல.

ஆண் என்றால் என்ன? பெண் என்றால் என்ன? சொல்விளக்கங்கள் மாறுபாடான தோற்றங்களையே அளிக்கின்றன. உதாரணமாக - பெண் என்பவள் ஆணின் அழிவுக்கு ஆசைகாட்டி ஏமாற்றுபவள் எனக் கூறப்படுகிறாள். அதேவேளையில், அவளை குடும்பத்தைக் காப்பவள், மனித இனத்தை உற்பத்தி செய்பவள் என்றும் போற்றப்படுகின்றது. இந்து சமயப் போதனைகளுக்கும் இவ்வாறான நம்பிக்கைகளுக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது. பெண்களுக்கு 'கணவனேகண் கண்ட தெய்வம்' எனக் கூறி அவர்களை என்றும் தாழ்ந்த நிலையிலேயே இருக்க துணை போகின்ற அதே இந்து சமயம், பெண்களை வழிப்பாட்டுக்குரியவர்கள் என்றும் புகழ்ந்து துதிப்பாடுகின்றது. (நன்றி- பெண்ணின் குரல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலையக மக்களுக்கு கிடைத்த ஒரு நீண்ட கால அரசியல் மற்றும் தொழிற் சங்க சாணக்கியத் தலைமைத்துவம் அமரர் தொண்டமான். அவர் மறைந்து நான்காண்டுகளாகும் இவ்வேளையில் இம்மலரில் அவர் பதிவுகளை சிறிதே மீட்டிக் கொள்ளல்அவசியமாகின்றது.

# அமரர் தொண்டமான் பதிவுகள்

காலக்கிரமத்தில் இன்னொரு அம்சம் உருவெடுத்தது. அது தோட்டத் தொழிலாளரிடையே தொழில் சங்கங்கள் தோன்றியதாகும். அவைகளில் கைதேர்ந்த தொழிற் சங்க வாதியும், தற்சமயம் அமைச்சராயும் இருக்கின்ற தொண்டமான் தலைமையில் இயங்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரசே பிரதானமானதாகும். அவர் தோட்டப்பகுதியில் ஒரு சிறப்பு மிக்க தொழிற்சங்கத்தை உருவாக்கியுள்ளார். ஒவ்வொரு தோட்ட, மாவட்டப் பகுதிகளிலும் மாவட்ட பிரதநிதிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களை மேற்பார்வையிட தொழிலுறவு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். தொழிற்சங்க இயக்கங்கள் உருவான பிறகு நிர்வாகத்தினர் முன் போல தாங்கள் விரும்பியவாறு செயல்பட முடியவில்லை. செல்வாக்குமிக்க தொழில் சங்கங்களின் திட்டமிட்ட எதிர்ப்பு அவர்களை எதிர்நோக்கி நின்றது. தொழில் மன்றங்களுக்கு ஒவ்வொரு பிரச்சனையும் தொழில் சங்கங்கள் கொண்டு சென்றதால் நினைத்தமாதிரி நிர்வாகத்தினர் தொழிலாளர்களையோ, தோட்ட உத்தியோகஸ்தர்களையோ வேலை நீக்கம் செய்யமுடியவில்லை. தொழில் சங்கங்கள் எல்லாப்பிரச்சினைகளிலும் தலையிடுவதால் தோட்டத்தொழிற் துறை மெல்ல இனிச்சாகும் என்று துரைமார் கிளப்புகளில் அடிக்கடி பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் நிர்வாகத்தினரால் தொழிலாளர்கள் சுரண்டப்பட்டதாலேயே தொழிற்சங்கங்கள் உதயமாகின என்பதை அவர்கள் உணர்ந்துக் கொள்ளவில்லை.

அந்த 'வெள்ளைராஜாக்கள்' தாங்களே நீதவான்களாகவும், ஜூரிகளாவும், தண்டனையைச் செயல்படுத்துபவராகவும் இருந்த நிலை மாறிவிட்டது. ஒரு சின்னப் பிரச்சனைக்குக்கூட தொழிலாளர்கள் தொழிற்சங்கத்தை நாடி ஓடுவார்கள். ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் தங்களுக்கு சொந்தமான தொழில் சங்கங்களை வேறு உருவாக்கி விட்டார்கள். தொழிலாளர்களில் சிலர் அரசாங்க ஆதரவை எண்ணி பழைய சங்கங்களிலிருந்து விலகி அரசியல் பின்னணித் தொழில் சங்கங்களில் சேர்ந்தனர். ஆனால் அமைச்சர் தொண்டமான் தொழிற்சங்க ஆதிக்கத்திற்குள் இருந்த தொழிலாளர்கள் அதிகம் மாறவில்லை. ஏனெனில் இ.தொ.கா. திறமை வாய்ந்த, தொழில் சட்டங்களை நன்குணர்ந்த, எல்லா மட்டங்களிலும் பேச்சு வார்த்தை நடத்த அனுபவப்பட்ட தொழில்சங்க வாதிகளால் இயக்கப்படுவதொன்றாகும்.

அரசாங்க மாற்றத்தைப் பின்பற்றிச்சில தொழிலாளர்கள் பல சங்கங்களில் சேர்ந்திருந்தாலும், முக்கிய பிரச்சனைகளில் தொண்டமானுடைய முடிவையே பின்பற்றி நின்றனர். ஏனெனில் அதுவரை எந்த தலைவர்களிலும் பார்க்க தொண்டமான் இந்த மக்களுக்குச் செய்துள்ள சேவை மகத்தானது. என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இனியும் ஒரு தலைவர் அவர்களுக்கு அவரை விடச் சேவை செய்யத் தோன்றப் போவதில்லையென்றும் சொல்லலாம். அமைச்சர் தொண்டமான் தொழில்சங்கத்தை ஒரு தொழில் நிலையம் போல் செயலாற்றச் செய்துள்ளார். தன் மக்களுக்குச் செய்யும் நலன்களை மிகத் தந்திரமான முறையில் நுட்பமாகச் செய்வதில் வல்லவர். கல்வித்தகைமை ஏதும் இல்லாத ஆனால் கூர்மையான அறிவு நுட்பம் கொண்ட இந்த உயரமான கருமை நிறங்கொண்ட தொழில்சங்கவாதியைக் குறிப்பிடாமல் தோட்டத் துறைப்பற்றி எழுதும் எந்தப் புத்தகமும் பூரணத்துவம் பெற்றதாகாது!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை நன்கு வியங்கிக் கொண்டவர்களுக்கு அவரோடு பேச்சு வார்த்தை நடத்துவது மிக எளிதாகும். சொன்ன சொல் தவறாதவர்., தொழிலாளர் பக்கம் பிழை இருந்தால் அதை எடுத்துச் சொல்ல தயங்காதவர். ஸ்ரீமா பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் அவர் சிறிது ஒதுங்கி இருந்தது போல் செயல் பட்டார். ஒரு வேளை பாய்வதற்கு முன் பதுங்கும் புலி போல் இருந்தாரோ என்னவோ பின்னால் நடைபெற்ற சம்பவங்களை ஆராய்ந்தால் அந்த யூகம் சரியெனவே தோன்றுகிறது. பெரிய தோட்ட உரிமையாளரான அவருக்கு தோட்ட நிர்வாகிகளின் கஷ்டங்கள் நன்கு தெரியும். ஆனால் ஏதும் தோட்டப் பிரச்சனைகள் பற்றி பேச்சு வார்த்தைகளில் அந்த அம்சம் வெளிக்காட்டப்படாதது ஒரு வினோதம் தான்.

பேச்சு வார்த்தைகள் நடக்கும் பொழுது அவர் பிரச்சனைகளை அணுகும் முறையில் நிர்வாகஸ்தர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் நிலையிலே இருக்க வேண்டியிருக்கும். வேலை நிறுத்தத்தை ஒரு தோட்டத்தில் ஆரம்பித்தால் அந்த பிரச்சனை தீருவதற்கு தேவைப்பட்டால் அந்த மாவட்டம் முழுமையும் சிலவேளை மாநிலம் முழுதையுமே வேலை நிறுத்தத்தில் ஈடுபடுத்தி விடுவார். அதற்கு வசதியாகவே அவருடைய தொழிற்சங்கம் வியாபித்திருக்கின்றது. தொண்டமானுடைய இத்தகைய தாக்குதல்களை வெகு சில நிர்வாகஸ்தர்களே எதிர்த்து நிற்க துணிந்தனர். ஆனால் அத்தகைய போராட்டங்களுக்கூடேயும் எந்த நிர்வாகஸ்தரோடும் எந்த வித கல்மிஷமும், தனிக்குரோதமும் கொள்ளமாட்டார். உண்மையைச் சொல்லப் போனால் அத்தகைய தொழிற்சங்க விரோத மனப்பான்மை கொண்ட நிர்வாகஸ்தர்களோடு கிளப்பிலே அடிக்கடி அவர் கூடிக் குதூகலிப்பதைக் காணலாம். தொழிற்சங்க ரீதியில் எதிராளிகளான எத்தனையோ நிர்வாகஸ்தர்களுக்கு தனிப்பட்ட முறையில் உதவிகளைச் செய்திருக்கின்றார். அரசியலில் அவர் அவ்வப்போது கையாண்ட முறைகள் பற்றிய பலர் குறை கூறியிருக்கின்றனர். அவர் ஒரு பெரிய சந்தர்ப்பவாதியென்று பலர் சொல்ல கேட்டிருக்கின்றேன். யார் எதைச் சொன்னாலும் அவரின் நோக்கம் ஒன்றுதான். தன்னுடைய பலத்திற்கு அடித்தளமாக அமைந்துள்ள இந்தியாவம்சாவழித்தோட்டத் தொழிலாளரின் நலன் பாதுகாப்புத் தான் அவரின் குறிக்கோள் ஆகும். நாட்டின் தேசிய வாழ்வில் தன் மக்களையும் ஒன்றுபடுத்த வேண்டுமென்ற நெடு நாளைய அவாவைச் செயலாக்கும் சந்தர்ப்பம் இன்று அவருக்கு கிடைத்திருக்கின்றது. இந்த இரண்டு வேறுபட்ட இனத்தவர்களை, மாறுபட்ட இரு நாகரீகத்தைச் சேர்ந்த மக்களை ஐக்கியப்படுத்தும் அவரின் பணி அவ்வளவு எளிதான காரியமல்ல.

இந்த இந்தியத் தொழிலாளர்கள் பெரிய கங்காணி முறையினால் இந்நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டவர்கள். சிங்களத் தொழிலாளர்கள் தோட்டவேலை செய்ய அதிக ஆர்வம் காட்டாததால், இந்த பெரிய கங்காணி முறை மூலம் வறுமையில் வாடிய இந்தியத் தொழிலாளர்களை ஆங்கிலேயர்கள் இங்கு கொண்டு வந்தனர். அவர்களுக்கு அற்ப சம்பளமே கொடுத்து ஒரு அடிமைத் தொழிலாளர் வர்க்கத்தையே உருவாக்கிவிட்டனர். அதன் மூலம் ஒரு புது நாகரீகமே இங்கு கொண்டுவரப்பட்டது. அந்த மக்களின் ஒப்பற்ற ஒரே தலைவர் தான் அமைச்சர் தொண்டமான்.

இந்த மக்கள் இலங்கைப் பிரஜைகளாகவும் இல்லாமல், இந்தியப்பிரஜைகளாகவும் இல்லாமல் நாடற்ற நிலையிலேயே வைக்கப்பட்டிருந்தனர். 1964ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்த அடிப்படையில் பல தொழிலாளர்கள் தங்கள் விருப்பத்தின் பேரில் இந்தியாவிற்கு திருப்பி அனுப்பப்பட்டனர். இங்கேயே இருக்க விரும்பினோருக்கு நாட்டுரிமை கொடுப்பதென்பதே ஏற்பாடு.

தோட்டங்களிலே உள்ள இந்திய வம்சாவளித் தொழிலாளர்களில் பலருக்கு தோட்டங்களிலிருந்து பத்து மைலுக்கு அப்பாலுள்ள பட்டினங்கள் கூடத்தெரியாது. இவர்கள் கடலையே பார்த்ததில்லை. தங்களுடைய அற்ப சொற்ப மூட்டை முடிச்சுகளோடு இந்தியாவிற்கு போகும் பொழுதுதான் அந்த பரந்த கடலைக் காண்பார்கள். அவர்களுடைய வாழ்க்கையே தோட்டத்தில் தான். அவர்களுடைய உலகமே தோட்டங்கள்தான். சமீப காலம் வரை அவர்களுடைய தெய்வமும், ரட்சகரும் 'தொரை'தான். அந்த துரைமார்களில் பலர் தங்கள் நடவடிக்கைகளால் அந்த பரிசுத்தமான நம்பிக்கையைப் பாழடித்திருக்கின்றனர். ஆனால், இன்றும் சில துரைமார்களை அந்தத் தொழிலாளர்கள் 'நரகம் வரை கூடத் துணைப்போய்' திரும்பிவரத் தயாராக இருக்கின்றார்கள்.

இத்தகைய மக்களுக்குத் தான் அமைச்சர் தொண்டமான் ஒரு பெருந் துணைவனாக இருக்கின்றார். சரித்திர சந்தர்ப்பமும் ஜனாதிபதி ஆதரவும் சேர்ந்து அவருடைய அருஞ்சேவைக்கு ஆக்கம் அளிப்பதாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது. இந்த இரு இனங்களையும் அவர் இணைந்து வாழச் செய்யும் முயற்சியில் வெற்றி பெறுவாரேயானால் நாளைய சரித்திரம் அவரை நாட்டின் ஒப்பற்ற மைந்தருள் ஒருவராகவே கணிக்கச்செய்யும். தொண்டமானை அமைச்சரவைக்குள் ஒருவராக எடுத்தது மதி நுட்பம் மிகுந்த ஒரு பெரும் செயல் என்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன. ஒரு பெரிய அரசியல் ஞானி சிந்தித்து செயல்பட்ட ஒரு பெரும் செயல் இதுவென்பதே என் துணிபு.

அமைச்சர் தொண்டமான் தன் மக்களுக்காக இப்பொழுதே வீட்டு வசதி, சம்பள உயர்வு போன்ற இன்னும் பல சலுகைகளைப் பெற்றுத் தந்திருக்கின்றார். தோட்டங்களில் இன்னும் உற்பத்தி பெருக்கம் ஏற்படவில்லை. அதற்கு தொண்டமானோ, தொழிலாளர்கள் மட்டுமோ காரணமாக இருக்கமுடியாது. தோட்ட நிர்வாகமும் முக்கிய காரணஸ்தர்களே. தொழிலாளர்கள் தங்கள் உரிமைக்காகவும், சலுகைகளுக்காகவும் போராடும் அதே வேளையில் அவர்கள் தொழில் உற்பத்திப் பெருக்கத்திற்காகவும் பாடுபடும் கடமையுணர்ச்சியும் வளர எல்லாத்தரப்பினரும் இணைந்து செயல்பட வேண்டும். அமைச்சர் தொண்டமானின் முயற்சிகளிலேயே இந்நாட்டின் பொருளாதாரமும், இன ஒருமைப்பாடும் பெரும்பாலும் தங்கியிருக்கிறதென்பது தெளிவு.

**நுவரெலியா ஊவாப் பகுதி தோட்டங்களில் நிர்வாகஸ்தராகவும், ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைப் பிராந்தியப் பொறுப்பதிகாரியாகவும் அருந்த திரு. எம். எச் குணரட்ன என்பவர் எழுதியுள்ள 'தோட்ட ராஜ்யம்' (Plantation Raj) என்ற ஆங்கில நூலிலிருந்து எடுக்கப்பட்டது.**

**நன்றி- தொண்டமான் 69ம் பிறந்த நாள் சிறப்பு மலர்**

# வரையப்படாத வரலாறானார்

*இரா.பாலகிருஷ்ணன்,*
*கௌரவ உறுப்பினர் - நுவரெலியா மாநகர சபை.*



'வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்' என்பது வள்ளுவம்.
அதனால் தானே உன்னையும் தெய்வம்
என்று மக்கள் போற்றினர்.
நீ வாழ்ந்தாய் என்பதைவிட
வாழ வைத்தாய் என்பதே சரியானது
நீ உயர்ந்தாய் என்பதைவிட
உயர வைத்தாய் என்பதே பொருத்தமானது
மண்ணுக்குள் மாசியைத் தேடியது அன்று - இன்று
மண்ணின் மைந்தர் நாம் என்று மார்தட்டி
நிற்கும் மலையகமாக மாற்றியது நீ
கம்பளி இரண்டு ரூபாய்
கருப்புக் கம்பளி மூன்று ரூபாய் என்ற
கதையையெல்லாம் காற்றோடு காற்றாக்கியவன் நீ
தொண்டமானிஸம் என்பது மலையகத்தின் எழுதப்படாத
இலக்கியம்
வரையப்படாத வரலாற்றுக் காவியம்
முடி முலையில் போட்டுவிட முடியாத
மூலமந்திரம்

கஜானா காலியாகி விட்டால்
கடன் வாங்கியாவது
நிரப்பிவிடலாம்
கட்டிவிட்ட வீடு கடும் மழையில்
வீழ்ந்து விட்டால்
மற்றொரு வீடு மனம் வைத்தால்
கட்டிவிடலாம்
நட்டு வைத்த நந்தவனம்
பட்டு விட்டால் - நீரின்றி
எருவின்றி
கொட்டு மழை பொழிய
கூடையிலே
எருவுமிட மற்றுமொரு நந்தவனம்
மலர்ந்துவிட மாட்டாதோ
ஆனால் நீ
விட்டுச் சென்ற வாழ்க்கை முறைச்
சாதனைகளில் வேறெவரும்
நட்டமின்றி நிரப்பிடவே
நானறியேன் வழிமுறையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடாளுமன்றத்தில் ஒலித்த தனித்துவ குரல்!

**எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு எதிராக பாராளுமன்றத்தில் சில அரச தரப்பு அங்கத்தினர்கள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் 24-07-81ல் பேசியது. இது அமரர் கடைபிடித்த பாதையை தெளிவாக உணர்த்துமொன்றாகும்.**

**சபாநாயகர் அவர்களே !**

நேற்றும் இன்றும் ஏராளமான சரித்திர வியாக்கியானங்களைக் கேட்டுக்கொண்டிருந்தோம். நான் ஒரு சரித்திர ஆசிரியன் அல்ல. ஆகையால் அது பற்றிய சர்ச்சையில் இறங்க நான் முன்வரவில்லை. ஆனால் ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். நாம் தமிழராய் இருந்தாலும் சரி, சிங்களவராய் இருந்தாலும் சரி எல்லோரும் ஏதோ ஒரு காலத்தில் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் தான். இந்த பிரச்சனையைப் பற்றிப் பேசும் பொழுது கௌரவ அங்கத்தினர்களுக்கு அதிலும் குறிப்பாக இங்கு இருக்கும் யு. என். பி. அங்கத்தினர்களுக்கு நான் நினைவூட்ட விரும்புவது யாதெனில், சென்ற காலங்களில் தமிழ் மக்கள் பிரச்சினையை பிழையான முறையில் கையாண்டதினால் தான் இந்த தனித்தமிழ் நாட்டுக்கோரிக்கை எழுந்தது என்று ஐக்கிய தேசியக்கட்சி தேர்தல் பிரகடனப்படுத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது என்பதுதான். மேலும் அந்தப் பிரகடனத்தில் ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் மக்களுடைய பிரச்சனைகளைத் தீர்க்க கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்றும் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

அதன்படி மேதகு ஜனாதிபதி அவர்கள் இரு சமுகங்களிடையே நல்லுறவை வளர்க்கத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இது வரை நாட்டைப்பிரிக்காமல் பிரச்சனைகளுக்கு பரிகாரம் காணமுடியாது என்று எண்ணிய மக்கள், மேதகு ஜனாதிபதி அவர்களின் முயற்சிகளில் நம்பிக்கை வைத்து தமிழர் விடுதலை கூட்டணி இதுவரை எத்தகைய கொள்கைகளைப் பின்பற்றி வந்த போதிலும் இப்பொழுது மாவட்ட அபிவிருத்திச் சபை அமைப்பையேற்று தேர்தல்களிலும் பங்குப்பற்றினர். இந்த நிலையில் இத்தகைய ஒரு விவாதத்தை இங்கு நடத்துவது பொருந்துமா என்பதும் இந்த பிரச்சனையைத் தீர்ப்பதில் ஈடுபட்டிருக்கும் மேதகு ஜனாதிபதி அவர்களுக்கு இது உதவிகரமாக இருக்குமா என்பதும் எனக்கு விளங்கவில்லை.

தனி ஈழநாட்டுக் கொள்கையை உறுதியாகப் பின்பற்றுகிறவர்கள் என்றால், அவர்கள் தேர்தலில் போட்டியிட்டிருக்க வேண்டியில்லை. உண்மையென்னவெனில், தேர்தலில் போட்டியிட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள ஆறுமாவட்டங்களில் ஐந்து மாவட்ட அபிவிருத்தி சபைகளின் தலைவர் பதவியையும் அவர்கள் கைப்பற்றியுள்ளனர். இது எதைக்காட்டுகிறது என்றால், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினரின் இன்றைய செயன்முறையை மக்களும் ஏற்றுள்ளனர் என்பதாகும். இதன்மூலம் தமிழர்கள் அரசோடு இணைந்து செயற்படும் ஒரு மனப்பாங்கையும் வெளிப்படுத்தியுள்ளனர். நமது தேர்தல் பிரகடனத்தைச் செயலாக்குவதில் நாம் நேர்மையாக நடக்கவிரும்பினால், அதைச்சீர்குலைக்க நாம் முயல்கூடாது. நாங்கள் பெரும் பான்மையாக இருக்கின்றோம் அதனால் எதையும் செய்யலாம் என்ற மனோபாவம் பிழையானது. நான் அரசியலில் எதிர்கட்சி ஆளாக 40 வருடகாலம் இருந்திருக்கின்றேன். உங்களில் சிலர் அப்பொழுது பிறந்திருக்க மாட்டீர்கள். என்னுடைய செயலாக்க முறை ஒரே தன்மையானதாகத் தான் இது வரை இருந்து வந்துள்ளது. தொழில்சங்க ரீதியாயினும் சரி, அரசியலாயினும் சரி நான் எப்பொழுதும் எதிராளிகளை மதித்தே நடந்து வந்திருக்கிறேன். என் எதிராளிகளைக் கூட மனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோகச்செய்ய நான் விரும்புவதில்லை. யாரையும் நோகச் செய்வதால் எவ்வித பலனும் இல்லை

நேற்று காங்கேசன்துறை அந்தவர் திரு. அமிர்தலிங்கம் பற்றிச் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் எதிர்க்கட்சித் தலைவர் அல்லவென்றும், ஒரு அநாகரீகக் குழுவின் தலைவரென்றும் வர்ணிக்கப்பட்டார். சிங்களவர்ளைப் பற்றிப் பேசுகின்றோம். சிங்கள இரத்தம் பற்றிப் பேசுகின்றோம் இப்படியெல்லாம் பேச நாம் யார்? ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகளுக்கும், முயற்சிகளுக்கும் நாம் அதரவு கொடுப்பதென்றால், இம்மாதிரி துவேசப் பேச்சுகளில் நாம் ஈடுபடக்கூடாது. அவருடைய முயற்சிகளுக்கு நாம் முட்டுக்கட்டை இடக்கூடாது.

நான் ஒரு மந்திரியாக விரும்பியிருந்தால் 1947லேயே அவ்வாறு இருந்திருக்கலாம். எனக்கு அப்பொழுது அந்தப்பதவியைக் கொடுக்க முன்வந்தார்கள். நான் மறுத்து விட்டேன். இன்று மேதகு ஜனாதிபதியின் மீது பூரண நம்பிக்கை எனக்கு இருந்த படியால் தான் அப்பதவியை நான் ஏற்றுக்கொண்டேன். ஆகையால் உங்களோடு சேர்ந்து உழைக்க முன்வருபவர்களை நீங்கள் விரட்டி அடிக்கக்கூடாது. உங்கள் ஆதரவைத் தர வேண்டும். அதன் மூலமாக தமிழர்கள் உங்கள் மீது நம்பிக்கை கொள்ளச்செய்யவேண்டும்.

**டாக்டர் நெவில் பெர்ணாண்டோ:**-நாட்டைப் பிரிக்கக்கேட்பது நாட்டுக்குழைக்கும் நற்செயலா? என்று கனம் மந்திரியை கேட்க விரும்புகிறேன்.

**அமைச்சர் தொண்டமான்:**-நம்முடைய அரசியல் சாசன அடிப்படையில் அப்படி கேட்பதில் என்ன தவறு? அரசியல் சட்டமே மாற்றப்படவேண்டுமென்றால் அதற்கு வழியிருக்கிறதே.

டாக்டர் நெவில் பெர்ணாண்டோ:-நீங்கள் பிரிவினையை அங்கீகரிக்கிறீர்களா?

**அமைச்சர் தொண்டமான்:**-நம்முடைய அரசியல் சட்டம் அதற்கு இடம் கொடுக்கிறது. மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மையானால் அப்படியும் ஒரு திருத்தம் கொண்டு வரமுடியும்.

**டாக்டர் பெர்ணாண்டோ:**-அப்படிச் செய்ய நீங்கள் மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி பெற முடியுமா? இது வெட்டிப் பேச்சு.

**திரு. தொண்டமான்:**-இது வெட்டிப் பேச்சல்ல, விளங்காவிட்டால் அறிந்துக் கொள்ள முயலுங்கள். பூயை கண்ணை மூடிக்கொண்டு உலகமே இருண்டு விட்டது என்பது போல் பேசாதீர்கள். நம்முடைய அரசியல் சட்டப்படி இது ஒரே தேசம் என்பது சரி. ஆனால் அதுவும் திருத்தப்பட முடியும். இது ஒரு பொதுஜன வாக்கெடுப்பு மூலம் திருத்தப்படமுடியும். மூன்றில் இரண்டு பங்கு மக்கள் அவ்வாறு விரும்பினால் அதை யாராலும் தடுக்கமுடியாது. சிறுபான்மையோர் பிரச்சனை எல்லா நாடுகளிலும் உண்டு. இந்தியா இரு கூறுகளாக இந்தியா, பாக்கிஸ்தான் என்று பிரிந்தது. சில நாடுகளில் சமஸ்டி ஏற்பட்டது. ஆகையினால் நமது அரசியல் சட்டப்படி ஒரு திருத்தத்தின் மூலம் பிரிவினை கோர இடமுண்டு. திருத்தம் கொண்டுவருவது மக்களுக்கு அரசியல் சாசனப்படி அளிக்கப்பட்டிருக்கும் உரிமையாகும்

**சபாநாயகர்:**- இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்தவர் தெரிந்துக்கொள்ள விரும்புவது என்னவெனில், நீங்கள் பிரிவினையை அங்கீகரிக்கிறீர்களா என்பதுதான்.

**திரு. தொண்டமான்:**-அது பற்றி சந்தேகம் இருக்கிறதா? ஏன் அப்படி கேட்கிறார் என்று தெரிந்துக் கொள்ளலாமா?

**டாக்டர் நெவில் பெர்ணாண்டோ:**-தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி சார்பில் அவர் பேசுவதாக தெரிவதால் தான் அவ்வாறு கேட்கிறேன்.

**திரு. தொண்டமான்:**-இல்லை, நான் பேசுவது எந்தக்கட்சியின் சார்பிலும் இல்லை. மனிதாபிமானத்தின் சார்பாக, நீங்கள், சொல்லித்திரிகிறீர்களே அந்த ஜனநாயகத்தின் சார்பாக பேசுகிறேன்.

**டாக்டர் நெவில் பெர்ணாண்டோ:**-நாட்டைப்பிரிக்க வேண்டுமென்று கோருவதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை.

**அமைச்சர் தொண்டமான்:**-அப்படியில்லை, யாருக்கும் எதையும் கோர சட்டப்படி உரிமை உண்டு. அதை ஏற்றுக்கொள்வதும், நிராகரிப்பதும் நமது விருப்பத்தைப் பொறுத்தது.

**டாக்டர் நெவில் பெர்ணாண்டோ:**-ஸ்ரீ லங்கா ஒரே தேசம் என்று பிரகடனப்படுத்தும் அரசியல் கட்டத்தைப் பாதுகாப்பேன் என்று சத்தியப்பரமாணம் எடுத்துள்ள எதிர்க்கட்சி தலைவர், நாட்டுக்கு வெளியில் சென்று இலங்கை அரசாங்கத்தை அடக்கி ஒடுக்க படைகளை அனுப்புமாறு இந்திய அரசாங்கத்தை கோரியிருக்கிறார். அமெரிக்காவுக்குச் சென்று ஆயதங்கள் கோரியிருக்கிறார். இதற்கு இடம் கொடுக்க முடியுமா?

**திரு. தொண்டமான்:**- அதை அனுமதிக்கச் சொல்லி யாரும் சொல்லவில்லையே.

**திரு. யசப்பால ஹேரத்:**-இவர் நாட்டைப் பிரிக்கக் கோருகிறார். அதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம். அவரைத் தனிப்பட்ட முறையில் எதிர்க்கவில்லை. எதிர்க்கட்சி தலைவர் பதவி வகித்து வரும் அவரின் நடவடிக்கைகளைத் தான் கண்டிக்கின்றோம்.

**எஸ். தொண்டமான்:**- இந்தக் கோரிக்கையை இவர் இப்பொழுதுதான் முதல் முறையாக கிளப்புகிறாரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டாக்டர் நெவில் பெர்ணாண்டோ:-**எங்கோ ஓரிடத்தில் நாங்கள் ஆரம்பிக்க வேண்டித்தானே இருக்கிறது. இந்தியாவில் யாரும் இவ்வாறு பிரிவினை கோர முடியுமா?

**திரு . தொண்டமான்:-**அவ்வாறு கேட்பது குற்றம் என்று அங்கு சட்டம் இருக்கிறது. அவ்வாறு நீங்களும் முதலில் சட்டம் கொண்டு வரலாமே.

**டாக்டர் நெவில் பெர்ணாண்டோ:-**அதை நாங்கள் அரசாங்கத்திடம் வற்புறுத்திக் கொண்டு தான் வருகிறோம்.

**திரு. தொண்டமான்:-**ஆனால் நம்முடைய அரசியல் சாசனத்தில் அபிப்பிராயம் வெளியிடும் உரிமை சேர்க்கப்பட்டிருக்கும் நிலையில் அதை மறுக்க முற்படுகிறீர்கள். இப்படி இரு வழியிலும் நீங்கள் செயல்பட முடியாது.

**டாக்டர் நெவில் பெர்ணாண்டோ:-**நாம் வழங்கியிருப்பது காட்டுக் கழுதைகளின் சுதந்திரமல்ல.

**திரு.தொண்டமான்:-**இன்றைய நிலையில் அவர்கள் மேதகு ஜனாதிபதி அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் சட்ட வரம்பிற்குள் செயல்பட முயன்று வருகிறார்கள் நீங்களோ.....

**திரு. திசநாயக்க:-**தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி பற்றியோ, திராவிடர்கள் பற்றியோ தமிழ் பேசும் மக்களின் கலை கலாசாரம் பற்றியோ, மொழி மதம் பற்றியோ குறைபேசுவது இத் தீர்மானத்தின் நோக்கமல்ல. இம்மாதிரி தீர்மானமல்ல இது. அப்படியென்றால் இதைத் தோற்கடிக்கவே நாங்கள் பின்வாங்க மாட்டோம். எதிர்க்கட்சி தலைவரின் வெளிநாட்டுப் பேச்சுக்களையும், நடவடிக்கைகளையும் கண்டிக்கும் தீர்மானமே இது.

**திரு. தொண்டமான்:-**நான் இங்கு வற்புறுத்த விரும்புவது என்னவென்றால், இது விஷயத்தில் திரு. அமிர்தலிங்கம் அவர்களின் நடவடிக்கைகள் தேசத்துரோகமானவை அல்லவென்பதும், அரசியல் சாசனத்திற்கு விரோதமானவை அல்லவென்பதும் தான்.

**டாக்டர் நெவில் பெர்ணாண்டோ:-**இந்திய அரசாங்கம் இந்த நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடும் அளவுக்கு முட்டாள் தனமானது அல்ல.

**திரு. தொண்டமான்:-**தன் நிலையை விளக்க திரு. அமிர்தலிங்கம் முன்வந்தாரே, நீங்கள் தானே செவிமடுக்க மறுத்துவிட்டீர்கள்.

என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்ல விரும்புவது யாதெனில், இந்த நாட்டில் இரு சமுகங்கள் வாழ்ந்து வருகின்றனர். ஐ.தே.கட்சியின் தேர்தல் கால விஞ்ஞாபனத்திலேயே இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. தேர்தல் பிரச்சாரமும் அந்த அடிப்படையிலேயே செய்யப்பட்டது. இரு சமுகங்களுக்கிடையிலும் நல்லுறவை வளர்க்க வாக்களிக்கப்பட்ட நடவடிக்கைகள் கைக்கொள்ளப்படவில்லை. அதன் காரணமாக தனி நாட்டுக் கோரிக்கை வலுப்பெற்றது. ஜனாதிபதி ஜெயவர்த்தனா நல்லுறவை வளர்க்க அரும்பாடுபட்டு வருகிறார். அவரின் முயற்சியை முறியடிக்கும் வகையில் நாம் ஏதும் செய்தால், முந்தைய அரசுகள் செய்த பிழைகளையே நாமும் செய்தவர்களாவோம். இதை மனதில் கொள்ளுமாறு எல்லா கௌரவ அங்கத்தினர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஈழம் தனிநாடாக வேண்டுமென்ற கோரிக்கை எழுந்த போது, நானும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் தான் இருந்தேன். இந்த கோரிக்கையை நாங்கள் ஏற்க வில்லை என்பதை அப்பொழுதே தெளிவுபடுத்தினோம். அதனால் அந்தத் தீர்மானத்தில் எங்களின் ஆட்சேபனையும் சேர்த்துக் கொண்டார்கள். அதற்காக எங்களை அவர்கள் விலக்கவில்லை. அந்தச் சூழ்நிலையின் மனோபாவத்தோடு தான் இன்று நான் பேசுகிறேன். பாணந்துறை கௌரவ அங்கத்தினர் திரு டாக்டர் நெவில் பெர்ணாண்டோ அவர்கள் திரு. அமிர்தலிங்கம் அவர்களை சட்டவிரோதமான நடவடிக்கைகளில் இறங்கியவர் என்றும், தேசத்துரோகி என்றும் வர்ணித்துள்ளார். ஆனால் என்னுடைய அபிப்பிராயத்தின் படி அரசியல் சாசனத்திற்கு விரோதமாக அவர் எதுவும் செய்துவிடவில்லை என்று எண்ணுகிறேன். அரசியல் சாசனம் திருத்தப்பட்டாலன்றி இன்றைய நிலையில் ஒரே தேசம் என்ற விதியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் பாராளுமன்றத்தில் திருத்தப்பட்டு அந்தத் தீர்மானம் பொதுசனவாக்குக்கு விடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டால் மாற்றப்படமுடியும் என்பதேயாகும். ஆப்படியானால் நல்லறிவு படைத்த யாரும் வெளிநாட்டிலிருந்து ராணுவபலம் கொண்டு வருவது பற்றிச் சிந்திக்கமாட்டார்கள்.

**டாக்டர் நெவில் பெர்ணாண்டோ:-**அப்படியானால் ஏன் அவர்கள் உலகமெங்கிருந்தும் லட்சக்கணக்கான பணத்தைச் சேகரிக்கிறார்கள்?

**திரு. தொண்டமான்:-**நாங்கள் அஹிம்சையில் நம்பிக்கை கொண்டவர்கள் என்றும் சமாதானத்தை விரும்பும் மக்கள் என்றும் சொல்கிறார்களே.

**டாக்டர் நெவில் பெர்ணாண்டோ:-**ஆனால் பாக்கிஸ்தானோடு கண்டையிட்டு பங்களாதேசம் அமைத்தது போல இன்று இந்திய இராணுவத்தை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அழைக்கிறதே.

**திரு. தொண்டமான்:-** இந்த அரசின் ஒருமைப்பாட்டுக் கொள்கை நியாயமான முறையில் தோற்றமளிக்கும் இந்தச் சமயத்தில் - அதனால் சில நன்மைகள் கூட ஏற்பட்டிருக்கும் இச்சமயத்தில் இத்தகைய தீர்மானம் அவசியமற்றதும் சூழ்நிலையைக் கெடுக்கக்கூடியதுமாகும் என்பதே எனது அழுத்தமான அபிப்பிராயமாகும்.

**டாக்டர் நெவில் பெர்ணாண்டோ:-** ஆனால் எதிர்க்கட்சி தலைவர் இந்தியாவின் தலைவர்களோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துபேசியிருப்பதாகச் சொல்லியிருக்கிறாரே?

**திரு. தொண்டமான்:**-யார் அந்த தலைவர்கள்?

**டாக்டர் நெவில் பெர்ணாண்டோ:**- தமிழ் நாட்டுத் தலைவர்கள் தான். ஆனால் இவைகளையெல்லாம் நீங்கள் மூடிமறைக்கிறீர்கள்? அதிலிருந்து நீங்கள் எதைப் பார்க்கிறீர்கள்? அனைத்துலக ஐந்தாவது தமிழாராய்ச்சி மகாநாட்டின் பிரியாவிடைக் கூட்டத்தில் எதிர்க்கட்சி தலைவர் பேசும் போது, முஜிபுர் ரகுமான் தலைமையில் நடந்த பங்களாதேசப் போராட்டத்தில் இந்தியா உதவிசெய்தது. இதற்காக தமிழ்நாட்டு கட்சித் தலைவர்களையெல்லாம் கண்டு உதவி கேட்டிருக்கிறேன். தமிழர்களுக்கு ராவணன் பிறந்த தனித்தாயகம் வேண்டும்" - இவ்வாறு பேசியிருக்கிறார். இதைத்தான் நாங்கள் ஆட்சேபிக்கிறோம்.

**திரு. தொண்டமான்:**-இதில் எவ்வளவுத் தூரம் உண்மை இருக்கிறது என்பதை அறிய நீங்கள் அவருக்கு பேசச்சந்தர்ப்பம் அளித்திருக்கவேண்டும். நான் உங்கள் நேரத்தை அதிகமாக எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. நாம் ஒன்று பட்டு வாழ விரும்புகிறோம் என்றால் ஒருவருக்கொருவர் சகிப்புத் தன்மை காட்ட வேண்டும். நமது மதங்கள் அதைத்தான் போதிக்கின்றன. நாம் அந்த விஷயத்தை ஜனாதிபதி அவர்களின் பொறுப்பில் விட்டுவிட்டு அவர் கையைப் பலப்படுத்த வேண்டும். ஜனாதிபதி இன ஒருமைப்பாட்டைக் கொண்டு வருவதற்காக எடுக்கும் நடவடிக்கையில் நாம் நம்பிக்கை வைத்துள்ளோம். தேசிய ஒருமைப்பாடு தான் நமது குறிக்கோளாய் இருக்க வேண்டும். அந்த நோக்கத்தை முன்வைத்தே நமது செயல்கள் அமைய வேண்டும். அவர்கள் யாரும் இந்தச்சபையில் இல்லாத இவ்வேளையில் இந்தந் தீர்மானம் நிறைவேற்றப்படுவது பொருந்தாது.

**திரு புஞ்சிநிலமெ :**-அது அவர்கள் கடமை. அவர்கள் இங்கிருந்திருக்கவேண்டும்.

**திரு. தொண்டமான்:**-பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பகிஷ்கரிப்பது ஜனநாயகப் பண்புதான். அதை நாம் கவனத்தில் கொள்ளாவிடில் ஜனநாயகத்தில் நாம் நம்பிக்கை கொண்டவர்கள் என்று சொல்வதில் அர்த்தமில்லை.

**டாக்டர் நெவில் பெர்ணாண்டோ:**- நமது ஜனாதிபதி பல கொலைகளுக்கு உடந்தையாய் இருந்த கிரிமினல் குற்றவாளி என்றும், அவர் தேடப்படுகிறார் என்றும் லண்டனிலே சுவரொட்டிகள் ஒட்டப்படுவதை நீங்கள் சரியென்று சொல்கிறீர்களா?

**திரு. தொண்டமான்:**-நான் அதேகேள்வியைத் திருப்பி உங்களைக் கேட்கிறேன். உங்கள் பதில் என்ன?

**டாக்டர் நெவில் பெர்ணாண்டோ:**-இல்லை என்பதே என் பதில்.

**திரு. தொண்டமான்:**-நானும் அவ்வாறு பதில் சொல்லமாட்டேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**டாக்டர் நெவில் பெர்ணாண்டோ:**-ஏனெனில் நீங்கள் ஏன் எதிர்க்கட்சித் தலைவர் சார்பாக வாதாடுகிறீர்கள்? அமைச்சரவை அங்கத்தினராயிருக்கும் நீங்கள் இப்படி நினைப்பதாயின் உங்கள் செயல்கள் எனக்கு விளங்கவில்லை.

**திரு. தொண்டமான்:**-என்னைப் பொறுத்தவரையில் எனக்கு ஒரு குழப்பமும் இல்லை. இன்று நாமெல்லோரும் ஜனாதிபதி அவர்களின் தலைமையின் கீழ் இயங்குகிறோம். அவரை நாம் மதிக்கிறோம் என்றால், அவருடைய உணர்ச்சிக்கு நாம் மதிப்பளிக்கிறோம் என்றால் அவர் பிரச்சனைகளை அணுகுமுறைகளை நாம் அங்கீகரிக்கிறோம் என்றால் அவரை நாம் பின் பற்றி நிற்க வேண்டும்.

**திரு புஞ்சிநிலாமெ :**-இது ஒரு சுதந்திரமான உரையாடல் தான். மேதகு ஜயவர்த்தனா அவர்களையே நாங்கள் பின்பற்றி நிற்கிறோம்.

**திரு. தொண்டமான்:**-நான் அதிகமாக பேச விரும்பவில்லை. கௌரவ அங்கத்தினர்கள் நான் சொன்னவைகளின் உள்ளுணர்ச்சிகளைப் புரிந்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். நான் இங்கு யாரையும் ஆதரித்துப் பேசவில்லை. ஜனநாயகப் பண்பாடுகளை பாதுகாக்கும் நிலையிலேயே பேசினேன். சரியான அணுகுமுறை காப்பாற்றப்பட வேண்டுமென்பதே எனது குறிக்கோள். இந்த நாட்டிலே தேசிய ஒருமைப்பாடு வளர்க்கப்பட வேண்டும். அந்த உணர்ச்சியோடுதான் எல்லோரும் என் பேச்சை எடுத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் எல்லாம் உங்கள் அபிப்பிராயத்தை எடுத்துச்சொல்லியிருக்கின்ற இச்சமயத்தில் மாறுபட்ட என் அபிப்பிராயத்தையும் எடுத்துச் சொல்லவேண்டியது அவசியம் என்று நான் எண்ணியதாலேயே நான் இந்தவிவாதத்தில் தலையிட்டேன். என்னுடைய பேச்சுக்கு வேறுஎந்த உள்நோக்கமும் கற்பிக்காது பேசப்பட்ட உணர்ச்சியை புரிந்து கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# சகுனம்

***லயுகலை சீ.ராமச்சந்திரன்***

எண்ணற்ற எண்ணங்களால் குழம்பிப்போய் விடியவிடிய தூக்கமின்றி புரண்டு கொண்டிருந்த மருதாய்ப் பாட்டி அதிகாலையில் தன்னை மறந்து கண்ணயர்ந்து விட்டாள். சிறிது நேரத்தூக்கத்தில் ஏதோ துயரக் கனவு கண்டு துடித்தெழும்பி படுக்கையில் உட்கார்ந்து பரபரப்பாக விழித்தாள். கண்டது கனவு என்பதனை உணரவே சிறிது நேரமாயிற்று. கனவில் பயந்து போன பாட்டியின் உடல் முழுதும், அந்த அதிகாலைக் குளிரிலும் வியர்த்து விட்டிருந்தது. வியர்வையினால் நனைந்து ஆடை உடலோடு ஒட்டிப் பிசுபிசுத்தது. பாட்டி முந்தானையால் முகத்தையும் கழுத்தையும் அழுத்தித் துடைத்து கொண்டு கண்களைக் கசக்கி சுற்றிலும் பார்த்தாள். தான் படுத்திருந்த அந்தக் காம்பிராவின் சுவரில் மாட்டியிருந்த சிறிய குப்பிலாம்பு இன்னும் எரிந்து கொண்டிருந்தது. அந்த மங்கிய வெளிச்சத்தில், வீரம்மாளின் ஐந்து பிள்ளைகளும் படங்கு சாக்குகளில் கந்தலோடு கந்தலாகச் சுரண்டு தூங்கிக்கொண்டிருந்தனர். பக்கத்தில் வீரம்மாள் படுத்திருந்த படங்கு மடித்துப் போடப்பட்டிருந்தது. பாட்டி திரும்பி கதவைப் பார்த்தாள். கதவு ஒருக்களித்து சாத்தப்பட்டிருந்தது. வெளியே லைசன் கல்லில் சடசட சத்தம் கேட்டது. வீரம்மாள் எழுந்து வெளியே போயிருக்கிறாள். பாட்டி புரிந்து கொண்டாள். காலையில் காணும் கனவு பலிக்கும் என்பார்களே! பலித்து விடுமோ! ஆனால் அதை யாரிடமாவது சொல்லி விட்டால், அந்தக் கனவு பலிக்காது என்று சொல்வார்களே! கண்ட கனவு பலித்து விடக்கூடாது. வீரம்மாளிடம் உடனே சொல்லி விடவேண்டும் என்று தீர்மானித்தாள் மருதாயி பாட்டி. மாரியம்மன்

கோவில் திடலில் ஜீப்புகள் விரைவாக வந்து வந்த வேகத்தில் கிறீச்சிட்டு நிற்கின்றன. அந்த ஜீப்புகளிலிருந்து திபுதிபு வென்று குதித்திறங்கிய பொலிஸ்காரர்கள் ஓட்டமாக ஓடி வீடுவீடாகப்புகுந்து யாரையோ எதையோ தேடுகிறார்கள். அந்த தோட்டமே அல்லோல கல்லோலப் படுகிறது. சனங்கள் சிதறி ஓடுகிறார்கள். மருதாயி பாட்டி என்ன ஏது என்று புரியாமல் தட்டுத்தடுமாறி ஓடி வடிவேலுவின் வீட்டில் புகுந்து கதவைச்சாத்துகிறார். பின்னாலேயே ஓடிவந்த பொலிஸ்காரர்கள் பலமாகக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைகிறார்கள். பாட்டி நிலைகுலைந்து அலறுகிறாள். அவ்வளவுதான் பாட்டி திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். கண்டது கனவுதான் ! ஆனாலும் பாட்டியினால் உடம்பு இன்னும் நடுங்கிக்கொண்டிருந்தது. ஏன் இப்படி ஒரு கனவு? இந்த கனவின் பலன் என்ன? இந்த அறுபது வருட வாழ்வின் அநுபவங்கள், கண்டவை, கேட்டவை எல்லாமாகச் சேர்ந்து அந்தக் கனவுக்குப் பலன் கற்பிக்கத் தொடங்கின. போலீஸ் எம தூதர்கள்! யாரையோ தேடுகிறார்கள். சே! என்ன கஷ்டகாலம் யாருடைய ஓலை கிழியப் போகிறதோ! போதாக்குறைக்கு நேற்றிரவு நாய் ஒன்று அழுதது. நாய் அழுதால் சகுனம் சரியில்லையே! சிந்தனைகளால் கலவரமடைந்தாள் பாட்டி. நேற்று இரவு ஒன்பது பத்து மணியிருக்கும் நாலுரோட்டு சந்தி பக்கம் நாய் ஒன்று விட்டு விட்டு ஊளையிட்டுக் கொண்டிருந்தது. அந்தச் சத்தம் கேட்டதிலிருந்து பாட்டிக்குத் தூக்கம் பிடிக்கவில்லை! நாய் ஊளையிட்டதற்கு கூட பாட்டி ஒரு காரணம் கற்பித்துக்கொண்டாள். எம தூதர்கள் யாரையோ தேடுகிறார்கள். அது நாய்களின் கண்களுக்கு மட்டுந்தான் தெரியும்! அதனால் தான் நாய் அழுகிறது. இப்படி தோட்ட மக்களிடம் பரவலாக வேருன்றிப் போன ஒரு நம்பிக்கை. அதில் பாட்டிக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை. கடந்த வருடம் பாட்டியின் கணவர் உயிர்விடும் போது கூட நாலைந்து நாள்களாக நாய்கள் அழுது கொண்டிருந்தன. பாரிசவாதத்தால் கைகால்கள் முடங்கிப் போய் பல மாதங்களாக படுத்தபடுக்கையாகக் கிடந்த கிழவர் கண்முடிவிட்டார். இது பாட்டியின் நம்பிக்கையை வலுப்படுத்தியிருந்தது. அவரின் பிரிவு பாட்டியை வெகுவாகப் பாதித்துவிட்டது. எதுவும் இல்லாத அவர்கள் ஒருவருக்கு ஒருவர் துணையாக வாழ்ந்தார்கள். கல்யாணத்தில் அவளை கைப்பிடித்த துணைவர் கடைசிக்காலத்தில் அவளை அநாதரவாக விட்டு விட்டுப்போய்விட்டார். அவர் இருந்த வரையில் பாட்டி சுகபோகமாக வாழ்ந்ததாகக் கூறமுடியாவிட்டாலும், அவள் அநாதையாக இருக்கவில்லை. உண்பது உண்டு உறங்குவது, விடிந்தால் மீண்டும் தொழிலுக்குப்போவது என்று செக்கு மாடாக உழன்று காலம் கழிந்து விட்டது. அவர் பாரிசவாதம் தாக்கி படுக்கையில் விழுவதற்கு முன்பே, அவர்களின் ஒரே ஒரு சேமிப்பான ஊழியர் சேமலாபநிதி, சேவை கால உதவித் தொகை எல்லாவற்றையும் முற்று முழுதுமாகக் கரைத்து விட்டுதான் கிழவர் ஓய்ந்தார். அவர் படுக்கையில் விழ்ந்த பிறகு அவள் தனியொருத்தியாக படாத பாடுபட்டாள்.

படுக்கையோடு போய்விடும் அசுத்தங்களைக் கழுவி துப்புரவு செய்யவும், அவரை குளிப்பாட்டி ஆடைகளைக் கழுவி காயவைத்து அணிவிக்கவும், அவரின் தேவைகளை முடிந்தவரையில் தேடிக்கொடுக்கவும் பாட்டி தனியொருத்தியாக நின்று பட்ட கஷ்டங்கள் ஏராளம். கிழவருக்கும் அவளுக்குமாக இரண்டு பேர் உயிர்வாழ அரைவயிற்றுக் கஞ்சிக்காவது அவள் உழைத்தாக வேண்டிய நிர்ப்பந்தம் வேறு. அப்பப்பா! இப்படி ஒரு காலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் என்று பாட்டி நினைத்து கூட பார்த்திருக்கமாட்டாள். கிழவர் படுக்கையில் விழுந்த பிறகுதான் அவர்களின் ஈ.பி.எவ். செக்குகளைப்போட்ட சேமிப்புப் புத்தகங்களைத் தேடி எடுத்துக்கொண்டு போய், தெரிந்தவர்களிடம் கொடுத்து பணம் எடுத்து கொடுக்கச் சொல்லி கேட்ட போதுதான் தெரிந்தது, அந்த புத்தகங்களில் எக்கவுண்ட் நம்பர் மட்டுந்தான் இருக்கிறது என்று கிழவரை உருட்டிக் கேட்டபோது அவரால் துருதுருவென்று விழிப்பதைத் தவிர வாய் திறந்து எதுவும் சொல்ல முடியவில்லை. வாராவாரம் டவுனுக்கு போய் சாப்பாட்டுச் சாமான்களுடன் இறைச்சி, மீன், கருவாடு என்று வாய்க்கு ருசியாக வாங்கி வந்து போட்டார்தான். அதற்காக எல்லா பணமுமா தீர்ந்து போய்விட்டது? பாட்டி கிழவரை திட்டி தீர்த்தாள்.

திட்டி என்ன பயன்? அவர்களின் பணத்திற்கு என்ன நடந்தது? தோட்ட நிர்வாகத்திடமிருந்து ஈ.பி.எப். காசோலையைப் பெற்றுக்கொண்டபோது, ஐந்து இலக்கங்கள் கொண்ட ஒரு கணிசமான தொகை இருப்பதை அறிந்து, பிள்ளை குட்டிகள் இல்லாத தங்களின் வாழ்நாள் முழுதிற்கும், இதுபோதுமானது என்றுதான் நினைத்தார்கள். முதலில் ஒரு சிறுதொகைப் பணம் கொடுத்து சேமிப்பு கணக்கு ஒன்று தொடங்கி அதில் செக்கைப் போட்டு அது ரிலீஸாகி வந்த பிறகுதான் பணம் மாற்றி எடுக்கலாம் என்ற விதிமுறையை அறிந்த போது எழுத படிக்கத்தெரியாத கைநாட்டுக் கிழவர் காசிலிங்கத்தின் உதவியை நாடினார். காசிலிங்கம் அங்கே சிறிய கடைபோட்டு சில்லறை வியாபாரம் செய்து கொண்டிருந்தான். இவர் மட்டுமல்ல, அந்தத் தோட்டத்தில் பல பேர் காசியின் உதவியை நாடுவதுண்டு. தட்டுப் பாடான நேரங்களில் வெற்றிலை, பாக்கு, பீடி, சுருட்டு இன்னும் உணவுப்பொருள்கள் இப்படி, விலை சற்று கூடுதலானாலும் பரவாயில்லை என்று கடனுக்கு வாங்குவது காசியின் கடையில்தான். அதுமட்டுமல்ல! அவசரமாகக் காசு தேவைப்படும் நேரங்களில் ஏதாவது தங்க நகைகள், அதுவும் இல்லாவிட்டால் ரேடியோ, கடிகாரம், இப்படி ஏதாவது ஒரு பொருளை அடகு வைத்து, காசு வாங்குவதற்கு காசியை விட்டால் வேறு ஆள் அங்கே இல்லை! தன் உதவியை நாடி வருகிறவர்களிடம் ரொம்பவும் கிராக்கிப் பண்ணி ஏசிப் பேசி விட்டு ஏதோ தருமத்திற்குக் கொடுப்பதைப் போல கொடுத்து அநியாய வட்டி போட்டு காசு கறப்பது காசிக்குக் கைவந்த கலை. என்ன இருந்தாலும் அவசரத்திற்கு காசியிடம் கையேந்த வேண்டிய நிலையில் இருப்பவர்களுக்கு காசிலிங்கம் கர்ணனின் மறு அவதாரம் தான். கிழவர் கூட சேமிப்புக் கணக்குத் தொடங்குவதற்கும், அதிலிருந்து பணம் எடுப்பதற்கும் முழுமையாகக் காசிலிங்கத்தைதான் நம்பியிருந்தார். குடியிலும் காசியின் பிடியிலும் சிக்கி, மயக்கத்தில் பாதிநாளும் தூக்கத்தில் பாதிநாளுமாகக் காலம் கழிந்தபோது, கைநாட்டு போடுவதிலேயே சேமிப்பு கரைந்துகொண்டு போவதை அவர் அறியவில்லை! இனி யாரைத் திட்டித்தான் என்ன பயன்? எல்லாம் தன் தலைவிதி என்று பாட்டி கண்ணீரை வழித்தெறிந்துவிட்டு, கொழுந்துக் கூடையை தலையில் மாட்டிக் கொண்டு கெசுவல் வேலைக்குப் போகத் தொடங்கிவிட்டாள். மருதாயி பாட்டி உழைத்து கிழவரையும் பராமரித்துக் கொண்டு வந்த போது ஏற்படாத துன்பத்தை, அவர் பிரிந்து போன போது உணர ஆரம்பித்தாள். ஆதரவற்ற நிலையில், தனிமையை உணர்ந்து அவளின், கால்கள் எல்லாம் ஓய்ந்து போயின. பாட்டி அநாதையாகக் கலங்கி நின்ற போது ஆதரவுகாட்டி அரவணைத்தவன் வடிவேலு!

வடிவேலு அந்த தோட்டத்தில் ஒரு தொழிலாளி- வசதிபடைத்தவன் இல்லை. பிள்ளைக்குட்டிக்காரன், இருந்தாலும் இரக்க சுபாவம் உள்ளவன். அவனது குடும்பத்திற்கும் பத்தடி சதுர பற்றாக்குறை காம்பிராதான். என்றாலும் அவன் இதயத்தில் விசாலமான இடம் இருந்ததால் தன் வீட்டில் பாட்டிக்கும் ஓர் இடம் கொடுத்தான். 'பாட்டி! நான் இருக்கும் போது அநாதை இல்லை. கவலையை விடு! என் ஐந்து புள்ளைகளோட நீ ஆறாவதா இருந்திட்டுப் போ இருக்கிறதை பகிர்ந்து சாப்புடுவோம்!' என்று ஆறுதல் கூறி தன் குடும்பத்தோடு சேர்த்துக் கொண்டான். வடிவேலுவின் மனைவி வீரம்மாள் மட்டுமென்ன இரக்க மற்றவளா? கணவனின் கருத்துக்கு மாறுபட்டவளில்லை. 'பாட்டி நீ புள்ளைகளைப் பாத்துகிட்டு வீட்டோட இருந்துக்க! நாங்க ஒழைச்சி ஒன்னையும் புள்ளைங்களையும் காப்பாத்துவோம்' என்று அடைக்கலம் கொடுத்தாள். அன்றிலிருந்து மருதாயி பாட்டியும் வடிவேலுவின் குடும்பத்தோடு தன்னை ஐக்கியபடுத்திக்கொண்டாள். பிள்ளைகளைப் பார்த்துக் கொள்வதோடு தன்னால் முடிந்த உதவி ஒத்தாசை வேலைகளையும் செய்து கொடுத்துக் கொண்டிருந்தாள். அந்த நேரத்தில்தான் அந்த நல்ல குடும்பத்திற்குச் சோதனைகாலம் ஆரம்பமாகியது. அதுதான் பாட்டியின் பெருங்கவலை. துரதிருஷ்டம் பிடித்த நான் வந்து சேர்ந்த பிறகுதான் அவர்களுக்கு இப்படி ஒரு கஷ்டகாலம் தொடங்கிவிட்டது என்று தன்னையே நொந்து கொண்டாள் பாட்டி. முதலில் அடிக்கடி வயிற்றுவலியால் அவதிப்பட்டுக்கொண்டிருந்த வடிவேலு, வரவர ஒரு பிடி சோறு சாப்பிட்டாலும் வயிற்றுவலியால் துடிக்க ஆரம்பித்தான். ஏதேதோ கைவைத்தியங்கள் செய்து பார்த்த பயன் இல்லாமல் போகவே தோட்டத்து ஆஸ்பத்திரியில் மருந்து வாங்கினார்கள். பயனல்லை. உடம்பு இளைத்து எலும்பும் தோலுமாகி விட்டான். வடிவேலு தொடர்ந்து வேலைக்குப் போக முடியவில்லை. வருமானம் குறைந்தது. வறுமை வாட்டத்தொடங்கியது. அக்கம் பக்கத்திலும் அறிந்தவர் தெரிந்தவர்களிடமும் அரிசி, மாவு கூட கடன் வாங்க வேண்டிய நிலைமை வந்து விட்ட போது வைத்தியச் செலவுக்கு எங்கே போவார்கள்? நிலைமை மிக மோசமான பிறகுதான் தோட்டத்து லொறியில் ஏற்றிக் கொண்டு போய் ஏழு எட்டு மைல் தொலைவில் உள்ள அரசாங்க அஸ்பத்திரியில் சேர்த்து விட்டு வந்தார்கள். அங்கே வடிவேலுவிற்கு 'அப்பெண்டிஸ்நோய்' இருப்பது தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபரேஸன் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் உடம்பில் இரத்தம் இல்லை முதலில் இரத்தம் கொடுக்க வேண்டும். அதன் பிறகுதான் ஆபரேஷன் செய்யலாம். இதே குருப் இரத்தம் வேண்டும். இரத்த தானம் செய்ய ஆட்களை கூட்டிக் கொண்டுவா! என்று டாக்டர் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். வீட்டுக்குப்போய் அக்கம்பக்கத்திலுள்ளவர்களிடம் விசயத்தைக் சொன்ன போது சிலர் இரத்த தானம் செய்ய முன்வந்தனர். என்றாலும் அவரகளின் இரத்தம் வடிவேலுவிற்கு ஒத்து வராதது துரதிருஷ்டம்தான். இப்படியான ஒரு சோதனை காலத்தில் தான் நேற்றிரவு நாய் அழுதது. கெட்டகனவு வேறு! நாய் அழுதால் நடக்கக்கூடாதது நடந்துவிடும் என்பது மருதாயி பாட்டியின் நம்பிக்கை. நாய் மட்டுமா அழுதது! இல்லை கோட்டானும் அலறியது! அந்த லயத்து கோடிப் பக்கத்தலே சற்றுத் தூரத்தில் மாமுனி கோவில் ஒன்று இருக்கிறது! கோவில் என்றால் கட்டிடங்கள் எதுவும் இல்லை. ஆலமரத்தடியில் கூர்மையான கல் ஒன்றை நட்டுவைத்து பக்கத்தில் ஒரு திரி சூலத்தையும் நட்டு வைத்திருக்கிறார்கள். அந்த கற்சிலைக்கு எப்போதும் ஒரு சிகப்புத்துண்டு கட்டி வைத்திருப்பார்கள். எப்போதாவது நேர்த்திக் கடனுக்கு ஆடு, கோழி வெட்டி பூஜை செய்வார்கள். மற்றபடி எப்போதும் பாழைடைந்து கிடக்கும் கோவில் அது! மிகப் பழைமையான கோவிலுங்கூட! நேற்றிரவு அந்த மாமுனி கோவில் ஆலமரத்திலிருந்து கோட்டான் ஒன்று விட்டு விட்டு அலறிக்கொண்டிருந்தது. அதையும் பாட்டி கேட்ட கொண்டுதான் இருந்தாள். அத்தோடு நாய் அழுதது! கெட்ட கனவு வேறு! இவை எல்லாம் எதோ நடக்கக் கூடாத ஒன்று நடக்கப்போவதின் அறிகுறிகள் தானா? பாட்டி தனது சிந்தனையை உதறித் தள்ளிவிட்டு தன் சேலையையும் உதறிச் சுற்றிக் கொண்டு நரைமுடியை கோதி முடிந்து கொண்டு எழுந்து வெளியே வந்தாள். பத்தடி காம்பிறாவிற்கு ஒரு சிறுவராண்டா, அதுதான் அவர்களின் சமையல் அறை, அந்த சமையல் அறையில் விரம்மாள் அடுப்பு பற்றவைத்துக் கொண்டிருந்தாள். மருதாயி பாட்டியும் அங்கே போய் அந்த அடுப்படியில் உட்கார்ந்தாள். 'ஏம் பாட்டி இவ்வளவு வெள்ளனா எழுந்து வந்திட்ட?' என்றாள். வீரம்மாள். 'தூக்கம் புடிக்கல புள்ள! ராவெல்லாம் ஓரே அரட்டலும் பொரட்டலுமா போச்சி! ' ஏன்றாள் பாட்டி. தூக்கம் வராததற்குக் காரணம், நேற்றிரவு கேட்ட நாயின் ஊளை, கோட்டானின் அலறல், கண்ட கெட்ட கனவு இவை எல்லாவற்றையும் சொல்லி விட நினைத்த பாட்டி இவைகளைக் கேட்டாள் வீரம்மாள் என்ன நினைப்பாள், எப்படி கவலைப்படுவாள் என்று யோசித்து எதையுமே சொல்லாமல் தன் மனதுக்குள் மறைத்து வைத்துக் கொண்டு மறுகினாள் மருதாயி பாட்டி! வீரம்மாள் அடுப்பை எரியவிட்டு கேத்தலில் தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்தாள். 'ஏம்மா, இன்னக்கி ஆஸ்பத்திரிக்கு போறயா? 'பாட்டி கேட்டாள். 'போவனுந்தான் பாட்டி! ஆனா சல்லிதான் இல்லை! அட்வான்ஸ் குடுக்க இன்னும் நாலஞ்சி நாள் இருக்கு யார் கிட்டத்தான் சல்லி இருக்கும்? நானும் யார் யாருக்கிடேயோ கேட்டுப்பாத்திட்டேன். எங்கேயும், கெடைக்கல அதுதான் கவலையா இருக்கு!' வீரம்மாளின் குரல் துயரம் தோய்ந்து ஒலித்தது. அவளின் கவலையை தானும் பகிர்ந்து கொண்டு என்ன செய்வது என்று புரியாமல் கலங்கினாள் பாட்டி.

பொழுது புலர்ந்து விட்டது. பீலிக்கரையில் பெண்களின் கூட்டம் கூடிவிட்டது போலிருக்கிறது சத்தங்கள் கேட்டன. வீரம்மாளும் குடத்தையும் சட்டி பானைகளையும் எடுத்து கொண்டு பீலிக்குப் போய்விட்டாள். பாட்டி சாயத்தண்ணி ஊத்திக்குடித்து விட்டு மீண்டும் போய் படுக்கையில் காலை நீட்டி உட்கார்ந்தாள். வடிவேலுவிற்கு ஏதாவது ஆகிவிட்டால், இந்த வீரம்மாளும், இவளது ஐந்து பிள்ளைகளும் என்ன செய்வார்கள்? நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் பதறியது மருதாயி பாட்டிக்கு. பதறி பயன் என்ன? ஏதோ நடக்கத்தான் போகிறது அதனால்தான் நாய் அழுதது. கோட்டான் அலறியது. கெட்ட கனவு வந்தது. வடிவேலுதான் சுகமில்லாமல் இருக்கிறான். வேறு யாராவது? யாரும் இல்லை. பாட்டி நினைத்துப் பார்க்கிறாள். மேட்டு லயத்தில் யாராவது சுகமில்லாமல் இருக்கிறார்களா? காட்டு லயத்தில்?கோவில் லயத்தில்? குவாட்டர்ஸ்களில்? புது லயத்தில்? பழைய லயத்தில்? பதினைந்து லைன்களை வடுவீடாக மனத்தால் அலசி ஆராய்கிறாள் மருதாயிப்பாட்டி. இல்லை! பணிய லயத்தில் தொங்கல் வீட்டு முருகையா ஆஸ்துமாகாரர். ஒரு வாரமாக இருமிக் கொண்டிருந்தவர் நேற்று வேலைக்குப் போய்விட்டார். வெறிநாய் கடித்து தொப்புளைக் சுற்றி ஊசி போட்டுக் கொண்டு வந்த தபால்கார ரங்கனும் வேலைக்குப் போய்விட்டான். படுத்த படுக்கையாக கிடந்த ஆயம்மா கிழவியும் எழுந்து நடமாடத் தொடங்கி விட்டார். வேறு யாரும் இல்லை. வடிவேலுதான் மிக மோசமாக ஆஸ்பத்திரியில் கிடக்கிறான். பாட்டியின் கண்கள் கலங்கின! பாத்திரங்களைக் கழுவி தண்ணீர் பிடித்துக் கொண்டு வந்த வீரம்மாள் பாட்டியைக் கூப்பிட்டாள். பாட்டி எழுந்து அடுப்பங்கரைக்கு போன போது, பலகை கட்டையை பாட்டியின் பக்கம் நகர்த்தி வைத்து 'உட்காரு பாட்டி' 'யாம் புள்ள? எதுக்கு கூப்புட்ட?' என்று கேட்டுக் கொண்டே பலகைக் கட்டையில் உட்கார்ந்தாள் பாட்டி! 'எனக்கு ஒரு உதவி செய்யிரயா பாட்டி' மெதுவாக கேட்டால் வீரம்மா. 'என்னா புள்ள அப்படி கேக்குற? என்னால முடிஞ்சத செய்யிறன்! என்னா செய்யனும் சொல்லு!' என்று அவசரமாக கேட்டாள் பாட்டி.'கொஞ்சம் முந்தி பீலிக்கு போயிருந்தேனில்லை, அப்ப அஞ்சல அக்கா ஒரு சங்கதி சொன்னாங்க! டாக்டருக்கு பணம் குடுத்தா, அவுங்களே ரத்தம் குடுத்து ஒப்ரேஷன் பண்ணுவாங்களாம்! அஞ்சல அக்காவோட மகனுக்குக்கூட அப்பிடித்தான் செஞ்சாங்களாம்!' 'எவ்வளவு குடுக்கனுமோ!' 'நானூறு ஐநாறு ருபா குடுக்கனுமாம்!' 'அடேயப்பா அவ்வளவு காசுக்கு எங்கேபோறது?' பாட்டி வாய் பிளந்தாள். 'அதைச் சொல்லத்தான் பாட்டி கூப்பிட்டேன்! எப்படியும் காசு தேடி கொடுத்து அவரை காப்பாத்தனும். நீ முகத்த கழுவிக்கிட்டு காசி கடைக்குப் போயிட்டு வா! நான் ஒரு சாமான் தர்றேன் அதைக் குடுத்து எழுநூறு ருவா வாங்கிக்கிட்டு வா, வார மாசம் போனஸ் குடுப்பாங்க, குடுத்ததும் வட்டியோட திருப்பிக் குடுத்துட்டு வாங்கிறேன்னு சொல்லு!' 'அவங்ககிட்டயா போகனும்!' பாட்டி பெரு மூச்சுவிட்டாள்! 'வேற வழியில்ல பாட்டி! நான் போயி கேட்கலாம் வெக்கமா இருக்கு! இந்த சாமான் வேணாம். சல்லி தர்றேன். படுத்துக்க வாரியா என்னுவான்!' 'பாவிப்பய பாடையில போறவன்! அப்பிடியும் சொல்லுவான். சரி புள்ள போயிட்டு வாறன். என்னா சாமான்?' என்றாள் பாட்டி. வீரம்மாள் தயாங்கித் தயங்கி அந்தப் பொருளை எடுத்துக் காட்டிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது பாட்டி பதறிப் போனாள். 'ஐயோ என்னா புள்ள இதையா கழட்ட போற?' என்று வாய்பிளந்த பாட்டிக்கு ஓவென்று அழவேண்டும் போலிருந்தது. கஷ்டபட்டு அழுகையை அடக்கிக் கொண்டாலும் கண்ணீரை கட்டுப்படுத்த முடியவில்லை.

சகுனம் சரியில்லை! வடிவேலுவின் காலம் முடியப் போகிறது! அதனால்தான் அவன் போட்ட தாலியைக் கழட்ட நினைக்கிறாள்! எண்ணிக் கொண்டாள் பாட்டி. பாட்டியின் தடுமாற்றத்தின் காரணத்தை அறியாத வீரம்மாள் 'அவர் போட்ட தாலியை அவருக்காக கழட்டித் தர்றேன். அவர் பொழச்சி வந்தால் போதும்' தீர்க்கமாக சொல்லியபடி தாலிக்கயிற்றைக் கழற்றி முடிச்சுகளை அவித்து அந்தத் தங்கத் தாலியைத் தனியாக எடுத்து பாட்டியிடம் நீட்டினாள் வீரம்மாள். வேறுவழியில்லாததால் அதைக் கைநீட்டி வாங்கினாள். பாட்டி! அப்படி வாங்கும்போது பாட்டியின் கைகள் நடுங்குவதை வீரம்மாள் கவனிக்கத் தவறவில்லை. பாட்டியின் கண்கள் கலங்கின, கைகள் நடுங்கின நெஞ்சமோ தீ பற்றி எரிவதைப்போல இருந்தது. இருந்தும் பாட்டி வீரம்மாளுக்கு ஆறுதல் கூறினாள். 'கயித்தில் ஒரு மஞ்சள் துண்டை கட்டி போட்டுக்க புள்ள. வடிவேலுக்கு ஏதும் வராது. அந்த மாரி மகமாயி காப்பாத்துவா!' உதடு வார்த்தைகளை உதிர்த்தாலும் உள்ளத்தில் அமைதியில்லை பாட்டிக்கு. நாய் அழுதது. கோட்டான் அலறியது. கெட்டகனவு! எல்லாம் பொய்யாகிப் போய்விடுமா? பொய்யாகிப் போய்விட்டால் நல்லதுதான். பாட்டி முகம் கழுவி சாமி கும்பிட்டு நெற்றியில் திருநீற்றை இட்டுக்கொண்டு காசியின் கடையை நோக்கிப் போனாள். காசி மட்டும் தனியாக இருக்கும் நேரம் பார்த்து நெருங்கிச்சென்று வந்த விசயத்தை ரகசியமாக சொன்னாள். தன் முந்தனையில் முடிந்து கொண்டு சென்ற பொருளை அவிழ்த்து அவனிடம் நீட்டினாள். அதைக் கண்டு காசிலிங்கம் கூட மிகவும் அனுதாபப்பட்டான். வடிவேலுவின் நிலைமை பற்றி மிகவும் அக்கறையாக விசாரித்தான். இருந்தாலும் கேட்டதும் பணத்தைத் தூக்கிக் கொடுத்துவிடும் சுபாவம் அவனுக்கில்லை. வழமைபோல் தயங்கித் தயங்கித் ஒருவாறு ஐநூறு ரூபாய் பொறுக்கிக் கொடுத்தான். 'இப்போதைக்கு இவ்வளவுதான் இருக்கு. இதை வச்சி செலவை பாருங்க! பிறகு பாப்போம்!' என்று பாட்டியை அனுப்பிவைத்தான். பாட்டி அந்தப் பணத்தை வீரம்மாளிடம் கொடுத்து காசி சொன்னதை சொன்னாள். பொழுது சாயும் நேரத்தில் ஆயாசமாகத் திரும்பி வந்தாள் வீரம்மாள். அவள் வீட்டுக்கு வந்ததும் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் திபுதிபு வென வந்து கூடிவிட்டார்கள். ஆளுக்கு ஆள் வடிவேலுவைப் பற்றி விசாரித்தார்கள். எல்லோருக்கும் பொறுமையாக பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். எல்லோரும் போகட்டும் என்று காத்துக்கொண்டிருந்தாள் பாட்டி. சிறிது நேரத்தில் ஆளுக்கு ஓர் ஆறுதல் வார்த்தையைக் கூறிவிட்டு எல்லோரும் போய்விட்டார்கள். பாட்டி வீரம்மாளுக்கு தேநீர் வடித்துக் கொடுத்தாள். அவள் தேநீரைக் குடித்து முடித்ததும், வடிவேலுவின் நிலையை பற்றி விசாரித்தாள் பாட்டி. 'நெலமை மோசமாத்தான் இருக்கு. நாளைக்கு ஆபரேஸன் பண்ணியாகனுமாம். காலையில் நான் வெள்ளன போகனும்!' என்று கண் கலங்கினாள். அதை கேட்டு பாட்டியும் அழுதாள் மௌனமாக! அன்றிரவு களைத்துப் போய்வந்த வீரம்மாள் நேரத்தோடு படுத்துவிட்டாள். பிள்ளைகளும் தூங்கிப்போய்விட்டார்கள். மருதாயி பாட்டி மட்டும் கொட்டு கொட்டென்று விழித்துக் கொண்டிருந்தாள். நள்ளிரவு! தெருமுனையில் நாய் ஒன்று ஊளையிட்டது. அதைத் தொடர்ந்து பல நாய்கள் அதோடு சேர்ந்து கொண்டன. மஹாமுனி கோயில் ஆலமரத்தின் ஊமைக்கோட்டான் 'உம்'. உம்ம்ம்!'என்று அலறிக்கொண்டிருந்தது.

மறுநாள் பொழுது விடிந்த போது கோடி பக்கமுள்ள பீலிக்குச் சென்ற பெண்கள் தான் அதைக்கண்டு அலறி அடித்துக்கொண்டு ஓடி வந்தார்கள். மருதாயி பாட்டி மஹாமுனி கோயில் ஆலமரத்தின் தாழ்ந்த கிளை ஒன்றில் தூக்குப் போட்டுக் கொண்டு தொங்கிக் கொண்டிருந்தாள். 'ஏதோ ஓர் உயிர் பிரியப்போகிறது, அது தானாக இருந்து விட்டாள் வடிவேலு தப்பி விடுவான்' என்று நினைத்துவிட்டாளா அந்த பாட்டி.

## சொந்த மண்

இலங்கைத் தமிழனின்
சுதந்திரத்தை
வுடிக்கும் - இலங்கைத்
தமிழன் நான்.
இதுதான் எனது
சொந்த மண்

அடித்தாலும், உதைத்தாலும்
அடிவாங்கி
பதிலடி - கொடுக்கும்
தமிழன் நான்.
இதுதான் எனது
சொந்த மண்

அழகான தேயிலையிடையே
ஆனந்தம் பாடும்
பச்சைத் தோரணத்தின்
மெத்தையில் பக்குவமான
தாய்மார்கள்
பகட்டாய் கொழுந்து
புறிப்பர்.
இதுதான் என்
சொந்த மண்

காணும் திசையெல்லாம்
அருவிகள்
கண்டபடி இயற்கை
வளங்கள்.
திரும்பும் திசையில்
மலைகள்.
எங்குப் பார்த்தாலும்
இன்னிசை மழை
இதுதான் எனது
சொந்த மண்

அமைதித் தோரணத்தால்
ஆனந்தம் பாடும்
முக்கள்.
வறுமைக் கோட்டில்
வாதாடும் மக்கள்.
எல்லை இல்லா இன்பத்தால்
அத்தனையையும் அழித்து
மௌனம் சூடும் மக்கள்.
இந்த மண்தான் எனது
சொந்த மண்.

*அட்டன். மகேந்திரன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# மலைகளின் மக்கள்

**மு.சிவலிங்கம்**

மேகமலைத் தோட்டத்துப் பக்கத்தில் தான் வானக்காடு தோட்டம் இருக்கிறது. வானக்காடு தோட்டத்துப் பக்கத்தில் தான் ஆனைத் தோட்டம் இருக்கிறது. மேகத்தை அந்த மலை சதா தழுவிக் கொண்டிருப்பதால் மேகமலை என்றும் வானத்தை அந்தக் காடு உரசிக் கொண்டிருப்பதால் வானக்காடு என்றும், யானையைக் கண்டு விரட்டியதால் ஆனைத்தோட்டம் என்றும் அந்தக் காலத்தில் தென்னாட்டுத்தமிழர்கள் இலங்கைக் காடுகளை அழித்துக் கொண்டிருக்கும் பொழுது வைத்த காரணப் பெயர்கள் தாம் அவைகள்... இந்தத் தோட்டங்களுக்குப் பக்கத்திலே “மண்ராசி” என்றும் ஒரு தோட்டம் உண்டு. மண்ணிலே ராசி கண்ட மக்கள் அப்படி மகுடமிட்டிருந்தார்கள் !

மண்ராசி தோட்டத்துக்கு நேரே உச்சியிலிருக்கும் மலைக்குப் பெயர்தான் ராமர் மலை. அந்த மலையருகில் தான் இன்று எட்டாம் நம்பர் மலை கவ்வாத்து ... மலையகத்து கொள்ளையழகுகளையெல்லாம் கூட்டி மெருகுக் காட்டிக் கொண்டிருக்கும் அந்த மலையிலுள்ள ஒரு கற்கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலுக்குள் “ராமர் அந்த காலத்தில் எய்த அம்பு” ஒன்றை நாட்டியிருக்கிறார்கள் ! அது தான் ராமர் கோவில்.



‘“இந்த கோவிலிருக்கும் உச்சிமலையிலிருந்து பார்த்தா ஈந்தியா தெரியுமோ ...? ராமேஸ்வரம் கோவில் கோபுரம் தெரியுமோ... ?’ என்று அந்தக்காலத்தில் காடழிக்க வந்த தென்னாட்டு மக்கள் ஏக்கப் பெருமூச்சு விட்டார்களாம்...

அதே மலையில் தான் இன்றைய புதிய பரம்பரையினரும் காடு வெட்டிக்கொண்டிருக்கிறார்கள்...

வெள்ளி வார்ப்புகளால் கவ்வாத்து கத்திகள் பளபளவென மின்னுகின்றன. வெய்யில் ஏறுவதற்குள் பாதி வேலையை முடித்துக் கொண்ட தொழிலாளர்கள் சிவராமனைக் கூட்டத்தை ஆரம்பிக்கும்படி அவசரப்படுத்தினார்கள்.

சிவராமன் அந்தத் தோட்டத்தின் இளந்தலைவன். ஒரு முக்கிய கலந்துரையாடலை வேலைக்காட்டிலேயே சாகவமாக நடத்திக் கொள்ள விரும்பினான். கவ்வாத்துக் காட்டுக்கு “தேத்தண்ணி” கொண்டு வரும் சாக்கில், ஏழெட்டுக் குமரிப் பெண்கள் சரஸ்வதியோடு கொழுந்துக் காட்டிலிருந்து ராமர் மலைக்கு வந்திருந்தார்கள். சரஸ்வதி அந்தத் தோட்டத்து மாதர் தலைவி.

கூட்டம் கூடிவிட்டது. கவ்வாத்துக் கங்காணி “அனைக்கப்பிள்ளை - துரை யாரும் வருகிறார்களா” என்று காவல் செய்து கொண்டிருந்தார். நாள் முழுக்க அவர் வாய் கிழிய சத்தம் போட்டுக் கொண்டிருந்தாலும் அவரும் தொழிலாளர் பக்கமேதான் இருப்பார்.

சிவராமன் சாயத்தைக் குடித்துக் கொண்டு, சீனியை நக்கியபடி பேசிக்கொண்டிருந்தான். ‘வர்ற திங்கக்கிழம நம்ம தோட்டத்துல பத்து ஏக்கர் காணிய பிரிச்சு கிராமத்து சனங்களுக்கு குடுக்கப் போறாங்க. இந்த நோக்கம் கிராமத்தையும் தோட்டத்தையும் “ஒருங்கிணைப்பு” செய்து தோட்ட மக்களையும் கிராமவாசிகளையும் ஒத்துமைபடுத்தப் போற திட்டமாம் !’

‘அடி செருப்பாலே’ கூட்டத்தில் ஒருவன் கத்தினான்.

‘உஸ் ... சத்தம் ! இது வேலைக் காடு !’ சிவராமன் பேச்சைத் தொடர்ந்தான். நாங்க நெருக்கமாக வாழும் தோட்டப்புறங்கள் முழுவதும் இப்படியே திட்டம் போட்டு குடியேற்றம் செஞ்சிக்கிட்டுப் போனா ... நாங்க சிதறி போயிடுவோம். குடியேறிய சனங்கள் வீடு ... வாசல் கட்டி காணிகளுக்குச் சொந்தக்காரவங்களாகவும் - நாங்க மட்டும் காலாகாலமாக இந்தப்பிரதேசங்களில் கூலிகளாக லயத்துக்குள்ளேயே வாழ வேண்டிய நெலமையை அனுபவிக்க வேண்டியிருக்கு ... எங்க பரம்பரை இலங்கைக்கு வந்து நூத்தி அம்பது வருசத்துக்கு மேலாச்சு. இன்னும் எட்டடி நெலங்கூட சொந்தமாக கெடைக்கல்ல ... காடழிக்க வந்த பாட்டன் பூட்டன் கட்டிய அதே மண்வீட்டுல தான் நாங்க தொடர்ந்து வாழ்றோம் ... ஒழுகுற கூரைத்தகரத்தை மாத்திப் போட்டாலுமே ... யாரைக் கேட்டுக்கிட்டு மாத்திப் போட்டேன்னு வேல நிப்பாட்டுறாங்க ... எவ்வளவு கேவலமா நாம வாழ்றோம் !’ சிவராமன் பேசிக் கொண்டிருக்கும்போது ஒரு தொழிலாளி குறுக்கிட்டான். ‘அது சரி, காணி பிரிக்சுக் குடுக்க எவனாவது காணி அளக்க வந்தா ... நாங்க என்னா செய்யுறது ...?’ ‘நீங்க கல்லு கில்லு அடிச்சிடக் கூடாது ... கொழப்பம் உண்டாக்கக் கூடாது ... அப்புறம் ராணுவம் ... பொலிசு வந்து நம்மலை வாரிக்கிட்டுப் போயிடும் ... நீங்க ரொம்பவும் பொறுமையாய் இருக்கணும். காணியை அளக்கவிடணும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிராம வாசிக தோட்டத்துக்குள்ளே குடியேற வந்தாஅவுங்களோட நீங்க மோதிக் கொள்ளக் கூடாது. அவுங்க நமக்கு எதிரி இல்லே ... அவுங்களை உபசரிச்சு வரவேற்கனும் ...' சிவராமன் பேச்சை இன்னொருவன் இடைமறித்து, 'டேய் சிவராமன் ! நீ ரோங்கா ... பேசுறே ... ! நீ இப்போ குடிச்சுக்கிட்டு பேசுற சாராயத்தண்ணி இல்லே ... சாயத் தண்ணி ... நிதானமா பேசு !' என்றான்.

சிவராமன் சிரித்தான். 'அவசரப்படாதீங்க மச்சான், மீதி கதையை இன்னிக்கி அந்திக்கு மாரியம்மன் கோவில்ல வச்சிக்குவோம் !' என்றான். எல்லோரும் தத்தமது வேலைகளில் ஈடுபட்டார்கள். சரஸ்வதி, சிவராமனிடமிருந்து தேத்தண்ணி போத்தலை வாங்கிக் கொண்டு, சக தோழிகளோடு கொழுந்து மலைக்குத் திரும்பினாள்.
கூட்டம் இவ்வளவு சீக்கிரமா முடிந்ததும், கங்காணியாரின் 'போய்க்கொண்டிருந்த உயிர்' மீண்டும் அவருக்குள்ளேயே நுழைந்து கொண்டது.

- மட்டாத்துமலை.

வயசுக்கு வந்தப் பெண்ணைப்போல வசீகரமாய் காட்சியளிக்கிறது ...

கவ்வாத்து வெட்டிய செடிகளில் அரும்பிப் புடைத்த இளந்தண்டுகளை மூன்று, நான்கு மாதங்களுக்குப் பிறகு வெட்டி மட்டப்படுத்துவார்கள்.

அதிலே தளிர்விடும் கொழுந்துகள் மஞ்சளாய் கொழித்து காற்றிலே கொஞ்சி சிரிக்கும் போது பசியே மறந்து போகும். மட்டத்து மலையில் கொழுந்து ஆயும் பெண்கள் "ஆண்டித்தியம்" பெற்ற வேலைக்காரிகளாக இருப்பார்கள். அந்த மலை ஆறு மாதங்களுக்குப் பிறகு "அழகு கொழுந்து மலை" என்று பட்டமும் வாங்கும்.

சரஸ்வதி படக் படக்கென்றுயந்திரவேகமாய் தன் விரல்களை மேயவிட்டு கொழுந்துகிள்ளுகிறாள். பார்கின்ற தேயிலை நிரைகளிலெல்லாம் இதே வேகம் கொழுந்தெடுக்கும் வேகத்திலேயே சரஸ்வதி ஒரு குட்டி மீட்டிங் போட்டுக் கொண்டிருந்தாள். கொழுந்து கங்காணி ஒன்றும் பேசாமல் நிரைக்குள்ளேயே வந்து கொண்டிருந்தார். அந்தக் காலத்துக் கங்காணிகள் மாதிரி வாயில் வந்த படி இந்தக் காலத்தில் பேச முடியாது ! குமரிக்குட்டிகள் கங்காணியின் நாக்கை அறுத்து விடுவார்கள்.

'வர்றதிங்கக்கிழம நம்ம தோட்டத்துக்குள்ள கொலனி ஆளுங்களுக்கு காணி அளக்க வர்றாங்களாம்' சரஸ்வதி 'ஆரம்பித்தாள். 'அளந்துக்கிட்டுப் போறானுங்க நமக்கு என்னா ?' பார்வதி. 'அவன் அளந்து கிட்டுப்போனா ... நீ நக்கிக்கிட்டுப் போகனும் !' -பொட்டு. 'சரஸ்வதியக்கா ! நீங்க கதைக்கு வாங்க' - லெட்சுமி. கொழுந்து காட்டு பேச்சு இப்படித்தான் நடக்கும் ! சரஸ்வதி தொடர்ந்தாள், 'நம் தோட்டத்துல பத்து ஏக்கர் காணி எடுத்து ஆளுக்கு இருவது பர்ச்சஸ் வீதம் எம்பது குடும்பங்களுக்கு குடுக்கப் போறாங்க. இந்த தோட்டத்துல புதுசா எம்பது குடும்பங்கவரப் போறாங்க.' சரஸ்வதி முடிக்கு முன்பே 'அடி ஆத்தே ! கொலனி கூட்டம் தோட்டத்துக்குள்ள வந்தா கொழப்பம் உண்டாகுமே ... வழிப்பறிதிருட்டு நடக்குமே' என்று பயந்தாள் மாரியாய்.

'அதிபத்தி பேசத்தான் இன்னக்கி மாரியம்மன் கோவில்ல "அவரு" கூட்டம் போடுறாரு ... மாரியம்மன் கோவில்ல அந்திக்கு ஆறுமணிக்கு கூட்டம் ...'

'அவரு' ... சரஸ்வதி சிவராமனை தன் மனசுக்குள்ளே பூட்டி வைத்திருக்கிறாள் ! அவனது அழகு மாத்திரமல்ல, அந்த அழகுக்கேற்ற அறிவும் தான் பிறந்து வளர்ந்த சமுதாயத்தின் விடிவுக்காக அவன் போராட முன்வந்திருக்கும் உணர்வுகளும் அவனை ஆதர்ஷித்தன.

மாரியம்மன் கோவில்.
உள்ளே ஜெகஜோதியாக மின்சார வெளிச்சம் பளிச்சிட்டுக் கொண்டிருக்கிறது. கோவிலைச்சுற்றியுள்ள லயங்கள் இருளுக்குள் மூடிக் கிடந்தன. கோவிலுக்கு மின்சாரம் வாங்கிக் கொடுத்தவனும் சிவராமன் தான். 'அம்மன் கோவிலுக்கு துரைபங்களாவிலிருந்து 'கனெக்ஷன்' எடுத்தா பங்களாவுக்கு 'கரண்டு' கொறைஞ்சு போகும் ... ஐஸ் பெட்டி சுடுதண்ணி பொய்லர் எல்லாம் கெட்டுப் போகும்' என்று நாயாய் குரைத்த பெரிய கிளாக்கர், தொழிலாளர் ஜெயித்த பிறகு தனது பெயரில் 'கந்தசாமி கிளாக்கர் உபயம் என்று எழுதி ஒரு 'டியுப் லைட்' பிரசண்ட் பண்ணியிருந்தார்.

சிவராமன், தாய்மரத்தையே கொல்லவந்திருக்கும் அந்த புல்லுருவிகளையெல்லாம் நினைத்து வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான்.

கோவிலில் கூட்டம் நிறைந்து விட்டது. அந்த தோட்டத்து இரண்டு டிவிஷன் ஆட்களும் வந்திருந்தனர். அவர்கள் பல தொழிற்சங்கங்களை சேர்ந்தவர்.

சிவராமன் பேசத்தொடங்கினான். 'கிராமவாசிகள் தோட்டத்துக்குள்ளே குடியேறியதும் பஸ் ரோட்டு வெட்டப் போறாங்க ... கடைவீதி தொறக்க போறாங்க ... அப்புறம் தபால் கந்தோர், ஆஸ்பத்திரி, மின்சாரம் எல்லாம் வரப்போகுது ...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவராமன் பேச்சை ஒருவன் நிறுத்தினான். 'அப்போ இவ்வளவு காலமா இந்த வசதிகள் ஏன் எங்களுக்கு செஞ்சு குடுக்கல்லே ...?' 'இந்த சனங்க வந்தப் பொறகு தான் போஸ்ட்டாப்பீசு ... ஆஸ்பத்திரி எல்லாம் ... இவ்வளவு காலமா எங்களுக்கு வருத்தம் வந்துட்டா ... சுடுகாடுதான் எங்களுக்கு பெரியாஸ்பத்திரி ... இந்தி திட்டங்களுக்கு நாங்க எடம் குடுக்க மாட்டோம்' அவன் உணர்ச்சிவசப்பட்டான். அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்த இளம் பெண்கள் எல்லோரும் எழும்பி நின்று, 'அந்த திட்டத்துக்கு நாங்க எதிர்ப்பு காட்டுவோம்' என்று ஆவேசமாக சத்தம் செய்தார்கள்.

'ஆண்கள் குடிப்பதை விட பெண்கள் குடிக்கின்ற காலமாற்றத்தைக் காணுகின்றோம் ! காலத்துக்கு ! வணக்கம் !'என்றான் சிவராமன். வளைக்கரங்களின் ஓசை வானத்தைப் பிளந்தது.
சிவராமன் மேடைப்பேச்சை மொழியிலே தொடர்ந்தான். 'இந்த தோட்டத்துப் பாரம்பரிய நிலத்துக்கு சொந்தக்காரர் நாங்கள்: இருந்தும் ஒரு கோழிக் கூடு கட்டுவதற்கு கூட மண் சுவர் எழுப்ப முடியாதவர்களாக இருக்கின்றோம். சொந்தமாக சுவர் ஏழுப்பும்வரை இந்த மண்ணின் சொந்தக்காரர்களாக முடியாது. சிவராமனின் பேச்சில் இன்னொரு தடை விழுந்தது. 'எட்டு மணியாச்சு பசி எடத்திருச்சு ... பெரிய வெளக்கம் தேவையில்லை ... இந்த குடியேற்றத்தை எப்படி தடுப்பது என்று சொன்னால் மட்டும் போதும்.' என்று இன்னும் ஒரு இளைஞன் கோபமாக பேசினான். அவனை தொடர்ந்து ஒரு வயதுபோன பெரியவர் கூடி ஆத்திரமாக கதைத்தார். 'கிராம வாசிங்க ... நாட்டாளுங்க ... தோட்டத்துக்குள்ள நொழையிறதை தடுக்க எதையும் செய்ய நாங்க தயார்' என்றார்.

சிவராமன் நிதானமாகப் பதில் சொன்னான். 'நாங்கள் எந்தக் காரியத்திலும் உணர்ச்சி வசப்பட்டு முரட்டுத்தனமாகவும் இறங்கி, இறங்கி பிரச்சினைகளில் மாட்டிக் கொள்ளுகின்றோம். ஒரு பிரச்சினைக்காக இன்னொரு பிரச்சினையை உண்டாக்குவது தான் நமது போராட்ட லட்சணமாகும்' என்று கொஞ்சம் கடுமையாக பேசத் தொடங்கினான். தோட்டத்துக்குள்ளே நுழைய வரும் புதுக்குடிவாசிகளைத் தடுப்பதற்கு வன்முறையில் இறங்கி விடக்கூடாது, அவர்கள் இந்த நாட்டு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். நாங்கள் முரட்டு நடவடிக்கையில் இறங்கினால் அது 'இனவாதமாக' திரிக்கப்பட்டு இனக்கலவரங்களாக உருவெடுத்து விடும். தோட்டங்களில் மூடிக் கிடக்கும் தொழிற்சாலைகளிலெல்லாம் 'ஆமி கெம்ப்' போடப்பட்டிருப்பதை நீங்கள் உணர வேண்டும்.'

இடையில் ஒருவன் 'ஆமா ! இனிமே நாங்க கத்தி, கோடாளி, முள்ளு, மம்பெட்டின்னு விவசாய ஆயுதங்களைக் கூட வேலக்காட்டுக்கு சொமக்க முடியாது ...! 'ஆயுதம் தாங்கிய கோஷ்டி' ன்னு ஆமிக்காரனுங்க எங்கள வாரி சுருட்டிக்கிட்டுப் போயிடுவாங்க ...' அவன் வார்த்தையில் சிரிப்பு இருந்தாலும் சிந்தனையும் இருந்தது

சிவராமன் பொதுக் கூட்டத்தை முடித்தான். அவன் சில முக்கியமானவர்களிடம் சில முக்கிய விசயங்களைக் கதைத்தான். 'தோட்டத்துக்குள்ளே கிராமவாசிகளுக்கு காணி வழங்கும் அந்த நாளில் அவர்களை அன்பு வழியில் அகிம்சை வழியில் வரவேற்று அவர்களோடு சேர்ந்து வாழ முயற்சிப்போம் !' என்று எல்லோருக்கும் கரம் கூப்பினான். அவனது ஆழமான வார்த்தைகளில் நிறைய கனம் இருந்தது ... அம்மன் கோவில் கூட்டம் அமைதியாகக் கலைந்தது.

இன்று அந்த திங்கட்கிழமை.
அந்த ஆற்றங்கரை மலையருகே அழகான நெடுஞ்சாலை. சாலை வழியே ஐந்து ஆறு உல்லாசமான ஜீப் வண்டிகள் வந்து நின்றன. ஜிப்பா, வேட்டி அணிந்த சிலர் கல்யாண மாப்பிள்ளைகளைப் போல வண்டிகளிலிருந்து இறங்கினார்கள். அவர்களின் முன்னும் பின்னும் காக்கிச் சட்டைக்காரர்கள் காவல் நின்றார்கள். வேட்டிக்காரர்கள் மந்திரிமார்களாக இருப்பார்கள் ...
வண்டிகள் மரநிழல்களில் ஒதுங்கின.

ஆற்றங்கரைகளோடு நீண்டிருந்த அந்த பத்து ஏக்கர் தேயிலை நிலம் பச்சைக்கம்பளம் போர்த்தி பசுமையாய் படுத்திருந்தது. கரையோரங்களில் கூஷுக்கலிப்டஸ்மெரங்கள் (புதிய கருப்பந்தைல மரங்கள்) நீண்டு நிமிர்ந்து நிலவைப் பிடிப்பது போல் வளர்ந்து நின்றன. அவைகளின் பிரதிபிம்பங்கள் தண்ணீருக்குள் தலைகிழாகப் படம் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தன.
....... ஆறு ஆட்டம் போடாமல் அமைதியாக நகர்ந்து கொண்டிருக்கிறது ... நெடுஞ்சாலையில் ஒரு ஜிப்பாக்காரர் நகர்ந்து கொண்டிருக்கிறது ... கதைத்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் ஊர்வலம் வருவது போல பெரிய பஸ் வண்டிகள் அந்த இடத்தில் வந்து நின்றது. பஸ் வண்டியிலிருந்து ஆண்களும் பெண்களுமாய் இறங்கினார்கள். அவர்கள் யாவரும் சிங்கள மக்கள். அவர்கள் யாவரும் கிராமவாசிகள். அவர்கள் ஏழைகளாகத் தெரிந்தார்கள்.
நெடுஞ்சாலையில் சுறுசுறுப்பாக இங்குமங்குமாக ஓடிக் கொண்டிருந்த ஒரு ஜிப்பாக்காரர் அந்த மக்களை வரிசைப்படுத்தினார். அவர்கள் முன்னிலையில் ஒரு மதகுரு ஒரு கவியைப் படித்துக் காட்டி விளக்கமும் சொல்லிக் கொண்டிருந்தார்.

'கண்டிய மக்களின் பாரம்பரிய நிலங்கள் மீண்டும் அவர்களுக்காக மீட்டெடுக்கப்படுகின்றன ...' கவியின் சாராம்சம் இது ...

வெள்ளைக்காரர்கள் கோப்பி, தேயிலை உண்டாக்கிய காலத்தில் கண்டி பிரதேசங்களில் மட்டும் நிகழ்ந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகளாகும். ஆனால் இலங்கையின் உச்சிமலைநாடு கொடியவனவிலங்குகளை உள்ளடக்கிய இயற்கை காடுகளாகும். அந்தக் காடுகளை அழித்து கழனி கண்டவர்கள் தென்னாட்டுத் தொழிலாளர்கள். இங்கே வயல்களும் இருந்ததில்லை ... விவசாயிகளும் வாழ்ந்ததில்லை. சாதகமாக உருவாக்கிய இவர்களின் வரலாற்றில் எதுவித சான்றுகளுமே கிடையாது ! அவையெல்லாம் வெறும் அபத்தமாகும்.

ஒரு ஜிப்பாக்காரர் பட்டிலை வாசிக்க இன்னொரு ஜிப்பாக்காரர் காணி இலக்கத் தகடுகளை வழங்கினார். கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.

இலக்கங்களை வாங்கியவர்கள் காணி மாயம் காட்டுபவர்களின் பின்னால் போய்க் கொண்டிருந்தார்கள். இந்த நிகழ்ச்சிகளை அந்த உச்சிமலையிலிருந்து மக்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சுமந்து கொண்டிருக்கும் கொழுந்து கூடைகளை விட அவர்களின் மனதில் சுமத்தப்பட்ட பாரங்கள் கொடுமையாகக் கனத்தன. எதிர்பார்த்த எந்தவொரு எதிர் நடவடிக்கையும் அந்த மண்ராசி தோட்ட மக்களால் நடைபெறவில்லையென்பதை அறிந்த பாதுகாப்புப் படையினரும் மந்திரி பிரதானிகளும் மகிழ்ந்து போனார்கள்.

அவர்கள் வாகனங்களுக்குள் நுழைந்தார்கள். அவைகள் அழகாக ஒரே நேரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக ஊர்ந்து சென்றன.

காணி வழங்கிய பின்னர்.

வெள்ளி முளைத்து, வளர்பிறை தோன்றி, பூரண நிலவும் பூத்தது.

அந்த ஏழு நாட்களுக்குள் என்னவெல்லாமோ நடந்தன. அவை யாவும் ஒரு புதிய கோணத்தில் தயாரித்த ஒரு சினிமா படத்தைப் போல மர்மங்கள் நிறைந்திருந்தன.

தோட்டத் தொழிலாளர்கள் குடியேறிய கிராமவாசிகளுக்குத் தளங்கள் வெட்டிக் கொடுத்தார்கள். அவர்கள் குடிசை கட்டுவதற்கு மண்குழைத்து சுவர்கள் எழுப்பிக் கொடுத்தார்கள். கூரை வேய்வதற்கு கிராமவாசிகள் தங்கள் கூஹாட்டிலிருந்து' (சிங்கள மக்கள் வாழும் கிராமங்களை தோட்ட மக்கள் 'நாடு' என்றே அழைப்பார்கள்.) தென்னை ஓலை பற்றைகள் கொண்டு வந்தார்கள். தோட்டத் தொழிலாளர்கள் கூரை வேய்ந்து கொடுத்தார்கள். தொழிலாளர்களின் அன்பையும், பாசத்தையும் ஒத்துழைப்பையும் பெற்ற அந்த கிராம வாசிகள் அவர்களுக்கு என்ன கைம்மாறு செய்ய வேண்டுமென்று துடித்தார்கள்.

அவர்கள் இவர்களுக்கு எதையும் செய்யும் மனநிலையில் இருந்தார்கள். இப்பொழுதுதான் சிவராமன் அவர்களிடம் அப்படிக் கேட்டான். 'நாங்கள் ஒரே தோட்டத்துக்குள்ளே இரவில் தளம் வெட்டி எழுப்பி - கூரை போடுவதற்கு உங்கள் ஒத்துழைப்பு தேவை' என்றான். அவர்கள் யோசித்தார்கள். இந்த பிரதேசத்தில் - இந்த மக்களோடு சேர்ந்து தான் வாழ வேண்டும். இங்கு தனித்து வாழ முடியாது என்பதை உணர்ந்தார்கள்.

அவர்கள் மண்வெட்டிகளைச் சுமந்து கொண்டு நிலங்களைக் காட்டும்படி கேட்டார்கள்.

... ஓர் இனிய காற்று அவர்களைத் தழுவிச் சென்றது ... புதுகுடிவாசிகளும் பழைய தொழிலாளர்களும் ஒன்று கலந்தனர் ... அந்த பூரண நிலவில் -'போய' தினத்தில் அந்த வேலை முழுமை பெற்றது.

லயன்களிலிருந்த தொழிலாளர்கள் யாவரும் புதிய தேயிலை நிலத்திலுள்ள தங்கள் குடிசைகளுக்கு குடி புகுந்தார்கள். அவர்களை அண்டி வாழ்ந்த நாய்களும், கோழிகளும், ஆடு மாடுகளும் புதிய நிலத்துக்கு வந்து சேர்ந்தன.

லயன்கள் வெறிச்சோடிக் கிடந்தன ... அவைகளுக்கு இனிமேல் நிரந்தர பென்ஷன் ! ஆமாம்: அவைகளின் வரலாற்று வயது நூற்றி அறுபத்து ஐந்து வருசங்களாகும் !

பொலிஸ் படையினரும் ராணுவப் படையினரும் அந்த ஆற்றங்கரையோரத்து நெடுஞ்சாலையில் வந்து நின்றார்கள். அரசு அங்கிகாரம் - சம்பிரதாயச் சடங்கு ... எதிலுமே சம்பந்தப்படாத அந்த குடிசைகளை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்திருந்தது.

'படைகள் தலையிடக் கூடாது, தோட்டங்களுக்குள் நுழையக்கூடாது ... நிதானமாகச் செயல்படுவோம்'. காற்றுக்கும் கடும் மழைக்கும் அசைந்து கொடுக்காத மலைக்குன்றுகள் வீரமுடன் நிமிர்ந்து நின்று கொண்டிருந்தன. காலவோட்டத்திலும் தங்கள் உருவை அழித்துக் கொள்ளாத அந்த அலைகள் மக்கள் அங்கே உயரத்தில் வீசிய பூந்தென்றலை சுவாசித்துக் கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீக்கற்றோர்

சிறுகதை

**பாலா சங்குப்பிள்ளை**

சினன்தம்பி நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்தான். சுதந்திரக் காற்றை ஆழமாக உள்ளிழுத்து வெளியே விட்டான். ஓ! எவ்வளவு காலங்கள். ஒன்றா, இரண்டா நான்கு வருடங்கள். இந்த நான்கு வருடங்களிலும் அவன் பட்ட வேதனைகள் - அநுபவித்த துன்பங்கள் எத்தனை எத்தனை.

தானுண்டு தன் ஆசிரியத் தொழிலுண்டு என்றிருந்தவன் வாழ்வில் விதி எப்படியெல்லாம் விளையாடி விட்டது. தோட்டத் தொழிற்சாலையில் லொறி ஓட்டுனரான அவன் தந்தை வேலாயுதம் விபத்தொன்றில் காலில் கடுமையான அடிபட்டு கட்டிலில் கிடக்க, ஒரே தங்கையின் நிச்சயதார்த்தம் நடக்கவிருந்த போது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவன் கைது செய்யப்பட்டான். நடந்து முடிந்த பிந்துனுவெவ சம்பவத்தின் பயனாகக் கைதுசெய்யப்பட்டவர்களில் சின்னதம்பியும் ஒருவன்.

அவன் சிறைக்கு என்று சென்றானோ அன்றிலிருந்து அவன் தாய் காமாட்சி பித்துப்பிடித்தவள் போலானாள். எந்நேரமும் அவளுக்கு மகனின் நினைவுதான்.

சுமதி - சின்னதம்பியின் முறைப்பெண். அவனை உயிருக்குயிராக நேசித்தவள். அவளும் ஒரு ஆசிரியைதான்.

அவர்கள் அனைவருமே அவனின் நிலையை எண்ணி நிலைகுலைந்து போனார்கள். ஆரம்பத்தில் அவனை சிறையில் அடிக்கடி வந்து பார்த்தார்கள், கடிதம் எழுதினார்கள். ஆனால் எல்லாமே சில நாட்களின் பின்னர் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக மாறிவிட்டது. அவனை யாருமே பார்க்க வரவில்லை. அவன் மனமொடிந்து போனான்.

சிறை வாழ்க்கை அவனை மிகவும் பாதித்தது. என்ன குற்றமென்று தெரியவில்லை. விசாரணை இல்லை. அவனைப்போன்ற பலர் அங்கே ஆடு மாடுகளைக்போல அடைத்து வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களைப் பற்றிக் கவலைப்பட அவர்களின் நலன்களைக் கவனிக்க எவருமில்லை. ஆரம்பத்தில் அவர்களைப் பற்றிப் பேசியவர்கள் கூட பின்பு வாய்மூடி மௌனமாகி விட்டார்கள்.

நாட்கள் எப்படி ஓடின! அவன் நான்காண்டுகளை எப்படிக் கழித்தான்! நாட்கணக்கில் அவனைச் சிறையில் வைத்தவர்கள் கடைசியில் சாட்சியில்லையென்று அவனை வெளியில் அனுப்பி விட்டார்கள்.

அவன் வாழ்வில் நான்காண்டுகள் நாசமாகிவிட்டன. அவனின் ஆசிரியத் தொழில் போய்விட்டது. அவனின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிட்டது.

சின்னதம்பி பஸ்ஸில் ஏறினான். அப்பா எப்படி இருக்கிறார்? தங்கையின் திருமணம் முடிந்திருக்குமா? ஏன் அவர்கள் அவனைப் பார்க்க வரவில்லை? ஒரு கடிதமாவது எழுதியிருக்கலாம். இல்லையா, அப்படியென்ன பிரச்சினை.

பஸ் பலமணிநேர ஓட்டத்துக்குப் பின் அமைதியாக நின்றது.

சின்னதம்பி சிறிய உடுப்புப் பார்சலுடன் அந்த மண்பாதையில் நடந்தான். செம்மண் பாதையில் நேற்றுப் பெய்த மழையின் ஈரம் இன்னமும் இருந்தது. வெயிலின் கடுமை அவ்வளவாகத் தெரியவில்லை. அவன் வேகமாக நடந்தான். தூரத்தில் புள்ளியாக அவன் வாழ்ந்த லயக் காம்பிராக்கள் தெரிந்தன.

அப்போது சட்டென யாரோ அழைப்பதைப்போல இருந்தது. அவன் திரும்பினான். பக்கத்து லயத்தைச் சேர்ந்த பழனி வியப்புடன் அவனைப் பார்த்தவாறு நின்றிருந்தார்.



'சின்னதம்பியா ... எப்போது விடுதலையானே ...?'

'இன்னைக்குத்தான் ...'

'நீ விடுதலையானது வீட்டுக்குத் தெரியாதா?'

'தெரியாது ...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஓ! அப்படியா, அதானே பார்த்தேன் ... சின்னதம்பி உன் நல்லதுக்குத்தான் சொல்லுறேன் ... நீ பேசாம வந்த வழியே போயிடுறதுதான் நல்லது.'

'நீ ... நீங்கள் என்ன சொல்லிறீங்க?'

'என்னத்தைச் சொல்லிறது நீ திருடிட்டு ஜெயிலுக்குப் போயிருந்தாலும் பரவாயில்லை. கொலைகாரனாகக்கூட போயிருக்கலாம் ... ஆனா பயங்கரவாதின்னுர பெர்ல போயிட்டே ... அது எவ்வளவு மோசமா உன் குடும்பத்தைப் பாதிச்சிச்ன்னு உனக்குத் தெரியுமா ... உன்னால உன் குடும்பத்தோட தொடர்பு வைச்சிக்கவே நாங்க ரொம்பப் பயந்திட்டோம். மத்தவங்களை விடு. உன் சொந்த மாமன் மாரியப்பனே உன்னோடு குடும்ப தொடர்ப அறுத்துட்டாரு. சுமதிய வேறொருத்தனுக்கு மனம் முடிச்சு வைச்சாரு ... இப்பவும் அந்த பொண்ணு மனமொடிஞ்ச நிலையில தான் வாழ்ந்திக்கிட்டிருக்கு. உன் தங்கச்சியை நிச்சயம் பண்ண வந்தவங்க பாதியிலேயே கை கழுவிட்டாங்க. உன் அம்மா உன்னோட நினைவிலேயே உயிரை விட்டுட்டா. உன் அப்பா மிகவும் சிரமப்பட்டு ரொம்ப தூரத்துல ஒரு மாப்பிள்ளையப் பார்த்து உன் தங்கச்சிக்கு கல்யாணம் செஞ்சி வச்சுட்டாரு. இதெல்லாம் நான் எதுக்கு சொல்றேன்னா ...சின்னதம்பின்னு தனக்கு ஒரு மகன் இல்லைன்னு சொல்லித்தான் கல்யாணம் செஞ்சி வச்சிருக்காரு ... இன்னைக்கு உன் தங்கச்சி எந்த பிரச்சினையும் இல்லாம சந்தோசமா இருக்கான்னா அது உன்னாலத்தான். இந்த நிலயில ஜெயில்ல இருந்து விடுதலையாகி நீ வந்நது தெரிஞ்சா நீதான் அண்ணன்னுர விசயம் தெரிஞ்சா உன்னோட தங்கச்சியோட நிலம என்னன்னு யோசிச்சுப்பாரு. நாலு வருஷம் மட்டும் தான் நீ சிறையில இருந்தே. ஆனா உன்னால உன் தங்கச்சி வாழ்நாள் முழுவதும் வாழா வெட்டியா வீட்டுல டுடிங்கிக் கிடக்கனும். உன்னோட வாழ்க்கை இப்படியாயிட்டதேன்னுற வேதனையில உன் அப்பா இருந்தாலும், மகளோட நல்வாழ்வுக்காக உன்னையே இழந்துட முடிவுசெஞ்சிட்டாரு. அவரால வேற என்ன தான் செய்யமுடியும். நீ ஜெயிலுக்குப் போனது உன் குத்தமில்ல. ஆனா உன்னால உன் குடும்பம் மறுபடியும் நிம்மதியிழந்து தவிக்கனுமான்னு யோசிச்சுப்பாரு ... நல்ல வேளை உன்னை நான் சந்திச்சது. யோசிச்சு ஒரு முடிவுக்கு வா. நான் வாரேன் ...'

'ஓ! அப்படியா, அதானே பார்த்தேன் ... சின்னதம்பி உன் நல்லதுக்குத்தான் சொல்லுறேன் ... நீ பேசாம வந்த வழியே போயிடுறதுதான் நல்லது.'

அடிபட்டு வந்தவன் ஆறுதலுக்காக இங்கே ஓடிவந்தான். ஆனால் தேறுதல் சொல்ல யாரும் இல்லை. பிரச்சினையென்ற பேய் அவனைக் கௌவிப்பிடிக்க தயாராக ,இருக்கும் இந்த இடத்துக்கு அவன் வந்ததே தவறா ...

அவர் போய்விட்டார். சின்னதம்பி கண்களில் பெருகியோடும் கண்ணிருடன் அப்படியே சிலையென நின்றிருந்தான். இனி என்ன செய்வது - எங்கே போவது. அடிபட்டு வந்தவன் ஆறுதலுக்காக இங்கே ஓடிவந்தான். ஆனால் தேறுதல் சொல்ல யாரும் இல்லை. பிரச்சினையென்ற பேய் அவனைக் கௌவிப்பிடிக்க தயாராக இருக்கும் இந்த இடத்துக்கு அவன் வந்ததே தவறா ...

ஒரு பாவமும் அறியாத அவனைப்போன்ற பல இளைஞர்கள் இன்னமும் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு சிறையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். நிரபராதி என்று வெளியே வந்தாலும் பிரச்சினைகள் அவர்களை விடுவதாக இல்லை. எல்லாம் இழந்து அநாதைகளாக நடுவீதியில் திக்கற்று நிற்கும் இந்த பாவப்பட்ட ஜென்மங்களின் எதிர்காலம் கேள்விக்குறிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரிக் காடு

சிறுகதை

***-மல்லிகை. சி. குமார்-***

'செத்துப்போயிட்டான் ..... நல்லுசாமி செத்துப்போயிட்டான் ....' எதுத்த குடிசையிலிருந்து ராகவன் கத்துறான். காத்து சிலுசிலுன்னு அடிக்கிது. துப்பட்டியை இழுத்துப் போட்டுக்கிட்டு வெளியிலே வந்து எட்டிப் பார்க்கிறேன்.

"யன்னே ... அவே செத்துப் பொயிட்டாண்ணே...." உஸ் காத்து பலமா அடிக்கிது. "ராகவன் குடிசையை நோக்கிப் போறேன் . வாண்ணே அந்தக் குடிசைக்குப் போயி ... பொன்த ஒழுங்குப்படுத்திடலாம் பாவம் .... லெச்சுமி அழுது புரண்டுக்கிட்டு இருக்கா. இங்க ஒரு நல்ல வெளக்கு கிடைக்கல பொணத்து தலமாட்டு பொருத்தி வைக்க ..."

ராகவனின் குரல் பாவமாக இருந்தது. "பொன்த வைக்க பெட்டி....?"

"பெட்டியா...?"

பித்தாப் பித்தானு அவனும் முழிக்கிறான். நானும் முழிக்கிறேன். அலச்சுமியின் குடிசைக்குப் போறோம். எடீகள கட்டிப்பிடிச்சிக்கிட்டு அவளும் பொணமா கெடக்கிற நல்லூசாமியோட தங்கச்சி தனமும் ஒன்னு ஒப்பாரி வைக்கிறாங்க. அவுங்களுக்கு என்னான்னு ஆறுதல் சொல்றது? எங்களுக்கு ஆறுதல் சொல்லவே ஒரு நாதியில்லாத இந்த குமரிக்காட்டில... அந்த ஜென்மங்களுக்கு எப்பிடி ஆறுதல் சொல்ல முடியும்? இலங்கையில் இருந்து வந்து நாங்க மண்டபத்துல இருந்தப்ப ... நீங்கல்லாம் ... குமரிக் காட்டுக்குப் போங்க .. அங்க நல்ல வசதியிருக்கு.. சர்க்கார் நல்லா உதவி பண்ணுமுன்னு சொன்னாங்க.

"குமரிக்காடு" பேரக் கேக்கக் கூட ரொம்ப அழகாத்தான் இருந்திச்சு. மலைப்பகுதி அழகாத்தான் இருக்கும்.

இருந்தாலும் .. என்ன தொழிலோ? , என்ன இடமோ? அங்க எப்பிடிப்பட்ட மனுஷங்களோ...? என்ற அச்சம் மனசில இருக்கத்தான் செஞ்சிச்சி.

"ஏன்... எங்கள கோத்தகிரி, குன்னூர் நீலகிரி பக்கம் அனுப்பினா என்னா...? அங்கெல்லாம் தேயிலை இருக்காமே. அது எங்களுக்கு பழக்கப்பட்ட தொழிலும் கூட கூச்சமில்லாம வேலை செய்யலாம் தானே."

"ஒங்கள ஒன்னும் தூத்துக்குடிக்கு அனுப்பிக் கடல்ல விழுந்து முத்த எடுங்கன்னு பழக்கமில்லாத தொழிலுக்கு அனுப்பல. குமரிக்காடு அதுவும் மலையிலத்தான் இருக்கு. ஆனா கொஞ்சம் குளிர் ஜாஸ்தி."

"இங்க நூரளை, கந்தப்பலையை விடவா...?"

"என்னமோ சிலோன்ல இருந்து புனர்வாழ்வுல தாயகம் வந்திட்டீங்க. இங்க கிடைக்கிற வேலையை செய்யுங்க இல்லாட்டி... ஆந்திரா, மைசூர்ன்னுத்தான் அனுப்ப வேண்டி வரும்."

"வேணாங்க தமிழ் நாட்டுக்குள்ளேயே பொழப்ப நடத்துறோங்க.."

"அப்ப குமரிக்காட்டுக்கு கெலம்புங்க"

நாங்க மலைக்கு ஏறினோம். ஆனா இங்க வந்து பாத்தா... நம்ம தாத்தன் இந்தியாவுல இருந்து சிலோனுக்கு வந்து எந்தக் காட்ட அழிச்சி தேயிலை போட்டானோ. அதவிட மோசமான காடா இது இருக்கே. இங்க அநேகமா உருள கெழங்குதான் பயிர் பண்ண போறாங்க போல இருக்கு. அதுக்காகத்தான் நாங்க மரம்மட்டைகள் அழிச்சி நெலத்தப் பண்படுத்திக்கிட்டு இருக்கோம். கையில இருந்த காசெல்லாம் மண்பவத்திலேயே சரியா போயிருச்சி. இப்ப.. இப்ப...?

உள் ஊர் வாசின்னு சொல்லிக்கிற கொஞ்சப் பேர் கூட மனக்கசப்போடுதான் எங்களைப் பார்க்குறாங்க. என்னமோ அவுங்க நெலத்தை நாங்க அபகரித்துக் கொண்டதா நெனைப்பு.

எங்கக்கிட்ட வேலை வாங்குற கப்பவைஷர்மார்க்கிட்ட கூட மனித பாசமில்லாத ஒரு வேறுபாடு. நாங்க தின்னமோ திங்கலையோ... ஆனா வேலையை உருங்கா செய்யனுமின்னு கண்டிப்பா இருக்காங்க. எங்கத் தேவைகளைப் பத்தி சொன்னா... போரஸ்ட் அதிகாரிங்க வருவாங்க... அவுகக்கிட்ட கேட்க வேண்டியதானேனு பதில் சொல்லுறாங்க.

குளிர் ஜாஸ்தி, பிளங்கெட், கம்பளிச் சட்டை எல்லாம் தருவதாக மண்டபத்தில் அதிகாரிங்க சொன்னாங்க. ஆனா அதுவும் வந்து சேரல்ல.

கொட்டிலும் குடிசையுமா எங்கக் குடியிருப்பு. சிலோன்ல தோட்ட லயத்து வாழ்க்கையில் தின்னமோ

தின்னலையோ... ஆட்கள் மத்தியில் ஒரு பாச உணர்வும் ஒத்துமையும் இருந்துச்சி ஆனா இங்க.. அதிகம் வேறுபாடுதான்.

இங்கே எங்களுக்காக சாமான் கொடுக்கும் கூப்பன் கடைக்காரன் கூட.. டிப்போவிலிருந்து "செக் வல்ல... சாமான் கொடுக்க முடியாதுன்னு" சொல்லிட்டான். என்னமோ அவனக் கெஞ்சிக் கெலரி வயித்தக் கழுவி அரிசி பருப்பு வாங்க வேண்டியிருக்கு.

அங்க எல்லாத்தையும் விட்டுப் பிரிஞ்சிட்டு ஒரு தன்னம்பிக்கையில் வந்தோம். ஆனா எல்லாமே காத்தடிச்சு முறிஞ்சி விழுந்த மரமா போயிருச்சி, இங்க எங்கள சீந்த ஒரு நாதியில்லை. இங்க காஞ்சக் காட்டக் குச்சிங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாராளமா கெடக்கு. ராவ்ல.. குளிர் கூறப்ப அந்த விறகுக்கு தீ முட்டித்தான் குளிர் காய்றோம்.

அதிகாரிங்க யாராவது இருந்து இருந்து இந்த மேட்டு பகுதிக்கு வருவாங்க. இங்க எப்படி வேலை நடக்குதுன்னு பாக்க வருவாங்களே தவிர, இங்கேயும் ஒரு கூட்டம் வேதனையோடு உழைச்சிக்கிட்டு இருக்குன்னு அவுங்க நெனைக்கிற மாதிரி தெரியல்ல.

போன வாரத்தில் ஒரு நாளு, ஜீப்பில் அதிகாரிமாரு ரெண்டு பேரு வந்தாங்க. ஜீப்ப கண்டதுமே எங்களுக்கெல்லாம் சந்தோஷமா இருந்திச்சு...

அதிகாரி வந்திருக்காங்க.. சம்பளம் கெடச்சிமின்னு ஆசையா இருந்தோம். ஆனா அவுங்க நாங்க செஞ்ச வேலையில அதுல நொட்டம் இதுல நொட்டமுன்னு சொல்லிவிட்டு போயிட்டாங்.

நாங்க சம்பளத்தை பத்தி கேட்டா மௌனம்..

நாங்க புணர்வாழ்வுல வந்து இவ்வளவு காலம் ஆகுது. ஆனா .. இன்னும் சம்பளம் கெடைக்கல. எப்பவாவது காட்டு மரங்கள ஏத்த பள்ளத்து டவுன்ல இருந்து லொரி வரும். ஆதல ரெண்டு மூனு அரிசி மூட்டைகளை ஏத்திக்கிட்டு வர்ர அதிகாரிங்க, அத இங்கவுள்ள ஜீவன்களுக்குகாகப் பிரிச்சிக் குடுத்திட்டு போயிடுவாங்க. ஏதோ ஒரு பெரிய சேவைய செய்ததாக அவுக சொல்வாங்களே தவிர எங்க கஷ்டத்தைப் பத்தி சொல்லமாட்டாங்க. மலைக் குளிரைத் தாங்கிக்க எங்களுக்கு கம்பளி பிளெங்கட் கொண்டாந்து தருவதாக சொன்னாங்க, ஆனா இன்னும் காணோம்.

உடுப்புத் துணிமணிக்கிக்கூடக் கஷ்டந்தான். உங்கள எல்லாம் கவனிக்க டாக்டாமாரு வருவாங்கன்னு எப்பவோ சென்னாங்க... இதுவரைக்கும் எந்த டாக்டரும் இந்த மலைக்கி ஏறி வந்ததா தெரியல. இந்த நேரத்லதான் அந்த சிலோன் வாழ்க்கைய நெனைச்சிப் பார்க்குறேன். தாயகத்துக்குப் பொயிட்டா பெரிசா வாழலாமின்னு தான் வந்தோம். வந்த பொறவுத்தான் தாயகத்தோட நெலமையே தெரியுது.

'யண்ணே.. இங்க பெட்டினா அடிக்க முடியாது. வேணுமின்னா மூங்கில் வெட்டி ஒரு பாடை கட்டிருவோம்.' என்றான் ராகவன்.

'அது சரி பொணத்த எங்கன அடக்கம் பண்றது.'

'அடக்கம் பண்ணுற எடமா, வைத்திய காத்தாலையே பள்ளத்து டவுனுக்கு அனுப்பிருக்கேன். அவன் வந்தாப் பொறவுகத்தான் வெவரந் தெரியும்.'

'எப்பிடி?...'

'டவுன்ல இருக்குற பெரிய அதிகாரி இங்கனத்தான் புதைக்கனுமுன்னு கடுதாசி குடத்தப் பொறவுத்தான் குழியே வெட்டனும். அதுனால வைத்தி வந்தப் பொயவுக் முடிவு சொல் முடியும்...' என்ற ராகவன் பக்கத்து குடிசைகளில் இருந்து வந்திருந்த ரெண்டு பேத்தக் கூட்டிகிட்டு, பக்கத்திலுள்ள மூங்கில் காட்டுக்குப் போனேன். பாட கட்ட மூங்கில் வெட்ட.

வெயில் தலை காட்டத் தொடங்கியது. பள்ளத்து டவுனுக்கு போயிருந்த வைத்தியும் மலைக்கு வந்து சேர்ந்தான். அவன் என்ன முடிவு கொண்டு வந்திருக்கானோ...?

'ராகவா!... அந்த அதிகாரி குண்டு தரலப்பா. பொணத்த அவரு பாத்தப்பொரவுத்தான் பொதைக்கப் பாஸ்பண்ணுவாராம்.' மேல் மூச்சி கீழ் மூச்சி வாங்க அவன் சொன்னான்.

'அவரு வந்து பார்க்கனுமா? அவரு எப்ப வரப்போறாராம்? அவருத்துக்கு இங்க வர முடியாதாம் நாமத்தான் பொணத்தைக் கொண்டு போய் அவருக்கிட்ட காட்டனுமாம். அப்பத்தான் நல்லுசாமி செத்துப் போயிட்டான்னு பதிவு பண்ணிக்கிட்டு, இங்கப் பொணத்த புதைங்கன்னு எடத்தையும் சொல்லுவாராம்.'

'அதுனால நாம பொணத்த தூக்கிட்டு போவனும்...அப்பிடித்தானே...? ஆமா... ஆமா.. தூரந்தான் .. என்னா செய்ய..?'

பாடை தயாரானது. நல்லுசாமியன் பொணத்த பாடையில வச்சி, அத அதிகாரிக்கிட்ட காட்ட, பாடையை சுமந்துக்கிட்டு பள்ளத்து டவுன் நோக்கி இறங்கினோம்.

இறக்கமான இறக்கம்... ஜீப் போகும் சாலை வழியாகப் போனால் நேரம் எடுக்குமுனு சில இடங்கள்ல குறுக்குப் பாதை வழியாகவும் பொணத்தை தூக்கிக்கிட்டு நடந்தோம்.

நல்லுசாமியின் பொணத்தப் பாத்துத்தாரோ என்னமோ, அதற்கிடையில் எம்மிடம் ஆயிரம் கேள்விகள் கடைசியில், இங்கே கொண்டு போய் புதை என ஓடர் குடுத்தார். அவர் குறிப்பிட்ட ஒரு இடம் எங்கள் மலைப்பகுதியில் இருக்கும் ஒரு இடம்தான். மீண்டும் நாங்கள் பொணத்தைத் தூக்கிக் கொண்டு ஏத்தத்தில் ஏறினோம். நேரம் ஆக.. ஆக.. பாரமும் கூடிக் கொண்டிருந்தது. எனக்கு, தோள்பட்டை எரிவெடுத்தது. விச்சம் வேறு... எப்படியும் சுமந்து ஆகனுமே.

நாங்கள் சுமந்து கொண்டு ஏத்தத்திலே நடந்தோம். கருக்கல் கூடிக்கொண்டிருந்தது. வாழ்க்கையில் ஒளி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் தாயகம் வந்தோம்.

ஆனா அந்த ஒளி .....?

இருள் கூடிக் கொண்டிருந்தது.

நாங்கள் எங்களில் ஒருவனின் பொணத்தைச் சுமந்து கொண்ட அந்த குமரிக்காட்டில் ஓர் ஒற்றையடிப் பாதையில் நடந்து கொண்டிருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளயா

*மொழிவரதன்*

சிறுகதை

'பொறலந்த, ஆவேலி, கல்பாலம், கந்தப்பொல, பறுக்சைட், ராகலை ...'

'பொறலந்த, ஆவேலி, கல்பாலம், கந்தப்பொல, பறுக்சைட், ராகலை ...'

வேன் நுவரெலியாவின் தனியார் வாகனம் நிறுத்துமிடத்திலிருந்து புறப்பட்டு தபால் கந்தோருக்கு முன்னால் ஒரு சுழற்சி சுழன்று ஓடியது.

அவ்விடத்திலிருந்து கூப்பிடு தொலைவிலுள்ள பஸ் தரிப்பில் இருக்கும் ஆட்களை இழுப்பதே இந்த சுழற்சியின் சூட்சுமம்.

பையன் மீண்டும் கத்துகிறான்.

'பொட்டக் நவத்தின்ட்ட' - 'கொஞ்சம் நிறுத்துங்கள் ...'
'கொகேத யன்னே ? ஆ ... என்ட என்ட ஷீட் தென்னங்'

குழந்தையுடன் நின்ற ஓர் அம்மாவை ஒரு மாதிரி வேனுக்குள் ஏற்றிவிட்டான்.

மீண்டும் வேன் தனியார் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் நிறுத்தப்பட்டது. உள்ளே இருந்தவர்கள் தமக்குள் முனகிக் கொண்டார்கள். பையன் அதனைப் புரிந்து கொண்டு சிங்களத்தில் கூறுகிறான்.

'இப்போ போறோம் ... போறோம், பஸ்சுக்கு முன்னால் எப்படியும் போய் விடுவோம்.'

மீண்டும் அதே ஓசை, அதே அந்த 'இல்லாத ஷீட்டை' ஏற்படுத்திக் கொடுக்கும் திறமையின் வெளிப்பாடு.

எப்படியோ வேன் புறப்படுகின்றது.

மூட்டைகள் அடைந்தது போல் மனிதக் கூட்டம் திணிக்கப்பட்டிருந்தது. தன்னை ஒருவாறு ஆசுவாசப் படுத்திக் கொள்ளும் பையன் உதட்டில் துண்டு சிகரெட் விளையாடுகிறது. கரியநிறம் பரட்டைத்தலை. நல்ல சிங்களப் பேச்சு. பரபரப்புமிக்க கண்கள் அரையில் நாசுக்காய் கட்டப்பட்டிருக்கும் சாரம். இத்தியாதிகளுடன் தினமும் இந்த மயத்தியா வேனில் தொங்கிக் கொண்டு வரும் கோளயா தான் சுப்பிரமணியம் அவனை சுப்பு என்றே அழைப்பார்கள். என்றாலும் எல்லாம் அவன் விரும்புவதில்லை.

அலவாங்கு தோட்டத்தில் முத்துசாமி, கருப்பாயி தம்பதிகளின் பத்தாவது கடைக்குட்டியாக வந்து இப்பூவுலகில் உதித்தவன்தான் சுப்பிரமணியம். நிறத்தில் கருப்பாயியையும், முகவெட்டில் முத்துசாமியையும் நினைவுபடுத்துபவன்.

பத்தாவது பிள்ளையாக வந்தவன் படிக்க முடியுமா? தோட்டத்துப் பாடசாலையில் ஒரு ஐந்தாம் வகுப்பு வரை வாசித்தான். சனநெருக்கம் நிறைந்த அவர்கள் வீட்டுக் காம்பிராவில் இரவில் படுக்கக் கூட இடமில்லாத வேளையில் படிக்க சூழல் உருவாகவில்லை. ஏதோ ஒப்பம் வைக்க நாலு எழுத்து தெரிஞ்சா பத்தாதா ? என்ற காலனித்துவத்தில் மறுபிறவி முத்துசாமி பையனையும் உருப்பட விடவில்லை. ஐந்தாம் வகுப்புடன் படிப்பை முடித்து குருவி, நண்டு, ஓணான் அடித்துத்திரிந்த சுப்பிரமணியத்தை சிறிது நாளில் டவுனில் சுருட்டுக் கடை வைத்திருக்கும் ஆறுமுகத்திடம் கொண்டு போய் விட்டான். வெற்றிலை, பாக்கு, பழம், சுண்ணாம்பு, இனிப்பு, புகையிலை எனப்பல்வகை பொருட்களை விற்கும் வியாபாரியான ஆறுமுகம் சாப்பாடு கொடுத்து மாதம் ஐம்பது பையனின் பெயரில் புத்தகத்தில் போடுவதாகக் கூறி வேலைக்கு சேர்த்துக் கொண்டார்.

சும்மா இருந்து சாப்பிட இயலுமா ? ஏதாவது நாலு பணம் ஒழைக்க வேண்டாம் என்ற கொள்ளையின் அடிப்படையில் அவன் கடையில் சேர்க்கப்பட்டான்.

'நீர் ஒன்றும் கவலைப்படாதேயும். பையனை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என முதலாளி உறுதிமொழி பகர்ந்தார். அதிகாலையில் எழுவது கடையின் முற்பகுதியை, வாசலை கழுவுவது, மஞ்சள் நீர் தெளிப்பது, ஊதுபத்தி பற்ற வைப்பது, வெற்றிலையை பிரித்து அடுக்குவது சாமான் கட்டிக் கொடுப்பது மாலையில் 'பில்கலக்ஷன்' போவது ... இப்படியே சுப்பிரமணியமும் சுருட்டுக் கடையில் சுழலலானான்.

காலம் ஓடியது. சுப்பிரமணியம் துருதுருத்தவன். நகரில் நாளையும் கற்றுக்கொண்டான். எல்லோருக்கும் தன்னை அறிமுகம் செய்து கொண்டான். நகரம் அவனுக்குப் பிடித்தது. அவன் நகரைப் பிடித்துக் கொண்டான்.

இவ்வேளையில் .......
தீபாவளி களை கட்டியது.

முத்துசாமி தீபாவளிக்கு பையனை வீட்டுக்கு அழைத்து வர கடைக்கு வந்தான். முதலாளியிடம் விசயத்தைக் கூறி பையனின் சம்பளத்தைக் கேட்டான். புத்தகத்தில் பணம் உள்ளதாகக் கூறிய முதலாளி 50 ருபாவுடனும், ஒரு சாரத்துடனும் பையனை வீட்டுக்கு அனுப்ப முயன்றார்.

தண்ணி கொஞ்சம் 'பாவித்து' விட்டு வந்திருந்த முத்துசாமி கண்டபடி உளரத் தொடங்கி விட்டான். அவன் போட்ட சத்தம் அந்தக் கடைக்கு முன் ஒரு கூட்டத்தையே கூட்டிவிட்டது. மானம் போவதை உணர்ந்த முதலாளி ஏதோ கொடுப்பதைக் கொடுத்து கணக்கைத் தீர்த்தார்.

தீபாவளி கலகலப்பு முடிய சுப்பிரமணியம் மீண்டும் டவுன் னடைக்கு போகவில்லை. அவன் லயம் வழியே நகர பாணியில் திரிந்தான். முத்துசாமி மீண்டும் பையனைப்பற்றி யோசித்தான். அவனை எப்படியாவது சம்பாதிக்கும் ஆளாக்க வேண்டும் என்ற எண்ணம் மீண்டும் துளிர் விட்ட வேளையில் ஃமஹத்தயாO வேன் ஞாபகமும் கோளயா வேலையும் மனதில் நிழலாடியது.

நாட்டுக்கு 'மஹத்தயா' விட்டுக்கு கள்ளுக்குடிக்கப் போன முத்துசாமி கோளயா வேலையையும் ஒழுங்கு பண்ணிக்கொண்டான். அது அடுத்த நாளே நடைமுறைக்கு வந்தது.

வேன் கந்தப்பளையை வந்தடைந்தது. எங்கும் பணிப்புகார் மண்டலம் மிக லாவகமாக கதவைத் திறந்து ஆட்களை 'பயிண்ட' பண்ணினான் கந்தபளைக்கு பணத்தைக் கொடுத்து அங்கு இறங்காது உள்ளே ஓர் அம்மாவைச் சாடினான். பரவாயில்லை, தமிழ்ப்பையனின் வாயில் சிங்களத்துஷணம் நன்றாகத்தான் ஒலித்தது.

கிழங்கு தோட்டத்தில் வேலைக்கு வரும் கூட்டம் வேனுக்குள் நுழைந்தது. புளி மூட்டைகளை அடுக்குமாப் போல் யாவரையும் திணித்தான்.

'அன்னைக்குமாதிரி அரை குறை காசு குடுக்கிறதில்லே முழுக்காசு வேனும் ...'

என ஒரு சிவலை அம்மாவைப்பார்த்து எச்சரித்தான். வெற்றிலைக் காவி நிறைந்த தனது வாயைத் திறந்து எல்லோருக்கும் காட்டிச் சிரித்த அந்த அம்மாள், 'என்னாத்தம்பி முத்துசாமி மவனே பேச்சுக் கூட கொளறுதே. அட நானதாண்டா ஒன்னை மடியில் போட்டு கால்கை கழுவி வளர்த்த அம்முனி ...' என்றாள்.

அதனைக் காதில் போட்டுக் கொள்ளாத சுப்பிரமணியம் வேன் புறப்பட 'ரைட்' போட்டு விட்டு ஓடித் தொத்தி ஏறினான். அவனது ஷேட்டும், தலைமயிரும் கந்தப்பளை காற்றுக்கு அழகு காட்டியது.

'புறாக்சைட், சூரியகந்த, றாகலை'

'புறாக்சைட், சூரியகந்த, றாகலை'
சுப்பிரமணியம் கத்தினான். காரணம் கந்தப்பளை இறைச்சிக்கடைக்கு பக்கத்தில் ஒரு கூட்டம் நின்றதுதான் டிரைவரும் சற்று நிறுத்திப் பார்த்தார். அவர்கள் சிரித்தபடியே றோட்டோடு நடந்தனர். பளபளக்கும் உடலில் மினுமினுக்கும் கவுன்கள் காற்றுக்கு யௌவனம் காட்டின வேன்காரனின் கரம் ஹோனில் பட்டு ஒலித்தது.

சுப்பிரமணியம் றோட்டு வலையில் கழுத்தை நீட்டிப் பார்த்தான்.

'கவுதோ ஹாய்பைகாரயோ ?'
ஏரோ பெரிய ஹாய்பைகாரர்கள் என முனகிக் கொண்டான்.

'அ ... காசு எடுங்க ... எடுங்க'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என தனது விரல் இடுக்கில் இருக்கும் நோட்டுக்களைச் சரி செய்து கொண்டு பிரயாணிகளை மிரட்டினான்.

'சுஜகாசு குடுத்துதானே போறோம் சும்மாவா போறோம் இறங்கையிலே தாறோம் ...'

என தன்மானத்தமிழன் ஒருவன் இரைந்தான்.

வேன் ஓடியது. தனது உடலை உள்ளே சீட்டுகளுக்கிடையில் திணித்து, நுழைத்து நோட்டுக்களைக் கறந்தான் சுப்பிரமணியம்.

வேன் புறாக்சைட் சந்தி வந்த நின்றது. ஒரு பெரிய கூட்டம் வேனுக்காக காத்து நின்றது ஒரு சிறிய கூட்டம் வேனிலிருந்து இறங்கியது.

சுப்பிரமணியம் மீண்டும் மனித மூட்டைகளை உள்ளே அடுக்கினான் நல்ல சனம் டிரைவருக்கு நல்ல சந்தோஷம் வழமைபோல் 'ஹரி ஹரி' எனக் கத்தினான் சுப்பிரமணியம். வேன் குலுக்கலுடன் புறப்பட்டது. சுப்பு பின்னால் தொத்திக் கொண்டு வந்தான்.

திடிரென வெனின் முன்னால் நாய் ஒன்று பாய்ந்தது. டிரைவர் பிரேக் ஒன்று போட்டான். மீண்டும் வேன் திடிரெனப் புறப்பட்டது முதல் பிரேக்குடன் கீழே விழுந்த சுப்பு பாதையில் கிடக்க வேண் வேகமாக ஓடியது. அவனுக்கும் வேனுக்கும் இடையே இடைவெளி நீண்டுகொண்டிருக்க பிரயாணிகள்.

'கோளயா விழுந்திட்டான்'
'கோளாயா விழுந்திட்டான்'
என அலறினார்கள்.

வேன் நிறுத்தப்பட்டது. எல்லோரும் ஓடோடி வந்து சுப்புவைத் தூக்கினார்கள். மண்டையில் அடிப்பட்டு இரத்தம் ஓடியது. வேனுக்குள் ஏற்றப்பட்ட சுப்பு இறாகலை நோக்கி எடுத்துச் செல்லப்பட்டான்.

அவன் மயக்கத்தில் ஆழ்ந்திருந்தான். முனகினான்.
'ஆவேலி ...... பொரலந்த ...... கல்பால .....ம்'
'ஆ ...வே ...லி ... பொர லந்த ........ க ல் பா .....ல .....ம் ....
இ .... ரு ....க ...ல'
'ஆ .... வே .... லி .....'

'.......................................'
'.......................................'

இந்த நாட்டில் இது போல் இன்னும் எத்தனை கஷிகோளயாக்கள்ோ ... சுப்பிரமணியமாய் பண்டாவாய் நஸிராய் ... பிஞ்சுவயதில் உழைப்பை விற்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாடு

**சிறுகதை**

***பி. மரியதாஸ்***

பச்சையில் துளிர்வெள்ளையாக தளதளவென்று மதர்த்து நிற்கும் கொழுந்தைப் பார்க்கும்போது ரங்கம்மாவிடம் நிமிடத்திற்கு நிமிடம் வேகம் கூடுகிறது.

விஞ்ஞான யுகத்தில், இந்த மரகதத் தீவில் கொழுந்து பறிக்கும் யந்திரம் வராவிட்டாலும், அதற்கொரு யந்திரம் தேவையில்லை. அப்படியொரு யந்திரம் வந்தாலும் அதையும் விட வேகமாக எங்கயால் கொழுந்து பறிக்கு முடியும் என்பதைச் செயலால் நிருபிப்பது போன்ற பெண்கள் வேகம் வேகமாகக் கொழுந்தெடுக்கிறார்கள்.

கைகளில் மென்மைதான்! அதில் நெளியும் லாவக நொடிக்கு கணத்துக்குள் கைநிறைய கொழுந்தை அடக்கித் தானாகவே, தன்னிச்சைத் தொழிலாக, பக்கவாட்டில், முதுகில் தொங்கும் கூடைக்குள் கொழுந்தை எறியும் யந்திரப்பான்மை, மென்மையில் தோய்ந்த திண்மையையும், அப்பியாச முதிர்ச்சியையும் காட்டுகின்றது. யந்திரம் போன்ற உழைப்பு, ஆனால் யந்திரம் போன்ற ஜடப் பொருளில்லாத இரத்தமும் தசையும் உள்ள உயிர்ப்பு நொடியுள்ள மனிதப் பெண்களின் உழைப்பு!

கங்காணி தன்பாட்டில் நின்று கொண்டிருக்கிறார். காலை நேரங்களில் கங்காணி அதிகமாக சத்தம் போடவேண்டியிருக்காது.

ரங்காம்மாவின் கைவிரைவு கூடக்கூட கூடை அசுர வேகத்தில் நிறைந்து கொண்டிருக்கிறது. சுற்றுமுற்றும் பார்ப்பதையோ அடுத்த நிரைக்காரியிடம் பேசுவதையோ மறந்த நிலையில் கர்ம சித்தியில் உளம் லயிக்கவிட்ட யோகியைப் போன்று, காரியத்தில் தன்வசம் இழந்தவளாய் அவள்கொழுந்து கிள்ளிக் கொண்டிருக்கிறாள். பார்ப்பதற்கு அவள் இப்படி எல்லாவற்றையும் மறந்து காரியத்தில் சித்தங்கலந்தவளாக இருந்தபோதும், அவளது மனம் விட்டைப்பற்றியும், பிள்ளைகளைப் பற்றியும், ஃபஸ்டோரிலே வேலைசெய்யும் கணவனைப் பற்றியும் எண்ணி, சுற்றிச்சுழன்று சக்கரவட்டம் போட்டுக் கொண்டி ருக்கிறது. கொழுந்தைக்கிள்ள அவளது மனம் அதில் பதிய வேண்டியதில்லை அவளைப் பொறுத்தவரையில்! கைகள் தானாகவே இயங்கும் யந்திரத்தன்மைபெற்ற தொழிலாளிப் பெண் அவள்!

பனித்துளி மறையாத தளிர்கள் வெண்பற்களைக் காட்டிச் சிரிப்பதைப் போன்று நிமிர்ந்து நிற்கும் அழகு பார்க்கப் பரவசமூட்டும் அழகு. இப்படித்தான் கார்த்திகை, மார்கழி மாதங்களில் இரவில் பெய்யும் பனியும், பகலில் கொளுத்தும் வெயிலும் செய்யும் ரசாயன மாற்றம் கொழுந்தை அள்ளி இறைக்கும். இக்காலங்களில் அதிகமாகக் கொழுந்தெடுக்க முடியுமாகையால் காலை ஐந்தரை, ஆறு மணிக்கே பெண்கள் வேலையை ஆரம்பித்துவிடுவார்கள். 'கைகாசு கொழுந்து காலத்தில எவடி வீட்டுல இருப்பா' என்று பெண்கள் பேசிக்கொள்வது சர்வ சாதாரணமானது. சகலத்தையும் மறந்து - உணவைக்கூட மறந்து - சர்வ பரித்தியாகம் என்பார்களே அதைப்போன்று, நிறைய கொழுந்தெடுப்பதைப் பற்றியே கனவிலும் சிந்தித்து இயங்கும் காட்சியை இம்மாதங்களில் காணலாம். சில தோட்டங்களில் மதியச் சாப்பாட்டிற்கு கூட பெண்கள் அனுப்பப்படுவதில்லை. மின்சார வசதியற்ற கொழுந்து மடுவங்களில் இம்மாதங்களில் மாலையில் 'கேஸ்லைட்' எரிவதைக் காணலாம்.

இன்றைக்குப் பத்து மணிக்கு தினம் வருவதைப் போன்று ரங்கம்மாவுக்குத் தேநீர் வராது. காலையில் போட்ட ஃமல்லித் தண்ணியிலே கொஞ்சத்தை மிச்சம் வைத்துவிட்டு வந்திருந்தால் மகன் அதைக் கொண்டு வருவானே என்பது இப்பொழுதுதான் அவளுக்கு நினைவுக்கு வருகிறது. கணவனுக்கும் இன்றைக்கு தேநீர் கிடையாது. என்ன செய்வது? காலையில் வெள்ளென எழும்பி கோலம் போடுவதைக் கூடச் செய்யாமல் மல்லி வறுத்து இடித்து, அதில் சிறிதை மதியத்திற்கு வைத்துவிட்டு மீதியை கேத்தலில் போட்டு வேகவைத்து காலைத் தேநீரைச் சமாளித்தாள். மத்தியானம் போய் மல்லி வறுத்து இடித்துக் கொண்டிருக்க முடியாது.
ரங்கம்மாவிற்கு ஒரு வயதான கடைசி மகன் காலையில் மல்லித்தண்ணீர் குடிக்க மறுத்து அடம்பிடித்தது நினைவிற்கு வந்தது. உடம்பிற்கு நல்லது என்று அவனை அதைக் குடிக்கச் செய்தது அவளுக்குப் பெரும் பாடாய்போய்விட்டது. மற்ற இரண்டு பிள்ளைகளும் இதைக் குடித்துவிடுவார்கள். மாதத்தில் ஏழு, எட்டு நாட்கள் தேநீருக்குப் பதிலாக மல்லித் தண்ணீர் குடித்து அவர்களுக்குப் பழக்கமாய் போய்விட்டது. இத்தகைய சிந்தனை கலவையோடு அந்திக்கு என்ன செய்வது என்ற நினைவில் அமிழ்ந்திருந்த ரங்கம்மாவை ஃகொழுந்து கொண்டு வரச்சொல்லும்ே கங்காணியின் குரல் திருப்பிவிட்டது.

சூல் நிறைந்த நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்களைப்போல் பெண்களெல்லாம் தங்களுக்கு முன்னால் கொழுந்துக் கூடையை இறக்கிவைத்துவிட்டு வரிசையாக நின்றார்கள். ஒவ்வொருவரும் இடையில் கட்டியிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'படங்கை'அவிழ்த்து முன்னால் விரித்து அதில் கொழுந்தைக் கொட்டி, பிள்ளைகளுக்குப் பேன் பார்ப்பதைப்போல கொழுந்தைக்கிண்டி கஷிமாட்டை கஷனர்க்காம்புகளை பொறுக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

எழுதப் பழகும் சிறு குழந்தை தன்னிச்சைப் போக்கில் கிறுக்கி விளையாடும் கோணற்கோடுகளைப் போல புதிதாக வெட்டப்பட்ட புதிய ரோடு மெலிந்து மெலிந்து, மறைந்து, மறைந்து தெரிகிறது. யதேஸ்டமாக குழந்தை கீறிய கோடு சில இடங்களில் நேராக விழுந்து விடுவதைப் போன்று சிற்சில இடங்களில் ரோடு நேராகச்சென்று, காற்றுக்கு ஆடிமறையும் செடியைப்போல வளைவில் மறைந்து, பின்னர் தோன்றி மறைந்து நெளிந்து செல்கிறது.
கங்காணி ஒருவர் நிறுத்திப் பிடித்த நிறுவைத் தடியில் தராசுக் கொக்கியில் கஷிகொழுந்துத் தட்டு தொங்கிக் கொண்டிருக்க, அதில் பெண்கள் கூடைக் கொழுந்தைக் கொட்டி நிறைக்க, தராசைப் பார்த்து கஷிகொழுந்துத் துண்டில் றாத்தலைப் போட்டு கணக்கப்பிள்ளை பெண்கள் ஏந்தும் கூடைக்குள் அதனைப் போடுகிறார். முப்பது... முப்பத்தஞ்சி... என்று கணக்கப்பிள்ளை றாத்தல் சொல்லும் சத்தம் மட்டும் மணிக்கூட்டின் ஒலியைப் போல கேட்டுக்கொண்டிருக்கிறது. நிசப்தமான, ஆனால் ஒலி மரணிக்காத, பெரிய மணிக்கூண்டு இயங்கும்போது எழும் கிர்ரென்ற ஒலியைப் போன்று முணுமுணுப்பு மெதுவாய்க் கேட்டுக்கொண்டிருக்கிறது.

கீழே நெளிந்து வரும் ரோட்டில் பெரியதுரை காரில் வருவது தெரிகிறது. கொழுந்து நிறுத்து முடித்து ஒதுக்கங்களில் பிள்ளைகள் கொண்டு வந்த தேர்ரப் போத்தலோடு சரித்துக் குடித்துக்கொண்டிருந்த பெண்கள் துரையின் கார் கீழே வருவதைக் கண்டு, தேநீர்ப் போத்தல்களை எடுத்துக்கொண்டு நிறைக்கு விரைகின்றனர்.

துரையின் கார் முனியாண்டிக் கோவில் கஷழடக்கில் நிற்கிறது. ரோட்டு கஷவங்கியை அடுத்து நிற்கும் பாதையில் எப்படியோ மேலே ஒட்டிக்கொண்டிருக்கும் மண்ணில் வேர்விட்டுத் தளைத்த ஆலமரம். பெருவிருட்சமாக உயர்ந்து நிற்கும் தன் வளர்ச்சிக்கேற்ப பாறையின் மேல் ஒட்டிக்கொண்டிருக்கும் வேர்களை கூடாரக் கயிறுகளைப் போல பக்கவாட்டில் நீட்டி பாறையின் ஓரங்களின் வழியாக மண்ணுக்குள் நுழைந்து, அதன் பலத்தில் நின்று கொண்டிருக்கிறது. மரத்தைச் சுற்றி விழுதுகள் கற்றை கற்றையாகத் தொங்கி பாறையைச் சுற்றியுள்ள தரையில் தங்களது நுனியை நுழைத்து மரத்திற்கு மேலும் பலத்தையும், வளத்தையும் கொடுத்துக்கொண்டிருக்கின்றன. துரை மேல் மலைக்கு வந்தால் சிறிது நேரம் காரை நிறுத்தி முனியாண்டிக் கோவிலைப் பார்க்காமல் போகமாட்டார். மரத்தின் இடுக்கிற்குள் கல்லில் அமர்ந்து மரத்தில் சாய்ந்து கல்லாய் சமைந்திருக்கிறார் முனியாண்டி. முன்னால் இரண்டு மூன்று வேர்கள் அதற்குக் காவலிருப்பதைப் போன்று மண்ணில் எழுந்து நிற்கின்றன.

துரையின் பக்தியைப் பற்றித் தொழிலாளர்கள் பேசிக் கொள்வார்கள். அவர் தமிழரில்லை. ஆங்கிலேயர் அப்படியிருந்தும் அவர் முனியாண்டியை வணங்குகிறார் என்றால் அதில் உண்மைப் பக்திதானே தெரிகிறது. அவர் புதிதாக வந்த துரை. வந்து ஐந்துமாதங்களாகின்றது. முன்பிருந்த பறங்கித்துரை அங்கேயே பதினைந்து வருடம் இருந்தவர். அவர் காரில் வரும்போது சும்மா ஆலமரத்தைப் பார்த்துக்கொண்டு வருவாரே தவிர இறங்கி கீழே நின்று இவரைப்போல பக்தியோடு பார்ப்பதில்லை.

புதிய துரைக்கு அந்த ஆலமரத்தைப் பார்க்க ஒரே வியப்பு. தான் நிற்கும் இடத்தில் தனக்கு எவ்வித பலமும் இல்லாது. பக்கவாட்டில் சென்று தரையில் நுழையும் வேர்களினதும், விழுதுகளினதும் பலத்தில், தன்னில் ஆதாரமின்றி பூதாகாரமாய் வளர்ந்து நிற்கும் ஆலமரத்தின் நிலையைப் பார்க்க துரைக்கு ஒரே வியப்பாக இருக்கும். ஒவ்வொருமுறை அப்படியே செல்லும் போதும் காரை நிறுத்தி அதனைச் சிறிது பார்த்துக் கொண்டிருப்பார். மரத்தைச் சுற்றிப் பார்த்ததும் உண்டு. தன்னில் பலமின்றி, தனக்குப் பலமாக தன்னில் வளர்ந்தவைகளின் பலத்தில் நிற்கிறது அந்த ஆலமரம்! மரத்தில் சாய்ந்திருக்கும் முனியாண்டியையோ, முன்னாலிருக்கும் வேல்களையோ அவர் உன்னிப்பாகப் பார்த்ததில்லை. தனது மனைவியிடம் கூட துரை இந்த ஆலமரத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார்.

துரையின் கார் புறப்படுகிறது. சுற்றிலும் மலையை நோட்டம்விடுகிறார். மலையெங்கும் கொழுந்து பூத்துக்குலுங்குகிறது. நிச்சயமாக இம்முறை இப்பகுதியில் ஒரு கஷிரக்கார்ட்டை ஏற்படுத்தி விடலாம் என்ற மகிழ்ச்சித் திவலைகள் முகத்தில் விழுகின்றன.

இன்னும் கொழுந்து நிறுத்துமுடிவில்லை. பச்சிலை மலையாகக் கொழுந்து குவிந்து கிடக்கிறது. இளம் பெண்கள் இருவர் கொழுந்துச் சாக்கை விரித்துப்பிடிக்க, ஒருத்தி கொழுந்தை அள்ளியள்ளி அதனுள் நிறைத்து அப்பால் தூக்கி வைக்கின்றனர். தட்டுக்காரர் தராசில் கொழுந்துச்சாக்கை நிறுத்து அப்பால் வைக்க மற்றொரு பெண் கொக்கிகளினால் சாக்கின் வாய்களை மூடிக்கொழுவுகிறாள். கிளாஸ் நைலோன் சாரியணிந்த பெண்ணின் அங்கங்களைப் போல சாக்கிற்குள் இருக்கும் கொழுந்துகள் வெளியில் தெரிகின்றன. துரை காரை நிறுத்தவில்லை. காருக்குளிருந்து துரையின் அல்சேசன் நாய் எட்டிப் பார்க்கிறது. அது குறிப்பிட்ட ஒரு காலத்திலன்றி மற்ற நாட்களில் வெளியில் போகாது. அதனால் தான் துரை காரில் வைத்து மலைக்குக் கொண்டுவருவார். கார் கஷமட்டத்து மலையை நோக்கி நகர்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் பதினொன்று இருக்கும். வெயில் தணலாய் கொழுத்துகிறது. ரங்கம்மா கூடை கனப்பதை உணர்கிறாள். மேலே இருக்கும் சின்னரோட்டு வரை எப்படியாவது போய்விடவேண்டுமென்று மேலும் வேகமாகக் கைகளைப் பாய்ச்சுகிறாள். சின்ன ரோட்டில் கூடையை இறக்கி மேலே வழியும் கொழுந்தை உள்ளே அமுக்கி, முருங்கை மரநிழலில் கூடையைத் தூக்கிவைத்துவிட்டு, தலையில் ”கங்காணி” மடித்துப் போட்டிருந்த வேஷ்டியை உதறி முடிச்சுப் போட்டு கோணியாகத் தலையிலிருந்து கீழிறக்கி மற்ற இரு முனைகளையும் இடுப்பைச் சுற்றிக் கட்டி, ”மடி” கட்டிக்கொண்டு சின்ன ரோட்டு வங்கியில் கால் வைத்து பெரிய தேயிலை ”வா”தொன்றைப் பிடித்து மெதுவாக ஏறுகிறாள்.

கைகள் இயங்குகின்றன. எங்கும் இனம் புரியாத மௌனம் நிலவுகிறது. கங்காணி ஒரு ஓரமாக நின்று ஒவ்வொன்றாகக் கொழுந்தைக் கிள்ளிக்கொண்டிருக்கிறார். இன்னும் சிறிது நேரத்தில் மதியச் சாப்பாட்டுச் சங்கொலி கேட்கும். சங்கடிக்கும் முன்னர் எப்படியாவது கூடையை நிரப்பிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் எல்லாப் பெண்களும் வேகம் வேகமாக இயங்குகின்றனர். அதிகமான பெண்கள் கூடைகளை இறக்கி மரநிழலில் வைத்துவிட்டு, தலைவேஷ்டியை அவிழ்த்து கோணியாக ”மடி” கட்டியிருக்கின்றனர். மரங்களின் முதுகில் தொங்கும் வெள்ளைத் தேன்கூடுகளைப் போல அவர்களின் முதுகில் கொழுந்து நிறைந்த கோணி வேஷ்டிகள் தொங்குகின்றன.

ரங்கம்மா, பரக்கப் பரக்க வீட்டுவேலைகளைச் செய்து கொண்டிருக்கிறாள். அடுப்பில் தோசைக் கல்லில் அவளுக்கு ரொட்டி வெந்து கொண்டிருக்கிறது. பிள்ளைகள் இருவரும் ஒரு ரொட்டியைப் பிய்த்து ஆளுக்குப் பாதியாக, சீனியில் தொட்டு தின்று கொண்டிருக்கிறார்கள். வாளியில் கொண்டு வந்து தண்ணீரை மூலையில் வைத்துவிட்டு, அடுப்பருகில் ”பலாக்கட்டை”யை இழுத்துப்போட்டு அதன்மேல் ரங்கம்மா உட்காருகிறாள். வெந்த ரொட்டியைத் தட்டில் எடுத்து வைத்துவிட்டு, கேத்தல் நீரை அடுப்பில் வைத்து, காலையில் மீதம் வைத்திருந்த மல்லித்தூளை அதில் கொட்டுகிறாள். பெட்டியில் இன்னும் கொஞ்சம்தான் இருக்கிறது. கடைகளில் மல்லி கிடையாதாம். கூப்பன் கடையில் கியூவில் நின்றுதான் மல்லிவாங்க முடியும். அதற்கு கையில் காசு வேண்டும். இதனால் என்ன விலை என்றாலும், எந்தப் பொருளென்றாலும் வாடிக்கைக் கடையில் தான் வாங்குவது வழக்கம்.

சின்னப்பையன் ரொட்டியில் பாதியைத் தின்றுவிட்டான்.
'அம்மாவ் தேத்தா'

ரொட்டியை மெல்லத்தொடங்கிய ரங்கம்மா அவனைச் சமாதானப்படுத்த முயல்கிறாள்.

ரொட்டியை மெல்லத்தொடங்கிய ரங்கம்மா அவனைச் சமாதானப்படுத்த முயல்கிறாள்.
'சீ... மல்லித்தண்ணி வேணாம்... தேத்தா தா...' அடம்பிடிக்கிறேன்.

'தேத்தாவுக்கு தூளு இல்லடா தொர. மல்லித் தண்ணிதான் ஒடம்புக்கு நல்லது. நாங்கல்லாம் அதெதான் குடிக்கிறோம். சீக்கிரம் ரொட்டியை தின்னு தொர...'

ரொட்டியோடு விரலையும் வாய்க்குள் வைத்துக் தேப்பிய குழந்தை திடீரென்று, 'ஏம்மா நம்மூட்ல தூளு இல்ல?' என்ற கேள்வியைத் தூக்கிப்போட்டான்.

'தூள் முடிஞ்சி போச்சி தொர. அதுனால தூளு இல்ல'

பேசிக்கொண்டே மல்லித் தண்ணீரை கறிக்கோப்பையில் வார்த்து சிறிது சீனியை அதில் அள்ளிப் போட்டு மற்றொரு கோப்பையில் கொதிநீரை ஆற்றி இரண்டு பிள்ளைகளிடமும் கொடுத்தாள். ரொட்டியை தின்று முடித்த ”அவர்கள்” அதைக் குடித்துகிட்டு வெளியில் போய்விட்டார்கள்.

சின்னப் பையன் அடம்பிடிக்காது மல்லித் தண்ணீரைக் குடித்தது ரங்கம்மாவிற்கு சிரமத்தை நீக்கியது. எஞ்சியிருந்த மல்லித் தண்ணீரில் தனக்குச் சிறிது கறிக்கோப்பையில் வார்த்துக்கொண்டு, மிகுதியை அடுப்பிலேயே கணவனுக்காக வைத்துவிட்டு கோபபையை கையில் ஏந்தி உறுஞ்சிக்கொண்டே ”இஸ்தோப்புக்கு” வந்தாள்.

பெண்கள் மலைக்குப் புறப்பட்டுவிட்டார்கள். ரங்கம்மா கோப்பையை 'ராக்கையில்' வைத்துவிட்டு, படங்கை உதறி இடுப்பில் சுற்றிக்கொண்டே, 'ராசா தட்டில ரொட்டி வச்சிருக்கேன் அப்பா வந்தா சொல்லு' என்று பெரிய பையனிடம் கூறிவிட்டு கூடையை எடுத்துக்கொண்டு நடையைக் கட்டுகிறாள்.

கீழே குறுக்குப்பாதையில் தனது கணவன் வருவது ரங்கம்மாவிற்குத் தெரிகிறது. ஆனால் நின்று கதைப்பதற்கு நேரமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரிமுத்து - அவன்தான் ரங்கம்மாவின் கணவன்: பேக்டரியில் வேலை. தட்டில் மனைவி வைத்திருந்த ரொட்டியில் பிள்ளைகளுக்கு ஆளுக்குக் கொஞ்சம் பிய்த்துக் கொடுத்துவிட்டு, மீதியைச் சீனியில் தொட்டு மென்றுக்கொண்டே மல்லித்தண்ணீரை உறிஞ்சிக் குடிக்கிறான்.

சாப்பிட்டு முடிந்தவுடன் வெளியில் முற்றத்தில் கிடந்த 'குத்துக்கட்டையைப்' பிளக்கத் தொடங்கினான் சிறு கட்டைதான். வெயிலின் உக்கிரத்தால் வேர்வை வழிகிறது. அதைப் பிளந்து போட்டுவிட்டு, தலை, லேஞ்சால் வியர்வையைத் துடைத்துக் கொண்டு ' இஸ்தோப்பு' ப் படியில் உட்காருகிறான். 'ஜேப்பில்' கிடந்த பிடித் துண்டைப் பற்றவைத்து 'தம்' இழுத்தவனுக்கு 'பெட்டி அடைப்பு' இருப்பது நினைவிற்கு வருகிறது. துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு, பிள்ளைகளிடம் வீட்டைப் பார்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டுப் போகிறான்.

பெண்கள் கொழுந்து நிறுப்பதற்கு வரிசையாக வந்து கொண்டிருக்கிறார்கள். பேக்கரி முகப்பில் பெரிய லொறி ஒன்றில் தொழிலாளர்கள் தேயிலைப் பெட்டியை ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். பிரமாண்டமான அந்த லொறி நிறைய தேயிலைப் பெட்டிகள். லொறி புறப்படும் போது டிரைவர் நாளைக்கு மற்ற லொறி பெட்டி ஏற்றுவதற்கு வருமென்று டீமேக்கரிடம் தெரிவித்துவிட்டு அதனை ஓட்டிச்செல்கிறார்.

ரங்கம்மா கொழுந்து நிறுத்துவிட்டு வீட்டிற்கு வந்தபோது ஆறரை மணி இருக்கும். எண்பது றாத்தல் கொழுந்தெடுத்துவிட்ட மகிழ்ச்சியில் அவளுக்கு வீட்டு வேலைகளில் சிரமம் எதுவும் தெரியவில்லை.

அடுப்பில் தளதளவென்று முச்சுவிட்டு வெந்து கொண்டிருக்கும் சோற்றுப்பானையில் மூடியை ஆட்டி கஞ்சி தெறித்து விழுகிறது. ரங்கம்மா வெற்றிலையை மென்று கொண்டேபையனின் சட்டைக் கிழிசலுக்கு ஒட்டுப் போட்டுக் கொண்டிருக்கிறாள்.

பிள்ளைகள் இருவரும் இஸ்தோப்பில் நின்று தகப்பனைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மணி ஏழாகிவிட்டது.

ரங்கம்மா சோற்றை வடித்துக்கொண்டிருக்கையில் மாரிமுத்து வந்துவிட்டான். மணி ஏழரை இருக்கும். வேலைவிட்டு வந்தவுடன் இரவில் களைப்புத் தீர ஒரு கோப்பை தேநீர் குடிப்பது அவன் வழக்கம். பிள்ளைகளுக்கும் அதில் பங்கு உண்டு.

அப்பா 'தேத்தண்ணி' குடிப்பார் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த பிள்ளைகளுக்கு அவர் வெறும் 'சுடுதண்ணியைக்' குடிப்பது பெரும் ஏமாற்றமாய்ப் போகிறது. மெதுவாகச் சின்னவன் தகப்பனின் தோளைப் பற்றுகிறான். 'ஏண்டா ராசா ......... நல்லா வெளையாண்டியா?'
'ஆமா...ப்பா'
'நீ தேத்தா குடிக்கலியாப்பா'
'தேத்தா இல்லடா தொர. தேத்தாவுக்க தூளு இல்ல'
'நீ ஏம்பா இவ்வளவு நேரம்'
'இன்னைக்கு பொட்டி அவைப்பு. ஸ்டோர்ல தூளு கூடிப்போச்சி. அதுனால நெறையா பொட்டி அடைக்க அருந்திச்சி. அதான் நேரஞ் செண்டு போச்சி'
' ஸ்டோர்ல தூளு கூடிப்போச்சி... நம்முட்ல தேத்தாவுக்கு தூளு இல்ல. நல்ல அப்பா...' குழந்தை கூறிக் கொண்டே தாவுகின்றான்.
'இன்னைக்கு எம்பதுாங்க' கூறிக்கொண்டே ரங்கம்மா சிரிக்கின்றாள். அவனும் சிரிக்கின்றான். காரணம் புரியாமலே இருவரும் சிரிக்கின்றனர்.

*(புகும்-1968)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி.வி மலையக இலக்கிய வரலாற்றில் மறக்கப்பட முடியாத முகம்

*அந்தனி ஜீவா*

மலையகக் கல்வி கலை இலக்கிய வரலாற்றில் சில மறக்க முடியாத முகங்கள் உள்ளன. இவர்களின் முகங்கள் மலையக வரலாற்றில் பதியப்பட வேண்டும். அத்தகைய மாமனிதர்களில் ஒருவர்தான் மலையக மக்களின் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளை.

மலையக ஆக்க இலக்கியத் துறையில் முன்னோடியாகவும் முதல்வராகவும் தேசபக்தன் சோ.நடேசய்யர் திகழ்ந்தாலும், மலையக இலக்கியத்தின் சிகரமாக திகழ்ந்தவர் சி.வி. என்று நண்பர்களால் இவர் அழைக்கப்பட்டார்.



இவர் மலையக மக்களின் துன்ப துயரங்களை அவர்களின் அவல வாழ்வைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி உலகறியச் செய்தவர்.

'தேயிலைத் தோட்டத்திலே.." என்ற சி.வி. யின் ஆங்கிலப் படைப்பு மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் துன்ப துயரங்களை சோகப் பெருமூச்சுகளை, ஆங்கிலத்தில் வெளிக்கொணர்ந்ததால் உலக அரங்கில் மலையக தோட்டத் தொழிலாளர்களின் துயர நிலை எடுத்துக்காட்டப்பட்டது.

'பாலைவனத்தின் மலைப் பிராந்தியத்தின் கனிச்சுரங்கங்களிலிருந்து எனது தேச மக்கள் படும் துன்பங்களை ஏற்று சுரங்கச் செல்வங்களைச் சேகரித்து வருகிறார்கள். எங்களுடைய தேசத்தின் மக்களைப்போல உலகின் எந்தப் பகுதி மக்களும் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டதில்லை" என் சிலி நாட்டு மக்களுக்காக புரட்சி கீதம் இசைத்தான் சிலி நாட்டுக் கவிஞன் பாப்லோ நெருடா. அதைப் போலவே தமது மண்ணின் மக்களுக்காக எழுதினார் சி.வி.

மக்கள் கவி சி.வி. ஒரு கவிஞர், எழுத்தாளர், தொழிற்சங்கவாதி, பாராளுமன்ற உறுப்பினராகவும் திகழ்ந்தவர். இத்தனைக்கும் மேலாக மக்களை நேசித்த மனிதாபிமானியாக, மானுடம் பாடும் வானம்பாடியாகத் திகழ்ந்தவர். தன் வாழ்நாள் முழுவதும் மரணம் அவரை அரவணைத்துக் கொள்ளும் வரை ஒரு முழுநேரத் தொழிற்சங்கவாதியாகப் பணியாற்றிக் கொண்டு சலசலப்பில்லாமல் தன் இலக்கியப் பணியை ஒரு ஞானத்தவம் போல இயற்றி வந்தார். இளமைக் காலம் முதல் அமரராகும் வரை அவரது வாழ்வும் எழுத்தும் இரண்டறக் கலந்தே வந்துள்ளது.



கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளை ஆங்கிலத்தில் மாத்திரம் எழுதவில்லை. வாழ்வற்ற வாழ்வு, உழைக்கப் பிறந்தவர்கள், எல்லைப்புறம், பார்வதி, வீடற்றவன், இனிப்படமாட்டேன் ஆகிய நாவல்களையும் எழுதியுள்ளார். 'ஆங்கிலத்தில் தொடர்ந்து எழுதிவருவதால் தமிழில் எழுதுவது கொஞ்சம் சிரமம்தான். ஆனால் ஆங்கிலத்தில் எழுதுவதன் மூலம் நமது பிரச்சினைகள் பலரின் கண்களிலும் பளிச்செனப் படுகின்றன.." என்பதை சி.வி. அடிக்கடி கூறுவார். பேராசிரியர் கைலாசபதி பற்றி சி.வி. பெருமையுடன் குறிப்பிடுவார் 'மலைநாட்டு எழுத்தாளர்களுக்கு ஐம்பது அறுபதுக்களில் தினகரன் மூலம் களம் அமைத்துத் தந்தவர் கலாநிதி கைலாசபதி. மலையக இலக்கிய வரலாறு எழுதும் பொழுது இதனைக் குறிப்பிட வேண்டும்" என்பார் சி.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் கவிமணி சி.வி. வட்டகொட அருகிலுள்ள மடக்கும்புர தோட்டத்தில் 1914ம் ஆண்டு செப்டெம்பர் 14ம் திகதி பிறந்தார். ஆரம்பத்தில் அவர் தோட்டப் பாடசாலையில் கல்வி கற்று பின்னர் அவர் அட்டனிலும் நுவரெலியாவிலும் கொழும்பு நாலந்த கல்லூரியிலும் கல்வி கற்றார்.

அட்டன் மிஷனரி பாடசாலையில் கல்வி கற்கும் பொழுது அதிபராக இருந்த ஸ்டீபன் ஜோசப் என்பவர் இயற்கையிலேயே சி.வி.க்கு இருந்த எழுத்தாற்றலைக் கண்டு ஊக்குவித்தவர். சி.வி. நாலந்தா கல்லூரியில் கல்வி கற்கும் பொழுது கவியரசர் தாகூர் இலங்கைக்கு வருகை தந்தார். அப்பொழுது தனது முதல் கவிதை நாடகமான கூவிஸ்வ மாஜினி' யை அச்சிட்டு அவரிடம் கொடுத்து ஆசி பெற்றார்.

கல்லூரிப் படிப்பை முடித்து வெளியேறிய இளைஞரான சி.வி. யின் நினைவில் மலையக மக்களைப் பற்றிய சிந்தனை எழுந்தது. இந்த சமூகம் இப்படி ஒதுக்கப்படுவதற்கு என்ன காரணம் என சிந்தித்தார். இந்தச் சமூகத்தில் ஒரு மாற்றமும் மறுமலர்ச்சியும் ஏற்பட வேண்டுமானால் கல்விதான் அதற்குத் தகுந்த ஆயுதம் என அவர் கண்டார். 1935ம் ஆண்டில் கவியரசர் தாகூர் பெயரில் பூண்டுலோயாவில் கல்விக்கூடம் ஒன்றை இவர் அமைத்தார். பின்னர் தனது பிறந்த ஊரான வட்டக்கொடயில் மகாகவி பாரதியின் பெயரில் பாரதி இளைஞர் சங்கம் அமைத்தார். சில காலம் நுவரெலியாவிலுள்ள காமினி வித்தியாலயத்தில் ஓர் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றினார்.

ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் இளமையின் கோலத்தால் காதல் கவிதைகள் நிறையவே எழுதினார். அதனைத் தனது நெருக்கமான நண்பரான ஸ்டேசன் மாஸ்டரிடம் காட்டிய பொழுது அந்த எழுத்துக்களைப் படித்து விட்டு சொன்ன கருத்துக்கள் காரணமாக 'தனது எழுத்துக்கள் தான் வாழ்கின்ற சமூகத்திற்கு பயன்பட வேண்டும்' என்று காதல் கவிதைகளைக் கிழித்தெறிந்து விட்டு தனது மக்கள் படும் துன்ப துயரங்களை எழுத ஆர்வம் கொண்டார்.

சி.வி. தனது சமூகம் ஒடுக்கப்படும் நிலை கண்டு அவர்களின் பிரச்சினைகளில் ஒரு பார்வையாளராக இருக்காமல் அதில் பங்காளியாக வேண்டும் என்ற எண்ணத்தில் 1947இல் மலையக மக்களின் தலவாக்கலை பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கை இந்தியன் காங்கிரஸ் செயலாளராகவும் சி.வி. பணியாற்றினார். இதுவே பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக மாற்றம் பெற்றது. 1965ம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸை விட்டு வெளியேறி வி.கே. வெள்ளையனுடன் இணைந்து தொழிலாளர் தேசிய சங்கத்தை ஸ்தாபித்தார். இதன் நிர்வாகச் செயலாளராக 1984ம் ஆண்டு நவம்பர் 19ம் திகதி தனது இறுதிமூச்சு வரையும் பணியாற்றினார்.

*புழுதிப் படுக்கையில் புதைந்த என் மக்களை*
*போற்றும் இரங்கல் புகழ் மொழி இல்லை*
*பழுதிலா அவர்க்கோர் கல்லறை இல்லை*
*பகுந்தவர் நினைவுநாள் பகருவாரில்லை*

இவ்வாறு தான் வாழ்ந்த சமுதாயமான மலையக மக்களைப் பற்றி இவர் எழுதிய கவிதை வரிகள் யதார்த்தமானவை.

மக்கள் கவிமணி சி.வி. பேனாவை ஆயுதமாகக் கொண்டு மலையக மக்களின் துன்பங்களைத் தம் வாழ்வோடு இணைத்துக் கொண்டு எழுதினார். அதனால் தான் அவர் மலையக மக்கள் கவிமணியாகத் திகழ்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பிலே தெய்வமாய்
# அமரர் எஸ். திருச்செந்தூரன் பற்றிய ஒரு நெடுங்குறிப்பு

*வ. செல்வராஜா M.A*

காலம் தான் அக்காலக்கட்டத்துக்குரிய மகா புருஷர்களை உருவாக்குகின்றது. அவ்வகையில் சு.திருச்செந்தூரன் அவர்கள் மலையகத்தின் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் தமது தனித்துவத்தினாலும் ஆளுமையினாலும் உன்னத மனிதனாக, உயரிய மனிதனாக வாழ்ந்தவர்.

அமரர் சு.திருச்செந்தூரன் அவர்களை மதிப்பீடு செய்வதென்றால் அவரது பங்களிப்பு அல்லது மலையக வரலாற்றில் அவருக்குரிய இடத்தை இனங்காண்பது என்றால் அக்காலக்கட்டத்தின் மலையக வரலாற்றுப் பதிவுகளை மீட்டுப் பார்த்தல் அவசியமானதாகும்.

அமரர் சு. திருச்செந்தூரன் அவர்கள் 30.08.1936ல் கலஹாவில் பிறந்து 1983 வரை நுவரெலியா மாவட்டத்திலும் பதுளை மாவட்டத்திலும் பணி புரிந்து அதன் பின் 31.03.2001 வரை தமிழ் நாட்டிலும் சேவை ஆற்றி மறைந்தவர்.

1960 கள் மலையக மக்கள் வரலாற்றில் மிக முக்கியமான காலகட்டம். மலையகத்தின் முனைப்பான விடயங்கள் போக்குகள் என்பன இக்காலக் கட்டத்திலேயே தீர்மானிக்கப்பட்டன. மலையக மக்களின் எதிர்காலம் குறித்து அடிப்படை வேர்கள் ஊன்றப்பட்டக் காலம் மலையகம் எதிர்காலத்தில் எதனை நோக்கிச் செல்லப் போகிறது என்பது நிர்ணயிக்கப்பட்டக் காலம். (Formative Period) எனலாம்.

1828ம் ஆண்டோடு தொடங்குகின்ற இலங்கையில் இந்திய வம்சாவளியினர் வரலாறு இத்தீவினில் இன்னுமொரு வஞ்சிக்கப்பட்ட கதையாகத் தான் தொடர்கிறது. ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்குப் பின்னால் இம்மக்கள் மத்தியில் தொழிற் சங்க அமைப்புகள் ஆரம்பிக்கப்பட்ட பின் வாழ்வியலில் சிறிது சிறிதாக மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. முலையக மக்கள் கூலிவறும் கூலி பட்டாள'மாக இன்று ஒரு சமூகமாக உருவாக்கம் பெறத் தொடங்கினர்.

1930களினைத் தொடர்ந்து பல்வேறு தொழிற்சங்க போராட்டங்கள் வலிமைப் பெறத் தொடங்கின. பல்வேறு தொழிற்சங்க அமைப்புகள் இவர்களது போராட்ட குணாம்சங்களுக்கு தலைமைக் கொடுத்து வழி நடத்தின. இவ்வலிமை மிக்க போராட்டங்களால் பெரிய கங்காணியின் அடக்கு முறையில் இருந்து முற்றாகத் தொழிலாளர் விடுவிக்கப்பட்டனர். ஏனினும் இவர்களது தொழில் பிணக்குகள் சம்பள உயர்வுகள் சமூக வாழ்வியல் போராட்டங்கள், கல்வி மற்றும் அரசியல் சார்ந்த போராட்டங்கள் இன்னும் ஓய்ந்தபாடில்லை.

கடந்த நூற்றாண்டின் ஆரம்ப தசாப்பதங்களில் மலையகத்தில் கல்வி கற்ற மத்திய தர வர்க்கத்தினரின் முதல் தோற்றப்பாடுகளை இனம் கான முடியும். மிகக் குறைந்தளவினர் எனினும் இலங்கையிலும், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இவர்கள் கல்வி கற்று மலையக மக்களுக்காக சேவையாற்றும் சமூகத் தலைவர்களாகவும் உருவாகினர்.

இடதுசாரி அரசியல் கட்சிகளினதும், தொழிற்சங்கங்களினதும் செல்வாக்கு மலையகத்தில் மார்க்ஸிய கருத்துக்கள் செல்வாக்குப் பெற காரணமாயின் மலையக புத்தி ஜீவிகள் பலர் இவ்வமைப்புக்களில் இணைந்து போராட்டங்களில் பங்கு கொண்டனர். சில அமைப்புகளுக்கு இவர்கள் தலைமையும் தாங்கினர்.

மறுபுறத்தில் காந்தியம், சாத்விகம் என மிதவாதப் போக்குகள் கொண்ட அரசியல் சக்திகளினும் தொழிற்சங்கங்களினதும் செல்வாக்கு மலையகத்தில் வேரூன்றி இந்திய சுதந்திர போராட்டத்தினதும், இந்திய தேசிய காங்கிரஸினதும் செல்வாக்கு காரணமாகவும் இந்திய தலைவர்களின் இலங்கை விஜயம் தொடர்பாகவும் இவ் மிதவாதக் கருத்துக்கள் செல்வாக்குப் பெற காரணமாயின.

மேலும் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்பவற்றின் சீர்த்திருத்த பகுத்தறிவாதக் கருத்துக்களும் மலையகத்தில் செல்வாக்குப் பெறத் தொடங்கின. தமிழ் இலக்கியம், தமிழர் என்ற உணர்வு, மொழி பற்று. கலை-கலாசார பண்பாட்டு பாரம்பரிய உணர்வுகள் மேலோங்குவதற்கு இவ்வியக்கச் செயற்பாடுகள் காரணமாயின.

1956 ல் பண்டாரநாயக்கவினால் முன்வைக்கப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் சிங்கள மக்களின் வாழவில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இதன் தர்க்க ரீதியான விளைவால் தமிழ் மக்கள் மத்தியிலும் இன தேசியவாத உணர்வுகள் மேலோங்கின. இனம், மதம், மொழி, கலாசாரம், கலை - இலக்கியங்கள், பிரதேச உணர்வு, கல்வி போன்ற துறைகளில் தன்னைத் தனித்துவமாக இனங்காணும் முயற்சிகளும் தமிழ் மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டன. பாரம்பரியக் கூத்துக்கள், கலைகள் என்பன வெளிக் கொணரப் பட்டு நவீனப்படுத்தப்படும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பின்னியில் மலையகத்தில் சமூக உணர்வு மிக்க இளைஞர்கள் அரசியலில் தீவிரமாக ஈடுபடவும் - சமூக இயக்கங்கள் - கலை - இலக்கியம் சார்ந்த இயக்கங்களை ஆரம்பித்து பணியாற்றவும் தொடங்கினர். பிரதேச மண்வாசனை இலக்கியங்களைப் படைக்கத் தொடங்கினர்.

மலையக மக்களின் பிரச்சினைகளை இனங்காணவும் மலையகத் தொழிலாளர்களின் வாழ்வில் விடுதலைக்காக சிந்தித்து செயல்படவும் தலைப்பட்டனர். தன்னலம் கருதாத உழைப்பால் மலையகத்தை ஒரு சமூகமாக உருவாக்கும் முயற்சியில் தங்களை அர்ப்பணித்தனர். இவர்கள் ஆசிரியர்களாக, தொழிற்சங்க வாதிகளாக, அதிபர்களாக, இலக்கியவாதிகளாக, கலைஞர்களாக, அரசியல் வாதிகளாக, பத்திரிகையாளர்களாக தம்மை ஆக்கிக் கொண்டர். இதனூடாக மலையக மக்கள் வாழ்வில் மாற்றங்களைக் காண முற்பட்டனர்.

'மலையக இளைஞன் தனது சமுதாயத்தை உயர்த்துவதற்கு முற்படுவானேயானால் அவனுக்கு இரண்டு வாய்ப்புகளே இருந்தன. ஒன்று ஆசிரியப் பணி மற்றது தொழிற்சங்க சேவை" என இரா.சிவலிங்கம் குறிப்பிட்டுள்ளமை கவனத்திற் கொள்ளத்தக்கது.

இத்தகைய பின்னணியில் ஆசிரியப் பணியை அமரர் சு.திருச்செந்தூரன் தெரிவு செய்தமை அவர் இம்மக்களது கல்வியில் காட்டிய அக்கறை' கல்வியால் ஒரு சமூக மாற்றம் சாத்தியம் என்பதை நம்பியமையே காரணமாகும்.

ஒரு ஆசிரியராக தனது பணியினைத் தொடங்கிய அமரர், அதிபராக நாடகவியலாளராக, கூத்து கலைஞராக, திரைப்பட நடிகராக, சமூக சேவையாளராக, சிறுகதை ஆசிரியராக பல்வேறு பரிமாணங்களைப் பெற்றவர். தான் சார்ந்திருந்த ஃமலையக இளைஞர் முன்னனி' யில் தனது நண்பரான இரா சிவலிங்கம் அவர்களுடன் இணைந்து தோள் நின்று உழைத்தவர்.

வெள்ளை நிற சேட், வெள்ளை நீள காற்சட்டை, கருப்புச் சப்பாத்து, மென் நரை, தடித்த மீசை, கையில் பிரம்புடன் அதிபராக ஹைலன்ஸ் கல்லூரியில் கம்பீர மனிதனாக நடைபயில்வார். 1970 ம் ஆண்டு முதல் 1976ம் ஆண்டு வரையிலான ஏறத்தாழ ஐந்து ஆண்டுகள் ஹைலன்ஸ் கல்லூரியில் கடமையாற்றினார். இவரது காலத்தில் ஹைலன்ஸின் மறுமலர்ச்சி காலம் எனக் குறிப்பிட்டால் மிகையாகாது. ஹைலன்ஸ் கல்லூரி இக்காலத்தில் உன்னதமான நிலையை அடைந்தது.

1963 க்குப் பின்னால் 1973ல் மிகச் சிறந்த பெறுபேறு ஹைலன்ஸ் கல்லூரியில் பெறப்பட்டது. அது வரைக் காலம் ஹைலன்ஸ் கல்லூரியில் கல்வி பொ. த உயர் தரத்திற்கு வரும் மாணவர்கள் வேறு பாடசாலையில் இருந்தே பொரும்பாலும் வருகைத் தருவார்கள். ஆனால் ஹைலன்ஸ் கல்லூரியில் ஆரம்பக் கல்வி, கனிஷ்ட இடைநிலைக் கல்வி பெற்ற பலர் 1975ம் ஆண்டில் உயர் தரத்தில் இணைந்து கொண்டார்கள்.

ஹைலன்ஸ் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் முடிக்கப்படாத மாடிக் கட்டிடத்தை தனது அயராத முயற்சியால் கட்டி முடித்தார். இக்கல்லூரியின் பௌதீக வளங்களின் விருத்தித் தொடர்பாக அழகியல் உணர்வுடன் கூடிய ஒரு கனவினைக் கண்டு வந்தவர் அமரர் சு. திருச்செந்தூரன் அவர்கள்.

ஹைலன்ஸ் கல்லூரி அப்போது தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளையே பெரும்பான்மையாகக் கொண்டது. அவர்களால் வசதிக் கட்டணம் கொடுக்க முடியாத நிலை அறிந்தும் மாதத்தின் ஒரு நாள் அம்மாணவர்களின் உடல் உழைப்பைப் பெற்று அதிலிருந்து விடுவித்து விடுவார். தானும் ஒருவனாகபேராசிரியர்க.வித்தியானந்தன் தலைவராகவும் பேராசிரியர் கா.சிவத்தம்பி செயலாளராகவும் இணைந்து இப் பணிகளை நிறைவேற்றினர்.

வடக்கு கிழக்கு பிரதேசம், சிலாபம் போன்ற இடங்களில் அருக்கிக் கொண்டு வந்த மரபு வழி நாடகங்கள் பலவற்றை பதிப்பித்தார்கள்.

கர்ணன் போரும் நொண்டி நாடகமும் மட்டக்களப்பிலே விடிய விடிய ஆடப்பட்ட கூத்துக்களாகும். கர்ணன் போர் வட மோடி சார்ந்தது. இவ்விரு கூத்துக்களையும் ஒன்றரை மணி நேரத்திற்கு அளவாகச் சுருக்கியதுடன், வட்ட மேடையில் ஆடப்பட்ட இக்கூத்தினை படச் சட்ட மேடைக்கு இயைபுப்படுத்தி ஒருப்பக்க பார்வையாளனின் முன்னால் ஆடக் கூடிய விதத்தில் அசைவுகளையும் ஆட்டங்களையும் அமைத்து புதிய தயாரிப்பின் கீழ் பார்வையாளருக்கு வழங்கினார். சு.வித்தியானந்தன் கர்ணன் போரின் உப தயாரிப்பாளராக க.கைலாசபதியும், கா. சிவத்தம்பியும் பணியாற்றினர். இவ்விரு கூத்துக்களிலும் கூத்து மரபின் அடல் பாடல் பிசகாது கூத்தில் பயன்படும் அதே வாத்தியங்களைக் கையாண்டு மரபு பிறழாது இக்கூத்துக்களை செம்மைப்படுத்தினர். ஆடல், பாடல், உடை, ஒப்பனை செம்மைப்படுத்தப்பட்டன. அதிகளவான ஆட்டமும் மிக நீளமாக இழுத்துப் பாடுதலும் குறைக்கப்பட்டன. பின்னணி பாடுபவர்கள் மேடையின் பின்புறமாக அரை வட்ட வடிவில் நிறுத்தப்பட்டனர். இவர்களின் மன்னாலேயே நடிகர்களன் தோன்றினர். காட்சி மாற்றங்களும் சூழல்களும் ஒளியினால் உணர்த்தப்பட்டன.

நடிப்புக்கும் உச்சரிப்புக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. மேடை அசைவுகள் திட்டமிடப்பட்டன. பாடலின் இசை செம்மைப்படுத்தப்பட்டது. உடை, ஒப்பனை செம்மைப்படுத்தப்பட்டன.' அதில் இணைந்துக் கொள்வார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாணவர்களை கடுமையான தண்டனைக்கு உட்படுத்தியது கிடையாது. உடல், உளம் என்பவை பாதிக்காத முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்வார்.
ஆசிரியர் பற்றாக்குறை மிக மோசமாக நிலவிய அக்காலத்தில் - ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் இருந்து வெளியேறிய இளம் ஆசிரியர் குழாமைப் பெற்று, கல்லூரியின் தர மேன்மைக்கு வித்திட்டார். அக்காலத்திலேயே சங்கீதம், நடனம், ஓவியம் என்பவற்றிற்கான சிறப்புப் பயிற்சிகளைப் பெற்ற திறமை மிக்க ஆசிரியர்களை இணைத்துக் கொண்டார். சிறப்புத் துறைகளில் உயர் கல்வி பெற்ற பல பட்டாதாரிகளையும் ஹைலன்ஸ் கல்லூரிக்குப் பெற்று அதன் வளர்ச்சிக்காக உழைத்தார்.

1972ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட புதிய கல்வி சீர்திருத்தத்தில் கூடிதொழில் முன்னிலைப் பாடத்திற்கு' முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதற்குப் பொருத்தமான கோழிப் பண்ணையை அமைத்து மாணவர்கள் செயன்முறைப் பயிற்சியில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்தார்.

இவரது காலத்தில் ஹைலன்ஸ் கல்லூரி ஏனைய கல்லூரிகளுடன் சிநேக பூர்வமான விவாத அரங்குகளை நடத்துவதற்கு வழிவகுத்தார்.

1977ம் ஆண்டு ஹைலன்ஸ் கல்லூரியில் இருந்து பொஸ்கோ கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டு குறுகியக் காலத்துள் - பண்டாரவளை மக்களின் அழைப்பின் பேரில் பண்டாரவளை சென்.மேரிஸ் தமிழ் வித்தியாலயத்தில் அதிபராக இணைந்துக் கொண்டார்.
'தோட்டப் பாடசாலை என எள்ளி நகையாடி ஒதுக்கிய சென். மேரிஸ் தமிழ் வித்தியாலயத்துக்கு ஒரு கௌரவத்தைப் பெற்றுக் கொடுத்து அனைவரது கவனத்தை ஈர்க்கச் செய்தவர் அமரர் சு. திருச் செந்தூரன் அவர்கள். இவரது காலம் சென். மேரிஸ் கல்லூரியின் வரலாற்றில் பொற்காலம். இவரது காலத்தில் புதிய கட்டிடங்கள் உருவாகின முதன் முதல் பல்கலைகழகத்துக்கு மாணவர் தெரிவாகினார்கள். முதன் முதல் பாடசாலையில் ஒரு கலை விழாவை நடத்தியிருந்தார்.' என அக்கல்லூரியின் பழைய மாணவர் நினைவு கூறுகின்றனர்.

முகாமைத்துவத்தை மூன்று வகைகளாப் பிரிக்கலாம்.
01. மக்கள் மைய முகாமைத்துவம்
02. இலக்கு மைய முகாமைத்துவம்
03. மக்கள், இலக்கு மைய முகாமைத்துவம்

இதில் மிகச் சிறந்த முகாமைத்துவ முறையாக மக்கள் இலக்கு மைய முகாமைத்துவத்தை ஆய்வாளர்கள் குறிப்படுவர்.

அமரர் சு. திருச்செந்தூரனின் வெற்றிக்கு ஆய்வாளர்களால் விதந்துரைக்கப்பட்ட மக்கள் இலக்கு மைய முகாமைத்துவமே காரணமெனில் மிகையில்லை அதிபர் -ஆசிரியர் உறவு, ஆசிரியர் - ஆசிரியர் உறவு, ஆசிரியர் - மாணவர் உறவு, மாணவர் - மாணவர் உறவு, பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான உறவு என்பவற்றில் மிகக் கவனமாகச் செயற்பட்டவர் அமரர் சு.திருச்செந்தூரன் அவர்கள். மிகத் தெளிவான சிந்தனையுடன் திட்மிட்டு செயற்பாடுகளை முன் வைத்தமையே இவரது வெற்றிக்கு காரணமாகும். ஆதனை விட இச்சமூக நேசிப்பும் அவரது ஆளுமையும், பரந்து விரிந்த அறிவும் இவரை இயக்கியது எனலாம்.

அமரர் சு. திருச்செந்தூரன் அவர்கள் தனது பணியை ஆசிரியர் தொழிலின் ஊடாக ஆரம்பித்தவர். இவரைப் போன்ற நல்லாசிரியர்களைக் காண்பதரிது. மாணவரது உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து அவற்றை வளர்ப்பதற்கான செயற்பாடுகளை ஒருங்கமைத்து அவற்றை வளர்த்தெடுக்க முனைதலும் தேவையான சந்தர்ப்பங்களில் பொருத்தமான வழிகாட்டல்களையும் வழங்குபவனே நல்லாசிரியன் ஆவான். இது ஆசிரியர் திருச்செந்தூரனுக்கே பொருந்தும் என்றால் மிகையாகாது.

தமிழ், புவியியல், சைவ சமயம் போன்றவற்றை மிகுந்த விருப்புடன் கற்பித்தவர். தமிழ் இலக்கிய பாடத்தை நிகழ்த்தும் போது அதிலோர் உணர்வினை மாணவர் உள்வாங்கக் கூடியதாக இருக்கும் இலக்கியம் எழுந்த தளத்தின் பின் புலத்தில் அதன் முக்கியத்துவத்தோடு அதன் தனித்துவார்த்த பின்னணிகளை தர்க்க ரீதியாக முன்வைக்கும் போது அவரது இலக்கிய புலமை மேலெழும்.

திருக்குறள், திருவருட்பயன் என்பவற்றை சமகால நிகழ்வுகளோடு முன்வைத்தல், பாரதியை அறிமுகப்படுத்தும் போது சமகால சமூக அவலங்களை எடுத்துக் காட்டி, மலையக சமூகத்தின்பால் அக்கறைக் கொள்ள செய்யத் தூண்டல் அவரது கற்பித்தலின் மிக சிறப்பான அம்சமாகக் கொள்ளலாம்.
பெண்ணை, ஒரு கம்பீரத்தோடும் - அறிவு பூர்வமானவளாகவும் கதைகண்ணன் பாட்டு' மூலம் அறிமுகப்படுத்தியமை அவரது பெண்ணியல் சிந்தனைத் தொடர்பாக கவனத்தை ஈர்க்கக் கூடியதே கவிதை என்பது கற்பிக்கப்பட முடியாது உணர்த்தப்பட வேண்டியது என்பது இவரது கற்பித்தல் அனுகுமுறையெனக் கொள்ளலாம். சிங்கமலையின் உச்சிக்கு மாணர்களை அழைத்துச் சென்று ஹட்டன் மேட்டு நிலத்தையும் அதன் வடிகால் அமைப்பையும், தேயிலை மலைகளின் நிரைகளின் ஒழுங்கில் சமவுயரக் கோடுகளையும் ஆற்று நீர் அரிப்பை, கொத்மலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுப்படுக்கையில் அறிமுகப்படுத்தலையும் - வி (ஏ) வடிவ ஆற்றுப் பள்ளத்தாக்கை டெவன் பத்தனை நீர்வீழ்ச்சிக்கு அண்மிய ஆற்றுப் படுக்கையை இனங்காணச் செய்கின்ற நேரடி அனுபவங்களை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுத்து கற்பிக்கும் ஆளுமை அவருக்கே உரியது எனலாம்.

ஹைலன்ஸ் கல்லூரியில் அமரர்கள் இரா.சிவலிங்கம், அமரர் சு. திருச்செந்தூரன் இணைந்து ஆற்றிய சேவை பற்றி - பி.முத்தையா அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'சிவாவும், செந்தூரனும் சேர்ந்து திக்குத் தெரியாமல் பாடப் புத்தகத்தில் மாத்திரமே கவனம் செலுத்திக் கொண்டிருந்த மாணவர்களுக்கு வழிகாட்டினர். அதன் ஆரம்பமே ஹைலன்ஸ் தான் தெரிந்தோ தெரியாமலோ ஹைலன்ஸ் கல்லூரியின் தெந்தமிழ் கழகம் அவர்கள் மூலமே வளர்ந்தது. மாணவர் எழுத்தாற்றலை ஊக்கவிக்கும் வகையில் செந்தமிழ் கழகத்தின் கையெழுத்து ஏடான தமிழோசை செந்தூரனின் வழிகாட்டலில் வளர்ந்தது" அக்காலத்தில் இலங்கையின் பல பகுதிகளில் இருந்தும் தமிழகத்தில் இருந்தும் பேச்சாளர்கள் ஹைலன்ஸ் கல்லூரிக்கு வரவழைக்கப்பட்டனர். இவர்களது பேச்சுக்களால், சொற்பொழிவுகளால் தமிழ் உணர்வு மலையக உணர்வுகள் மாணவரிடத்தில் வளர்ந்தது. செந்தமிழ் கழகம் இக்காலத்தில் பல கலை விழாக்களையும் நடாத்தியது.

1976ம் ஆண்டு க.பொ.த உயர் தர மாணவர்களால் வெளியிடப்பட்ட கதனல்' கவிதைத் தொகுதிக்கு அதிபர் திருச்செந்தூரன் அவர்கள் ஆக்கமும், ஊக்கமும் அளித்து மாணவர்களை வளர்த்தெடுத்தார். மாஓ சேதுங் ஆசிரியர்களை நோக்கி,

' நாம் தொழிலாளர்களுடன் சமுதாய சீராக்கம் பெற வேண்டும்.... எமது சிந்தனையை புதிய முறையில் உருவமைத்துக் கொள்ள வேண்டும். அரசியல் ஞானத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். சீனாவின் சகல மக்களுக்கும், உலகத்திற்கும் முழு மனத்துடன் சேவையாற்ற வேண்டும். சுய நலமில்லாத உணர்வுடனே அவ்வாறு சேவையாற்ற வேண்டும். அதே போன்று கஷ்டங்களையும், மரணத்தையும் பயமின்றி எதிர் நோக்க வேண்டும்."
இக்கூற்று திருச் செந்தூரன் அவர்கள் ஆசிரியராக வாழ்ந்து காட்டி வாழ்க்கை எனக் கூறல் மிகையாகாது.

' ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
யாதினைய கலைகளில் உள்ளம்
ஈடுபட்டென்னும் நடப்பவர் பிறர்
ஈன நிலைக் கண்டு துள்ளுவார் '

என்பான் பாரதி.

அமரர் சு. திருச்செந்தூரன் அவர்கள், நாடகம், கூத்து, சிறுகதை, திரைப்படம் போன்ற பல கலை - இலக்கியத் துறைகளில் ஈடுபட்டு பிறர் ஈன நிலைக்கண்டு துள்ளும் மனத்தினர் கூஉரிமை எங்கே ?' என்ற சிறுகதையினூடாக மலையக சிறுகதை வரலாற்றில் தடம் பதித்தவர். பிரஜாவுரிமை பிரச்சினையை மையமாகக் கொண்ட இவரது இச்சிறுகதை கல்கியில் மூன்றாம் இடம் பெற்று பிரசுரமாகியது.

1975ம் ஆண்டு கொழும்பு பல்கலைகழத்தில் நாடக டிப்ளோமா நெறி ஆரம்பிக்கப்பட்டது. இவ்வரங்கியல் நெறிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுள் மலையகத்தைச் சேர்ந்த ஒருவராக திரு. செந்தூரன் அவர்கள் இணைந்து கொண்டார். இக் கற்கை நெறி தொடர்பாக சி.மௌனகுரு பின்வருமாறு கூறுகிறார்.

'கூதளப் பயிற்சி கல்வி பயில்வோருக்கு இங்கு அளிக்கப்பட்டது. இதன் மூலம் ஓரளவாவது முறையாக நாடகம் பற்றியும், குறிப்பாக அரங்கியல் பற்றியும் படிக்கும் வாய்ப்பு தமிழர்களுக்கு ஏற்பட்டது இதனை எல்லாத் தமிழர்களும் பயன்படுத்திக் கொள்ளாமை துரதிஷ்டமே"

எனவும், கற்கை நெறி மேற்கொண்டவர்கள் பற்றி 'எனினும் அன்று நாடகத்துறையில் ஈடுபட்ட பலர் இந்நெறியினைக் கற்க முன்வந்தனர். யாழ்பாணத்திலிருந்து குழந்தை சண்முகலிங்கம், காரை சுந்தரம்பிள்ளை, வீ.கந்தவனம், வல்லிநாயகி ராமலிங்கம், திருச்செல்வம் போன்றோரும் கொழும்பில் இருந்து அ.தாசீசியஸ், இ.சிவானந்தன், நா.சுந்தரலிங்கம் ஆகியோரும் மலை நாட்டில் இருந்து திருச்செந்தூரன், சத்தார் போன்றோரும் இன்னும் பலரும் இக்கல்வி பயின்றனர். மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் ஏற்கனவே நாடகத்துறையில் ஈடுபாடு கொண்டவர்களாக இருந்தனர்." எனக் குறித்திருப்பது மலையக நாடக வரலாற்றில் திருச்செந்தூரன் அவர்களின் இடம் குறித்த தகவலாகக் கொள்ளலாம்.

திருச்செந்தூரன் அவர்கள் இயல்பாகவே நாடகத்துறையில் ஈடுபாடு கொண்டவர். நாடக டிப்ளோமா கற்கை நெறி பயிலும் முன்னரே பல நாடகங்களை மேடையேற்றியுள்ளார். நாடகத் துறையில் நடிகனாய், நாடக ஆசிரியராய், நெறியாளராய் தம்மை பண்படுத்திக் கொண்டவர். நாடக டிப்ளோமா இத்துறையில் அவரை மேலும் செழுமைப் பெறச் செய்தது. நாடகப் பட்டறைகள் பலவற்றை நடாத்தியவர், நாடகங்கள் பலவற்றை மேடையேற்றியவர், நாடகத் துறையில் ஆழமான புலமையும், ஈடுபாடும் கொண்டவர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நாவலியூர் நா.செல்லதுரையின் நாடகங்களை பார்த்துக் கொண்டிருந்த புதிய பரம்பரையினர்க்கு செந்தூரனின் சமூக பிரச்னை மிக்க நாடகங்கள் புத்துயிர் அளித்தன. செந்தூரன் எழுதிய நாடகங்கள் கிளாத் தோட்டம் கட்டை சிவலிங்கம் வழங்கிய கூலிதயிலைத் தோட்டத்திலே' என்ற வில்லுப்பாட்டு மலையகம் எங்கும் நடந்தது. கூலிஆய் எமைப் பார் இவன் ஆடுகள் மாடுகள் போல்' என்ற செந்தூரன் எழுதிய கவிதை புதிய உத்வேகத்தை ஊட்டின." என்ற பி.முத்தையாவின் வரிகள் திருச்செந்தூரனின் நாடக மேதா விலாசத்தை எடுத்தியம்புகின்றன.

1956 க்குப் பின் - சுய மொழிக் கல்வியும் இலவசக் கல்வியும் உயர் கல்வி பெற்ற கிராமத்து இளைஞர்களை உருவாக்கியது. இம்மாற்றத்தின் பிரதிபலிப்புகள் சிஙகளத் தமிழ் நாடகத் துறையிலும் காணப்பட்டன. 1956 ல் கலாசார அமைச்சு முதன் முதலாக உருவாக்கப்பட்டது இதன் கீழ் இயங்கிய கலைக் கழகம் கூத்துக் கலை பேணுகின்ற அவற்றை நவீனப்படுத்துகின்ற பணிகளில் இக்காலத்தில் ஈடுபட்டது.

சு.வித்தியானந்தனின் கூத்துப் பணிகள் தொடர்பாக சி. மௌனகுரு அவர்களது இக்கூற்று- மலையகத்தில் காமன்கூத்து தொடர்பாக திருச்செந்தூரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட நவீனபடுத்துகை தொடர்பாகவும் பொருத்தப்பாடுடையது எனலாம்.

சு.வித்தியானந்தன் கா.சிவத்தம்பி, க.கைலாசபதி ஆகியோர் இலங்கை தமிழ் மக்களின் கூத்து மரபிற்கு ஆற்றிய பணிாத்திரமேற்று திருச்செந்தூரன் அவர்கள் நடித்தார்கள். இக்கூத்து கொழும்பிலும், ஹட்டன், பதுளை போன்ற மலையக நகரங்களிலும் மேடையேற்றப்பட்டது. இக்கூத்தில் பங்கேற்ற வி.டி.தர்மலிங்கம் அவர்கள் திருச்செந்தூரனுக்குப் பிறகும் பலமுறை இக்கூத்தினை மலையகத்தில் மேடையேற்றினார்.

மலையக மக்களது கூட்டு முயற்சியால் உருவாக்கப்படுகின்ற இக்கூத்து மரபில் அமரர் திருச்செந்தூரனுக்கு இருந்த அதீத ஈடுபாட்டினை இவரது இம்முயற்சி காட்டி நிற்கின்றது. தொழிலாளர்கள் மீது ஈடுபாடு கொண்டால் மட்டுமே அவர்களது கலைத்துறை சார்ந்த விடயங்களிலும் ஈடுபாடு கொள்ள முடியும். அமரர் திருச்செந்தூரன் அவர்கள் மலையக மக்கள் மீது கொண்டிருந்த நேசிப்பின் விளைவே இக்கூத்தினை நவீனப்படுத்த எடுத்த முயற்சியெனக் கொள்ளலாம்.

அமரர் சு.திருச்செந்தூரன் அவர்கள் நாடகத்துறையில் மட்டுமல்ல திரைப்படத்துறையிலும் ஈடுபாடு காட்டியவர். இலங்கையில் தயாரிக்கப்பட்ட திரைப்படத்தில் ஒரு பாத்திரமேற்று நடித்தவர். கூலிசால்லின் செல்வர் இர.சிவலிங்கம்' எனும் தலைப்பில் அமரர் இர.சிவலிங்கம் ஞாபகார்த்த மலரில் அமரர் சு.செந்தூரன் பின்வருமாறு எழுதுகிறார்.

'நாற்பதாண்டு கால எங்கள் நட்பில் அவரது எல்லா செயல்களிலும் இணைந்து, சிந்தித்து செயற்பட வாய்ப்பு கிடைத்ததை அவரில்லாத இவ்வேளையில் எண்ணியெண்ணி மலைக்கின்றேன். கல்லூரி காலத்திலேயே மலையக சமுதாயத்தின் நிலையைப் பற்றி பேசுவோம். வடபகுதி மக்களுக்கு இணையாக நம் மக்களை ஆக்க முடியாதா என்று ஏங்குவோம். அந்த சிந்தனை செயல் வடிவம் பெற ஹட்டன் பகுதியில் இருவரும் மேற்கொண்ட பணி வாய்ப்பாக இருந்தது".

இவ்வார்த்தைகள் இர.சிவலிங்கத்தோடு இவருக்கிருந்த நட்பினையும் மலையக மக்கள் வாழ்வில் மாற்றத்தைக் காணத்துடித்த இதயத்தையும் காணலாம்.

1960 இல் 'மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம்", 1963 இல் 'மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்", 1970 இல் 'மலையக இளைஞர் முன்னணி" என்ற இளைஞர் இயக்கங்களில் இர.சிவலிங்கத்தோடு இணைந்து செயல்பட்டவர் சு.திருச்செந்தூரன். கூமலையகம்' என்ற தேசிய இனத்திற்கான எண்ணக்கரு இங்கிருந்துதான் முளைவிட ஆரம்பிக்கின்றது. 1960 களில் இவ்வெழுச்சியை நாம் இனங்காணலாம். ஒரு வலிமைமிக்க இளைஞர் சமுதாயத்தை கட்டியெழுப்பும் பணியில் திரு சு.திருச்செந்தூரன் அவர்களும் இணைந்து கொள்கிறார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தி ஆசிரியர் பி.முத்தையா அவர்கள் கூமலையகம்' என்ற சொல்லை முதலில் உச்சரித்தவர் இர. சிவலிங்கம் எனக் குறிப்பிடுவது கவனத்திற்குரியது. 'இந்த மக்களுக்கு இந்தியாவோ வேறு பிரதேசமோ தாயகம் இல்லை. இந்த மலைகள்தான் அவர்களின் அகம் என்று ஆணித்தரமாக வலியுறுத்தியவர் சிவலிங்கம். அதனால் அவரிட்ட பெயர்தான் இன்றும் கூட உச்சரிக்கும் வேதமாக, மந்திரமாக கூமலையகம்' என்ற சொல் விளங்குகின்றது".

மேலும் முத்தையா அவர்கள் 'சிவாவுக்கு வலதுகரமாகச் செந்தூரன் விளங்கியதாலேயே சிவாவின் பணி மேலும் பெருகியது என்பது உண்மை. இரட்டைக் குழல் துப்பாக்கிகளைப் போன்ற இவர்களின் பின்னால் ஒரு புதிய உலகம் உருண்டோடி வந்தது" எனக் குறிப்பிட்டு 'பழைமை வாதிகள் பணத்தில் கட்டிய கோட்டையை இளைஞர் சமூகத்தின் கல்வி அவர்தம் ஆற்றல் மூலம் தகர்த்து விட முடியும் என்பது சிவாவின் எண்ணம். மலையத்தில் ஆங்காங்கே இளைஞர் மன்றங்கள் முளைத்தன. அவற்றில் முதலிரு பேச்சாளர்கள் சிவாவும் செந்தூரனும். இவர்கள் தமது பேச்சு வலிமையால் பழைமையின் கோட்டையைத் தகர்ப்பதற்கு உத்வேகத்துடன் செயல்பட்டனர்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் குறிப்பிடுகின்றார். இக்குறிப்புகள் அமரர் இர. சிவலிங்கம் அவர்களும் அமரர் சு. திருச்செந்தூரன் அவர்களும் இணைந்து மலையக மக்களுக்காக ஆற்றிய சேவைகளையும் துடிப்புடன் இயங்கிய முறையினையும் எடுத்துக் காட்டுகின்றன.

பொஸ்கோ கல்லூரியில் ஆசிரியராக இணைந்து பின் ஹைலன்ஸ் கல்லூரியில் ஆசிரியராகவும் சிறிது இடைவெளிக்குப் பின் அதிபராகவும் அதன் பின் பொஸ்கோ கல்லூரியில் அதிபராகவும் (இரண்டு அதிபர்கள் கடமையாற்றிய காலம்) பின் பண்டாரவளை சென்.மேரிஸ் தமிழ் மகாவித்தியாலயத்தில் அதிபராகவும் கடமையாற்றி மலையக கல்வி வரலாற்றில் நல்லாசிரியராகவும் மிகச் சிறந்த கல்வி:.பாடசாலை முகாமையாளராகவும் பணியாற்றிய செந்தூரன் அவர்கள் இறுதியில் ‘‘ஷிசெட்டிக்’ (ஹட்டன்) என்ற அரசு சார்பற்ற நிறுவனத்தில் சமூக சேவையாளனாக பணிபுரிய வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதிலும் கூட சேவை உணர்வுடன் பல தோட்டங்களுக்கு நடந்து சென்று தனது பணிகளை ஆற்றிக் கொண்டிருந்தார்.

பல்வேறு சிக்கல்களினால் அவருக்கு இடமாற்றங்கள் கொடுக்கப்பட்ட போதிலும் தாயைவிட மேலாக தான் நேசித்த ஹைலன்ஸ் கல்லூரியைவிட்டு அவரை அகற்றிய போதும், சென்.மேரிஸ் பண்டாரவளையில் அபாண்ட பழிச் சொல்லுக்கு ஆளான போதும் அரசியல்வாதிகளிடம் தஞ்சம் கோராமல் துணிந்து நின்று எதனையும் எதிர் கொள்ளும் பக்குவத்துடன் அரசியலில் சமரசம் கொள்ளா போக்குடனும் நெஞ்சுரமுடன் நிமிர்ந்து நின்றார்.

எனினும் 1983 ஆடிக்கலவரம் பல புத்திஜீவிகளை தாயகம் நோக்கி திரும்பச் செய்தது. அதில் அமரர் சு. திருச்செந்தூரனும் ஒருவரானார். அங்கு சென்றும் இர.சிவலிங்கம் அவர்களோடு இணைந்து ‘தமிழ்நாட்டு நீலகிரி மலைப்பிரதேசத்தில் ஐலண்ட் அறக்கட்டளை, மலையக மக்கள் மறுவாழ்வு மன்றம் போன்ற அமைப்புகளினூடாக பணியாற்றினார்.

இமைப்பொழுதும் சோராது வாழ்நாள் முழுவதையும் மனித குல மேம்பாட்டுக்காக உழைத்தவர் அமரர் சு. திருச்செந்தூரன். அவர் எழுதிய ஹைலன்ஸ் கல்லூரி கீதத்தில்,

‘குறிஞ்சியின் ஒளியாம்ஹ
ஹைலன்ஸ் அன்னை
விழுமிய வழி நடப்போம்
அதில் குறுக்கிடும் புன்மை
அனைத்தையும் வென்று
ஆன்ம எழில் கொள்வோம்”.

எனும் கவிதை வரிகளில் அவரது இதய சுத்தியையும் நேர்மையையும் அவரால் நேசிக்கப்பட்ட மலையகத்தின் மாற்றத்தையும் ஹைலன்ஸ் கல்லூரி வளர்ச்சியில் அவருக்கிருந்த அக்கறையையும் இனங்காணலாம்.

‘ஆன்ம எழில் கொள்ளும்’ அதாவது ‘‘உள்ளத்தில் ஒளிமிக்க’ மாணவர் சமூகத்தை உருவாக்க விரும்பிய வேட்கையும் வெளிப்படுத்தப்படுகின்றது. மலையக கல்வி, இலக்கிய, சமூக இயக்கம் சார்ந்த வரலாற்றில் நிச்சயம் அமரர் சு. திருச்செந்தூரனுக்கு மறுக்கப்படாத நிராகரிக்கப்படாத ஓர் இடம் உண்டு.

உசாத்துணை:

01. செந்தூரன்.சு- ‘‘மலையகத்தின் ஒரு சரித்திரம்’ -கட்டுரை-சொல்லின் செல்வர் இரா. சிவலிங்கம்

02. முத்தையா. பி-வரண்ட மலையகத்தில் கல்வி வெள்ளம் பெருக்கெடுத்தோடச் செய்தவர் கட்டுரை- சொல்லின் செல்வர் இரா. சிவலிங்கம்

03. மௌனகுரு.சி- ஈழத்தமிழ் நாடக அரங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக கல்வியும் மாணவர் இடைவிலகலும்
# நுவரெலியா மாவட்டம் ஒரு கண்ணோட்டம்

*திருமதி. ராதிகா கணபதி,*

உதவி கல்விப்பணிப்பாளர்,
வலய கல்விப் பணிமனை,
நுவரெலியா.

மலையகத்திலுள்ள பெரும்பாலான தமிழ்ப் பாடசாலைகள் அரசாங்க பாடசாலைகளாகும். அரசின் அனைத்து கல்விச் செயற்பாடுகளும் இப்பாடசாலைகள் அனைத்துக்கும் உரியனவாகவே உள்ளன. அதன் காரணமாக இவை தேசிய ரீதியில் தம்மை இனங்காட்டும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதையும் மறுபதற்கில்லை. எனினும் இப்பிரதேசத்துக்கே உரிய சமூக பொருளாதார காரணிகள் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அந்த வகையில் மாணவர் இடைவிலகல் (Drop out) என்பது இன்று இப்பாடசாலைகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாக உள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின் போதே பெருந்தோட்ட நிருவாகத்தின் கீழ் தோட்ட பாடசாலை அமைப்பு முறை காணப்பட்டது. இது ஆரம்பக் கல்வியைத் தானும் முறையாக வழங்கியதாக தெரியவில்லை. தேசிய கல்வியுடன் இணைப்பற்றதான ஒரு கல்வி முறையாக இது காணப்பட்டதன் காரணமாக அரசாங்கத்தின் எந்த கல்வி அபிவிருத்தி நடவடிக்கையும் இப்பிரதேசத்தை சென்றடையவில்லை.

1977களுக்குப் பின் வந்த கால கட்டங்களில் அனைத்துப் பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்றது. அரசாங்க பாடசாலைகள் என்ற அந்தஸ்துடன் பொதுக்கலைத் திட்டம் (Curriculam) ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் பழைய தோட்டப் பாடசாலை அமைப்பு முறையிலேயே இயங்கிவந்தன.

1984 அளவில் சீடா போன்ற வெளிநாட்டு நிறுவனங்கள் தோட்டப் பாடசாலைகளின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டின. இப்பிரதேசத்தின் கல்வி நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள் ஆராயப்பட்டன. வசதியான கட்டடங்கள், தளபாடங்கள், போதிய கற்றல் சாதனங்கள் என்பவற்றுடன் ஆசிரியர் பயிற்சி தொடர்ச்சியான மேற்பார்வை மதிப்பீடுகள், பெற்றோருக்கான செயற்திட்டங்கள், ஊக்குவிப்பு நடவடிக்கைகள் காரணமாக பாடசாலைகளில் மாணவர் சேர்வு அதிகரித்ததுடன் இடைவிலகல் பெருமளவு குறைந்து, மாணவர் வரவு அதிகரித்தது. கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டதால் பல பாலர் பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட்டு இடைநிலை வகுப்புகளையும் முன்னெடுத்துச் சென்றன.

இன்று பெருந்தோட்டப் பாடசாலைகளை நோக்கும்போது பாடசாலைகளில் மாணவரை சேர்ப்பதில் பாராட்டக் கூடிய ஆர்வத்தை பெற்றோர் காட்டினாலும் தொடர்ந்தும் அவர்களின் கல்வி நடவடிக்கைகளில் ஆர்வம் காட்டுவதாக தெரியவில்லை.

தாய்மொழி மூலமான இலவசக் கல்வி வாய்ப்பு தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ஒரு வரப் பிரசாதமாகும். ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை இலவசமாகவே கற்பிக்கப்படுகின்றது. பொதுக்கலைத்திட்டம் உட்பட பல்வேறு புலமைப்பரிசில் வசதிகளும் கூட உள்ளன. எனினும் மலையக தொழிலாளர்களின் பிள்ளைகள் இதன் முழுப்பயனையும் பெறுவதில்லை. மலையகப் பிரதேசத்தைச் சேர்ந்த மத்திய தர பிள்ளைகளே இதன் பயனை பெற்று வருகின்றனர்.

ஆரம்பக் கல்வியை ஓரளவு வெற்றிகரமாகப் பெற்றுக் கொள்ளும் இப்பிரதேச மாணவர்கள் இடைநிலைக்கல்வியைப் பெறுவதில் பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகளை எதிர்நொக்குகின்றனர். ஆறாம் வகுப்புக்கு மேல் அதே பாடசாலையில் தொடர்ந்தும் படிக்க வசதி இருக்கும் பட்சத்திலோ அல்லது வீட்டிற்கு அண்மையில் அத்தகைய வசதிகள் இருந்தாலோ மாத்திரம் தான் பெரும்பாலானோர் தொடர்ந்தும் படிக்கின்றனர். ஏனைய பிள்ளைகள் ஐந்தாம் தரத்துடன் தமது கற்றல் நடவடிக்கைகளை இடைநிறுத்திக் கொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இடைநிலை வகுப்புகளைக் கொண்டிருக்கும் பாடசாலைகளும் கூட தமது செயற்பாட்டை வெற்றிகரமாக கொண்டு செல்வதில் இருவகைப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

❈ மாணவர் வரவு குறைவு

❈❈ மாணவர் இடைவிலகல்

தோட்டங்களில் நடைபெறும் பல்வேறு வைபவங்கள், திருவிழாக்கள், விருந்தினர் வருகை போன்ற ஏதாவது காரணத்தை சுட்டிக் காட்டி மாதக்கணக்கிலும் கூட பாடசாலைக்கு வராமல் இருப்பர். பெற்றோர்களும் கூட இவ்விடயத்தில் அக்கறை காட்டுவதில்லை. இதனால் கணிப்பீடு போன்ற நடவடிக்கைகளையும், மாணவர் முன்னேற்ற நடவடிக்கைகளையும் பாடசாலைகள் முன்னெடுத்துச் செல்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றன.


பாடசாலையில் சேரும் 50 சத விதமானோர் க.பொ.த (சா/த) பரீட்சை வரை செல்கின்றனர். 21 ஆனோர் உயர்தரத்துக்குள் நுழைந்தாலும் கூட 8 விதமானோர க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

நுவரெலியா மாவட்ட இடைநிலை பாடசாலைகள் சில மாணவர் இடைவிலகல் தொடர்பான ஆய்வுக்கென எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்டன. அவை பின்வரும் அடிப்படையில் அமைந்திருந்தன.

1. நகர்ப்புற சிங்கள மொழிப் பாடசாலைகள்
2. நகர்ப்புற தமிழ் மொழிப் பாடசாலைகள்
3. பெருந்தோட்ட பாடசாலைகள்

ஒப்பீட்டளவில் ஏனைய இரு பிரிவுகளையும் விட பெருந்தோட்டப் பாடசாலைகள் இடைவிலகல் என்னும் கல்வி விரயத்தில் பெருமளவு பாதிப்படைந்துள்ளதை அறிய முடிகின்றது. குறிப்பாக தரம் 8-9 வகுப்புகளில் இடைவிலகல் வீதம் அதிகரித்துக் காணப்படுவது ஆய்வுக்குரியது.

நகர்ப்புற சிங்கள மொழிப் பாடசாலைகளில் அரிதாகவே இடைவிலகல் காணப்படுகின்றது. நகரை அண்மித்த தமிழ் பாடசாலைகளிலும் கூட 0-5 சதவீத இடைவிலகல் காணப்படினும் இது பெருந்தோட்டப் பாடசாலைகள் எதிர்நோக்கும் இடைவிலகல் பிரச்சினையை விட குறைவாகவே உள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய கல்வியில் வீண்விரயம் தொடர்பில் சமூக, பொருளாதார காரணிகளுடன் பாடசாலை மட்டத்தில் பங்களிப்பு செலுத்தும் காரணிகளையும் இனங்காண முயலுதல் பெருந்தோட்ட பாடசாலைகளும்,நகர்ப்புற தமிழ் மொழிப் பாடசாலைகளும் எதிர்நோக்கும் இடைவிலகல் பிரச்சினையின் பரிமானத்தை குறைக்க பெரிதும் வழிசமைக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆரம்ப வகுப்புகளில் நோய்கள், வறுமை, தாய்மார் வெளிநாடு செல்வதால் பிள்ளைகளுக்கு போதுமான கவனிப்பு இன்மை போன்ற சில காரணங்கள் மட்டுமே பிள்ளைகளின் கல்வியைப் பாதிக்கின்றன. எட்டாம் வகுப்பளவிலேயே அவர்கள் கொழும்பு பிரதேச வீடுகளுக்கும், கடைகளுக்கும் வேலைக்கு அனுப்பப்படுகின்றனர். அங்கு கிடைக்கும் கவர்ச்சிகரமான சம்பளம், இடைத்தரகர்களின் பேச்சில் பெற்றோர் மயங்குவது போன்றன இதற்கான காரணங்களாகும். மேலும் தற்போது தோட்டப்புறங்களில் தாய்மார் வெளிநாடு செல்வது அதிகரித்து வருவதால் குடும்பப் பொறுப்பை இப்பிள்ளைகளே ஏற்று நடத்தவேண்டியுள்ளது. ஆடைத் தொழிற்சாலைக்கு வேலைக்கு போவதும், தினக்கூலி (Daily Wages) க்கு வேலைக்குப் போவதும் கூட பாடசாலையை விட்ட பிள்ளைகள் ஏற்றுக் கொண்ட பொறுப்புகளாக இருக்கின்றன.

தோட்டத் தொழிலாளர்கள் தமது வருமானத்தைத் திட்மிட்டு (Budget) செலவு செய்யும் பழக்கம் இல்லாதவர்கள். அதனால் பிள்ளைகளின் கல்விச் செலவு ஒரு பெரிய சுமையாகவும் தேவையற்ற ஒரு விடயமாகவும் அவர்களுக்கு அமைந்து விடுகின்றது. குடும்ப அங்கத்தவர்கள் அனைவருமே உழைக்கவேண்டும் என்ற எண்ணம் இருப்பதால் பிள்ளைகளக்காக தியாகம் செய்வதை விட அவர்களின் உடனடி வருமானத்தை வரவேற்கின்றனர். தொழில்கொள்வோருக்கும் கூட இவர்கள் குறைந்த ஊதியத்தில் வேலை செய்வது வாய்ப்பாக அமைந்து விடுகின்றது. அத்தோடு திருவிழா, பண்டிகை நாட்களில் கொழும்புப் பிரதேசங்களில் இருந்துவரும் தமது சகாக்களின் உடைகள், ஆடம்பர பேச்சுகளும் கூட இவர்களை நகரத்தை நோக்கி ஓட வைக்கிறது எனலாம். மேலும் இவர்களின் தொலைக்காட்சியில் அதிகமாக திரைப்படங்கள் பார்க்கும் பழக்கமும் கூட கல்வியில் ஆர்வத்தைக் குறைத்து ஆடம்பரங்களில் நாட்டத்தை ஏற்படுத்துகின்றது. இவற்றைவிட பாடசாலை சீருடை, காலணி, கற்றல் சாதனங்களின் பற்றாக்குறை, போக்குவரத்துப்பிரச்சினை, பெற்றோர்களின் முரட்டுத்தனமான தண்டனைகள் போன்றனவும் கூட இடைவிலகல் ஏற்படுவதற்குக் காரணங்களாகும்.

இருபத்தைந்து வருடங்கள் அரசாங்க பாடசாலை அமைப்புக்குள் இருந்தாலும் கூட மலையக சமுதாயம் போதுமான கற்றல் பின்னணியைக்கொண்டிருக்கவில்லை. இதனால் கல்வியின் முக்கியத்தவத்தை புரிந்து கொள்வதற்கான ஒரு வழிகாட்டலோ உந்துதலோ இங்குள்ள மாணவர்களுக்குக் கிடைப்பது குறைவு. பதினெட்டு வயது வரையிலான பாடசாலைக் கல்வி இங்குள்ள பெற்றோருக்கு ஒரு நீண்டகால சுமையாக உள்ளது. மேலதிக கற்றல் சாதனங்கள், சீருடை, போக்குவரத்து பொன்ற மேலதிக செலவுகளை தாங்கும் சக்தி பெரும்பான்மையான பெற்றோருக்கு இருப்பதில்லை. அப்படியே தாங்கினாலும் கூட ஆசிரியர் உட்பட சகல வசதிகளும் கொண்ட நகரை அண்மித்த பெயர் பெற்ற பாடசாலைகளைத் தவிர ஏனைய பாடசாலைகளின் பிள்ளைகள் உயர்தரத்தில் சித்தியடைவதும் பல்கலைக்கழக போட்டியில் தெரிவு செய்யப்படுவதும் மிகமிகக் குறைவாக உள்ளது.

க.பொ.த (சா-த), க.பொ.த (உ-த) சித்தியடைந்தாலும் கூட தாம்பட்ட கஸ்டத்தை ஈடுசெய்யக் கூடியதான உடனடி வேலைவாய்ப்புகளும் கிடைப்பதில்லை. இத்தகைய அனுபவங்கள் ஏனையவர்களையும் கல்வியில் ஊக்கமளிக்கச் செய்வதுடன் காலத்தை விரயம் செய்யாமல் ஏதாவது ஒரு தொழில் செய்யலாமே என்ற எதிர்மறையான சிந்தனையை அவர்களிடையே ஏற்படுத்துகின்றது.

கல்வி கற்ற ஒரு சமுதாயமே மேல் நோக்கியதான ஒரு சமூக நகர்வினைகவினைச் (Social Mobolity) கொண்டிருக்கும். உயா சமூக அந்தஸ்த்து, சிறந்த வேலைவாய்ப்புகள் என்பவற்றை பெறும்போதே ஒரு சமூகம் ஆரோக்கியமான சமூகமாக கருதப்படும்.

ஆசிய நாடுகளில் இலங்கை 92 ஆன எழுத்தறிவை கொண்ட நாடு என்ற பெருமையைக் கொண்டிருந்தாலும் தோட்டப்புறத்தில் அது இன்னும் 66 த்தைத் தாண்டவில்லை என்பது கசப்பான உண்மை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தோட்ட ஆசிரியர் நியமனம், கல்வியியல் கல்லூரி (ஸ்ரீபாத) பயிற்சி ஆசிரியர் நியமனம், கிராம சேவகர் நியமனம், போன்றன மூலம் அரசாங்கப் பதவிகளைப் பெற்றுக் கொண்ட சிலர் மட்டுமே தொடர்ந்தும் தமது கல்வி, தொழில் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றனர். கலைமாணி, கல்விமாணி பட்டங்களையும் பெற்றுள்ளனர். தேசிய ரீதியிலான போட்டிகளில் தொழில் வாய்ப்புகளைப் பெறுபவர்களும் மிகக் குறைவாகவே உள்ளனர். அரசாங்க உயர்பதவிகளில் இருப்பவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே. க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) வரை பல்வேறு சிரமங்களுடன் கற்றாலும் கூட பரீட்சையில் வெற்றிபெறாவிட்டால் அவர்களின் நிலை என்ன? அதற்கான விரிவான திட்டங்கள் எதுவும் நம்மிடம் இல்லை. இவர்களால் கூலி வேலைக்கு செல்வதும் முடியாத காரியம். தோட்டப்புற தொழில்வாய்ப்புகளும் கூட சாத்தியமில்லாததாவே உள்ளது.

தற்போதை மாணவர் தேர்ச்சிமட்ட கலைத்திட்டத்தின் மூலம் மகிழ்ச்சிகரமான கற்றல் - கற்பித்தல் சூழல் உருவானாலும் கூட மாணவர்களின் சூழல் பெற்றோர் கல்வி மீது கொண்டுள்ள நம்பிக்கையின்மை என்பன தொடர்ந்தும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளன. எனவே பெருந்தோட்டப் பாடசாலைகளும் கூட இவ்விடயங்களில் கூடிய கவனத்தை செலுத்தவேண்டியது அவசியமாகும். முறைசார்ந்த கல்வி நடவடிக்கைகளுக்கும் புறம்பாக சமூக நலன்கருதி இதனை அவதானத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகும். ஒவ்வொரு பாடசாலையுமே மாணவர் இடைவிலகல் தொடர்பான மூலாதாரம் மற்றும் விளைவு பிரச்சினைகளை தீர்க்க விசேட வேலைத் திட்டங்களை அமுலாக்க வேண்டிய தேவை உணரப்படுகின்றது.

கல்வி அமைச்சு, திணைக்களம்,பாடசாலை சமூகம் இணைந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இது ஒரு சமூகம் சார்ந்த பிரச்சினையாக இருப்பதால் சமூக உணர்வுடன் செயற்றிட்டங்கள் முன்னெடுத்தச் செல்வப்படல் வேண்டும். பெற்றோர், சமூக நிறுவனங்கள் இப்பிரச்சினையை புரிந்து கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். முதலில் சிறவர் தொழில் செய்வதை தடை செய்வதுடன் கட்டாயக் கல்வி சட்டவிதிகளை உறுதியாக நடைமுறைப்படுத்த வேண்டும். எதிர்கால கல்வி ஆர்வத்துக்கு முன்பள்ளிக்கல்வி கட்டாயம் என்பதால் அரசாங்கம் சாரா நிறுவனங்களும் இவ்விடயத்தில் கூடிய கவனம் எடுக்கவேண்டும்.

கவர்ச்சிகரமான கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகள் மகிழ்ச்சிகரமான கற்றல் சூழல், அனைவருக்குமான கனனி பயிற்சி வழங்குதல், குடும்ப பாடசாலை அமைப்பிலான வளப் பகிர்வு, தொடர்ச்சியான மேற்பார்வை நடவடிக்கைகள், ஆசிரியர் மாணவர் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் என்பன கல்வியில் ஆர்வத்தை ஏற்படுத்த உதவும்.

பாடசாலையை இடைநிறுத்துவோர் மீண்டும் கல்வி வாய்ப்புக்களைப் பெபற வசதி செய்யப்படுவதுடன் உயர் கல்வி வாய்ப்புக்களைப் பெற முடியாதவர்களுக்கு பல்கலைக்கழக முறையிலான சமாந்தரக் கல்வி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக கொடுக்கப்படல் வேண்டும்.

சான்றிதழ்களைப் பெற்றவர்களுக்கு உடனடி தொழில் வாய்ப்புக்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் சான்றிதழ் இல்லாதவர்களுக்கும் விசேட தொழிற்பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

அரசாங்கக் கல்விக் கொள்கைகளில் இச்சமூகம் கவனத்தில் எடுக்கப்பட்டு விசேட சலுகைகள் வழங்கப்பட்டால் உயர்கல்வி வாய்ப்புக்களும் தொழில் வாய்ப்புகளும் அதிகரிக்க உதவும். பல்வேறு அரசியல் அமைப்புக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் தமது செயற்பாடுகளில் மேற்படி விடயங்களைக் கவனத்தில் கொள்வது உடனடி தேவையாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒப்புநோக்கில் மலையக நவீன கவிதை வளர்ச்சி

**கலாநிதி. செ. யோகராசா**
தலைவர் - மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற இலங்கையின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிட்டு மலையக நவீன தமிழ்க் கவிதையின் வளர்ச்சி நிலைப்பற்றி அவதானிப்பது அவ்விதத்தில் மலையக நவீன தமிழ்க் கவிதையின் தனித்துவங்கள் பற்றி கவனிப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மலையகத்தை பொறுத்தவரையில் நவீன தமிழ்க் கவிதை மீனாட்சியம்மன் நடேசஐயர், கோ.நடேசஐயர் ஆகியோரின் முயற்சிகளினால் 1930 களில் முகிழ்த்தாலுங்கூட ஏறத்தாழ 1960 வரை ஆழமாக வேருன்றியதாகக் கூறமுடியாது. அவ்விருவரையும் தொடர்ந்து வாய்மொழிக் கவிஞர் குழாத்திடம் மலையகக் கல்வி சென்றுவிடுகின்றது. மக்கள் கவிமணி சி.வி யை ஆங்கிலத்தில் எழுதிய கவிஞராகவே கருதவேண்டும். 1940 களின் பின் கூறிலே இடம்பெற்ற கே.கணேசின் நவீன கவிதை முயற்சிகள் தொடரவில்லை என்பதோடு காலம் அவரை மொழிப்பெயர்ப்புக் கவிஞராகவே உருவாக்கிவிட்டது. 1950 களில் உருவானவர்கள் மலையகம் பற்றிப் பாடினாரென்பதனை விட, அக்காலப்பகுதியிலே பிரதான போக்காக இருந்த (மொழி வழித்) தேசிய உணர்வு சார்ந்த கவிதைகளையே படைத்தனர். என்பதே பொருத்தம். சக்தி. அ.பாலையாவின் படைப்புகள் இதற்கச் சிறந்த உதாரணமாகின்றன. (ஆதாரம் :சொந்த நாட்டிலே தேசிய கீதங்கள், சுதந்திரன் அச்சகம், 1961) 1960 களிலேயே இத்தகைய போக்கில் மாற்றமேற்படுகின்றது தமிழோவியன், குறிஞ்சிநாடன் முதலானோரின் பிரவேசம் நிகழ்கின்றது. மலையகம் பரந்த தளத்திலே அவர்களது கவிப்பொருளாகின்றது. 1960 தொடக்கம் இன்ற வரையான மலையக நவீன கவிதை வளர்ச்சியின் தனித்துவங்கள் யாவை என்பதே எமது கேள்வி.

மேற்கூறிய விதத்தில் நோக்கும்போது முதலிற்குறிப்பிடத்தக்க தனித்துவப் பண்புகளாக விளங்கவது, மலையகக் கவிஞர்களின் சமூக உணர்வு ஆகும். அதாவது ஏனைய பிரதேசக் கவிஞர்களுடன் ஏற்படும் போது இப்பண்பு இங்கு முசலப்பற்றிருக்கின்றதென்பது ஒன்று. மறுதலையாக இயற்கையையும், காதலையும், கவிதையையும், தெய்வத்தையும் பெருமளவு பாடவில்லை என்பது மற்றொன்று. ம.சண்முகநாதனின் கவிதைகள் பற்றி ஓங்கி வளர்ந்த உச்சிமேட்டினின்று தொலைநோக்கி, அழகுகாட்டும் கதிர்காமக்குன்றையும், சிங்கராஜப் பெருங்காட்டின் சிங்காரத்தையும் சமனளவாவியின் வளத்தையும் வருணனை செய்ய முன்வரவில்லை. என்ற கே.கணேஷ் குறிப்பிடுவது (கவனத்திற்குரிய) மலையகக் கவிஞர்கள் அனைவரக்கும் பொருந்துகின்றது என்பதில் ஐயமில்லை.

மேற்கூறிய சமூக உணர்வு என்பது நாம் நன்கு அறிந்தது போன்று மலையகத் தொழிலாளர்களை கூகூகூகதிரவனுக்கு முன்னெழுந்து, உணவு சமைத்து, பெரட்டுக்களம் சென்று குளிரைச்சகித்து மலையேறி கொழுந்து பறித்தும், கவ்வாத்து வெட்டியும், கான்போட்டும் முள் குத்தியும் மாலை வந்து துயிலும் கூட்டத்தின் பல்வேறு வகையான அவலங்களை அதிகளவு சித்திரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இங்கு நான் கூறவருவது, இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் உள்ள தொழிலாளர்களது வாழ்க்கையை அவ்வப் பிரதேசக் கவிஞர்கள் கண்டும் காணாதிருக்கும்போது, மலையகக் கவிஞர்கள் அவ்வாறு வாளாவிருக்கவில்லை என்பதே. *ஆக மலையகக் கவிதைகளின் மற்றொரு தனித்துவம் தொழிலாளர்கள் பற்றி அதிகம் பாடப்படுவதாகும்.*

மேற்கூறிய பண்பினை நுணுகி நோக்கும்போது அதனூடே இன்னொரு தனித்துவம் மேற்கிளம்புகின்றது. அதாவது தொழிலாளர்கள் தமது அவலங்களைத் தாமே வெளிப்படுத்திவருகின்றனர். இவ்விதத்தில் பலர் இருப்பினும் குறிஞ்சித் தென்னவனும், மல்லிகை சி.குமாரும் உடன் நினைவிற்கு வருகின்றனர். கூகூதுன்பம் தொலையவில்லை துயரக் கதையோ முடியவில்லை என்று தொழிலாளியான குறிஞ்சித் தென்னவன் பாடுவதற்கும் தொழிலாளர் வர்க்கம் சாராத பிறக்கவிஞர் பாடுவதற்குமிடையிலான கவிதா உணர்வுத்தனம் வேறு என்பதனை அழுத்தியுணர்த்த வேண்டியது அவசியமன்று.

இனி மலையகக் கவிதைகளின் வடிவம் பற்றியும் சில கூறவேண்டியுள்ளது. எமது இலங்கைக் கவிஞர்கள் எமது மரபிலிருந்து உறிஞ்ச வேண்டியவை பல உள்ளன. நாட்டார் பாடல் வடிவங்களைப் பயனபடுத்துவதென்பது இவற்றுள் ஒன்று. இவ்விதத்தில் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும்போது, மலையகக் கவிதைகளில் இப்பயன்பாடு அதிகமுள்ளமை கவனத்திற்குரியதாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டம் சரியாப்போடு மாரியாயி - தேயிலை
மாரெடுத்துக் கீழே போடு மருதாயி
சட்டப் படி வேலை செய்யும் மூக்காயி - மலைக்குச்
சங்கூதுது முன்னம் வாடி மூக்காயி.
என்று அறுபதுகளின் கவிஞர்கள் மட்டுமன்றி

என்ன மச்சான் சிவராசா
சில்லறையா என்னுறியே
கோடியா நீ ஒழைச்சும்
கோவணமும் மிஞ்சலையா?

ஒழைச்சுக் கொடுத்த நாங்க
பிச்சை எடுத்த காலம்
மலையேறிப் போகுமடி
மச்சானோட வாருமடி. குறிப்பிடத்தக்கது. (அதே வேளையில் இவ்விருக்கால
என்று எண்பதுகளின் கவிஞர்களும் பாடுவது மேற்கூறிய பகுதிகளிலிருந்து பலப்படுவதை அவதானிக்குக).
சட்டக்கவிஞர்களின் பார்வை வேறுபாடுளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. என்று கூறத்தோன்றுகிறது.
மலையகத்தில் குறும்பா வடிவமும் சமூக உணர்வுமீது
குறிஞ்சித் தென்னவன்
குப்பன் வாழ் லயத்தினது கூரை
குளமாக்கும் வீட்டை மழைத்தாரை
தப்பாது இங்கு வந்த
தகரமெல்லாம் ஓரிரவில்
அப்போதே அடையும் கொழும்பூரை.
ஆயினும் குறிஞ்சித் தென்னவன் எழுதியதாகக் கூறப்படும் குறும்பா அனைத்தும் தொகுக்கப்பட்ட பின்பே
இதனை உறுதி செய்யமுடியும்

இலங்கையின் ஏனைய பிரதேசக் கவிதைகளில் என்பதுகள் புதிய பாய்ச்சல்களை ஏற்படுத்தியது
போன்ற நிலைமை மலையகத்திலும் நிகழ்கின்றது. முன்னையோரைவிட தேடலும், வாசிப்பும் வேகமுங்
கொண்ட இளந்தலைமுறையொன்றின் வரவு இங்கு நிகழ்கின்றது. முரளிதரன் இதற்கு எடுத்துக்காட்டுகின்றார்
'டன் டன் டனக்
டன் டன் டனக்
பழனியப்பா - நீ
பூமியினின்று கவ்வாத்து
செய்யப்பட்டு விட்டாயோ
டன் டன் டனக்
டன் டன் டனக்'
என்ற புதிய ஒலிகள், மலையக இளந்தலைமுறையின் மத்தியில் எழுச்சி அலைகளை ஏற்படுத்துகின்றது.
இவ்விதத்தில் உள்ளடக்கம் மட்டுமன்றி, புதுவடிவப் பயன்பாடு, முதன்முதலாக கலாபூர்வமாக பிரக்ஞை
பூர்வமாக இவருடாக வெளிப்பட்தென்பதும் நினைவுபடுத்த வேண்டியதாகின்றது. கூடவே, ஹைக்கூ வடிவத்தின்
வரவும் இவரது கூடைக்குள் தேசத்திலிருந்து அறிமுகமாகின்றது.
எண்பதுகளிலேற்பட்ட இன்னொரு பரிணாமம் மார்க்சிய நோக்கிலான முற்போக்குக் கவிஞர்களின்
எழுச்சியாகும். இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் இக்குழாத்தினர் தளர்ச்சி காண்கின்றபோது, மலையகத்தில்
அதற்கு மாறான நிலை காணப்படுகின்றது. இவ்விதத்தில் இ.தம்பையா, சிவ ராஜேந்திரன், எஸ். பன்னீர்செல்வம்
முதலானோர் குறிப்பிடத்தக்கவர்களாகின்றனர். இத்தகையோருள் பன்னீர்செல்வத்தின் கவிதைகள் அழகியல்
பெறுமானம் மிக்கவை.

இன்று நிதானித்து நோக்கும்போது அறுபதுகளின் கவிஞர்கள் மலையகச் சமூகத்தைப் பாடியதற்கும்,
எண்பதுகளின் கவிஞர்கள் பாடுவதற்குமிடையில் முக்கிய வேறுபாடொன்றுள்ளது. அதாவது, எனணபதுகளில்
பிரவேசித்த கவிஞர்களிடம் சமூகம், அரசியல் பற்றிய கூர்மையான விமர்சனம் கானப்படுகின்றமை
அழுத்தியுரைக்கப்பட வேண்டியதே.

அதே வேளையில் இலங்கையின் ஏனைய பிரதேசங்களிலே குறிப்பாக, வன்னி, அம்பாறை பிரதேசம்
சார்ந்த இளந்தலைமுறைக் கவிஞர்கள் இலங்கையின் நவீன கவிதை வளர்ச்சியை வளம்படுத்தி வருவது
கண்கூடு. மலையக இளந்தலைமுறைக் கவிஞர்கள் இவ்விதத்தில் பின்தங்கியுள்ளமையை மதுரத் தமிழ்
(2000), தேட்டம் (2000), விருட்சப்பதியங்கள் (2000), ஆகிய தொகுப்புகள் வெளிப்படுத்தி நிற்கின்றனர். மூத்த
தலைமுறை கவிஞர்களும், விமர்சகர்களும் இது பற்றிச் சிந்திப்பது காலத்தின் தேவையாகின்றது.
மொழிபெயர்ப்புக் கவிதைத் துறையில் மலையகத்தின் பங்களிப்பு கணிசமானதென்பது நாமறிந்ததே.

இறுதியாக ஒன்று கூறவேண்டும். இலங்கையின் நவீன கவிதை முன்னோடிகளுள் ஒருவரான மீனாட்சியம்மாள்
நடேசஐயர் இலங்கையின் அனைத்துக் கவிஞர்களுக்கும் சொல்லாமற் சொல்லியுள்ள இரு செய்திகள் எமது
கவனத்திற் குரியனவாகின்றன. அவை

* கவிதை அடிநிலை மக்களிடம் கொண்டு செல்லப்பட வேண்டும் அதாவது கவிதையின் செயற்பாட்டுத்தளம் கவனத்திற்குரியது.
** கவிதையின் உள்ளடக்க உருவ பிணைப்பு மனதில் கொள்ளப்படல் வேண்டும் என்பனவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சித் தென்னவனை புரிந்துகொள்ளல்.

*பேராசிரியர் க. அருணாசலம்*



மலையகக் கவிதை உலகிற் சி.வி. வேலுப்பிள்ளைக்கு அடுத்த நிலையில் விளங்கியவர், குறிஞ்சித் தென்னவன். மலையகத் தோட்டத் தொழிலாளியின் மகனாகப் பிறந்து வளர்ந்து ஒருபுறம் தொழிலாளியாகவே வாழ்ந்து மறுபுறம் இலக்கியக் கர்த்தாவாகப் பரிணமித்து விளங்கிய மிகச் சிலருள் குறிஞ்சித் தென்னவன் முதன்மையிடம் வகித்தார். சி.வி. வேலுப்பிள்ளையின் கவிதைகள் தொடர்ச்சியையும், வளர்ச்சியையும், இவரது கவிதைகளில் மிகத் தெளிவாகக் காணமுடிகின்றது. இவர் மரபுக் கவிதை உலகிலேயே கூடுதலான பங்களிப்புச் செய்துள்ள போதும், புதுக் கவிதை, குறும்பா முதலியவற்றிலும் பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டார். வில்லுப் பாட்டுகளையும், கும்மி, கோலாட்டப் பாடல்களையும் சில நாடகங்களையும் இயற்றியுள்ளார். இவர் எழுதிய நாடகங்களுள் ஒருநாள்கூத்து, வீடோ வீடு ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

நுவரெலியா லபுக்கலைத் தோட்டத்தின் மேற்பிரிவிற் பிறந்து வளர்ந்து, தொழிலாளியாகவே வாழ்ந்து கொண்டிருக்கும் இவரது இயற்பெயர் வி.எஸ். ஏவலு என்பதாகும். துயரம் தோய்ந்த குடும்பச் சூழலில் பிறந்து அச் சூழலிலே இன்றுவரை வாழ்க்கைப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறேன். என அவரே அன்று கூறினார். இதனையே அவர்,

...... பாலும் பழமுமா உண்டு வளர்ந்தேன்?
பஞ்ச ணையிலா உறங்கி எழுந்தேன்?
கூழும் இன்றி பசியில் துடித்தேன்!
கிழிந்த படங்கில் உறங்கி வளர்ந்தேன்!

என கவிதையாகவும் வடித்துள்ளார்.

இவர் தோட்டப் பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்பு வரையே கற்றவர். 1934 ஆம் ஆண்டு பிறந்த இவர் 1946ஆம் ஆண்டல் வறுமை காரணமாகக் கல்வியைத் தொடர முடியாத நிலையில், இதற்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டுத் தோட்டத் தொழிலாளியாகவே தமது வாழ்வை மேற்கொண்டு, இன்று வரை முதுமையடைந்த நிலையிலும் தொழிலாளியாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

உழுதுண்டு வாழ வழியில்லை தொழுதுண்டு பின்செல்லவும் மனமில்லை. தோட்டத் தொழிலாளியானேன். என்றார். தோட்டப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரையே படித்த இவரை, மலையக கலை - இலக்கியச் சூழலும் அவரிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்த கவித்துவ உள்ளமும், ஆர்வமும்இலக்கிய உலகில் நுழைய வைத்தன. தமது 26 வயதிற்குள் சுமார் நூறு கவிதைகள் வரை இயற்றியுள்ளார். எனினும், 1960 களில் மலையகத்தில் ஏற்படத் தொடங்கிய மாற்றங்களே இவரை ஆழமான சமுகப் பார்வை கொண்ட வீறார்ந்த கவிதைகளால் பலமுறை தோட்ட அதிகாரிகளின் அடக்குமுறைக்கு ஆளாகித் தொழிலையும் இழந்து, தோட்டத்தைவிட்டு வெளியேற்றப்பட்டார் பலமுறை சிறைவாசமும் அனுபவித்தார். இவரை கொலை செய்வதற்கான முயற்சியம் மேற்கொள்ளப்பட்டது.

ஏறத்தாழ எழுபது கவியரங்குகளில் பங்கு பற்றியுள்ள இவருக்கு 1987ஆம் ஆண்டில் கவிச்சுடர் பட்டமும், 1991 ஆம் ஆண்டில தமிழ் மணி பட்டமும், இந்துசமய, கலாசார அமைச்சினால் வழங்கப்பட்டன.

தமிழ் இலக்கிய உலகிலேயே குறிஞ்சித் தென்னவனைப் போன்றோர், மிக அரிதாகவே உள்ளனர் என்பதை நாம் மனங்கொளல் வேண்டும். பாரதி, புதுமைப்பித்தன் முதலியோரும் வறுமையில் வாடியவர்களே. எனினும், அவர்கள் பிறந்து வளர்ந்த சூழ்நிலையும் கற்றகல்வியும் நகர்ப்புற வாழ்வும், மேன்மக்களது தொடர்புகளும், நண்பர்களது உதவிகளும் அவர்களது உன்னத முயற்சிகளுக்குப் பக்க பலமாக விளங்கின. இலங்கையின் வடபுலத்தில் ஒடுக்கப்பட்ட சமுகத்திற் பிறந்து வளர்ந்து ஆரம்பக் கல்வியுடன் படிப்பை முடித்துகொண்டு இலக்கிய உலகில் நுழைந்த டொமினிக் ஜீவா, டானியல் முதலியோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண நகரிலேயே நீண்டகாலம் வாழ்ந்தனர் பெற்றோரின் தொழிலையும் இடையிலே கைவிட்டனர். கற்றறிந்தவர்கள், பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தோர், பிரபல எழுத்தாளர்கள் எனப் பலத்தரப்பட்டவர்களது தொடர்புகளும், உற்சாகமும் உதவிகளும் அவர்களுக்கு எப்போதும் தூண்டுதலாக விளங்கின. தாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சூழலுக்கப்பால், வெளியுலகத் தொடர்புகளும் அதிகம்.

இதுபோன்றே மலையக இலக்கிய உலகிற் பிரகாசிக்கும் கோ.நடேசய்யர், சி.வி. வேலுப்பிள்ளை, தெளிவத்தை ஜோஸப், மாத்தளை வடிவேலன், சாரல் நாடன், மலரன்பன் முதலியோர் தொடக்கம் இன்றைய இளைய தலைமுறையினரான சு.முரளிதரன், நித்தியானந்தன் முதலியோர் வரை பலரும் ஓரளவாவது வசதி வாய்ப்புகளும், நண்பர்களது உதவிகளும் வாய்க்கப்பெற்றவர்கள். மேற்கண்ட யாவரதும் வாழ்க்கைச் சூழலிலிருந்து வேறுபட்ட குடும்பச் சூழலையும் வாழ்க்கைச் சூழலையும் கொண்டவர் குறிஞ்சித் தென்னவன். எத்தகைய வசதி வாய்ப்புமற்ற குடும்பச் சூழலிற்பிறந்து வளர்ந்து, வறுமையில் உழன்று அருமை மகளையும் பறிக்கொடுத்து மாய்ந்தவர். வசதி படைத்தோரின் ஆதரவோ, தூண்டுதலோ கிடையாது. அன்றாடம் அடுப்பெரிக்கத் திண்டாடியவர், பிறரை ஏமாற்றத் தெரியாது.. பலராலும் ஏமாற்றப்பட்டவர்.

புனைகதை இலக்கியம் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ள இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கூட, கவிதை இலக்கியம் வடிவமாற்றங்கள் சிலவற்றைப் பெற்ற மீண்டும் மீண்டும் புத்துயிர்ப்புப் பெறுவதை அவதானிக்கலாம். கடந்த இரு தசாப்த காலத்துள் இலங்கையின் அரசியல், பொருளாதார நெருக்கடிகள் அதிக முனைப்புப் பெற்றுள்ள நிலையில் கவிதை, இலககியம் மீண்டும் மீண்டும் முக்கியத்துவம் பெறுகின்றது. குறிப்பாக கடந்த இருபது ஆண்டுகளுள் ஈழத்து கவிதை இலக்கியம் புதிய பரிமாணங்களையும் பரிணாமத்தையும் பெற்ற வருவதையும் கணிசமான அளவு கவிதைத் தொகுதிகள் வெளி வந்துள்ளமையையும் பெண் கவிஞர்கள் பலர் அதிக பங்களிப்புச் செய்வதையும் அவதானிக்கலாம். இவ்வகையில், 1985 ஆம் ஆண்டு வெளிவந்த மரணத்துள் வாழ்வோம் என்னும் கவிதைத் தொகுதி விதந்து கூறத்தக்க தொன்றாகும். குறிஞ்சித் தென்னவனின் கவிதைகளுள் ஒரு பகுதி, குறிஞ்சித் தென்னவன கவிதைகள் என்ற தொகுப்பாக 1987 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. இத்தொகுதியில் அடங்காத அவரது தரமான கவிதைகள் பல, சஞ்சிகைகளிலேயே உறங்கிக் கொண்டிருக்கின்றன.

நான் ஒரு தோட்டத் தொழிலாளி, நான் படித்தது தோட்டப் பாடசாலையில், அதுவும் ஐந்தாம் வகுப்பு வரை தான் பதினொரு வயதில் தோட்டத் தொழிலாளியாக வெலை செய்யத் தொடங்கினேன். இருபது வயதில் கவிதை எழுதத் தொடங்கினேன்: எனவரும் அவரது கூற்ற ஆழமாகச் சிந்திக்கத்தக்கது.

நமக்குத் தொழில் கவிதை என்றார் யுகக்கவி பாரதியார் ஆயின் குறிஞ்சித் தென்னவனோ கவிதையைத் தொழிலாக கொள்ளாது, சமூகக் கொடுமைகளைக் கண்டு கொதித்தெழும் உணர்வின் வடிகாலாகக் கொண்டிருந்தார்.

'கவிதைப் புனைதலைப் பலர் தொழிலாகக் கொண்டிருக்கலாம்.ஆனால், எனக்கு கவிதை தொழில் அல்ல. எனது இரத்த நாளங்களில் ஓடும் உயிர்த்துடிப்பு - தீமையைக் கண்டு கொதித்தெழும் உணர்வின் வடிகால். பொழுது போக்காக மனக்கிளர்ச்சிகளின் உந்துதலால் எழுதப்பட்டவையல்ல: மலைகள்: அவைகளில் ஓய்வு கொள்ளும் முகில்கள்: அதன் மேனியெங்கும் பட்டொளி வீசிப் பரிமளிக்கும் தேயிலைப் பசுமைகள்: அம்மண்ணின் அடியிற் புதைக்கப்பட்ட இம்மக்களின் அவலம் நிறைந்த வாழ்க்கைச் சரிதங்கள். இவை யாவும் எனது கவிதைகளின் கருக்கள். இவர்கள் கொட்டிய கண்ணீரும் செந்நீரும் வேதனைக் குமுறல்களும் விட்டிடும் ஏக்கப் பெருமூச்சகளும் எதிர்கால கனவு தரிசனங்களுக்காக நிகழ்கால வாழ்வின் சுகங்களை எவரெவர்களுக்கோ அர்ப்பணித்துவிட்டு, வெறுமையை அரவணைத்து எங்கம் நெஞ்சங்களும் எனது கவிதையின்ஜீவத்துடிப்பகள். எனக் குறிஞ்சித் தென்னவன் தமது கவிதைகள் பற்றிக் கூறியுள்ளமை இங்கு மனங்கொளத்தக்கது.

குறிஞ்சித் தென்னவனின் மேற்கண்ட கருத்தகள், அவரது கவிதைகள் முழுவதிரும் சுவறிக் காணப்படுகின்றன. மேலும், இக்கூற்று எம்மையறியாமல் வடபுலத்து டொமினிக் ஜீவாவையும் டானியலையும் நினைவுறுத்துவதாக அமைந்துள்ளது. வடபுலத்து சூழ்நிலை வேறு மலையகச் சூழ்நிலை வேறு. எனினும் இரு பகுதியினருமே தத்தமது சமூகத்தின் ஈனநிலைகண்டு, குமுறிக் கொந்தளிக்கின்றனர்.

மலையக மக்களின் வேதனைகளையும் அவற்றின் உள்ளார்ந்த இயல்புகளையும் புரிந்து கொள்வது குறிஞ்சித் தென்னவனுக்கு அப்படியொன்றும் சிரமமானதல்ல. அவரே ஒரு தொழிலாளியின் மகனாகப் பிறந்து வளர்ந்து, தொழிலாளராகவே தொழிலாளியின் மத்தியில் வாழ்ந்து அவர்களது வாழ்க்கைப் போராட்டங்களிலும் இன்ப துன்பங்களிலும் வேதனைகள், சோதனைகளிலும் ஊறித்திளைத்தவர். அத்தகைய தென்னவன், மலையகத தொழிலாளர்களின் வேதனைகளையும், அவலங்களையும், ஏக்கப்பெருமூச்சகளையும் இதய சுத்தியோடு பகிர்ந்து கொள்வதை அவரது கவிதைகள் புலப்படுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## புத்துலகம் படைத்திடுவோம்

உன்னுடல் மீது ஏறி மிதித்து
உயர்ந்தவர் வாழ்வெல்லாம் - இனி
மண்ணுடன் மண்ணாய் கலந்து மறைந்திட
மலர்ந்திடும் சமதர்மம்

பொன்னெனத் தம்முடல் பேணிட அயலவர்
உன்னுடல் வதைத்தார்கள் - அவர்
உன்னடி வீழ்ந்து உயிர்ந்திடும் நாள்வரின்
உயர்ந்திடும் சமதர்மம்

வயலினில் சேற்றில் மாடுடன் மாடாய்
வதைபட் டேபயிர் வளர்த்தோம் - இதை
அயலினில் ஒருவர் அறுவடை செய்யும்
அநீதி ஒழித்திடுவோம்

மாளிகை உயர்ந்திட கல்லுடன் கல்லாய்
வதைபட்டே சுவரானோம் - இன்று
வாழ்விடமின்றி வீதிகளோரம்
வாடும் நிலைமாற் றிடுவோம்!

தேயிலை யாலின் னாட்டிற் கேபெருஞ்
செல்வம் ஈட்டித் தந்தும் - வாழ்வில்
தேய்நில வாக ஒளியிழந் தென்றும்
துயருறும் நிலைமாற் றிடுவோம்

ஏழையர் செல்வர் என்றிடும் பேதம்
இல்லா தொழித்திடுவோம் - எம்மில்
தாழ்வுயர் வென்னும் சாக்கடை வீழ்ந்து
சஞ்சலம் நாமினி கொள்வோம்

- குறிஞ்சி தென்னவன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் காலடியில் கேள்விக் கணைகளுடன் இன்றைய மலையகம்

*-பரசுராமன் சங்கர்-*

மலையக மக்களின் இன ஒடுக்குமுறையை இலங்கை அரசுகள் பன்னெடுகாலமாக ஒரு கொள்கையாகவே கடைப்பிடித்து வந்துள்ளன. அரசுகளும், ஆட்சிகளும் மாறியபோதும் ஒடுக்குமுறைக்கான நோக்கம் அடிப்படையாகவும், நடைமுறைகளில் பல வேடம் அணிந்து இனவன்முறைகளாகவோ திட்டமிட்ட குடியேற்றங்களாகவோ இது அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் உச்சகட்ட பரிமாணமாகவே, தற்பொழுது திட்டமிட்ட குடும்பக்கட்டுப்பாடு காணப்படுகின்றதோ என பலரும் சந்தேகிக்கக் கூடியளவிலேயே அதன் தாக்கங்கள் பலமாயிருக்கின்றன.

மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் சமீபகாலமாகவே மிக முனைப்போடு தோட்டக் கம்பனிகளின் கண்காணிப்பில் அவற்றின் கைக்கூலிகளாக செயற்படும் சம்பந்தப்பட்ட மருத்துவர்கள், மருத்துவிச்சிகள், சேமநல உத்தியோகத்தர்கள் என்போரின் துணையோடு ஒரு சமூகத்தின் ஆணிவேரிலேயே அமிலம் ஊற்றும் நடவடிக்கையாக இக்குடும்பக் கட்டுப்பாடு செயற்படுத்தப்படுகின்றது. அலையகத்தின் பலதுறைகளைச் சார்ந்த நிறுவனங்கள், அமைப்புகள் இதற்கு எதிர்ப்புகள் காட்டியபோதும் சுகாதார நலனோம்பும் நடவடிக்கைகளில் ஒன்றுதான் இதுவென காரணங்காட்டுவது வேடிக்கையாகவும் வேதனையாகவும் இருக்கின்றது.

இலங்கையைப் பொருத்தவரையில் 'இலங்கை குடும்பத் திட்டமிடல் சபை' (SLFPA), இலங்கை சனத்தொகை சேவை (SLPSA) என்பவற்றின் பணி குடும்பத் தளிட்டமிடல் பற்றிய ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்குவதோடு, தோட்ட மருத்துவ சேவையாளர்களோடு இணைந்து தாய் சேய் நலன், போஷாக்கு, மருத்துவ பரிசோதனை போன்ற விடயங்களை கண்காணிப்பதும், உரிய சிகிச்சையளிப்பதுமேயாகும். ஆனால் இன்றைய சூழலில் மலையகத்தில் இச்சபைகள் நடமாடும் சேவைகள் மூலம், பெண் தொழிலாளர்களை தொழில்நிலை சிரமங்களையும், குடும்ப பொருளாதார சிக்கல்களையும் எடுத்துக் காட்டி முன்வைத்து கழுத்தறுக்கும் செயலை 'டிறஸ்டின்' (Trust) துணையோடு நடத்தி வருகின்றது.

இந்த திட்டமிட்ட குடும்பக் கட்டுப்பாட்டினை செய்துகொள்ள தூண்டப்படுவது இளம்தாய்மார்களே ஆவார். இவர்கள் முப்பது வயதுக்கு உட்பட்டவர்கள் ஆதலினால் இலகுவாக வழிப்படுத்த முடிகின்றது. இவ்வாறான திட்டமிட்ட குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டதன் பின்னர் ஏற்படும் விளைவுகளைப் பார்க்கின்றபோது, அவை எம்மை ஒருதடவை நிலைகுலையச் செய்துவிடுகின்றது.

இலங்கையில் 1959ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பிலே சிறுபான்மையினருள் மலையகத் தமிழர்களே முதலிடத்தில் இருந்தனர். இன்று நிலைமை மாறி மூன்றாமிடத்துக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். இதற்கு பல காரணிகளின் தாக்கங்களும் பின்னணியிலிருக்கின்றன. இதுபோலவே இன்று மலையக பாடசாலைகளின் ஆரம்பவகுப்புகளில் சேர்ப்பதற்கு மாணவா இன்றி பல பாடசாலைகள் மூடப்பட்டும், மூடப்படவேண்டிய நிலையிலும் இருக்கின்றன. இவ்வாறான நிலைமைகள் தொடருகின்றபோது, மலையக மக்களின் பல்வேறுபட்ட மட்டங்களிலும் தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது நிதர்சனமாகும்.

அதாவது, முதியோர்களின் எண்ணிக்கை அதிகமாகி, தங்கிவாழ்வோரின் தொகை அதிகரிக்கின்ற அதேவேளையில் இருக்கின்ற இளைஞர், யுவதிகளில் பெரும்பாலானோர் படித்து முடித்து தொழில்களக்கு சென்றுவிட, தோட்டத் தொழிற்றுறையானது எதவித அபிவிருத்தியோ, மாற்றங்களோ ஏற்படுத்தப்படாமல் தொழிலாளர்களின்றி மூடப்படலாம். அல்லது தொழிலுக்காக ஏனைய இனத்தவர்கள் குடியேற்றப்படலாம். அடுத்து, தேசிய ரீதியிலான தொழில்வாய்ப்புகள், பல்கலைக்கழக அனுமதிக்கான சமவாய்ப்புகள் ஏனையோருக்கு பகிரப்பட்டுவிட தொழிலின்மையும், எம் மக்களுக்கு உரித்தான பங்குகள் இல்லாமற்கேபாகவும் வாய்ப்புகள் ஏற்படலாம்.

இது இவ்வாறிருக்க மற்றுமொரு பிரச்சினையும் மலையகத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது. அதாவது 'கசிப்பு' என்ற பெயரிலே சட்டவிரோத மதுபான உற்பத்தியும், ஏனைய மதுபானங்களின் விற்பனையும் அமோகமாக பல தோட்டங்களில் நடைபெற்று வருகின்றது. இந்த 'கசிப்பு' என்ற அரக்கன் எவ்வாறு அலையகத்துக்குள் வரவழைக்கப்படுகிறான் என்பதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன.

i) பெரும்பான்மை இன மக்கள் வாழுகின்ற நாட்டுப் புறங்களை அண்மிய தோட்டங்களுக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றது.

ii) மலையகப் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் உற்பத்தியும் செய்யப்படுகின்றது.

iii) மலையகப் பெருந்தோட்டங்களின் பல பகுதிகள் தற்போது மாணிக்கக் கல் அகழ்வுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தொழில் செய்வதற்கென வருகின்ற வேற்றுப் பிரதேச பெருபான்மை இனத்தவர்களால் கொண்டு வரப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான நிலைமைகளில், மாணிக்கக் கல் அகழ்விற்கென வருகை தரும் தொழிலாளர்களினால் கொண்டு வரப்படும் கசிப்பு போதையினால் ஏற்படும் விளைவினைவிட மாணிக்கக் கல் அகழ்வுத் தொழிலினால் ஏற்படும் விளைவுகள் மிக மோசமானவையாக இருக்கின்றன. அதாவது இவர்களால் கொண்டு வரப்படுகின்ற கசிப்பு, கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் தொழிற்கஷ்டங்களை மறக்கவும், நீண்டநேரம் வேலை செய்ய கூடுமாயிருக்கம் என்றும் பாவிக்கப்படுவதாகக் கூறப்பட்டபோதும், இதனோடு இணைந்ததாக பல கொடுமைகளும் இடம்பெறத்தான் செய்கின்றன.

மலையகப் பெருந்தோட்டக் கம்பனிகளின் இலாபமுழைக்கும் ஒரு நோக்காக, தமது தோட்டங்களில் மாணிக்கக் கல் அகழ்விற்காக தனியாருக்கு நிலங்கள் குத்தகைக்கு கொடுக்கப் பட்டுள்ளன. இவற்றிலே கல் அகழ்விற்கென ஆற்றுப்படுகைகளும், கால்நடைகளுக்கான புற்களைப் பெறும் நிலங்களும் கூட வழங்கப்பட்டுள்ளன. இந்த அகழ்வுத் தொழிலிலே எமது மக்களுக்கு போதிய அனுபவமின்மையால், அனுபவம் வாய்ந்த பெரும்பான்மை இன தொழிலாளர்கள் பெருமளவில் கொண்டுவரப்பட்டு, தோட்டப்புறங்களில் தங்கவைக்கப்பட்டு அகழ்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ் அகழ்வு வேலைகள் இரவு நேரங்களிலேயே பெரும்பாலும் இடம்பெறுவதனால் குளிரைத் தவிர்க்கவும், வேலை சிரமத்தை மறக்கவும் மலிவுவிலை போதையாக கசிப்பு, கஞ்சா போன்றன முதலாளிகளினால் விநியோகிக்கப்படுகின்றன. இந்த வேலைத்தளங்களில் தொழில் புரியும் எமது மக்களும் இவற்றிலே இப்போது கைதேர்ந்த பாவனையாளர்களாக மாறியுள்ளனர். இந்தப் போதைக் கெடுதிகள் மட்டுமன்றி மலையக சமூக சீரழிவிற்கான பல வேலைகளும் திரைமறைவில் நடந்து வருகின்றன.

மாணிக்கக் கல் அகழ்வினால் பொருளாதார ரீதியில் ஒரு சிலருக்க இலாபம் கிடைப்பது என்பது உண்மை என்ற போதிலும் அதிலே பெரும் பங்கு வெளியிலிருந்து வருகின்ற வியாபாரிகளினாலேயே அனுபவிக்கப்படுகின்றன. அதாவது மலையக வளம் சுரண்டப்படுகின்றது. என்றே கூறலாம். இது மட்டுமன்றி நிலக்கீழ் மண் அகழ்தெடுக்கப்படுவதனால் நிலக்கீழ் நீர் வளம் அற்றுப்போவதுடன் வளமான மண் நிலத்துக்கு கீழே செல்லவும், புதிய தரிசு நிலங்கள் தோன்றவும் வாய்ப்பேற்படுகின்றது. ஆற்றுப்படுகைகளில் அகழ்வுகள் இடம்பெறுவதனால் மண் கழுவப்பட்டு நீர்த்தேக்கங்களில் நிறையவும், மண் சரிவு, மண் அரிப்பு ஏற்படவும் ஏதுவாகலாம். இந்த அகழ்வு வேலைகள் காடுகளிலும் இடம்பெறுவதனால் காட்டு வளங்களும் அழிக்கப்படுகின்றன. இதனால் மண்வளம், நீர்வளம், காட்டுவளம் போன்றன அழிக்கப்பட்டு கால்நடைவளர்ப்பு, மரக்கறிச்செய்கைகளில் பாதிப்பும், காலநிலைகளில் மாற்றங்கள் ஏற்படவும், புதிய தொற்று நோய்கள் தோன்றவும் வாய்ப்புகளுண்டு.

அகழ்வு வேலைகளில் பெரும்பாலும் இளைஞர்களே பங்கு கொள்வதனால் இவர்களுக்கிடையே கோஷ்டி மோதல்கள் ஏற்பட்டு இறுதியில் வழக்கு விவகாரங்களும், மரணங்களும் கூட சம்பவித்திருக்கின்றன. மதுபாவனை, புகைப்பிடித்தல் போன்ற தீயபழக்கங்களும் எதிர்கால சந்ததியினரான இளைஞர்களைப் பாதித்திருப்பதோடு, இந்த அகழ்வுத் தொழில் நிறுத்தப்பட்டால் கொள்ளை, திருட்டு, கொலைகள் போன்ற சம்பவங்கள் ஏற்படலாமென்றும் அஞ்ச வேண்டியுள்ளது.

இவற்றையெல்லாம் விட மோசமானதாக, சிகரம் வைத்தாற்போன்று, வேலைக்கென வந்து தங்கியிருக்கும் வெளியாரினால் மேற்கொள்ளப்படும் வெளியாரினால் மேற்கொள்ளப்படும் பாலியல் சேஷ்டைகளும், பெண்கள், சிறுவர், சிறுமியருக்கு எதிராக விடுவிக்கப்படும் பாலியல் துஷ்பிரயோகங்களும், அச்சுறுத்தல்களும் எல்லைமீறியதாகக் காணப்படுகின்றது. இதனால் பள்ளி மாணவரின் கல்வி நிலைமைகளில் பாதிப்பும், குடும்ப உறவுகளில் விரிசல்களும் தோன்றியுள்ளன.

இந்த அகழ்வு வேலைகள் மலையகப் பகுதிகளில் முற்று முழுதாகத் தடுத்து நிறுத்தப்படல் வேண்டும். இன்றேல் எதிர்கால இளைய சமுதாயம் மட்டுமல்ல குடும்ப உறவுகளில் நம்பிக்கையீனங்களும், கல்விநிலை பாதிப்பும், மலையக பிரதேசத்தின் தனித்துவமான கலாசார சூழல் பாதிக்கப்பட்டு, பிரதேசத்தின் ஒழுங்கு, ஒருமைப்பாடு சீர்குலைந்து, பல்கலாசார சமூகங்களும், சமூக முரண்பாடுகளும் ஏற்படக் கூடிய சூழ்நிலை தோன்றலாம்.

ஆகவே மேலே குறிப்பிடப்பட்ட இருவேறுபட்ட கோணங்களைக் கொண்ட பிரச்சினைகளான திட்டமிட்ட நிரந்தர குடும்பக் கட்டுப்பாடும், மாணிக்கக் கல் அகழ்வும் கசிப்பு பாவனையும் போன்ற சிக்கல்களும் ஏற்படுத்தப்போகும் விளைவுகள் ஒருங்கிணைந்து மலையக சமூக அழிவுகளுக்கு வித்திடுவதோடு எதிர்காலத்தில் தொழிலில் சமவாய்ப்புகளின்றியும், கட்டுக்கோப்பும், ஒழுங்குமின்றி எமது கலாசாரத்தைப் பாதுகாக்க முடியாமலும் போய்விடும். அப்போது, இன்றைய பிரச்சினைகளுக்கு இன்றே தீர்வு காணமுடியாது நழுவிப்போன எமது கையாலாகாததனத்தால் சமூகம் கதியற்றுப் போய்விடும். அன்றேல் இவ்வாறு ஒரு சமூகம் வாழ்ந்து அழிந்து போனதாக வரலாறும், நூதனசாலைக் குறிப்புகள் மாத்திரமே எஞ்சியிருக்கும். மலைய சமூகப் பிரதிநிதிகள் என்ற வகையில் சகலரும் ஒன்றிணைந்து சமகால பிரச்சினைகளுக்கு இன்றே தீர்வு காணவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரெலியா ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலய வரலாறு

இந்துக்களின் வாழ்க்கை சமயத்தையே அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. இத்தகைய சமய வாழ்க்கை ஆலய வழிபாடோடு தொடர்புடையதாக விளங்குகின்றது. இலங்கையில் ஐந்து பழைமை வாய்ந்த சிவாலயங்கள் வட, கிழக்கு, வடமேற்குக் கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ளன. இவ்வைந்து ஆலயங்களோடு இன்று நுவரெலியாவில் அமைந்துள்ள ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயமும் மிகச் சிறப்புமிகு ஆலயமாகக் கணிக்கப்படுகின்றது. நுவரெலியாவில் 82, லேடிமெக்கலம்ஸ் ட்ரைவில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் சிறப்புக்கும், பெருமைக்கும் காரணம் இவ்வாலயம் இலங்கையின் மத்திய மலைப் பிரதேசத்தில் அமைந்துள்ளமையே. இத்துடன் இவ்வாலயம் சரித்திராப் பிரசித்தி பெற்ற ஆலயமாகும் இவவாலயம் அமைந்துள்ள பகுதி முன்னொரு காலத்தில் இலங்கையை ஆட்சிபுரிந்த இராவணனது இராசதானியாக இருந்ததாக அறிஞர்கள் கூறியுள்ளனர். இராவணன் ஓர் சிறந்த சிவ பக்தனாக இருந்து சிவலங்கத்தை வணங்கிப் பூசை செய்து வந்தான். அவன் வழிபட்டு வந்த சிவலிங்கம் இன்று ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் காணப்படும் சிவலிங்கத்தைப் போன்றதாகும். இச் சிறப்பமிகு சிவலிங்கத்தை [தான்தோன்றிய] ஸ்ரீ சிவ பால யோகி என்னும் தபசி பன்னிரண்டாண்டு கடும் தவத்தின் பின் வட இந்தியாவில் உள்ள நர்மதா உன்னும் பரிசுத்த நதியில் கண்டெடுத்து எத்தனையோ பேரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் இலங்கைக்கு கொண்டு வந்தார்கள். இவ்லிங்கத்தை தறபோது அமைந்துள்ள இடத்தில் வைத்துப் பூஜை செய்து ஸ்ரீ சிவ பால யோகி மகரிசி வானொளிமூலம் பேச்சொன்றை நடத்தினார். ஆப்பேச்சின் மூலம் நாம் அறியகக் கூடியதாக அமைந்தது என்ன வெனில் இலங்கையை ஆண்ட இராவணனின் மகனாகிய மேகநாதன் தன் தந்தைக்கு சகல நற்பலன்களும் வேண்டி தற்போது அமைந்துள்ள ஆலயத்தின் பகுதியில் சிவலிங்க வழிபாட்டைச் செய்தான். மேகநாதனின் பக்திப்பரவசத்தின் மகிமையை வியந்து மும்மூர்த்திகளான பிரமா, விஷ்னு, சிவன் மேநாதனின் முன்தோன்றி அவனை ஆசிர்வதித்தனர். இவர்களின் தோன்றலினுலும், ஆசிர்வாதத்தாலும், அருனாலும் இவ்விடம் இவ்விடம் புனிதத்தன்மை அடைந்து பிரகாசித்தது. இபபேர்பட்ட இடம் மானிடர்களினால் என்றும் அழித்தொழியமாட்டாது. முனிதர்கள் வாழ்வதற்கே மிகவும் புனிதத்தன்மை வாய்ந்ததாகும். இவ்வடத்தில் முதல் முதலில் குடியமர்ந்தவர் லெஜிஸ் லேரிவ் கவுன்ஸிலின். முதற் சபாநாயபராக அமர்ந்திருந்த பெருமபன் ஒருவராவர், இவரைத் தொடர்ந்து அநேகர் இவ்விடத்தில் வாழமுற்பட்டனர். ஆன்ல் எவரும் இவ்விடத்தில் அநேக காலம் வாழ முடியவில்லை. இவ்விடம் 40 ஆண்டுகள் அணுகமுடியாத. வாழமுடியாத பேய் பிசாசு நட மாட்டம் உள்ள இடமாக இருந்தது. மனித நடமாட்டமில்லாத இவ்வி த்துக்கு ஸ்ரீ முருகேசு சுவாமி தனது பத்திப் பெருமையினாலும், தவ வலிமையினாலும், ஆன்மீக ஆற்றலினாலும் இவ்விடத்தில் வசிப்பதற்காக 1975ம் ஆண்டு வந்தார். இப்பகுதியில்தான் 1978ம் ஆண்டு 16ம் திகதி ஐப்பசி மாதம் சிவலிங்கம் பிரஷ்டை செய்யப்பட்டது. சிவலிங்க பிரதிஷ்டை ஸ்ரீ சிவ பால யோகியின் மேற்பார்வையில் ஸ்ரீ முருகேசு சுவாமி ஸ்ரீமதி சீதாபாபு ஆகியோரின் விடாமுயற்சியனால் சிறப்பான நடைபெற்றது. இவர்களின் ஆதரவும், அன்பும் ஆண்டவனின் கிருபையும், மனுக்கிரகமும் இல்லாவிடில் இவ்லிங்கம் இவ்விடத்தில் அமைந்திருக்கமுடியாது.

இச்சிவலிங்கத்தை அமைத்த பின்னர் சிவ பாலயோகி, சீதாபாபு ஆகியோர் தமது தியானத்தினாலும், பிரார்த்தனையாலும் இவ்லிங்கத்தை பரிசுத்தம் பெறச் செய்தனர். சீதாபாபு 34 நாட்களாக அமைதி பேணி பால் பழத்தை உட்கொண்டு வாழ்ந்தார்.

இன்று இவ் இலங்காதீஸ்வரர் ஆலயம் மிகவும் பிரகாசமாகத் திகழ்ந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கின்றது. ஒரு காலத்தில் மனித நடமாட்டமில்லாமல் இருந்த இவ்விடம் இன்று சமய கலாச்சாரப் பண்புகளோடு தெய்வீகத்தன்மை பொலிந்து காணப்படுகிறது. இதற்குக் காரணகர்த்தாவாக வாழ்ந்தவர் ஸ்ரீ முருகேசு சுவாமி என்றால் மிகையாகாது. அதற்காக நாம் அவரைப் பாராட்டாமலும் இருக்க முடியாது. இன்றே இவரின் மேற்பார்வையில், பிரார்த்தனைகளும், பூஜைகளும், சகல திருத் தொண்டுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

உலகில் நாலா பகுதியிலிருந்தும் பக்தர்கள் சாதி, மத பேதமின்றி ஒன்று திரண்டு இவ்வாலயத்திற்கு வந்து ஆலய வழிபாடு செய்து ஆண்டவன் திருவருள் பெற்றுச் செல்கின்றனர். இவ்வாலயத்தில் நடைபெறும் அற்புதத்தையும் அவர்களால் நேரில் கண்டு, உணர முடிகின்றது. நடு மதியத்திற் இவ்லிங்கம் அமைக்கப்பட்டமையினால் அச்சமயம் லிங்கத்திற்கு பூஜை நடைபெறுகின்றது. பூஜை நடைபெறும் தருனத்தில் மழை பெற்து வீட்டு முகட்டில் விழுவது போன்ற சத்தத்தையும் லிங்கத்தினின்று கசியும் வியர்வையையும் நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இத்துடன் இவ்லிங்கம் நாளுக்கு நாள் வளர்வடைவதையும் பக்தர்கள் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இவை எல்லாம் இவ்வாலயத்தலத்தில் நடைபெறும் அற்புதங்கள் ஆகும். இவ்வாலயம் அமைந்திருக்கும் சுற்றாடல் மலைப் பிரதேசமாகையினால் பக்திப் பரவசம் எல்லோரிடமும் மேலோங்கி நிற்பதை நாம் காண முடிகின்றது.

சுவாமி முருகேசு ஆற்றிவரும் ஆன்மீக சேவையால் மண்ணுலக மக்கள், அமைதி, ஆனந்தம் நிறைந்த அருள்வாழ்வாம் பெருவாழ்வைப் பெற்று வாழ பிரார்த்திப்போமாக.

***வே. சதாசிவம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக படைப்பிலக்கியத்தின் பயன்பாட்டுவாதம்

*லெனின் மதிவாணம்*

மலையக படைப்பிலக்கியம் என்ற பதத்தினைக் கொண்டு நோக்குகின்ற பொழுது மலையக பிரதேசத்தை தளமாகக் கொண்டு எழுதப்பட்ட இலக்கியங்களைக் குறிப்பதாக அமையும் இவ்விடத்தில் பிறிதொரு விடயம் பற்றிய தெளிவும் அவசியமாகின்றது. அதாவது மலையக இலக்கியம் எனும்போது அது இரண்டு நிலைப்பட்டவையாக காணப்படுகின்றன. ஒன்று மலையக பெருந்தோட்டத்துறை சார்ந்த மக்களிடையே காணப்பட்ட வாய்மொழி இலக்கியங்கள். மற்றது மலையக மக்கள் பற்றிய ஆக்க இலக்கியங்கள். இங்கு படைப்பு இலக்கியங்களான கவிதை, சிறுகதை, நாவல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட இந்த குறிப்பினை எழுத விழைகின்றேன்.

மலையக படைப்பிலக்கியத்தின் பயன்பாட்டு வாதத்தினை பின்வரும் அடிப்படை கொண்டு நோக்குதல் பயன்மிக்கதாகும். சமூக மாற்றத்துக்கான செயற்பாடுகளில் இலக்கியத்தின் பங்கு முக்கியமான ஒன்றாக விளங்குவதுடன் சமூகத்தின் அசைவியக்கத்திற்கும் இலக்கியம் வழிகாட்ட வேண்டும். அதனைச் சாதிப்பதற்கான அணுகுமுறையை வாழ்க்கை பிரச்சினைகளை தெளிவுபடுத்தவதாக அமைய வேண்டும். எனவேதான் இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடியாக மட்டுமன்று அது காலத்தினை உருவாக்குகின்ற பணியினையும் ஆற்றுகின்றது.

மேற்குறிப்பிட்ட கருதுகோளின் அடிப்படையில் மலையக படைப்பிலக்கியத்தின் பயன்பாட்டு வாதம் பற்றி நோக்குகின்ற இக்குறிப்பு அதனுடைய முனைப்பற்ற சில போக்குகளை சுட்டிக் காட்டுவதாகவே அமையும். அவ்வகையில், இதனை நிருபிப்பதற்காக நீண்ட பட்டியல் நிட்ட நான் விரும்பவில்லை. அட்டவணை போட்டு இலக்கிய கணக்கெடுக்கும் ரசிக விமர்சகர்களுக்கு அப்பணியினை விட்டுவிட்டு மலையக இலக்கியத்தின் பயன்பாடு எத்தகைய பண்பில் வளர்ந்து வந்தது. என்பதனையும், அதற்கு

விடியல் பொழுதின்
ஆக்கிரமிப்பின் முன்னர்
இறுதியாய் சொட்டும் - இப்
பனித்துளி புதிது.

பொருந்தும் இந்த
பொழுதின்கனத்தில்தான்
துயரும் நோவும்
நசிவும் இறப்பும்
இம் மக்களின் மூச்சில்
இவ்வாழ்க்கையின் முகிழ்ப்பின்
அம்சம் ஒன்றென
ஆகி போயின.

மேற்குறிப்பிடப்பட்ட கவிதையினை ஆழ்ந்து நோக்குகின்ற பொழுது மலையக மண்ணின் உணர்வுகளையும், இயற்கையையும் ஒன்றாக சேர்த்து நேசிக்கின்ற பண்பை கவிஞர் சி. வி.யின் கவிதைகளில் காணக்கூடியதாக உள்ளது. இக்காலத்தில் இவர் எழுதிய நாவல்களில் வீடற்றவன் குறிப்பிடத்தக்கது. இது மலையக மக்களிடையே தொழிற்சங்க உருவாக்கம், அதனை நிலைநிறுத்துவதில் உள்ள இடர்பாடுகள் என்பவற்றை வெளிக் கொணர்வதில் இதன் பங்க கணிசமானது. குறிப்பாக இக்காலத்தில் வளர்ச்சி பெற்று வந்த மிதவாத தொழிற்சங்கத்தையும், அதன் போக்குகளையும் சித்திரித்துக் காட்டுவதில் இதன் பங்கு சிறப்பானதாக காணப்படுகின்றது.

இதே காலத்தில் மலையக படைப்பிலக்கிய துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கிய பிறிதொருவர் என். எஸ். எம். இராமையா ஆவார். இவரது சிறுகதைகளும் மலையக மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை உள்நின்று இலக்கியப் படைப்பாக்கித் தருவதாக அமைகின்றது. இவர் இயன்றவரை நடப்பியல்பைப் புரிந்துக் கொண்டு நியாயத்தின் பக்கம் நின்று எழுத முயன்றுள்ளார். அவ்வகையில் இவரது ஒருகூடைக் 'கொழுந்து' என்ற சிறுகதைத் தொகுதி மலையக இலக்கியத்திற்கு ஒரு புதிய குருதியை பாய்ச்சுகின்றது எனலாம்.

இச்சந்தர்ப்பத்தில் பிறிதொரு விடயம் பற்றி நோக்குதலும் அவசியமாகின்றது. அதாவது 1960 களில் மலையகத்தில் திரு. சண்முகதாசன் தலைமையிலான இடதுசாரி இயக்கமானது ஒரு புதிய பரிணாமத்தை எட்டியது. இவ்வியக்கமானது மலையகமெங்கும் கிளைபரப்பி, வேர்கொண்டபோது பல்வேறு ஆளுமைகளை புத்திஜீவிகள் தொழிலாளர்கள், மாணவர்கள் என தன்னோக்கி வேகமாக ஆர்சித்திருந்தது. இதன் காரணமாக மலையக மக்கள் புத்துணர்வு பெற்றவர்களாக காணப்பட்டதுடன், தங்களது நல்வாழ்வக்கான போராட்டங்களையம் மேற்கொண்டனர். குறிப்பாக மடக்கும்பர மே:பீல்ட் ஆகிய தோட்டங்களில் இடம் பெற்ற போராட்டங்கள் முக்கியமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான காலக்கட்டத்தில் தோற்றம் பெற்ற சி.வி.யினதும் என்.எஸ்.எம். இராமையாவினதும் இலக்கியப் படைப்புகள் இத்தகைய போராட்ட உணர்வுகளை உள்வாங்கவில்லை என்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கது. குறிப்பாக மலையக மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் இவை முக்கியத்துவம் உடையனவாக காணப்பட்ட அதே சந்தர்ப்பத்தில் மலையக மக்களின் பல்வேறுபட்ட எழுச்சிகளையம், போராட்டங்களையும் உள்வாங்கவில்லலை என்பத சமூகவியல் நிலைப்பட்ட ஆய்வாகும்.

இக்காலக்கட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பான ஒடுக்குமுறைகள் தோட்ட உத்தியோகத்தர்களினாலும் மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக தோட்ட பெண்களை கணக்கப்பிள்ளைமார்கள் சகஜமாக பாலியல் சேஷ்டைகளுக்கு உட்படுத்தக் கூடியவர்களாக இருந்தனர். இவ் ஒடுக்கு முறையானது இடதுசாரி தொழிற்சங்க எழுச்சியுடன் தான் முடிவு பெற்றது. எத்தனையோ கணக்குப்பிள்ளைமார்களை அடிக்கப்பட்டு, அவர்களின் கை வெட்டப்பட்ட சம்பவங்கள் மலையகத்தில் இடம் பெற்றுள்ளன. இவற்றினையும் என். எஸ். எம். இராமையாவின் சிறுகதைகள் படம் பிடிக்கவில்லை குறிப்பாக இவரது சிறுகதைகளில் ஒரு மனித நேயமிக்க கணக்கப்பிள்ளையே வந்து செல்கின்றார். எனவே மேற்கூறப்பட்ட போக்கினை இவரது சிறுகதைகள் உள்வாங்கவில்லை என்று குறிப்பிடலாம்.

இவ்வம்சம் மலையக மக்கள் தொடர்பாக இக்காலத்தில் இயற்றப்பட்ட சில கவிதைகள் மூலமாக அறியக்கூடியதாக உள்ளது. உதாரணம் ஜூல் சுல்தான், கோவிந்தசாமிதேவர், பெரியதம்பிப்பிள்ளை ஆகியோர் இயற்றிப் பாடிய பாடல்களில் காணக்கூடியதாக உள்ளது. இருப்பினும் இவ்விடதுசாரி இயக்கப்போக்கு இக்காலக்கட்டப் படைப்புகளில் உள்வாங்கப்படவில்லை. அனுசரணையாக இருந்த இலக்கியங்களையும், எழுத்தாளர்களையும் சுட்டிக் காட்டிச் செல்வது இதன் ஆரம்பமாகும்.

மலையக படைப்பு இலக்கியம் இரு நிலைப்பட்டவர்களால் எழுதப்பட்டுள்ளது.

1. மலையகத்து பெரந்தோட்டப் பண்பாட்டினுள் இருந்தவர்களால் எழுதப்பட்டது. (மலையக மண்ணின் மைந்தர்கள்)

2. மலையக பிரதேசத்துடன் உறவுக்கொண்ட பிற பிரதேசவாதிகளால் எழுதப்பட்டவை.

இவ்விரு தரப்பினருக்கம் இடையில் பல்வேறுபட்ட வித்தியாசங்கள் உள்ளன. மலையக மக்களின் வாழ்வியலை புரிந்து கொண்டு அதற்கேற்றவகையில் அவற்றினை இலக்கிய படைப்பாக்கித் தருவதிலேயே இவ்வேறுபாடு காணப்படுகின்றது.

மண்ணை சார்ந்து நின்ற சில எழுத்தாளர்களின் படைப்புகளை நோக்கும்போது இந்த வாழ்வியலுடன் உள் நின்று எழுதுகின்ற நிலையினைக் காணலாம். இவ்வகைப் பாட்டினுள் மலையக இலக்கியம் படைத்த அனைத்து எழுத்தாளர்களையும் குறிப்பிட முடியாது. யதார்த்த நோக்கு, சமூக அசைவியக்கம் என்ற அடிப்படைகளை புரிந்து கொள்வதில் இவர்களிடையே வேறுபாடுகள் உண்டு என்பதும் கவனத்திற் கொள்ளத் தக்கது.

மற்றது மலையக பிரதேசத்துடன் தொடர்புகொண்ட பிற பிரதேசவாதிகளால் எழுதப்பட்ட இலக்கிய படைப்புகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்ற பொழுது, இம் மக்களின் மீது உணர்வு கொணடவர்களாக இருந்தும், இம்மண்ணின் வாழ்வியலைப் புரிந்து இலக்கியம் படைத்துள்ளனர். என்பதை கூறமுடியாது உதாரணமாக வடகிழக்கு பகுதியைச் சேர்ந்த எழுத்தாளர்கள் மலையக மக்கள் குறித்து மனிதாபிமானமாகச் சிந்தித்தபோது அவர்கள் நிலவுடைமை சார்ந்த சிந்தனையையே முன்வைத்தனர். இதாவது நிலத்தை பெருக்குவதன் மூலம், அல்லது நிலத்தைச் சொந்தமாக்குவதன் மூலம் விடுதலை அடையலாம் என்ற விவசாய வர்க்கத்திற்குரிய சிந்தனை போக்கை முன்வைத்தனர். அத்துடன் யதார்த்த உடைவும் இடம்பெற்றது. உதாரணமாக புதுமைப் பித்தனின் 'துன்பக் கேணி' யில் மாலதி மரத்தில் கட்டி வைத்து கற்பழிக்கப்படுவது, தாமோதிரம் ஆசிரியர் திடீரென பாய்ந்து காப்பாற்றுதல் என்று இம் மக்களின் வாழ்வியலை சிறப்பாக உள்வாங்காமையால் ஏற்பட்ட யதார்த்த சிதைவு எனலாம்.

மலையக படைப்பு இலக்கியத்தின் ஆரம்பக்காலக் (1920ற்கு) கவிதைகள் பல பாடல்களை மலையக சூழலுக்கு எற்ப மாற்றியமைத்து பாடுவதாக இருந்தது. குறிப்பாக அருள்வாக்கி அப்துல் காதுறு புலவர் மத அடிப்படையான சில பாடல்களை இயற்றி அவற்றினை மலையக சூழ்நிலைக்கு ஏற்படவும் பாடியுள்ளார். 1921க்குப் பின்னர் மலையகத்தில் நடேசய்யரின் வருகை இடம் பெறுகின்றது. இவர் மலையக மக்களிடையே தொழிற்சங்கம் அமைப்பதில் முனைப்பாக செயற்பட்டவராவார். இந்திய தேசிய வாதத்தினால் கவரப்பட்ட இவர், இம் மக்களுக்காக உழைப்பதில் தனது கவனத்தைச் செலுத்தினார். இவர் மட்டுமல்லாது இவரது மனைவியான மீனாட்சியம்மாளும் இணைந்து செயற்பட்டனர். இவர்கள் தோட்டத் தொழிலாளர்களிடையே உணர்வினை ஏற்படுத்துவதற்காக பல பாரதி பாடல்களை மலையக மக்களுக்கு ஏற்ற விதத்தில் மாற்றிப் புதிதாய்ப் புனைந்து பாடினர். இது மலையக மக்களிடையே பரவியதுடன், அவர்களிடையே புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தியிருந்தது என்பது மறுப்பதற்கில்லை. இவ்வகையில் இக்காலக்கட்டத்தில் பாரதியின் பல பாடல்களை மலையக மக்களுக்குரியதாக மாற்றிப் பாடப்பட்டன.

இலங்கையின் சுதந்திர காலமுதல் சிறிமா சாஸ்திரி காலம் வரையிலான காலப்பகுதி மலையக அரசியலில் குறிப்பிடத்தக்கனவாக அமைகின்றன. இக் காலப்பகுதியில் தான் மலையக மக்களின் வாக்குரிமை பறிப்பு, சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் மலையக மக்களை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புதல் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இக்காலப் பின்னணியில் இலக்கியம் படைத்தவர்களில் சி.வி.வேலுப்பிள்ளை குறிப்பிடத்தக்கவர். மலையக மக்களின் வாழ்வியலைப் புரிந்து இலக்கியம் படைத்ததில் சி.வி.யின் பங்கு கணிசமானது. இவரது In Ceylon Tea Garden என்ற கவிதைத் தொகுப்பும் Born to என்ற விவரணத் தொகுதியும் முக்கியத்துவம் உடையதாகும். In Ceylon Tea Garden என்ற கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதை ஒன்றினை இங்கு நோக்குதல் அவசியமானது.

பிரட்டின் அதிர்வில்
விடியலே அதிர்ந்துபோய்
தேயிலை மீது
சரிந்து கிடந்தது.

60களிற்குப் பின்னர் 80களில் மலையக இலக்கியத்தில் புதிய பரிணாமம் தோன்றுவதைக் காணலாம். இடதுசாரி இயக்கங்களின் தளர்ச்சி, மிதவாத அரசியல் தலையெடுப்பு, பல தீவிரவாதப் போக்கு என்பன மலையகத்தில் இடம்பெற்றமையால், மலையக மக்களின் வாழ்வு இலக்கியமாக்குவதில் தேக்கநிலை ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் 80களின் ஆரம்பத்தில் தோன்றிய தீர்த்தக்கரையின் பங்களிப்பு விதந்து குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சி.வி.யின், என்.எஸ்.எம். இராமையாவின் இலக்கிய படைப்புகளின் சற்று வளர்ச்சியடைந்த பரிணாமத்தை நாம் தீர்த்தக்கரை கதையில் காணலாம். குறிப்பாக 80களில் இடம்பெற்ற காட்டுமிராண்டித்தனமான வன்முறைகளை ஆனந்தராகவனின் சிறுகதைகளும், வன்முறைகளின் பின்னர் துளிர்ந்த வசந்தகால நம்பிக்கைகளை கேகாலை கையிலை நாதனின் சிறகதைகளும் அழகாய், விவேகமாய் எடுத்துக் காட்டுகின்றன. மலையக சிறார்களின் குறிப்பிட்ட காலநிலையினை தொட்டுக் காட்டுவதில் ஏ.எஸ்.சந்திரபோஸ் ஆகியோரின் சிறுகதை முக்கியத்துவம் உடையதாக காணப்படுகின்றது. குறிப்பாக இவர்களின் இன்றைய படைப்புகளில் ஓர் இடதுசாரி பார்வை ஊசலாடிக் கிடந்தது.

இலைதவிர மலையக மக்களின் பிரச்சினைகளை, தொட்டுக் காட்டுவதில் சு.முரளிதரன், மல்லிகை சி.குமார், சிவ இராஜேந்திரன் போன்றோரின் கவிதைகளும், மாத்தளை சோமு, மலரன்பன், வடிவேலன் போன்றோரின் சிறுகதைகளும் குறிப்பிடத்தக்கன. இவற்றுக்கிடையே மலையக மக்களின் வாழ்வியலைப் பரிந்து கொண்டு இலக்கியம் படைப்பதில் நுண்ணிய தத்துவார்த்த வேறுபாடுகள் காணப்பட்டபோதும் மலையக பெருந்தோட்டத் துறை சார்ந்த தொழிலாளர்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் முக்கியத்தவம் உடையனவாக காணப்படுகின்றனர்.

80களில் ஏற்படுத்திய இலக்கிய போக்கின் தொடர்ச்சி 90களில் சிறப்படைந்து அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. இக்காலக்கட்டத்தில் முன்னர் முற்போக்குணர்வுடன் இலக்கியம் படைத்த சிலர் சமுகவியல் நிலையில் நின்று விலகி சென்றுள்ளதையும் 90களில் நாம் காணக்கூடியதாக உள்ளது. இதே சமயம் பல இளைய தலைமுறையினர் இம் மக்களின் பிரச்சினைகளை கம்பீரத்துடனும, விவேகத்துடனும் வெளிக் கொணர்வதைக் காணலாம். இன்ற முற்போக்கு இலக்கியத்திற்கு ஒரு கம்பீரத்தை வழங்குவது மலையக இலக்கியம் என்ற கூறின் இது மிகையாகாது. குறிப்பாக 60களில் காணப்பட்ட இடதுசாரி இயக்க வரலாற்றினை இலக்கியமாக்குவதிலும் இக்காலப்பகுதி முக்கியத்துவம் பெற்றுள்ளது. உதாரணமாக கேகாலை கையிலைநாதனின் 60களில் மலையக வாழ்வியலின் ஒரு கிற்று என்ற விவரணம் இதனைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது.

இவை தவிர முருகவேல் இராமையாவின் சிறுகதைகள் மலையக படைப்பு இலக்கியத்திற்கு மேலும் நம்பிக்கை ஒளிபரப்புவதாக உள்ளது. கேகாலை கையிலைநாதனின் சிறுகதைகள், மல்லிகை சி.குமார், ச.பன்னீர்செல்வம் ஆகியோரது கவிதைகளும் மலையக வாழ்வியலை வெளிக் கொணர்வதாக அமைந்துள்ளது.

மலையக வாழ்வியலை பிரதிபலித்து நிற்கின்ற மலையக இலக்கியத்தின் சர்வதேசிய தன்மை பற்றி நோக்க கார்ல்மாக்ஸின் கரத்து ஒன்றினை நோக்குதல் அவசியமான ஒன்றாகிறது.

'தேசங்கள் உலக ரீதியாக ஒன்னை ஒன்று சார்ந்திருக்கின்றன. பௌதிக பொருள் உற்பத்தியைப் போலவே அறிவுப் பொருள் உற்பத்தயிலும், இதே நிலைமை. தனிப்பட்ட நாடுகளின் அறிவப் படைப்புகள் பொதுச் சொத்தாகின்றன. ஒரு தலைப்பட்சமான தேசியப் பார்வையும், குறுகிய மனப்பான்மையும், மென்மேலும் அசாத்தியமான மிகப் பல தேசிய இலக்கியங்களிலிருந்தும் தல இலக்கியங்களிலிருந்தும் ஓர் உலக இலக்கியம் உதயமாகின்றது.'

இவ்வடிப்படையைக் கொண்டு மலையக படைப்பாக்கத்தை நோக்குகின்றபொழுது அவை மலையக மக்களின் ஒடுக்கு முறைகளுக்கு எதிராக தோன்றியிருப்பினும், ஏனைய ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைக்கும் கிதமாக அமையக் கூடியது எனவேதான் மாக்ஸின் குறிப்பிட்ட கூற்ற கண்முன் காணக்கூடிய தத்துவ தரிசனமாக அமைந்து விளங்குகின்றது எனலாம்.

இறுதியாக நோக்குகின்றபொழுது மலைளயக மக்களின் நிலைமைகளையும், கருத்து நிலைமைகளின் தொழிற்பாடுகளையும் ஒருங்குசேர வைத்து நோக்கி எவ்வித சுரண்டலுமற்ற மனிதத்துவத்தை இலக்காக கொள்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவ்வாத்து

சிறுகதை

-நூரளை சண்முகநாதன்-

பனிக்கூதல் மயிர்க்கால்களையெல்லாம் நிமிரவைத்துக் கொண்டிருந்தது. பனிமூட்டம் இன்னும் விலக வில்லை. லயக் காம்பராக்களெல்லாம் சுறு சுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தன.

பிரட்டுத்" தடுப்பின் சத்தம் மலைகளில் பட்டு எதிரொலிக்கின்றது.

அம்மாசி சாக்குக் கட்டிலில் முணங்கியப்படி கம்பளியை இழுத்துத் தலையோடு போர்த்தப்படி மீண்டும் சுரண்டு படுக்கின்றான். அவன் உடம்பெல்லாம் புண்ணாக காம்பராவில் கீழே தேயிலை நிரைகளாய் அம்மாசியின் அவதாரங்கள் பாயில் ஒருத்தன் மூஞ்சியில் ஒருத்தன் காலும், மற்றவன் நெஞ்சில் மற்றவன் காலுமாக கூதலில் சுரண்டு ஆயிரம் காலட்டையாகக் கிடக்கின்றன.

வயிற்றிலே இன்றைக்கோ, நாளைக்கோ என்று ஒன்றையும் சுமந்துக்கொண்டு வந்த அம்மாசியின் சம்சாரம் அமராவதி ஸ்தோப்பு கொடிக்கயிற்றில் தொங்கிய ரெட்டை" எடுத்துச் சுற்றி ஒரு சடம்புக்" கயிற்றால் இறுக்கிக் கொண்டு தலையில் கம்பளித் துண்டைச் சும்மாடு போட்டுக் கொள்கிறாள்.

என்னா இன்னும் சுரண்டு படுத்துக்கிட்டு "பெரட்டு" தப்பு கேக்கலையா? ஏனக்கு நேரமாச்சி. ஆதுவு.. இன்னக்கி தொங்கமலை கொழுந்து. நேத்தே பெரட்டுக்குக் கொஞ்சோ ரொசனங்கிட்டத்துக்காவ அந்த கண்டாக்குபய.. என்னா இன்னு கொஞ்ச நேரேரம் புருசே கூட படுத்துக்கெடந்துட்டு வாரரதுதானேன்னு கத்திக்கிட்டு கெடந்தா..

அம்மாசியையும் ஒர உலுக்கு உலுக்கி விட்டு அமராவதி வெளியே மாட்டியிருந்த கொழுந்துக் கூடை முதகில் 'படக் படக்' என அடிக்க 'ரெட்டு' சரசரக்க வயிற்றிலும் ஒரு பெருஞ்சுமையோடு ஓடிக் கொண்டு இருக்கிறாள் 'பிரட்டுக்கு'

இது எல்லாம் அவர்களுக்கு பழகிப் போய்விட்ட ஒன்று. பிள்ளைப்பேறு என்றவுடன் பிறந்தவீடு சென்று.. ஓய்வாக எல்லாம் இருக்க அவர்களால் எங்கே முடியப் போகிறது. பிறகு அவர்களை நம்பி வாழ்கிற வயிறுகள்.

கொழுந்துச் சுமையோடு வயிற்றிலும் பெருஞ்சுமையோடு - அந்தச் சறுக்கல் மலைகளில் ஏறி இறங்குவ தென்றால் காலையில் மலைக்குப் போய் மாலையில் பிள்ளைகளைப் பெறுகிற சங்கதிகளெல்லாம் அவர்களைப் பொறுத்தவரை ஏதோ சாதாரண நிகழ்ச்சிதான்

அம்மாசிக்கு எழும்பக்கூட ஒரே சோம்பல், உடல் வலி, ஒரு மாதிரி அப்பாடா ..அம்மாடா.. போட்டு எழுந்து விட்டான். உடம்பின் மூட்டுக்கு மூட்டு எட்டுநாள் காய்ச்சலில் விழுந்த எழுந்தது போல வலி.

பழைய மலை கல்வாத்துன்னாவே இப்பிடிதா. ஆளுகள கொன்னு எடுத்துபுடும் .. ஒவ்வொரு தூரும் சும்மா கருங்காலி போல இல்ல காச்சி கெடக்குது.

முணங்கிக் கொண்டு அவசர அவசரமாக மகள் பரமேசு சுட்டு வைத்த ரொட்டியை ஃஅவுக் அவுக்ஃ கென்னு வயிற்றுக்குள் அனுப்பி அதற்கு மேல் சாயத் தண்ணியையும் ஊத்தி விட்டு சால்வையை உதறி, காதோடு முண்டாசு போட்டு, அட்டாளை இடைவெளியில் சொருகியிருந்த கவ்வாத்துக் கத்தியோடு பிரட்டுக்களத்தை நோக்கி ஓடுகிறான் அம்மாசி. ஏய் பரமேசு பயலுகள தின்னக் கொடுத்து இஸ்கோலுக்கு வெரட்டீனா.. எவனாச்சு ஏலாதுன்னு கெடந்தான்னா வந்து தோல உரிச்சி புடுவேன்னு சொல்லு..

நேத்தே கங்கானி சொல்லிப்புட்டாரு, இன்னைக்கி எப்பியும் பழயமலை கவ்வாத்த முடிச்சி போடனுமுன்னு .. இந்த மாசத்துல ஒரு கெழமதா கெடந்திருக்கேலாதா .. இந்த மாசத்துல ஒரு கெழமதா பேரு உழுந்திருக்கு. அது கூப்பேன் சாமானுக்கே சரியா போயிறு.. அதுக்கு இந்த மாசடீமா பேரு சரியா உழல்ல. அதுவு இன்னைக்கோ நாளைக்கோன்னு இருக்கு .. வாயி வயித்தோட பெரியக்குட்டி பரமேசுவரிட மாதிரியும் சரியில்லஃ அது எப்ப மூலைக்குள்ள மொடங்கப் போவுதோ எல்லாமே பெருங் கஷ்டோந்தான் என்னதா செய்றது ?

அம்மாசியின் மனமும் எங்கெங்கோ ஓடுகிறது. ஆந்தச் சமுகத்தின் வாழ்வே ஒரே ஓட்டம்தானே?

நேரம் 'போச்சி' பெரட்டு கலைச்சிட்டாங்களோ என்னமோ நேரோசெண்டு போயி நின்னா கணக்குப்பிள்ள அல்சேஷன் நாயாட்டம் மேலுல விழுவா..ஃ

என்னா இன்னு கொங்சோ நேரோம் போயிட்டு வாரதுதானே தொர அவுக இதுக ஒங்க அப்பே ஓட்டு தோட்டோ .. ஒங்க ஆயிவுட்டு சட்டமுனு நெனச்சிக்கிட்டு.. நீங்க நெனச்ச மூப்புக்கு.. ஆடுறீங்களா கங்கானி இன்னைக்கி பழயமல கவ்வாத்த முடிக்கனு.. தொர பாக்க வாராகன்னு சொல்லியிருக்கிறாருங்கிறதுக்காக இன்னைக்கு உனக்கு பாவோ பாத்து பேரு போடுறே மத்த நாளா இருந்தா தெரியுமில்லே.. ஊட்டுக்கு போயி பொண்டாட்டிகூட சொகமா தூங்களாஃ சுறுக்கா ஓடு. எல்லாரு இப்பதா போறானுவ.

செக்ரோலை மூடிவிட்டு பென்சிலை காதில் செருகிக் கொண்டு, தன் பங்களாவை நோக்கி நடக்கிறார் கணக்குப்பிள்ளை.

என்னமோ வரவர அவரு மிச்சந்நாஜீதா துள்ளுறாரு ஃ ஏதோ இவுக ஆயா புருசேவூட்டு தோட்டமுனு நெனச்சிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேச மவே..

வாய்விட்டு கணக்குப்பிள்ளைக்கும் கேட்கும்படி கூறிக்கொண்டு பழைய மலையை நோக்கி நடக்கிறான் அம்மாசி.

மலையில் கவ்வாத்து ஆரம்பமாகிவிட்டது.

என்னா அம்மாசி .. இன்னைக்கி சொனங்கீட்ட .. விருவிருன்னு எப்படியு இன்னைக்கி முடிச்சிடனு போயில ஒரு துண்டு இருந்தா குடு பாப்போ..

கங்காணிக்கு போயிலைக் கொடுத்துவிட்டு கீழேக் கிடந்த 'வெங்கிச்சான்'' கல்லை எடுத்துத் தூளாக்கி... ஒரு கருங்கல்லில் போட்டுக் கவ்வாத்துக் கத்தியைத் தீட்ட ஆரம்பித்தான் அம்மாசி. புளபளத்தக் கத்தியில இப்போது அம்மாசியின் முகம் தெரிகிறது.

கவ்வாத்திலே அடிவெட்டு மிகக் கடினம். மட்டம் வெட்டென்றால் கண்முடித் திறப்பதற்குள் ஐந்தாறு செடிகள் தாண்டி விடுவான் அம்மாசிகி அடிவெட்டுத்தான் உயிர் வெட்டு அந்த வெட்டு காய்ந்து விட்டால் செடியேகாய்ந்து விடும். ஆதை வெட்டுவதற்கே ஒரு தனி லாவகம் வேண்டும். ஒரே வெட்டு துண்டுகள் இரண்டாயிருக்கும். இல்லாவிட்டால் செடி காயப்படாது கத்தியால் வெட்டை சீவிச் சரிப்படுத்திவிடுவார்கள். அம்மாசி கவ்வாத்துக்கு பேர் போனவன். தோட்டத்தில் எல்லோருமே சொல்வார்கள்.

நம்மால் அம்மாசியை லிட் பண்ண ஏலாதுப்பா இப்ப பாத்தா இங்கன வெட்டிகிட்டு இருக்கு கொஞ்சத்துல பாத்தா நாலஞ்சி செடிக்கி அங்கிட்டு இருக்கு. அதுட வெட்டே தனி வெட்டுதா.. தனி அழகுதாம்பா..
கவ்வாத்து வெட்டு என்றால் வெட்டுக்கு போகிறவர்கள் வரும்போது கடைசி ஒரு சொட்டு இரத்தமாவது மலைக்குச் சிந்தாமல் வருவது கிடையாது.

அந்தக் கவ்வாத்துக் கத்தியின் கூனைப்பைப் பாத்தாலே.. அப்பப்பா.. முதமைக்கு இளையைட்டும் அந்தக் கவ்வாத்துக் கத்தி தப்பித் தவறி எசகு பிசகாகிப்பட்டுவிட்டால் பிறகு ஆள் இரண்டு துண்டுதான்.

நேத்துக்கே ஒடம்பெல்லா புன்னா போச்சி இன்னக்கி எப்பிடியு கவ்வாத்து முடிஞ்சிற ஊட்டுக்குப் புொயி கொஞ்சோ சுடுத்தணி வெச்சி குளிச்சுபிட்டு ரம்பண்டா கிட்ட போயி ஒரு அரை டிராம் அடிச்சிட்டு வந்து சாப்பிட்டு ஒரு தூக்கோ போட்டு எழும்புனாகா நாளைக்கி மலைக்கி ஏறலா ஒடம்பு ஒரு மாதிரி நல்லா இருக்கு

காய்ந்து கிடந்த செடிகளில் கத்தி பாய்ந்து கொண்டிருந்தது. வெட்டுண்ட கிளைகளை சிலர் விலக்கிப் போடடுக் கொண்டிருந்தனர்.

ம்.. கொஞ்சோ வெரசா கத்திய வீசுங்க எப்பிடியு ரெண்டுக்குள்ள முடிச்சிபோடனு தொர டாண் ன முனு அடிக்க முந்தி மலையில நிப்பா. அவனுக சொன்னா டயிம் சொன்ன மாதிரி தான் நம்மள மாதிரி இல்லை என்னா அம்மாசி உசார காணல்ல சரிதாம்பா ஒரு கை படிச்சிட்டு போயி ஒரு கால் போத்தல் போட்டா எல்லா சரியாகிபுடு.. ஏலெய்.. வீரா அந்த முரக்கட தலையையு அப்பிடியே தட்டிகிட்டு போயிடு. ஓங்களுக்கு வேற வேல இல்ல. இங்க இன்னு கவ்வாத்தே முடியல அதுங்காட்டியுமாரு பொறுக்க வந்துட்டிங்களா. ஏய்.. எல்லா, ஓடுங்க இப்ப தொர வருவா.. பெறக நம்ம மேலதா.. என்ன மேன்.. இவனுக எல்லா தேயிலை செடிய ஒடிச்சிபோடுறானுகள் ஒனக்க கண்ணு தெரியல்லேன்னு கத்துவா எல்லா எல்லா ஓடுங்க.

தேயிலை மார் பொறுக்கிக் கொண்டிருந்த சிறுசுகளை தன் குடைக்கம்பை ஆட்டி விரட்டிக் கொண்டிருக்கிறார் கங்காணி.

அம்மாடி என்னா வெயிலு அடிக்குது.இங்க வெயிலு அடிச்சாலு அப்பிடிதா மழை பேஞ்சிகினாலு அப்பிடி தா.. உடம்பில் வழிந்த வியர்வையை தலை முண்டாசால் துடைத்து மீண்டும் கட்டிக்கொண்டு கைகளை உதறிக்கொள்கிறாள் அம்மாசி.

தேயிலைச்செடியும் முரக்ககை வாதுகளும் கைகால்களைக் கிழித்து இரத்தம் கசிய எரிவெடுத்துக் கொண்டிருந்தது. தோள்முட்டு ஒசைக்க முடியாது வலித்தது. மீண்டும் கத்தியை கல்லில் தீட்டிக்கொண்டு வலியையும் மறந்து வேலையில் வேலையில் ஈடுபடுகிறான்.

அதுவு இன்னைக்கோ நாளைக்கோ வாயு, வயிருமா இருக்குது.. போன.. வாட்டியு மிச்சோ.. கஸ்டமாகி வதுளைக்கி கொண்டு போயிதா..யை கல்லில் தீட்டிக்கொண்டு வலியையும் மறந்து வேலையில் வேலையில் ஈடுபடுகிறான்.

அதுவு இன்னைக்கோ நாளைக்கோ வாயு, வயிருமா இருக்குது.. போன.. வாட்டியு மிச்சோ.. கஸ்டமாகி வதுளைக்கி கொண்டு போயிதா..புள்ள பொறந்தாச்சி.. போனவாட்டியே ஒடம்புல ரெத்தமில்ல சத்தான சாப்பாடு சாப்பிடனுமுனு ஈஸ்பத்திரில சொன்னாக.. நமக்கே இங்க.. குண்டி காயிது.. பெறுகு எப்பிடி தொடங்காவு டொனிக்கு வாங்குறதுக்கு போறது, புள்ள பொறந்தாச்சி.. போனவாட்டியே ஒடம்புல ரெத்தமில்ல சத்தான சாப்பாடு சாப்பிடனுமுனு ஈஸ்பத்திரில சொன்னாக.. நமக்கே இங்க.. குண்டி காயிது.. பெறுகு எப்பிடி தொடங்காவு டொனிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்குறதுக்கு போறது, புள்ள பொறந்தாச்சி.. போனவாட்டியே ஒடம்புல ரெத்தமில்ல சத்தான சாப்பாடு சாப்பிடனுமுனு ஈஸ்பத்திரில சொன்னாக.. நமக்கே இங்க.. குண்டி காயிது.. பெறுகு எப்பிடி தொடங்காவு டொனிக்கு வாங்குறதுக்கு போறது, புள்ள பொறந்தாச்சி.. போனவாட்டியே ஒடம்புல ரெத்தமில்ல சத்தான சாப்பாடு சாப்பிடனுமுனு ஈஸ்பத்திரில சொன்னாக.. நமக்கே இங்க.. குண்டி காயிது.. பெறுகு எப்பிடி தொடங்காவு டொனிக்கு வாங்குறதுக்கு போறது, புள்ள பொறந்தாச்சி.. போனவாட்டியே ஒடம்புல ரெத்தமில்ல சத்தான சாப்பாடு சாப்பிடனுமுனு ஈஸ்பத்திரில சொன்னாக.. நமக்கே இங்க.. குண்டி காயிது.. பெறுகு எப்பிடி தொடங்காவு டொனிக்கு வாங்குறதுக்கு போறது, புள்ள பொறந்தாச்சி.. போனவாட்டியே ஒடம்புல ரெத்தமில்ல சத்தான சாப்பாடு சாப்பிடனுமுனு ஆஸ்பத்திரில சொன்னாக.... நமக்கே இங்க... குண்டி காயிது... பெறுகு எப்பிடி 'தொடங்காவு', டொனிக்கு வாங்குறதுக்கு போறது, பெரசவத்துக்கு தோட்டத்துல கொடுக்கிற சல்லி வதுள காரு அயருக்கு கூட பத்தாது... எஸ்டேட்டு லொறிய எடுக்கிறதுன்னாலு டயமுக்கு கெடக்காது... இந்த வாட்டி என்னா ஆவப் போவுதோ என்னா செய்யப் போறனோ... அத்தோட முத்த மவ பரமேசு கூட கொஞ்ச நாளா ஒர மாதிரிதா இருக்கு. அது வேற இப்ப பாத்து செலவு வெச்சிருதோ என்னமோ..'

உடம்பு வலியை விட வாழ்வை நினைக்கையில்.. அது மனதையும் வலிக்கத்தான் செய்தது- பிரச்சனைகளோட பிறந்து அதிலேயே சதாகாலமும் வாழவேண்டிய துர்ப்பாக்கிய சாலிகள் தானே அவர்கள்.

தன் கோட்டில் செயினுடன் கூடிய 'ஓலட்' மொடல் கடிகாரத்தை வெளியே எடுத்துப் பார்த்து விட்டுக் கங்காணி:

"ஏலேய் இப்பிடியே போச்சினா இன்னைக்கி முடிஞ்சாப்புலதா .. தொர வந்தானா நம்மள பிறகு பியாக்கிப்புடுவா..'

'அட நீ ஒன்னு.. இங்க கைய அசக்க முடில்ல.. அதுக்குள்ள பூந்து வெரசா வெட்டு.. மயிர... வெட்டுன்னுகிட்டு... அப்பிடி அவசரமுன்னு நீயு... தொரையு வந்து வெட்டுங்களே பார்க்க...'

ஒரு சிலா கங்காணிக்கு கேட்காதவாறு முனுமுனுத்துக்கொள்கின்றனர்.

காலையில் ஏதோ பேருக்கு கடித்துவிட்டு வந்த ரொட்டி எப்பவோ.. ஜீரணமாகிவிட்டது. கங்காணி அருகேயே நிற்பதால்.. லயத்திற்கு ஓடிப்போய் தேத்தண்ணி ஒருவாயும் குடிக்க முடியாதிருந்தது. கங்காணி இருந்தால் லயத்துச் சிறுசுகளும் மலைக்குத் தேத்தண்ணி கொண்டுவரப் பயந்து சும்மா இருந்துவிடும்.

உடம்பில் அசைக்கமுடியாத வலி . சிராய்வுகளின் எரிச்சல். மனதில் குடும்பச் சுமையின் பாரம். அத்தோவு வயிற்றில் பசி வேறு...

அம்மாசியின் கைகளெல்லாம் சோர்ந்து தளர்ந்து கிடந்தன.

கங்காணியின் அதட்டலுக்குப் பயந்து பெயரக்குக் கத்தி செடிகளில் பாய்ந்து கொண்டிருந்தது. பலமெல்லாம் கூட்டி கத்தியை ஓங்கி அந்த தேயிலையின் அடிக்கட்டையை கறிவைக்கிறான் அம்மாசி. என்றைக்குமே தப்பாத அந்தக் குறி இன்று தவறி விட்டது.

தேயிலைச் செடியில் அந்தக் கூர்மையைக் காட்ட வேண்டிய கவாத்துக் கத்தி அம்மாசியின் தொடைகளில்..

'ஐயோ அம்மா..'

மயங்கி மலையில் விழுந்து துடிக்கிறான் அம்மாசி.

கத்தியை எல்லாம் வீசிவிட்டு அம்மாசியிடம் விரைகின்றனர் எல்லோரும்.

வெட்டுண்ட கால் தொங்கித்துடித்துக் கொண்டிருந்தது. மலையிலிருந்து இரத்தம் சீறு கானாய் கீழ் நோக்கிக் கசிகின்றது.

'அடே மருத, போயி கொஞ்சோ மீனா தொளைய பிச்சிக்கிட்டுவா தட்டி சாத்த உட்டா சரியாகிடு...'

'அட நீ ஒன்ன. இது என்னா இத்துனியூண்டுடி காயமுனு நெனைப்பா...காலு கெடந்து துடிக்குது.. இதுக்குப் போயி... '

'டேய் மருத... நீ ஒடனே ஓடப் போயி.. தொரகிட்ட சொல்லி காயுதோ வாங்கிகிட்டு கையோட தோட்டத்துக்கு லொறியையு இட்டானா.. நாங்க எப்படிய அம்மாசியை கீழே கொண்டாந்துறோ.. ஒடனே வதுளைக்கி கொண்டு போகனு.. வெட்டு மிச்சோ.. ஆழமான வெட்டு..'

கங்காணியும் துடித்துக் கொண்டிருந்தார். என்ன இருந்தாலும் அவர் பொறுப்பில் அவர் கீழ் வேலை செய்து கொண்டிருந்த ஒருவனுக்கு இப்படி ஒன்றாகி விட்டதே என்பதைவிட.... தான் மலையில் என்னதான் அதிகாரம் செய்து அவர்களிடம் வேலை வாங்குபவன் என்றாலும் தானும் அவர்கள் சமுகத்தவன்.. அவர்களில் ஒரு அங்கம் என்கிற துடிப்பத்தான் அவரில் அதிகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மாதிரியாக உரத்த முருக்கை வாதுகளை வெட்டி நடுவில் கம்பளியைக் கட்டி தொட்டிலாக்கி அதில் மயங்கிக் கிடந்த அம்மாசியைக் கிடத்தினர்.

எத்தனையோ பேருடைய தலைச் சால்வையைச் சுற்றியும் இரத்தம் ஊறி.. அந்தத் தொட்டில கம்பளியிலும் கசிந்து மலை எங்கும் பொட்டுப் பொட்டாய் சொட்டிக் கொண்டிருந்தது.

'கவனமா பாத்துப்பா..'

அவர்கள் அம்மாசியைச் சுமந்து கொண்டு கீழே வரவும் எஸ்டேட் லொறியோடு மருதை வருவதற்கும் சரியாக இருந்தது.
லாரியில் அம்மாசியை ஏற்றிக் கொண்டு கங்காணியும் இன்னும் சிலரும் அதிலேயே ஏறிக் கொண்டனர். உணர்வற்றுக் கிடந்த அம்மாசியைச் சுமந்து கொண்டு பதுளையை நோக்கி விரைந்தது எஸ்டேட் லொறி.

அதற்குள் விசயம் அறிந்து அமராவதியும் பிள்ளைகளும் மற்றைய தோட்டத்தவர்களும் அழுதபடி ஓடிவந்து கொண்டிருந்தனர்.

வயிற்றில் உள்ள சுமையையும் மறந்தபடி அமராவதி. 'ஐயோ அவருக்கு ஒன்னு நடந்திடக் கூடாது.. கடவுளே.. அடுத்த தரோ நா புள்ளைக எல்லா மொட்ட அடிச்சி காவடி எடுக்கிறே கதிருகாமத்தானே அவருக்கு ஒன்னு நடந்திர கூடாது கடவுளே..' என ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள். அவளைக் கட்டிப் பிடித்த படி பிள்ளைகளும் 'ஐயோ.. அப்பா ஐயோ அப்பா' என அழுது கொண்டிருந்தனர்.

'அமராவதி இது என்னா... நடுரோட்ல இருந்துகிட்டு இப்ப என்னா நடந்து போச்சி.. அதுதா ஆசுபத்திரிக்கிக் கொண்டு போயாச்சே... பெறகென்னா.. சரி செல்லாரு லயத்துக்கப் போங்க... இங்கினிக்கி கூட்டோ கூடாம...'

அங்கே இன்னம் உணர்வு வராத அம்மாசியை வார்ட்டுக் கொண்டு செல்கின்றனர். எஸ்டேட் லொறி கம்பளி எல்லாம் இரத்தத்தில் தொப்பையாகிக் கிடக்கின்றது.

டாக்டர் வார்டுக்கள் போய்விட்டு, சிறிது நேரத்தில் தலைகனிந்த படி வருகிறார்.

'கங்காணி டூ.. லேட்.. இரத்தம் மிச்சோ விரயமாயிடுச்சி.. இப்போ கொஞ்சோ முந்திதா உயிர் போயிருக்கு...' கங்காணியினதும் மற்றையோரினதும் கண்கள் நிறைகின்றன. இதயம் வேகமாகத் துடிக்கின்றது.

'என்னாப்பா இது... இவ்வளவு நேரோ நம்மளோட ஒன்னா மலையில் கவ்வாத்து வெட்டினவே அதுக்குள்ள பொசுக்குன்னு போயிட்டானே...'

விம்மலோடு அமைதியாக உயிரற்ற அம்மாசியை மீண்டும் லாறியில் ஏற்றிக் கொண்டு தோட்டத்தை நோக்கி விரைகின்றனர். அதற்குள் விசயம் தொட்டத்திற்கு வந்துவிட்டது.

'எங்க ராசாவே.. எங்கள உட்டுட்டு நீங்கமட்டும் போயிட்டிகளே கதிராமத்தானே ஒண்ட கண்ணுதா அவிஞ்சி போச்சா.. எங்க ராசாவே எங்க ராசாவே..'

வயிற்றிலும் மார்பிலும் அடித்துக் கொண்டு அமராவதி லயத்து வாசலில் புரண்டு புரண்டு அழுகிறாள். பிள்ளைகளைக் கட்டிக் கொண்டு.

'ஏய் புள்ள வயித்த போட்டு இப்படி அடிச்சிகிட்டு அதுக்குள்ள ஒர சீவனிருக்கில்ல'

அவளின் கைகளை பிடித்து அமர்த்துகின்றனர் ஒரு சிலர்.

'அப்பன தின்னி.. பொறக்குறதுக்குள்ள அது எதுக்கு.. நாதா இனி எதுக்கு கடவுளே அவர எடுத்தது பொல எங்களையு எடுத்துக.. நாம இனி எப்பிடி இங்க வாழுறது.. எங்க ராசாவே எங்கள தனிய தவிக்கவிட்டு நீங்கமட்டும் போயிட்டிகளே ஐயோ.. அப்பா.. ஐயோ.. அப்பாரு..'

அமராவதியை யாராலும் அடக்க முடியவில்லை. சிலா அமராவதியைக் கட்டிக் கொண்டு ஒப்பாரி வைத்து அழுகின்றனர். எல்லோரின் கண்களும் கலங்கித் துடிக்கின்றன.
தூரத்தே 'பழைய மலை' கவ்வாத்து வெட்டி 'பட்ட மலையாய்' சூனியமற்றுக் கிடக்கிறது. அது தற்காலிகமானதுதான் இன்னும் சில நாட்களில் பசுமை. புதுக்கிளைகளோடு அவை மீண்டும் பசுமை பெற்றச் சிரிக்கத்தான் போகிறது. ஆனால் அந்த கவ்வாத்திற்காகத் தன்னை தன் வாழ்வையே கவ்வாத்தாக்கிக் கொண்டு போய்விட்ட அம்மாசியை நம்பிக் கொண்டிருந்த அமராவதி - அவள் பிள்ளைகளின் வாழ்வு ... அவர்கள் வாழ்வில் பசுமை...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூதம் விழுந்து கிடக்கும் மலை

- வ.ஐ.ச.ஜெயபாலன் -

உயிர்ப் பிச்சைக் கேட்கும் கொடியவன் போல்

தளர்ந்து போனதால்,
குளிர் இவ்வேளை

நாடியைத் தடவி உச்சி முகரும்.

வெண் பூந்துகிலால் முகத்திரையிட்ட

மணமகளாக -

பனியில் அடங்காப் பசும் பேரழகை

மலைமகள் சிந்தும் வைகறைப் பொழுது.

எங்கோ பாடும் ஏதோ ஒரு பறவையும்

எங்கோ பூத்த ஏதோ ஒரு புஷ்பமும்

தங்கள் இருப்பின் சுதந்திரம் மகிழும்.

புகைபடிந்த ஓவியம் போன்ற

காட்சிப்புலத்தில்

சூரியக் குழந்தை சிறுகை அளாவும்

யாழ்ப்பாணத்துக் கூரைப் பதிவினுள்

கூனிப் போன எனது ஆத்மா

முகில் பாய் விரிக்கும் ஹட்டன் மலைகளில்

நெஞ்சை நிமிர்த்தும்.

குடாவைத் தாண்டியும்உலகம் விரிவதை

அலட்சியப்படுத்தி

பைத்தியம் போலப் பழம் பெருமைக் கந்தலைத்

தேகம் முழுவதும் சூடி

முள் முடிகளையும் விலங்குகளையும்

ஆணியெனத் தாங்கும் யாழ்ப்பாணத்தை

வலிமைப் பொருந்திய இளயக் கரத்தால்

குடாவின் வெளியே இழுத்து வாருங்கள்

ஹட்டன் மலைகளில் நிமிர விடுங்கள்.

அரைத் தூக்கத்தில் தேயிலை நிரல்களுள்

கத்திகள் வீசியும் கூடைகள் நகர்த்தியும்

விழுந்து கிடக்கும் பெரும் பூதத்தை

விழிக்கா தென்ற குருட்டுத் துணிவுடன்

எட்டி உதைக்கும் சின்ன மனிதருள்

விலங்குகள் சுமக்கும் நாங்களும் இருந்தோம்.

சிவனொளி பாத மலையும் நடுங்கி

இந்து சமுத்திரக் குழிகளில் பதுங்க

ஒருநாள் இங்கு மானிடம் விழிக்கும்.

எல்லோர் கைகளின் விலங்கும் தகரும்.

பறவைகள் போலவும் பூக்களைப் போலவும்

எல்லோர் இருப்பும் சுதந்திரம் எய்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழ் இலக்கியத்தில் தனித்தன்மை வாய்ந்த மலையக இலக்கியம்

ஜே.சற்குருநாதன்

ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பினை எடுத்து நோக்கும்போது அதனிடையே பிரதேச கூறுகளை உள்ளடக்கிய இலக்கிய வளர்ச்சியையும் அவதானிக்க முடியும். ஈழத்து இலக்கியம் எனும் வரையறைக்கு, குறிப்பாக ஃஇலங்கைத் தமிழர் என்று சொல்லப்படுகிற யாழ்ப்பாண, மட்டக்களப்பு வாழ் தமிழர்களின் இலக்கியம்: கிழக்கு மாகாணத்தை அடைப்படையாகக் கொண்ட 'இஸ்லாமிய இலக்கியம்' இந்திய வம்சாவளியினரை அடிப்படையாகக் கொண்ட ஃமலையக இலக்கியம் ஆகிய பிரதேச அம்சங்களைக் கொண்டதாகும். கடந்த கால ஈழத்தமிழ் இலக்கிய பரிணாமத்தில் மலையக இலக்கியம் புதிய வீச்சினை ஏற்படுத்தியுள்ளது. இதனை சரியாக மதிப்பிட்ட பேராசிரியர் கைலாசபதி ஃஃமலையக இலக்கியம் ஈழத்தமிழ் இலக்கியத்துக்கு புது இரத்தத்தினைப் பாய்ச்சக்கூடியது' எனக் குறிப்பிட்டது அதனது போக்கை புரிந்து கொள்ள முடிந்தது.

இந்திய வம்சாவளியினரான மலையக தமிழ் மக்கள், இந்தியாவிலிருந்து பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் கொண்டு வரப் பட்டவர்கள். வெறும் கூலிகளாக வந்த இவர்கள், இலங்கையின் மத்திய பகுதியில் புதிய பொருளாதார, அரசியல், சமுக முறைமையினைக் கட்டியெழுப்பினர். இம்மக்கள் சமுகம் காலனித்துவ ஆட்சியிலும், அதற்குப் பின் வந்த சுதந்திர அரசாங்கங்களாலும் மிகவும் மோசமாக சுரண்டப்பட்டன, சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு புலம்பெயர்ந்த பொழுது தமக்கே ஆதாரமாகவுள்ள மொழி, பாரம்பரியம், கலை அம்சங்களுடன் இங்கு குடியேறினர். மிக மோசமான துன்ப துயரங்களை சகித்துக் கொண்டு தமது இன, மொழி, கலாசார தனித்துவங்களைக் காப்பாற்றி வருகின்றனர்.

எந்தவொரு, சமுகத்திலும் அரசியல் விழிப்புணர்ச்சியின் வாயிலாகத்தான் கலை இலக்கியம் சிறப்பாக அமைய முடியும். அந்த வகையில் மலையகத்தில் தீவிர அரசியல் செயற்பாட்டினூடாக கோ.நடேசய்யர் தனது இலக்கியப் பணியினை ஆரம்பித்தார். அவருக்கு உறுதுணையாக அவரது மனைவியான மீனாட்சியம்மாள் நடேசய்யரும் செயற்பட்டார். இக்கால கட்டத்தில், அதாவது சுதந்திரத்துக்கு முற்பட்ட காலப்பகுதியில், மணிக்கொடி எழுத்தாளரான புதுமைப்பித்தன் தமது துன்பக்கேணி சிறுகதை வாயிலாக மலையக மக்களின் துன்ப துயரங்களை வெளிப்படுத்தினார். இவ்விலக்கியப் போக்கு இந்திய தேசியவாதத்தின் வெளிப்பாட்டின் அம்சமாகவே பெரும்பாலும் இருந்தது.மலையகத்துக்கென தனித்துவமான இலக்கியம் 1948 ஆம் ஆண்டிற்குப் பிறகு தோன்றி தீவிரமான வளர்ச்சியினை முன்னறிவித்து நின்றது. 1948 ஆம் ஆண்டு தேர்தலும், இம்மக்கள் மத்தியில் ஏற்பட்ட வளர்ச்சியும், அரசியல் போராட்ட உணர்வும் அத்தகைய இலக்கியம் வளர்வதற்கு உந்து சக்தியாக இருந்தன. இதனை வளர்த்தவர்கள் கணேஷ், சி.வி. வேலுப்பிள்ளை ஆகியோர்.

சுதந்திர இலங்கையின் பின்னர் மலையக மக்கள், அடக்குமறைகளுக்கு மத்தியில் தமது தனித்துவமான இலக்கிய வெளிப்பாடுகளை தொடர்ந்து கொண்டிருந்தனர். இம்மக்களோடு தோன்றியிருந்த வாய்மொழி பாடல்கள் இவர்களது இலக்கிய செழுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. 1956 - இல் இலங்கைத் தமிழ் இலக்கியம் புதிய பரிணாமத்தினை நோக்கி நகரத் தொடங்கியது. அதாவது இந்தியா தாய் இலக்கியம் என்றும், இலங்கை சேய் இலக்கியம் என்றும் கொள்ளப்பட்ட வேளையில் அதனை மாற்றி, இலங்கைத் தமிழ் இலக்கியம் எனும் செல்நெறி இக்காலத்தில் தோற்றம் பெற்றது.

ஏனைய ஈழத்து தமிழ் பிரதேச இலக்கியங்களில் சிலவற்றில் காணப்படுகின்ற அழகியல் பண்புகளை மலையக இலக்கியங்களில் காண்பதரிது. ஏனெனில், மல்யக இலக்கியத்தின் தன்மையே, இங்கு வாழ்கின்ற தொழிலாளர் வர்க்கங்கள் இவர்களது துன்ப துயர வாழ்வியலில் பிரதிபலிக்கக்கூடிய இலக்கியங்களாக இருந்தமையை, மல்யக இலக்கியத்தினை சிலர் வெறுத்து ஒதுக்கினாலும் அவர்களது தனித்துவ தன்னடையாளங்கள்இலக்கியத்தில் மெல்ல மெல்ல வளர்ந்து வருவதை இன்று வரை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மேற்குறிப்பிட்ட சுருக்கமான வரலாற்றுப் பின்னனி மட்டும் மலையக இலக்கியத்தினை, அதன் தனித்துவமான போக்கினை அடைய போதுமானதல்ல. இன்றுள்ள யதார்த்த நிலைமையினை அவதானிப்பதன் மூலமே அதனது தனித்துவமான போக்கினை அறிந்து கொள்ள முடியும். இன்று மலையக பிரதேசம் தங்களுடையது என்ற தேசிய உணர்வு இம்மக்களிடத்தே வேகமாக வளர்ந்து வருகின்றது. ஈழத்தில் தாங்கள் ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்ற நிலை மலையக மக்கள் மத்தியில் ஆழமாக வேருன்றி வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு இவர்களது அரசியல், பொருளாதார, சமூக போக்குகளும் அனுசரனையாக காணப்படுகின்றன. முதலாளித்துவ சுரண்டல் முறையின் கீழ் அடக்கப்பட்டிருக்கும் இம்மக்களது தேசிய உணர்வு வளர்ந்து வருகிறது. இதனது தாக்கம் மலையக இலக்கியங்களிலும் பிரதிபலிப்பதையும் மறுத்தல் இயலாது. எனவே, ஈழத்தமிழ் தேசிய இலக்கியத்தின் ஒரு அங்கமாக 'மலையக இலக்கியம்' தனித்துவமான போக்குகளுடன் வளர்ந்து வருவதை புரிந்து கொள்ள வேண்டும்.

ஆங்கில இலக்கியங்கள் இங்கிலாந்து, அமெரிக்க நாடுகளில் தனித்துவமான அம்சங்களைப் பெற்று, அவ்வவ் நாடுகளில் தேசிய இலக்கியமாகவும் வளர்வதை நாம் பார்க்கிறோம். அதனைப் போலவே பல மொழிகளைக் கொண்ட நாடுகளிலும் ஒவ்வொரு இனத்துக்குரிய தனித்துவப் பண்புகளுடன் தேசிய இலக்கியம் வளர்ந்து வருவதை நாம் காண்கின்றோம். அதனைப் போல, ஈழத்தமிழ் இலக்கியத்தில் மலையக இலக்கியம் தனக்கென பாரம்பரிய அம்சங்களுடன் தேசிய தன்மை பெற்று வருவதை நாம் நோக்க வேண்டும்.

தேசிய என்பதற்கு குறுகிய கண்ணோட்டத்தில் அர்த்தம் கொள்ளக் கூடாது. அது பரந்தது. ஆனால் மலையக மக்களின் தன்னடையாளக் கூறுகளை இனங்காண்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கிறது. அதனால் மலையக இலக்கியம் பிரதேச இலக்கியமாக மட்டுமன்றி தமக்கென ஒரு தேசிய தன்மையினை பெற்று வருவதை நாம் அவதானிக்க வேண்டும். கடந்த ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த தமிழக அறிஞர் பெ.சு. மணி இதனைச் சரியாக இனங்கண்டு 'சுபமங்களா' இதழில் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் ஏற்படப் போகும் மாற்றத்திற்கு மலையக தோட்டத் தொழிலாளர்கள் வகிக்கப் போகும் பங்கு அளப்பரியதாகும். அதற்கு வரலாறு சான்று பகரும். தனியே ஒரு தேசிய இலக்கியமாக மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் சர்வ தேசியத்தினை நோக்கி தமது பயணத்தை மேற்கொள்ளக் கூடியதாகவும் மலையக இலக்கியம் வளரக் கூடிய நிலை காணப்படுகிறது.

## *காணி நிலம் வேண்டும்*

*காணி நிலம் வேண்டும் - ஐயா*
*காணி நிலம் வேண்டும்*
*கூனி குறுகி நின்றது போதும்*
*குன்றிய வாழ்வுக்கு முற்றிட வேண்டும்*

*பங்கங்கள் பறந்தோடிட வேண்டும்*
*பண்போடு வாழ வழி வேண்டும்*
*சங்கடங்கள் சரிந்திட வேண்டும்*
*சரிநிகராய் வாழ வழி வேண்டும்*

*வேற்றுமைகள் இங்கு வெறுமைகளாகிட*
*வேண்டும் - மண்ணில்*
*ஒற்றுமையின் ஆதிக்கத்தால் - மானிடம்*
*உயர்வு பெற வேண்டும்*

*தொன்மைகள் கொண்டவனாய்*
*தோன்றிட வேண்டும் - தொடரும்*
*வன்முறைகள் துவன்றிங்கு ' பாகுபாடுகள்*
*பறந்தோட வழி வேண்டும்*

*தொடரும் இனவாதங்கள் - தோல்வியடைய*
*வேண்டும் - அதன் விளைவுகள்*
*படராமல் துவண்டிங்கு 'பண்புகள்*
*உயர வழி வேண்டும்*

*முடிச்சுக்கள் அவிழ்ந்திட வேண்டும்*
*முன்னைய வாழ்வெல்லாம்*
*நெடிந்திட்டு மொத்தத்தில் - நான்*
*முழு வாழ்வு பெற்றிட வேண்டும்*

*மலையகமும் முத்திலத்தில் - முழுதாய்*
*மாண்புற வேண்டும் - துவண்டிருக்கும்*
*களைந்திட்டு வளமான வாழ்வுக்கு*
*வித்திட நல்வழி வேண்டும்*

*லயத்தில் மட்டும் லயித்தது*
*போதும் லயம் கொண்டு*
*பயமின்றி பாங்காய் சமதர்ம*
*கீதம் நான் பாடிட வேண்டும்.*

*(காணி நிலம் )*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுது கழித்த இரவுகள்

சிறுகதை

*-சாரல்நாடன்-*

ஊர் சொல்லுகிறது, உலகம் சொல்கிறது, என்னை நடத்தை கெட்டவளென்று. அந்த ஒரு சொல்லைக் கேட்கும்போது உண்டாகிற அருவருப்பும், நினைக்கும்போது எழுகிற அசிங்கமும் உருவும் நிழலுமாக ஒருங்கிணைவதால் எழுகிற வெறுப்பும் என்னை ஏளனத்தோடும் எரிச்சலோடும் பார்க்க வைக்கிறது அவர்களை.

அந்த ஒரு சொல்லின் முழு அர்த்தத்தையும் மனதில் வாங்கி அந்த சொல்லால் குறிக்கப்படுகிற பெண்ணையும், அந்த பெண்ணின் பலவீனத்தையும், அந்த பெண்ணின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்ட ஓர் ஆடவனை அல்லது அவளது பலத்துக்காட்பட்டு விட்ட ஓர் ஆடவனை உடன் சேர்த்து நினைத்துப் பார்க்க முடியாததால் வெறுப்பை மாத்திரமே வெளிப்படுத்துகிறாள். அவர்களைப் பற்றி நான் கவலைக் கொள்ளப் போவதில்லை. ஆனால், அதே உணர்ச்சிகளோடு என் கணவரே என்னைப் பார்க்கும்போது...

யாரையும் எளிதில் மயக்கிவிட முடியாததாலும், பிறரின் கவனத்தைக் கவர்ந்து இழுக்கக் கூடியதும்தான் என் அழகு.

சிறுபராயத்தில் கண்ணாமுச்சி விளையாடிய காலத்திலும், தோட்டப் பாடசாலையிலே ஐந்தாம் வகுப்புவரை படிக்கும் போதும், பின் கொழுந்து கிள்ள ஆரம்பித்த காலத்திலும் என்னைச் சுற்றித் திரிந்த ஆண் பிள்ளைகளை எளிதில் மறந்து விடுவதற்கில்லை: அப்போதெல்லாம் எப்படி நெருப்பாக இருந்து அவர்கள் என்னை நெருங்கி விடாது செய்திருக்கிறேன் என்பதை நினைக்கும் போது என் மீது எனக்குப் பெருமையாக இருக்கிறது.

கல்யாணமாகி குடும்ப வாழ்க்கை தொடங்கி ஆறு ஆண்டுகள் நினைக்கவே முடியாத வேகத்தில் ஓடி மறைந்து விட்டன. நினைவில் பதித்து மீட்டு மகிழ்வதற்கும் எந்தவிதமான நிகழ்ச்சிகளும் வாழ்க்கையில் இடம்பெறவில்லையென்றாலும் திரும்ப நினைவில் எழும்போதே உணர்ச்சிப் புயலை எழுப்பி என்னை அழவைத்த இரவுகளும், அமைதியை விளக்க வைத்த நாட்களும் சில இருக்கத்தான் செய்தன.

ஒருநாள் நடந்துவிட்ட நிகழ்ச்சிதான் என்றாலும், அந்த ஒரு நாளைய நிகழச்சியும் நினைவுகள் திரும்பத் திரும்ப உயிர் பெற்று நாளாக ஆக முன்னிலும் வலுவோடு என்னை வாட்டி வதைத்தன.

மணமான பெண்கள் ஒவ்வொருவரின் வாழக்கையிலும் இது போன்ற அபாக்கியமான இரவுகளும் நாட்களும் இல்லாமல் இருக்காது. என்னைப் போல வெளியில் சொல்லிக்கொள்ளத் தைரியமில்லாததால் அழுது கழித்த இரவுகளும், நாட்களும் அவர்கள் வாழ்க்கையில் இல்லை என்றாகிவிடுமா?

'இத்தனை லட்சணமா ஒன்னு எனக்கு வந்து பொறக்கலேன்னுதான் குறைச்சலாயிருந்தது' என்று என் தாயே எத்தனை தரம் முணுமுணுத்திருக்கிறாள். என்னைப் பெண் கேட்டு யாரும் வராத காலத்தில் பதினெட்டு வயதுவரை யாரும் கேட்க வராத என்னைப் போன்ற கண்ணுக்கு லட்சணமான பெண் ஒருத்தி இருந்துவிட்டால் போதும் தங்கள் பலவீனத்தை மறைத்துக் கொள்ள முடியாத ஆண்கள் பரிதாபத்திற்குரிய ஜீவன் என்று தங்களுக்குள்ளாகவே அவளையேப் பற்றி ஒரு நினைப்பை எழுப்பிக் கொண்டு தங்கள் பரிதாப நிலையை வெளிக்காட்டிக் கொள்கிறார்கள். கையோடு அவளைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் வெளியில் பரப்பி, தங்கள் பலவீனம் வெளியில் பரவிவிடாது மறைத்துக் கொள்கிறார்கள்.

கைநீட்டி அடித்தார், முகத்தில் காறி உமிழ்ந்தார். அத்தனை காலமும் என்னை அதட்டிக்கூட கூப்பிடாத என்னுடைய புருஷன் அன்று அப்படி நடந்து ... அப்படி என்னதான் நடந்துவிட்டது.

கொஞ்ச நாட்களாக கொழுந்து றாத்தல் எனக்கு கூடுதலாக இருந்ததுவும், இரண்டு மாதங்களாக எனக்கு சம்பளம் சற்றுக் கூட இருந்ததுவும், இதைக்குறித்து இட்டுக்கட்டிய கதைகளும் அவருக்கு தெரிய வந்திருந்தன. அவ்வளவுதான்.

கொழுந்து குறைவாக பறிக்கிறேன் என்று கொபித்துக் கொண்டிருந்தால் அதில் நியாயமிருந்திருக்கும். சம்பளம் குறைவாக இருக்கிறதென்று ஆத்திரப்பட்டிருந்தால் அதில் அர்த்தமிருந்திருக்கும். ஆனால் திறமையினால் என்று நினைத்து நான் மகிழ்ச்சி அடைந்தவைகளையே சிறுமையினால் என்று எண்ணி அவர் ஆத்தரப்படுகிறார்.

'எங்கள் சமுதாயத்தின் வாழ்க்கை அமைப்பில் இப்படி ஒன்றோடொன்று சிறுமையும் பெருமையும் பின்னிப்பிணைத்து எந்த ஒன்றுக்கும் தீர்வு காண முனையும்போது தனி மனித உணர்ச்சிகளை மதிக்காமலே முடிவு செய்வது ஒன்றும் புதிதல்ல.'

'முப்பது வருடகாலமாக இந்த வாழ்க்கை முறையிலேயே ஊறிப்போன என் கணவர் அன்று அப்படி நடந்து கொண்டது தவிர்க்கமுடியாததுதான். ஆனால் அப்படி நடக்கும் என்பதை எதிர்பார்த்து முன்கூட்டியே விழிப்பாயிருந்திருக்க வேண்டியவள் நான்தான். பார்க்கப் போனால் அப்படி ஒரேயடியாகப் பழியை நானே ஏற்றுக் கொள்ளத்தேவை இல்லைதான்.'

திருமணமாகி அவரோடு குடித்தனம் தொடங்க வந்த ஆரம்பத்திலேயே கொழுந்து கணக்கப்பிள்ளையைப் பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாடைமாடையாகக் கேள்விப்பட்டேன். என்றாலும், சமுதாயத்தில் இல்லாத ஒன்றாக எண்ணி அதை நான் பெரிதுபடுத்திக் கொள்ளவில்லை.

மனிதனுடைய பலவீனங்கள் சிலசமயங்களில் மிக வலியோடு தலைவிரித்தாடுகின்றன. வாய்ப்பும் சூழ்நிலையும் வகையாயிருந்து விட்டால் மனிதன் அதற்குட்பட்டு விடுகின்றான். மனித சமுதாயத்தில் புரையோடிக் போயிருக்கின்ற விபரீதங்களுக்கெல்லாம் காரணமிதுதான்.

மலைநாட்டுச் சமுதாயத்திலும் அதிகாரத்தை கையேற்றிருப்பதால் வெறித்தாண்டவம் போட நினைப்பவர்களுக்கு சூழ்நிலை வகையாயமைந்து விடுகிறது.

நினைத்தாலும் மாற்ற முடியாத விதத்தில், மாற்ற முனைந்தால் நீண்ட எதிர்ப்பையும் நெடிய பகையையும் சமாளித்தாக வேண்டிய வகையில் வாழ்க்கையை ஏற்றுக் கொண்ட சமுதாயத்தில், மானத்தையும் கற்பையும் காத்துக் கொள்வதற்கென்று போரடியாக வேண்டும் என்ற நினைப்பே எழாதவாறு வாழ்க்கைப் போராட்டம் அவர்களை ஊமையாக்கிவிட்டது.

இளம்பருவத்து சிறுபிள்ளைத்தனமான கேளிக்கையில் சிரிக்கவும் பழகவும் தெரிந்துவிட்ட பெண்ணொருத்திக்கு, ஒருத்தனுக்கென்று தன்னை உரித்தாக்கிக் கொண்ட பிறகு உள்ளத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும், உரியவனைப் பற்றிய நினைப்பின் பலத்திலேயே, ஓடி முடித்த வாழ்க்கை எழுப்பிவிட்ட நினைப்பை அழித்து, ஏற்றுக்கொண்ட வாழ்க்கைக்குத் தன்னை தயார் செய்து கொள்ளவும் முடியாது போனால், முடிந்தும் அவள் முயலாது போனால் ஊராரின் குத்தலான பேச்சுக்கும், குறும்பு நிறைந்த பார்வைக்கும் ஆளாகித் தீர வேண்டியவளாகிறாள். தன்கரம் பிடித்தவனையும் அதன் விளைவில் பங்கேற்க வைத்துவிடுகிறாள். தாங்கள் இருவருமாகத் தொடங்கி வைத்த குடும்ப வாழ்க்கையின் அமைதியைக் குலைத்து விடுகிறாள்.

ஆனால், நான் எத்தனை பவுத்திரமாக நடந்து கொண்டிருக்கிறேன். எவ்வளவு நிதானமாக காரியமாற்றி எங்கள் வாழ்க்கையில் அப்படி ஒரு சூழ்நிலை வந்துவிடாதிருக்கச் செய்திருக்கிறேன். ஆறு வருடங்கள், அவர் குணத்திற்கேற்ப நடந்து, அவர் கண் சிவக்காதவாறு நடந்து வந்திருக்கிறேன். அவர் பங்குக்கும் என்னைக் கண்கலங்க விடவில்லைதான்.

அண்டை அயலோடு பழகும்போது, அடுத்தவர்களோடு பேசும்போது இயல்பான முரட்டுச் சுபாவத்தால் எப்படியெல்லாம் நடந்து கொள்ளும் அவர், வீட்டுக்கு வந்தால் கொஞ்சும் குழந்தையாகவும், கெஞ்சும் பிள்ளையாகவும் மாறிவிடுவார். அப்படி மாறிவிடுவதை விரும்பி வரவேற்று உண்மை தெரியவந்தால் டிப்படி மாறிவிடுவாரோ என்று பயந்து எத்தனையோவற்றை அவரிடமிருந்து மறைத்து, அப்படி மறைக்க நேர்ந்தமைக்காகப் பல இரவுகளைக் தனித்து அழுதே கழித்திருக்கிறேன்.

உழைப்பின் அலுப்பில் அவர் அயர்ந்து தூங்கிக் கொண்டு இருக்கையில் உங்கே கேட்டுவிடப் போகிறாரோ என்று பயந்து இருதயத்துக்குள்ளாகவே நான் அழுது கொண்டிருக்கிறேன். துடைக்க முனைந்தால் எழும் அசைவில் எங்கே கண்விழித்து விடுவாரோ என்று பயந்து கண்ணில் வழியும் நீருடனேயே நான் கண்ணயர்ந்திருக்கிறேன்.

அங்கு வந்த ஆறேழு மாதங்களில் ஒருநாளில் தராசு நாற்பது றாத்தலைக் காட்டிக்கொண்டிருக்கும் போதே, தட்டுக் கூடையை கையால் ஒரு தட்டுத்தட்டி அறுபது றாத்தல் என்றுகூறி ஆச்சரியத்தோடு நிமிர்ந்த என்னை ஆசையோடு பார்த்ததையும் அடுத்த சில நாட்கள் புதிதாக வந்த அந்தக் கணக்கப்பிள்ளை என்னைத் தனித்துச் சந்திக்க முயற்சித்தபோது அவரைத் தடுத்து நிறுத்தும் வகையில் முகத்தில் உமிழ்ந்தாற்போல வார்த்தைகளை விட்டெறிந்ததையும் நானவரிடம் கூறியதே இல்லை.

அரும்பி வருகின்ற எண்ணங்களை அவ்வப்போதே செயல்படுத்தி பார்க்கத் துடிக்கிற பருவத்தில் நடந்து விடுபவைகளை பழக்காமாக ஏற்படுத்திக்கொள்வதிலும், படிப்பினையாக ஏற்றுக்கொள்வதிலும்தான் வாழ்க்கை திசை திரும்புகிறதா?

விபரம் தெரியாத விளையாட்டுப் பருவத்தில் நடந்த முறையிலேயே வளைவை எதிர்ப்பார்க்கத் தெரிந்து, விவாகம் முடிந்த பின்னரும் நடந்துகொள்ள வேண்டுமென்று எதிர்ப்பார்க்கிற அறியாமையின் பாற்பட்ட அவரது செய்கையை எப்படி என் கணவரிடம் சொல்லி வைப்பது, அப்படிச் செய்வது எந்த விதத்தில் நியாயமானது?

பிறத்தியாரென்றால் நம்மிடையேயில்லாத ஒன்றா உன்று கேட்டு சமாதானம் செய்துகொள்ளும் மனம், அப்படிச் சமாதானம் செய்தே சமுதாயத்தை நாறவைப்பதற்கு இடமளித்த மனம், தன்னுடையதென்றாகி விட்டபோது அதெப்படி நியாயமாகும்என்று கிளர்ந்தெழுகின்ற ஆவேசத்தோடு, தான் உடந்தையாயிருந்தால் சமுதாயத்தில் ஊறிப்போன பழக்கத்தின் சிறுமையை அசூசையோடு நோக்குகிறது.

சிறு பிராயத்தில் நடந்து போனதை மனதில் வைத்துக்கொண்டோ- மனைவி இறந்துபோன நேரத்தில் ஆதரவோடு நெடுநேரம் துயர் விசாரித்ததை நினைவில் வைத்துக்கொண்டோ, இந்த இரண்டினாலுமோ மனதில் நிறைந்து வரும் ஆசைகளுக்கும், ஏக்கங்களுக்கும் உருவம் கொடுத்து அதனை என்னுருவத்தோடு ஒட்டி வைக்க முனைந்த போது-

'நீங்க செய்வது உங்களுக்கே நல்லாயிருக்குதுங்களா ஐயா, ரோதட்டம் முழுக்க உங்களைப் பற்றி மோசமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகள் அடிபடுது. உங்க சம்சாரம் இருந்தபோதே அப்படின்னா, இனி கேட்கவா வேணும். யோசிச்சுநிதானமா நடக்க வேணாமா?' என்று நான் கேட்டேன்.

அடர்ந்து வருகிற கருமை, இருவரும் தனித்து நிற்கிற சூழ்நிலை பாதுகாப்பான அவர் பங்களா, அவருக்குப் போதையூட்டியிருக்க வேண்டும். அந்த போதையிலும் அவர் நிதானம் தவறவில்லை. தனது விருப்பத்தை வெளியிட்டார் எனது சம்மதத்தை எதிர்ப்பார்த்து.

'ரஞ்சிதம் உனக்கு முடியாதுன்னா வேண்டாம். நான் உன்னைக் கஷ்டப்படுத்தல' அவர் சொற்களை வெளியில் விட்டும் விடாமலும் கேட்டார். சிறுபிள்ளைகள் தயக்கத்தில் வார்த்தைகளை மென்று விழுங்குவதைப் போல.

பெண்ணொருத்தி இருளில் தனித்து ஓர் ஆடவனிடம் அகப்பட்டுக் கொண்ட நேரத்திலும் அவளது சம்மதத்தை அவன் எதிர்பார்த்து காத்திருப்பது அந்தப் பெண்ணின் வியாபித்துப் போன பலவீனத்தைப் புரிந்து கொண்டதாலா?

நான் எவ்வளவு அற்பமானவள் ? நான் அங்கு வந்து ஐந்தரை ஆண்டுகளுக்கு மேலாக என்னிடம் நின்று பேசவும் முனையாத கணக்குப்பிள்ளையையும், அவரிடத்துக்கு ஆறு மாதங்களுக்குள்ளாகவே மனைவியை பறிகொடுத்துவிட்டு மாற்றான் மனைவி அழுவும், தனக்கு கீழ் வேலை செய்கிற ஒருத்தனின் மனைவி என்று தெரிந்தும் - முன்னைய அறிமுகத்தால் முகிழ்ந்து வரகிற ஆசையை வளர்த்து வருகிற இந்தப் புது கணக்குப்பிள்ளையையும் நினைத்துப் பார்த்து என் நிலைக்கு நானே இரக்கப்படுகிறேன்.

இன்னும் எத்தனை நாளைக்கு இப்படியான நிலைமையை வளர்த்து வருவது ? பலவீனமே பலமான ஓர் விளைவை ஏற்படுத்தியிருக்கிறதென்பதை அவரிடம் நான் வெளிப்படுத்த வேண்டாமா ?

அவர் பேசத் தொடங்குகிறார். பழைய நிகழ்ச்சியைத் துணைக்கு அழைத்துக் கொண்டு, நெடுநாளைய நிகழ்ச்சிகளையும் நினைவில் வைத்துக் கொண்டு பேசுகிற சிறு குழந்தையைப் போல.
'ரஞ்சிதம் நீ உன் அம்மாவோட இருந்த காலத்தில் நான் வேலை பழகும் போது நடந்ததை மறந்துட்டியே' அவர் கேட்டே விட்டார்.

அள்ளித்தெளித்த அனல் பட்டாற்போல என் உணர்ச்சிகள் சிலும்பி விழிக்கின்றன. ஒருமுறை நான் வாழ்க்கையில் தவறு செய்திருக்கிறேன். அவருட்டிய போதையில் இளம்பருவத்து ஆசைக்கனவுகளை நிறைவேற்றி பார்க்கிற சிறுபிள்ளைத் தனமாக ஆசைக்கு இரையாகிவிட்டேன். அவரிடம் இல்லாவிட்டாலும் யாரோ ஒருவரிடம் அந்த ஆசையை நான் பூர்த்தியாக்கி கொண்டு தான் இருந்திருப்பேன்.

அந்த ஒருவர் அவராக இருந்து, அவரும் தோட்டத்தில் உத்தியோகம் பார்ப்பவராய் இருந்து, அதனால் அடங்கிவிட்ட அந்த ஒரு நாளைய நிகழ்ச்சிக்காக நான் எத்தனை நாள் அழுது புலம்பியிருக்கிறேன் ? அந்த ஒரு நிகழ்ச்சியே என்னில் எப்படி ஒரு புது வைராக்கியத்தைப் பிறகு தோற்றுவித்திருக்கிறது. ஆனால் அவரோ படிப்பினையாக நான் ஏற்றுக் கொண்டதையே பழக்கமாக ஏற்றுக்கொண்டு தடுமாறுகிறாரா ?

'ஐயா, புருஷனுக்குத் துரோகம் செய்யிறவளில்லை நான், நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்' 'நான் அமைதியாக, அமைதியாக, ஆனால் வெகு உறுதியாகப் பேசுகிறேன்'.

என்னிடமிருந்து இப்படி ஒரு பதிலை, அதுவும் செய்ய நினைக்கிற பாவச்செயலைக் குத்திக் காட்டுகிற ஒன்றை எதிர்பார்க்காத அவர் ஒரு கணம் வெலவெலத்துப் போனார். சில நிமிட மௌனத்தின் பின்னர் அவரே பேசுகிறார்.

'இந்த நேரத்தில் நீ இங்கிருந்து யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள் ? எப்படி சொல்லுவார்கள் ? தெரியுந்தானே ரஞ்சிதம்' அவர் சொன்னார். அவர் சொன்னது நடந்தது.

தங்களோடு ஒட்டிவிட்டாளென்று நினைத்துக் கொண்ட சிலர் என்னோடு நெருங்கிப் பழக ஆரம்பித்தனர். நான் இறங்கி வந்துவிட்டதாக நினைத்துக் கொண்ட அந்தப் பெண்கள் தங்களிறக்கத்தை நியாயமாக்கிக் கொண்டு பேசவும் செய்தனர். அவர்கள் முகத்திலடித்தாற் போல பேசினேன்.

பொண்ணுன்னா அதற்கேற்ற நடத்தையிருக்கணும். புருஷனுக்குத் துரோகம் செய்யாத மனசிருக்கணும். நீங்களும் இருக்கிறீங்களே. தானும் கெட்டுத் தன்னோடு இருக்கிறவர்களையும் கெடுங்க.

'பெரிய யோக்கியக்காரி பேசுறா கேளுங்கடி' எதிர்பார்த்து ஏமாந்த எரிச்சலில் அவர்கள் அத்தனை பேரும் சீறினர்.

படமெடுத்த பாம்பின் சீறல் வெறுமனே அடங்கி விடக்கூடியதா ? சினம் தணிவதற்கு அதற்கு கொத்தித் தீரவேண்டும். மனிதர், மரம், மண் என்று ஒன்று இல்லாமல் போய்விடும்.

'ரஞ்சிதம் நீ என்ன பொம்பளதானா ?' எந்தக் கேள்வியை மற்றப் பெண்களைப்பார்த்து நான கேட்டேனே அதே கேள்வியை அதே அர்த்தத்தில் அவர் என்னிடம் கேட்கிறார்.

ஆறு வருடங்களாக அப்படி ஒரு நிகழ்ச்சி எங்கள் வாழ்க்கையில் இடம் பெறவில்லை. எனவே, அதை எப்படிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாளிப்பதென்றறியாது விழித்தேன் ! அவர் மட்டுமாமென்ன ? அடுப்படியில் கட்டுக்கட்டாக பீடியை பீடியை ஊதிக் தள்ளிக் கொண்டே உட்கார்ந்திருந்தார்.

கதவருகில் லாம்பு வெளிச்சம் பட்டுவிடாத இருளில் அழுது கொண்டு நிற்கிறேன் நான். எத்தனை நேரம் இப்படி இருப்பது ? இரவு முழுவதையும் இப்படியே கழித்து விடமுடியுமா ?
தனிமையில் பல இரவுகளை நான் அழுது கழித்திருக்கிறேன். அப்படிக் கழித்த இரவுகளில் மனப் பாரம் தனிந்திருப்பதாக நான் கூறமாட்டேன். நடந்து போன செயலைக் குறித்து ஒருத்தருடைய பிரலாபம் என்பதால் அது இயல்பானதாயிருக்கலாம்.

ஆனால், இரவில் நிசப்தத்தால் இரண்டு உள்ளங்கள் அமைதி இழந்து தவித்தும் மனச்சுமை இறங்கவில்லையென்றால் பின் அந்த இரவின் அமைதிக் குலைவிற்கு என்ன அர்த்தமிருக்க முடியும் ?

ஏதோ ஒருணர்ச்சி என்னை உந்தித்தள்ள விரந்து சென்று கோப்பையை எடுத்துச் சோற்றைப் போட்டு அவரிடம் நீட்டுகிறேன். ஆனால் வாய் திறந்து எதுவும் பேசவில்லை. அவரும் வாயை திறக்கவில்லை. சாப்பாடு முடிந்த கையோடு பாயை விரித்துப் படுத்துக் கொண்டு என்னையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பாத்திரங்களை கழுவி வைத்துவிட்டு என்ன செய்வதென அறியாது விழிக்கத் தொடங்குகிறேன். தூரத்தே, தேயிலைத் தொழிற்சாலையில் காவற்காரன் பன்னிரண்டு முறை மணியை அடித்து வைக்கிறான்.

'என்ன இன்னும் எத்தனை நேரம் அப்படியே நிற்கப் போற வந்துபடு. மணி பன்னிரண்டாச்சு தெரியலை'

அவர் அழைப்பில் இழைந்தோடுவது ஆத்திரமா ? ஆதங்கமா ? என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

லாம்பு வெளிச்சத்தை குறைத்து வைத்துவிட்டு நானும் பாயில் சாய்கிறேன். ஒட்டிக் கொண்டு படுத்திருக்கும் அந்த நேரத்திலும் எங்கே உள்ளமும் உறவும் எட்டாததாகி விடுமோ என்ற அச்சம் இருவரையுமே ஆட்டி வைக்கிறது ?
'இத்தனை நாளும் இல்லாம இன்னைக்கு மட்டும் ஏன் நீங்க இப்படி நடந்துக்கிட்டீங்க' நானே ஆரம்பிக்கிறேன்.

'நானும் அதையேதான் உன்னிடம் கேட்கிறேன் ரஞ்சிதம்' அவர் பதிலுக்கு கேட்கிறார்.

'நீங்க என்மேல் சந்தேகப்படுறீங்களா ...
நான் தயங்குகிறேன்.
'சேச்சே ... ஆனா, ஊரும் உலகமும் அப்படி ஒரு சந்தேகத்தை என் மனசில் வளர்க்க ஏன் நீ இடம் கொடுக்கிற' சிறுனுழந்தையைப் போல கேட்கிறார்.

எத்தனை நியாயமான கேள்வி ? தன்னுடையவள் என்றாகிவிட்ட ஒருத்தியிடமிருந்து அவளது கணவனுக்கு வேறென்ன வேண்டிக்கிடக்கிறது ?
எத்தனை நாள் தனித்து அமைதியிழந்து நான் தவித்திருக்கிறேன் என்று எனக்கே தெரியாது. ஆனால் அத்தனை நாளும் காணாத அமைதியை அந்த ஓரிரவில் கண்டு விடுமாப்போல அழுகிறேன் நான்.

அத்தனை நாளும் என் மனத்திற்குள்ளாகவே மூடி மறைத்து கிடந்த உண்மைகளைத் தெரிந்து கொண்ட அவரும் அழுகிறார். இருவரும் சேர்ந்தே அழுகிறோம்.

மறந்துவிட நினைக்கிற, மறைத்து வைத்த உண்மைகள் மனதில் தங்கிக்கொண்டு அகலமாட்டேன் என்கிறபோது மனதுக்கு விருப்பமான ஒருவரிடம் அந்த உண்மைகளை வெளிப்படுத்திக் கொள்வதில் ஏற்படுகிற அமைதி ஆச்சரியமானது.

இரவின் நிசப்தத்தில் ஏங்கித் தவிக்கிற இரண்டு உள்ளங்கள் இணைந்து அழுவதால் ஏற்படுகிற அமைதிக்கு இணையாக உலகில் வேறென்ன இருக்க முடியும்?

அந்த இரவை அழுதே கழித்தோம்.

அப்படி ஓர் இரவு எங்கள் வாழ்க்கையில் இனி வரவே வராது.

அந்த நினைவில் அந்த இரவு கழிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாளம்

சிறுகதை

*தி. இரா. கோபாலன்*

நடந்தும், ஏறியும் இறங்கியும்-காலத்தால் அலுத்துப்போன அந்த படிக்கட்டுகளின் சறுக்கல்கள் இப்போது பயணப்பையுடன் இறங்கும்போது ஏனோ அந்நியமாகத் தோன்றியது. பின்னால் மெதுவாக இறங்கி வரும் கணவனை அவ்வப்போது திரும்பிப் பார்த்துக் கொண்டாள். சற்று அனுதாபியாகத் தெரிந்த கணவனின் உதட்டோரங்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் சோகத்தை அவளால் காண முடிந்தது.

நண்பகல் பன்னிரண்டு மணியைத் தாண்டி நாழியாகிவிட்டதால், கொடுமுட்டி தோட்டப் பெண் தொழிலாளர் வேலைவிட்டு வந்து கொண்டிருந்தார்கள். 'மீனாக்கா'-என்று தன் ஒரு கரத்தைப் பற்றியதில் ஏதோ ஒரு ஆறுதலான பிடிமானம் அவளுக்குள் பிரவாகமெடுத்தது.

'ஏய் மீனா! கொஞ்ச நாளக்கி எங்கள மறந்துருவ'

'இந்தாம்மா மீனா போற எடத்துல கவனமா. இது என்னென்னமோ பேசுறாக' இப்படிக் கூறியதும் 'கவனமா இருக்கேன் ஆத்தா'-என்று பதில் கூறினாள்.

தனது பதினைந்து வருட இல்லற வாழ்க்கையில் இப்போது இந்த ஒரு சில நாட்களில் அவளது முகத்தில் முதற்கோடாக முதுமைக்குரிய ஆரம்பம் தென்பட்டது. அந்த நிலையிலும் அவளுடைய பளபளப்பான முகத்தில் வியாபித்திருந்த இளமையை அந்தக் கோட்டினால் வெற்றிபெற முடியவில்லை.

'கோயிலுக்குப் போனியா மீனா'- என்று தன்னோடு இணைபிரியாது வேலைசெய்த கிரிசீனா கேட்டாள். அவள் கத்தோலிக்கப் பெண்ணாயிருந்தாலும் மீனாவுடன் கோவிலுக்குப் போவது வழக்கம்.

மதங்களின் வேறுபாட்டை உணராது வாழும் தோட்ட சமூகத்திடையே மீனாவும்-கிரிசீனாவும் அழுத்தமான உதாரணங்கள்.

கொஞ்ச நேரம் கிரிசீனாவும் முகத்தையே பார்த்தாள். அவளைக் கட்டிப்பிடித்து ஓவென்று அழவேண்டும் போல இருந்தது. பஸ் பிடித்து அட்டன் போய் தன் அக்காள் வீட்டில் இருந்து அடுத்த நாள் காலை கொழும்பு போக வேண்டும்.

'புள்ளங்கள, ரெண்டு பேத்தையுங் கூட்டிட்டு வந்திருக்கலாம்' என்று தனது தோழிகளிடம் விடைபெற்று வந்த பின் கணவனிடம் கூறினாள் மீனா.

அட நீ ஒன்னு. அதேன் அந்த சேரு- புடிவாதமா இருக்காரே. புள்ளங்கள பள்ளிக் கோடத்துக்கு அனுப்பியே தீருவனும்னு. நம்ப கஷ்டம் அவுங்களுக்கு எங்க தெரியப் போவுது. என்னுமோ தெனமாம் புள்ளங்க ரெண்டு பேத்தையுஞ் சேத்துருக்காங்களாம்'

'தமிழ்த்தெனம் போட்டி'-மனைவி மீனா அவனைத் திருத்தினாள்.

'என்ன தெனமோ. நம்மகிட்டு கேட்டுக்கிட்டு சேத்திருக்கலாம்ல'

'சும்மா நிப்பாட்டுக்கு. அவுங்குளுக்கு சரின்னு பட்றவங்களத்தாஞ் சேப்பாங்க. ஸ்கூல்ல போயி ஒழுங்கா படிச்சிருந்தா தெரியும்.'

'ஏண்டி நீ எட்டாவது படிச்சிருக்கேங்கறதால என்ன கிண்டல் பண்றியா. ஏங்க என்னோட 'வஸ்தா' அடிக்க எந்த வாத்தியாரையாவது வரசொல்லு பாப்பம்'- என்று அந்த சந்தர்ப்பத்திலும் ஒரு வழிச்சவால் விட்டான் கணேசன். அவ்வப்போது தன் பெருமை பேசியே நாற்பதைக் கடந்துவிட்ட கணேசனின் பேச்சு மனைவிக்குக் கோபத்தையும், ஒரு அனுதாபத்தையும் உண்டாக்கியது.

இந்தாங்க இப்படி ஏதாவது எடக்குமொடக்கா பேசி தோட்டத்து ஆளுங்கள பகைச்சுக்க வேணாம். நமக்கு எல்லாரும் வேணும்' எப்போதுமே அறிவுடன் பேசும் தன் மனைவியை ரகசியமாக தனக்குள் நினைத்துப் பெருமைபட்டுக் கொள்வது வழக்கம்தான்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ரூபினியையும், பிரசாத்தியையுங் கவனமாப் பார்த்துக் கோங்க. எந்த நாளும் ஸ்கூலுக்கு அனுப்புங்க' பல பெரியவர்களின் காலில் விழுந்து வணங்கி ஆசி வாங்கிக் கொண்டு வந்தாலும் இன்னும் இரண்டு தினங்களில் 'சவூதி' என்ற தூர தேசத்துக்குப் போய் விடுவோம் என்ற பெருமூச்சு அவளுடைய தனதில் நிரந்தர சமாச்சாரமாகித்தான் இருந்தது.

வருவதைக் குடித்துவிடும் கணவன், எப்படியோ கணேசனிடம் புகுந்துவிட்ட குடிப்பழக்கத்தை அந்த பேதையால் மாற்ற முடியவில்லை. வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்ள முடியாமல் எத்தனையோ குடும்பப் பெண்கள் வேகமாகப் பொருளாதாரத்தைத் தேடிக் கொண்டு கொஞ்ச காலமாவது 'ஜே.ஜே' என்று வாழ்ந்து விட வேண்டும் என்ற துடிப்பு.

அந்த 'மினி' கடைவீதியில் பஸ் வண்டி எமக்கூட்டமாக வந்து நின்றது.

'ம்- நாடுவுட்டு நாடு போவும் போதாவது இந்த பஸ்ல நிம்மதியா போவ முடியுதா!' மீனா அலுத்துக் கொண்டாள். முண்டியடித்துத் தம்பதியர் ஏறுமுன் பெரும்பாடாகிவிட்டது. எப்பவுமே அந்த நீள் சதுர பஸ் வண்டியில் உரிய பயணிகளைவிட மூன்று மடங்கு கூட்டம் இருக்கும். மக்களை ஏற்றிச் செல்லும் வண்டி என்பதை விட திணித்துக் கொண்டு திமிறி ஓடும் வாயில்லா ஜீவன் என்பதே பொருத்தம்.

பின்பக்கக் கதவினூடாக ஏறியவர்களின் மனக் கஷ்டத்தை நடத்துநரின் வார்த்தைகள் மேலும் அதிகரிக்கச் செய்து கொண்டிருக்கிறது.

'பேக் தியலா யன்ன இசாறட்ட மே மினிசுண்ட தேரின் னேனெ' நடத்துநரின் ஆதங்கம் அவனுக்கு அனைத்துப் பயணிகளின் ஆதங்கங்கள் பெருமூச்சாக வெளிப்பட்டுக் கொண்டிருக்க நமது நாயகனும் நாயகியும், அவர்களோடு சேர்ந்து நசுங்கினார்கள். தலவாக்கலை போகும் வரை இந்த தற்காலிக சிறைச்சாலையில் நிற்பவர்கள் ஒரு பொதுத் தண்டனையை அனுபவித்தே ஆக வேண்டும். தேசிய வியாதியாகிய இதில் மூழ்காத பஸ் பயணிகளே நாட்டில் இல்லை.

தான் கொழுந்தெடுத்து குடும்பத்தைக் காப்பாற்ற முடியாது என்ற நிலை வந்த போதெல்லாம் வெளிநாடு சென்று வேலை செய்ய வேண்டும் என்று முனைந்ததில்லை. இது விபத்தாக தன்னோடு வேலை செய்த கைம்பெண் கமலா சவூதி வந்து கொடுத்த ஆலோசனையுடன் கூடிய பண உதவியும் சேர்ந்து மீனாவை இந்த வியாதி பிடித்தது.

மற்ற பெண்களிலிருந்து வித்தியாசப்பட்டு வாழும் மீனாவுக்கு கோவில் குளம் விரதம் என்று தன் கலாசாரத்தை முறையாக கடைப்பிடிக்கும் ஒரு சராசரிப் பெண். இதுவே இப்போதைய பிரச்சினையாகத் தலையெடுத்து நின்றது.

பஸ் வண்டி தலவாக்கலை போய்ச் சேர்ந்ததும் தம்பதியருக்கு விடிவு கிடைத்தது. இப்படியான பயணம் பழக்கப்பட்டதாக இருந்தாலும் இருவருக்கும் இன்று மனம் வலித்தது. மீனாவுக்கு அந்த பஸ் நிலையம் புதிதாக இருப்பது போல இருந்தது. எல்லோருமே இப்படித்தானோ? பலபல ஆதங்கங்களைச் சுமந்தே பயணம் செய்கிறார்களோ?
தம்மை அழைத்துச் செல்ல வரும் முகவர் ஒரு நாள் தாமதித்து வருவதாக தொலை பேசி செய்தி வந்திருந்தது.

டீக்கோயா தரவளை தோட்டத்து அழகும் நாகரீக பிரதேசமும் எப்போதுமே மீனாவுக்குப் பிடிக்கும். தன் அக்காள் வீட்டுக்குப் போவது அவளுக்கு தாய்வீட்டு அனுபவம் தான்.

'வாம்மா மீனா, வா வா' என்று தன்னை விட பத்து வயது மூத்த அக்கா ஜெகம் ஓடிவந்து அவளுடைய பயணப்பையை வாங்கிக் கொண்டாள். பெருமாள் தலைவர் என்றால் அந்த பிரதேசத்தில் பிரசித்தம். தொழிற்சங்க பலம் மலையகத்தில் தலைதூக்கி நிற்கும் புதுயுகத்து தொழிலாளர் தலைவர்களுக்கு எங்கேயும் மவுசுதான். அந்த வகையில் மீனாவின் மாமா பெருமாள் தலைவருக்கு ஒரு செல்வாக்கு இயற்கையாக இருந்தது. இது ஒரு யதார்த்தமான ஏற்றம் தான்.

' வா மீனா..என்னா செய்றது இங்கய நல்லா இருக்க முடியில. அதுனால வெளிநாடு போற எனக்குன்னா விருப்பமில்லதேன். ஓம்புருசங்காரன் ஒரு போக்கிரிதோன். ஏங்க தோட்டத்துல நீங்க இருந்தா ஒன்னய சவுதி போகவுடறதில்ல' என்று மீசை முறுக்கிக் கூறியது அப்போதைய சூழலை மறுக்கும் சமாச்சாரமாக இருந்தது. 'நா என்னா பண்றது.மாமா அவுருக்கு நல்லா சொல்லுங்க. புள்ளங்கள பாத்துக்கங்க மாமா!' என்று கெஞ்சுவது போல் கூறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரவளையில் அன்று இரண்டு மணிக்கே வேலை விட்டு விட்டார்கள்!

சரி மீனா நீத்தாம் பாத்திருப்பிய. முன்னுக்கு எல்லா சோடிச்சிருக்காங்க. காலயிலிருந்து வேல.

'பாத் தேம் மாமா' என்று சொல்லிவிட்டு தன் பிள்ளைகளை நினைக்கத் தொடங்கினாள். மீனாவுக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. அந்தி வானம் அழகு காட்டி மினு மினுத்துக் கொண்டிருந்தது. தரவளை விழாக்கோலம் பூண்டிருக்கிறது என்றே முணு முணுத்தார்கள்.

'யாரோ சாமியாராம். வராக'- என்றார் ஒரு பெரியவர்.

'ம்- அவுரு சாமியாரு இல்ல- பகுத்தறிவாளர்' என்று ஆசிரியர் கூறினார். அட்டன் கல்லூரி தமிழாசிரியர். தோட்டத் தொழிலாளரின் விழாவிற்கான உற்சாகம். அவர்கள் இருபத்தோராம் நூற்றாண்டு மனிதர்கள் என்பதை நிரூபித்தது. நகர்ப்பகுதிகளுக்கு மட்டுமே வருகை தரும் அறிஞர்கள் தோட்டப்பகுதிக்கு-! நல்ல மாற்றம் தான் என்று சிலர் சொல்லத் தொடங்கினர்.

அப்பால் மீனா தரவளை லயத்து எல்லைக் காம்பராவில் கண்ணீர் மல்க உட்கார்ந்திருந்தாள்.
'ஏ மீனா- என்னா அப்புடி ஒக்காந்திருக்க. தேத்தண்ணியக் குடி ஊத்தி எம்புட்டு நேரம் ஆச்சி' என்று அக்காள் கூறியதை காதில் போட்டுக் கொள்ளவில்லை. அவளுடைய அவஸ்தையெல்லாம் தன் பிள்ளைகள் நினைவுக்குள் தஞ்சமடைந்துவிட்டது.

'இந்தாம்மா தேத்தண்ணியக் குடி அப்புறம் மத்தத பாக்கலாம்' வீசைக்கார மாமா கூறியதும் தலை நிமிர்ந்தாள்.

'எங்க ஒம்- மாப்பிள- டிக்கோயாப் பக்கம் போயிட்டானோ. இன்னக்கிக் கூடவா' என்றான் பெருமாள். 'ஆமா. ஒங்க தம்பிக்குக் கவலய மறக்க வேணுமே. பொஞ்சாதி வெளிநாட்டுக்கு போற கவல-' பெருமாளின் மனைவி கூறியதையும் மீனா காதில் போட்டுக் கொள்ளவில்லை.

ஒலிபெருக்கி இவ்வளவு நேரமும் சினிமாப்பட்டுகளை அள்ளி வீசிக்கொண்டிருந்தது
ஆடாதடா ஆடாதடா மனிதா' என்று பாடலுக்கிடையே பொலித்தீன், கடதாசி அலங்கார தோரண இதழ்கள் அழகாக ஆடிக்கொண்டிருந்தது மிகப் பொருத்தமான அபிநயமாக சூழலை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தது. தூரத்தே தெரியும் விளையாட்டு மைதானம் அதற்கு மாலை போட்டது போல சுளித்தோடிவரும் சிற்றாறு, தேயிலை செடிகளின் அணியணியான படையெடுப்பு- இத்தனையும் சேர்ந்து தரவளை ஒரு புது உலகமாகத் தோன்றியது.
அப்போது ஒலிபெருக்கியில் ஒரு குரல் ஒலித்தது.
'தோட்ட அன்பர்களே, நமது பிரதம அதிதி தமிழறிஞர் மேடைக்கு வருகை தந்துவிட்டார். எல்லாரும் மைதானத்துக்கு வந்து கலந்து கொள்ளுமாறு
கேட்டுக் கொள்கிறோம்'
மேடைக்கும் பெருமாள் தலைவர் வீட்டுக்கும் அதிக தூரமில்லை.

'வா. மீனா. கூட்டத்துக்குப் போவம்'

'நீ போக்கா நா இங்கேயே இருக்கேன்'

கண்டிப்பாக மறுத்துவிட்டாள்.

'சரி, சரி. வூட்ல இரு. ஒமாப்பள வந்தா கூட்டத்துக்கு வரச்சொல்லு. அவுரு

'ஓடிட்டாரு. முந்தியே பயலுக எல்லாம் பகலைக்குப் போன வெங்கத்தான். நீ வந்து இம்புட்டு நேரம் ஆச்சி. அவனுகல கண்டியா! இப்புடித்தான் எந்த நாளும்' என்று அலுத்துக் கொண்டு வெளியேறினாள்.

சற்று நேரத்தில் கதவு தட்டும் சத்தம் கேட்டது.

'தொர கதவ. மீனா'- அக்காவின் குரல் கேட்டது.
'ஏக்கா போயிட்டு வந்துட்ட'
ஓமாமா என்னா. நல்லா ஏசிட்டாரு. ஒன்னய ஏங் கூட்டிட்டு வருலன்னு.
பொறப்புடு. பொறப்புடு. கதவ பூட்டிட்டு போவம்' என்று துரிதப்படுத்தினாள். ஒலிபெருக்கியில் நிகழ்ச்சிகளை முன்னெடுப்பது கேட்கக் கூடியதாக இருந்தது. எங்கும் இரைச்சல்கள். தரவளை தோட்டத் தொழிலாளர்கள் வருடாந்த தேர்த்திருவிழாவை மட்டுமே கண்டிருந்த காலம். முதல் தடவையாக ஒரு அறிவு விழா. வந்திருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிதி ஒலிபெருக்கி முன்னால் நின்று பேசத் தொடங்கினார்.

'ஏய் சத்தம் போடாதிங்க ஸ்ஸூ , ஸ்ஸூ '- என்று சிறுவர்கள் பகுதியை நோக்கி அவ்வப்போது கத்திக்கொண்டிருந்த பெருமாள் தலைவர் மாமா மீது கோபமாக வந்தது மீனாவுக்கு.

இப்போதைய கஷ்ட நஷ்டங்களைப் பற்றி அலசிக் கொண்டிருந்த புரவலர், அவர் ஒரு இடத்தில் சொன்ன விஷயம் மீனாவை உலுக்கியது. ஒரு மூலையில் குடிபோதையில் நின்று கொண்டிருந்த மீனாவின் கணவன் கணேசனின் மனதில் தீப்பொறியாக விழுந்து கனன்றது.

'-யாருக்குக் கஷ்டம் இல்ல?- எல்லா ஜீவராசிகளுக்கும் கஷ்டம் தான். காக்கையுங் குருவியும் தண்ணீர் குடிக்கப்போவுது தண்ணீர் எங்குமே இல்ல. இடிஞ்சி போயி ஒக்காருதா? வண்டுகள் தேன் குடிக்க பூவுள்ள செடிகளுக்குப் போவுது. அந்த செடியில மருந்து தெளிக்கப்பட்டிருக்குது. நஞ்சுன்னு தெரிஞ்சி அதை தவிர்த்து வேறு செடிக்குப் போவுது. செடிகளைத தவிர்த்துவிட்டு மரங்களில் உட்கார்ந்து தனது சுத்தமான உணவுக்கு ஒரு நல்லவிதமான தேடல்- ஏன் மனிதன் நல்ல விதமா- தேடக் கூடாது? நஞ்சுன்னு அந்த சின்ன உயிருக்குக் கூடத் தெரியுது. அதுன்னு தெரிஞ்சும் பகுத்தறிவு படைச்ச மனிசன் மட்டும் ஏன் மதுவுக்கு அடிமையாகுனும்? அது நஞ்சுன்னு ஏன் மனிசனுக்குத் தெரியில- யோசிங்க- ஒடம்புக் கஷ்டம், பணக் கஷ்டம், பிள்ளைகளுக்கு சாப்பாடு ஒழுங்கா குடுக்க முடியல, படிப்பு குடுக்க முடியில, நம்ம வருமானம் பத்துல. இதுக்கு ஏன் இடிஞ்சி போயி ஒக்காறனும்? கணவன் மனைவி இருவருஞ் சேர்ந்து சிந்தியுங்க. இருபத்தி நாலு மணித்தியாளம் இருக்கு. ரெண்டு மணித்தியாலத்த மேலதிகமா எடுத்து ஒழையுங்க. முடிஞ்ச வரைக்கும் சிக்கனமா இருங்க. ஒவ்வொரு நாளும்! ஆமா ஒவ்வொரு நாளும் கணவன் மனைவி சேர்ந்து திட்டமிடுங்க. ரெண்டு வருடத்தல் ஒங்க பிரச்சின தீந்திடும். ஓங்க பிள்ளைகளும் ஓங்கள இயற்கையா கடைப்பிடிக்கத் தொடங்குவாங்க- ம்- தயாரா- இன்னிக்கே ஆரம்பியுங்க- ஓங்க வாழ்வின் வெற்றி நிச்சயம்-' இப்படிப் பேசிய புரவலரின் கால்களில் விழுந்து வணங்க வேண்டும் என்று எல்லாருமே நினைத்தார்கள்.

கணேசன் தம்பதியர் தரவளைக்குப் போய் புரவலரின் பேச்சைக் கேட்டு பத்து நாட்களாகிவிட்டன.

அன்று வெள்ளிக்கிழமை கணேசன் எழுந்திருக்க ஏழு மணியாகிவிட்டது.

'அடடே நேரம் ஆயிருச்சே' சுறுசுறுப்பாக எழுந்தான்.

'சிக்கிரம் எந்திரிச்சு மொகத்த கழுவிட்டு வாங்க, சரயம் ஊத்தி வச்சிருக்கேன்' என்று மீனா துரிதப்படுத்தினாள்.

இந்தா வந்துட்டோம்மா' என்று அதிகாலை எழுந்து குளித்துவிட்டு தன் முன்னே சுறுசுறுப்பாக இயங்குவதைப் பார்த்து கணேசன் ஒரு குழந்தையைப் போல ஓடினான்.

'சிந்திக்கும்போது தான் தெளிவு பிறக்கிறது என்ற கோட்பாட்டுக்கு இந்த பாமரத் தம்பதியர் ஒரு உதாரணம். அந்தப் புரவலர் மக்கள் செறிந்த தரவளைக் காற்றில் எத்தனை லாவகமாக அமிர்தத்தைக் கலந்தார். அது ஒரு தம்பதியரையாவது மாற்றியிருக்கிறதே! அடுத்த வீட்டு அக்காவுடன், கிரிசினா கூடையைச் சுமந்து ஓடிவந்தாள்.

'மீனா வாரியா'

'இந்தா வந்துட்டே கிரிசி' என்று கொழுந்துக் கூடையை லாவகமாக தன் முதுகில் சுமந்து தோழிகளைப் பின் தொடர்ந்தாள்.

'இந்நேரம். நீ வெளிநாட்டுக்குப் போயிருந்தா-' ம். நெனக்கவே பயமா இருக்கு. நாங் கும்மிட்ட சாமி காப்பாத்திரிச்சி'

'வெளிநாடு என்னா. இருக்கிற எடத்திலய நல்லா இருக்கலாமே'- அடுத்த வீட்டு அக்காள்.

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்த எங்கள் எஸ். கிருஷ்ணனைப் பற்றி

என். பாலசுந்தரம்

மறைந்த திருவாளர் எஸ். கிருஷ்ணன் அவர்கள் மலையகப் பகுதியில் பெருந்தோட்டத் துறையில் தாய்ப் பாடசாலையாக விளங்கும் லைன்ஸ் கல்லூரியில் ஆசிரியராக இருந்த போது அவரைப் பற்றி அறிந்து கொண்ட எனக்கு அவர் இப்பாடசாலைக்கு அதிபராக வந்தபோது நான் ஆசிரியராகக் கடமையாற்றியதால் மிக நெருக்கமாக அவருடன் சேர்ந்து கடமையாற்றிய சந்தர்ப்பம் கிடக்கப் பெற்றது.



உருவத்தில் சற்ற பெரியவராக இருந்த அதே நேரம் அவரது உணர்வுகளும் எமது சமுகத்தைப் பற்றியே இருந்தது. அவரது சிறப்பம்சமாக இருந்தது. ஆசிரியராக கடமை புரிந்த போது தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்கள், மாணவருக்கே உரிய அம்சங்கள் அனைத்தும் கொண்டவர்களாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் செயற்பட்டார். தன்னுடைய வகுப்பு மாணவர்கள் அவரிடம் கற்கும் ஏனைய வகுப்பு மாணவர்கள் ஆகியோரின் பாடசாலை வரவு ஏனைய மாணவர்களை விட அதிகமாக இருந்துள்ளது. அவரது சேவை உணர்வுகளுக்கு எடுத்துக் காட்டாக அமைந்தது. அதே போல பாட அடைவு மட்டம் அதிகரிக்கவும் உறுதியாக இருந்தார். வகுப்பறையில் மட்டுமல்ல ஏனைய அம்சங்களிலும் மாணவர் சிறந்து விளங்கவேண்டுமென்ற ஆர்வத்தில் விளையாட்டுத்துறைக்கும், கலை துறைக்கும் முக்கியத்துவம் கொடுத்து ஊக்குவித்ததையும் மறக்கவே முடியாது.

அதிபராவிருந்த போது பாடசாலையின் ஒவ்வொரு பிரிவு அபிவிருத்தியிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார். ஆசிரியர், மாணவர்களுடன் சிறிது கண்டிப்பாக இருந்த அதே நேரத்தில் மனித நேயத்தை மறந்துவிடவில்லை என்பது குறிப்பிடத்தகதாகும். பிறரின் பாதக விமர்சங்கபை பொருட்படுத்தாது பாடசாலை அபிவிருத்தியில் முழு அக்கறையும் எடுத்துக் கொண்டு உழைத்தார். க.பொ.த (உ/த) விஞ்ஞானப் பிரிவை ஒரு தொண்டர் ஆசிரியரை நியமித்து ஆரம்பித்த பெருமை இவரைச் சார்ந்ததாகும். படிப்படியாக விஞ்ஞான ஆய்வுகூட அபிவிருத்திக்கு, சில வகுப்பறைகளை ஆய்வுகூடமாக மாற்றியமைக்க பல நல்லுள்ளங்கள் கொனண்டோரின் உதவியை நாடி பெற்றொரின் ஆதரவுடன் செய்து முடித்தார். இதே வேளை வேறொருவரிடமாவது தனித்திறமைகள் இருப்பதை அறிந்தால் அதற்கு ஊக்கமளித்து அவரது திறன்கள் பிறருக்கும் பயனுள்ளதாக அமைத்துக் கொள்வதில் திறமை வாய்ந்தவர். அன்றைய காலக்கட்டத்தில் பாடசாலையில் மேற்கத்திய வாத்திய இசைக்கருவிகள் தொகுதி இல்லை . ஆனால்

அமரர் சி. கிருஷ்ணன் 1940ஆம் ஆண்டு இராகலை பெருந்தோட்டப் பகுதியில் பிறந்தவர். இவர் பயிற்சிபெற்ற கனித ஆசிரியராக பணியாற்றத் தொடங்கி மஸ்கெலியா, ஹட்டன், பொகவந்தலாவ, நாவலப்பிட்டி, இராகலை பாடசாலைகளில் ஆசிரியராகவும் புனித ஜோசப் கல்லூரி - மஸ்கெலியா, கதிரேசன் கல்லூரி - நாவலப்பிட்டி, ஹட்டன் பொஸ்கோ கல்லூரி, ஹைலணன்ட்ஸ் கல்லூரி, இராகலை தமிழ் வித்தியாலயம் என்பவைகளில் அதிபராகவும் பெரும் சேவையாற்றினார். 1960களில் முகிழ்த்த மலையக இளைஞர் முன்னணியின் தீவிர உறுப்பினராக செயலாற்றி பின்னர் செயலாளராக தெரிவுசெய்யப்பட்டு சிறந்த சமுகப்பணியும் ஆற்றியவர். பேச்சாளர், எழுத்தாளர், சிறந்த அமைப்பாளர், சிறந்த முகாமையாளர், வேறுபாடுகள் களைந்த சமுகப்பணியாளர் என பன்முக ஆளுமைகொண்ட கிருஷ்ணன் அதிபர் பணியிலிருந்து ஓய்வுபெற்றபின் மலையக மாணவர்களுக்காக ஹைலெவல் சர்வதேச பாடசாலையை ஸ்தாபித்து அதனை விருத்தி செய்தனூடாக சிறந்த சுயமுயற்சியாளர் எனும் பெருமையையும் பெற்றவர். அவருடன் ஹைலன்ட்ஸ் கல்லூரியில் பணியாற்றிய பாலசுந்தரம் தன் நினைவலைகளை இங்கு பகிர்ந்துக்கொள்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியாவது இசைக்குழுவை ஏற்படுத்த எண்ணி செயலில் இறங்கிவிட்டார். ஆனால் பெற்றோர் நலன்விரும்பிகள் உதவியுடன் பாடசாலை விளையாட்டுப் போட்டியை முடித்தவுடனேயே மீண்டும் அவர்களின் உதவி பெறுவது கஷ்டம் என்று கூறியபோதும் அவர் உடனே இத்திட்டத்தை ஆரம்பித்து நாடகம் ஒன்றை பாடசாலையில் மேடையேற்ற தீர்மானித்து இப்பாடசாலை பழைய மாணவனும், நாடகத் துறையில் சிறந்து விளங்கியவருமான திரு. ஆ. முத்தையா அவர்களின் நாடகத்தை ஏற்பாடு செய்தார். ஆரம்பத்தில் சிறிது சங்கடப்பட்ட நாங்கள் அவர் எடுத்த முடிவுக்கு ஏற்ப எல்லாவித வேலைகளையும் பொறுப்பேற்று அனுமதி சீட்டுகளை விற்றோம். இதில் சேர்த்த பணத்தைக் கொண்டு பாடசாலை வாத்திய வாத்திய இசைக் கருவி தொகுதியொன்றை வாங்கியது வரலாற்று நிகழ்வாகும். இப்போது நவீனமயமாக்கிய இசைக்கருவிகள் கொண்டு இசைத்தாலும் பேண்டு இசைக்கும் போது கிருஷ்ணன் அவர்களை நிச்சயமாக எங்கள் உள்ளங்களின் நினைவுப் படுத்திக் கொண்டே இருக்கிறது.

இது மாத்திரமல்ல பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியொன்றில் (Sports meet) கிரிக்கெட் போட்டியும் வைக்க வேண்டும் என்று தீர்மானித்தார். எங்கள் எல்லோருக்கும் அது ஆச்சரியமாகவும் நடைபெறாத ஒன்றாகவும் தோன்றியது. வழமை போல் அவரது தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 5 ஓவர்கள் கொண்ட இறுதி கிரிக்கெட் இல்ல மெய்வல்லுநர் போட்டியொன்று மைதானத்தில் நடந்தது. பார்வையாளர்கள் மிக மகிழ்ச்சியுடன் அதனை இரசித்தனர். இது எங்களை மிகவும் ஆச்சரியப்படுத்தியதோடு திரு. கிருஷ்ணன் அவர்களின் எந்த திட்டமும் வெற்றியளிக்கும் என்ற எண்ணத்தையும் எங்களுக்கு ஏற்படுத்தியது.

அது மாத்திரமல்ல எந்த நிகழ்வொன்றாலும் அதற்க ஒத்திகை பார்க்கின்ற வழக்கத்தை அவரிடம் இருந்துதான் நாங்கள் கற்றுக் கொண்டோம். ஒரு முறை அவர் ஓரிடத்தில் உள்ள கல்லை எடுத்து இன்னொரு இடத்தில் வைக்க வேண்டுமென்றாலும் அதற்கு ஒத்திகை பார்க்க வேண்டும் என்றார். விளையாட்டுப் போட்டி ஆரம்ப, முடிவு அம்சங்கள் கலை நிகழ்வுகள் அனைத்தும் இவ்வாறு ஒத்திகை பார்க்கப்பட்டன.

பாடசாலையில் மாணவ தலைவர் விடயத்தில் புதிய பாணியொன்றை இவரே ஏற்படுத்தினார். பாடசாலை முடிந்ததும் மாணவதலைவர்கள் அலுவலகத்தின் முன் ஒன்று கூடி அவர்களின் கடமைகளை முடித்து விட்டதாக அறிவித்துவிட்டு இறுதியில் 'சலூட்' நிகழ்வுகள் நடந்தாலும் அது பாடசாலை அன்னைக்கு செலுத்தும் மனம் நிறைந்த மரியாதை என்றே கூறுவார்.

இவ்வாறு பல வழிகளிலும் சாதனை புரியம் அளவிற்கு வேலை செய்த இவர் தன்னிடம் மேலும் பல திறமைகளைக் கொண்டிருந்தார். அவர் சிறந்த உதைப்பந்தாட்ட வீரர், அதே போல கிரிக்கெட் வீரரும் கூட இதுமட்டுமல்லாமல் இவா கரப்பந்தாட்டத்திலும் வீரராக காணப்பட்டார் என்பது வழமையாக ஆசிரிய மாணவர்களிடையே தவணை இறுதியில் நடைபெறும் போட்டிகளின்போது தெரியவந்தது. அவரது தனித்திறமையால் பலமுறை கிரிக்கெட்டில் மாணவாகளை வென்றது இன்றும் மனதைவிட்டு அகலவில்லை. அதுமாத்திரமல்ல இவர் சிறந்த மேசை பந்தாட்ட வீரரும் ஆவார்.

அரசியலைப் பொறுத்தமட்டில் இடதுசாரி கொள்கை உடைய இவர் கொள்கையை விட்டுக் கொடுக்காமல் பிரபல அரசில் பிரமுகரிடம் நேரடியாகவே 'உங்களக்கு எனது ஓட்டு இல்லை' என்ற கூறினார். அதிலும் கூட மாற்று இன அரசியல் பிரமுகரக்கு உதவியாக இருந்த காலத்தில் ஒரு முறை அவருடன் சண்டை இட்டு கோபித்து வந்தபின் அடுத்தநாள் காலை இவரது அலுவலகம் தேடி வந்து சந்தித்தார். அதன் வாயிலாக விஷேட சிபார்சில் ஆசிரிய நியமனம் பெற்ற சிலரும் இன்னும் எம் மத்தியில் கடமையாற்றுகின்றனர். இவ்வாறாக எந்த சந்தர்ப்பத்திலும் எவரிடமும் நமது சமூகத்தின் வளர்ச்சிக்காக சாதனை புரிந்தவராவார்.

சகலருக்கும் சந்தாப்பம் கொடுத்து அவர்குளக்க ஊக்கம் அளிப்பதன் மூலம் மாணவர் முன்னேற்றத்திற்கு பேருதவியாக இருந்தவர் ஆவார். அவரது பல சிந்தனைகள் நடைமுறைகள் என்னைப் போன்ற பலருக்கு நல்ல வழிக்காட்டியாக அமைந்தன. என்பதை எள்ளளவும் தடுமாற்றமின்றி கூறுகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும்
# நான்கு சாகித்திய விழாக்களும்

## தமிழ் சாகித்திய விழா
## ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய சபா
## கஜலச்சுமி மண்டபம் ஹட்டன்
## 2000 செப்டெம்பர் 23,24

மத்திய மாகாணத்தின் இந்துக் கலாசார அமைச்சுப் பொறுப்பை எங்கள் மதிப்புக்குரிய கௌரவ **அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன்** அவர்கள் பொறுப்பேற்று கொண்டதன் பிறகு 1999 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் என்னை இந்துக் கலாசார இணைப்பதிகாரியாக நியமித்தார்கள். ஒரு பாடசாலை அதிபராக இருந்த எனக்கு இந்து மதத்தின்பால் இருந்த பற்றுதல் இதற்கு வழிகோலியது எனலாம். இந்துக் கலாசார இணைப்பதிகாரியாக பதவியேற்ற பிறகு இந்து ஆலயங்கள், மன்றங்கள் அறநெறிப்பாடசாலைகள் போன்றவைகளைப் பதிவு செய்தல் ஆங்காங்கு ஏற்படும் பிணக்குகளை தீர்க்க உதவுதல் இந்து கலாசார அமைச்சிற்கு ஒதுக்கப்படும் நிதியினூடாக கோயில்களுக்கு பொருட்கள் வழங்குதல், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு செயலமர்வுகள், அறநெறிப் பாடசாலைகளுக்கு புத்தகங்கள் வழங்குதல் போன்றவைகளை எங்களது திணைக்களத்தின் மூலம் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

இத்தருணத்தில் தான் சாகித்திய விழாவைப் பற்றிய எண்ணக்கரு எமது அமைச்சின் மத்தியிலே தோன்றியது. கௌரவ அமைச்சர் அவர்கள் என்னிடம் 2000ம் ஆண்டிற்கான சாகித்திய விழாவின் பொறுப்பினை ஒப்படைத்தார்கள். இதன்படி **2000ம் ஆண்டிற்கான சாகித்திய விழா ஹட்டன் மாநகரத்திலும், 2001ம் ஆண்டிற்கான சாகித்திய விழா மாத்தளை நகரிலும், 2002ம் ஆண்டிற்கான சாகித்திய விழா கண்டி மாநகரிலும் 2003ம் ஆண்டிற்கான சாகித்திய விழா நுவரெலியா நகரிலும்** நடாத்தப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி 2000ம் ஆண்டிற்கான சாகித்திய விழாவிற்கான மத்திய குழுக்கூட்டம் ஹட்டன் நகரசபை கேட்போர் கூடத்திலே கௌரவ அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் அவர்களின் தலைமையிலே நடந்தது. இக்கூட்டத்தின் போது விழா செயற்குழு மற்றும் ஒன்பது உபகுழுக்கள் நியமிக்கப்பட்டன. விழாக்குழு தலைவராக கௌரவ வெள்ளையன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவரின் தலைமையிலே விழா ஏற்பாடுகள் நடைபெற்றன.

விழாவிற்கான கருப்பொருளாக பாரதியின் **'சேமமுற வேண்டுமெனின் தெருவெலாம் தமிழோசை முழங்கச் செய்வீர்'** என்ற அடி எடுக்கப்பட்டது. விழாவிற்காக செப்டெம்பர் 23, 24ம் திகதிகள் தெரிவு செய்யப்பட்டது. விழாக்கள் இரு நாட்களும் நான்கு அமர்வுகளாக திட்டமிடப்பட்டது. முதலாம் நாள் மாணவர்களின் ஊர்வலமும் மேடை நிகழ்ச்சிகளும் நடைபெற வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இரண்டாம் நாள் பொது மக்களின் ஊர்வலமும் நிகழ்ச்சிகளும் நடைபெற வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

இவ்விழாவிலே **தளிர் அரங்கம், விவேகி அரங்கம், தலைவர் தொண்டமான் அரங்கம், நக்கீரர் அரங்கம்** என நான்கு அரங்கங்கள் பெயரிடப்பட்டன. இரண்டு நாள் ஊர்வலங்களில் மலையகப் பாரம்பரிய நிகழ்ச்சிகள் இடம்பெறச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பல கூட்டங்கள், அமைச்சிலும், ஹட்டனிலும் நடைபெற்றன. ஹட்டன் சீடா வள நிலையத்தில் மேலாளர் சபை கூட்டம் நடைபெற்றது. இச் சாகித்திய விழாவிற்காக இந்தியாவிலிருந்து ஐவர் அடங்கிய சொலமன் பாப்பையா அவர்களின் குழு விசேடமாக தருவிக்கப்பட்டது. முதல் அமர்வுக்கு அதிதிகளாக நகரசபை முதல்வர் எம்.ஏ.எஸ் அபுசாலி அவர்களும், நகரசபை உறுப்பினர்களும், மாநகரசபை உறுப்பினர்களும் அழைக்கப்பட்டனர். இரண்டாம் அமர்விலே மத்திய மாகாண ஆளுனர் அவர்கள் கலந்து கொண்டார் மூன்றாம் நாள் அமர்விலே ஆளுனர் தசநாயக்கா அவர்களும் இரண்டாம் நாள் முதலாம் நாள் அமர்வில் இந்திய உதவித் தூதுவர் மாண்பு மிகு அச்சல் கே மல்ஹோத்ரா அவர்களும் மறைந்த தலைவரின் பேத்தியான அனுராதா அவர்களும் கலந்து கொண்டார்கள். இறுதி அரங்கத்திலே மாண்பு மிகு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அவர்கள் கலந்து கொண்டார்கள்

சாகித்திய விழா ஆரம்பத்தில் ஒகஸ்ட் மாதம் நடாத்த தீர்மானித்தாலும் நாட்டில் யுத்தம் தீவிர நிலையை எட்டியதால் செப்டெம்பர் 23, 24ம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டது. விழாவிற்கான முன்னேற்பாடுகள் மிகவும் துரிதமாக நடைபெற்றன. அமைச்சர் அவர்களின் முன்னால் பிரத்தியேக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளரும் எனது நெருங்கிய நண்பருமான எல்.விஜயநாதன் அவர்கள் மிகவும் உறுதுணையாக இருந்து திட்டமிட்டு செயற்படுத்துவதிலும் எனக்கு ஆலோசனையும் உதவியையும் வழங்கினார்கள் சாகித்திய விழா எவ்வாறு அமையப்போகின்றது என்பது எனக்கு புதிராகவே இருந்தது. பாடசாலை மட்டங்களில் பல விழாக்களை வெற்றிகரமாக நடத்தியிருந்தாலும் தேசிய அளவிலே ஒரு விழாவை முதற் தடவையாக ஒழுங்கு படுத்த நேர்ந்ததால் ஒரு வித தயக்கம் என்னுள் இருந்தது. அமைச்சில் பணி புரியாவிட்டாலும் நண்பர் கே.சுந்தரமூர்த்தி எனக்கு பல்வேறு வழிகளில் உதவினார். குறிப்பாக அழைப்பிதழ் பட்ச் போன்றவைகள் அவரின் எண்ணக்கருவாகவே இருந்தது. ஹட்டன் ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் செயற்குழு கோயில் பரிபாலன சபை எங்களுக்கு மிகவும் ஒத்துழைப்பு வழங்கியது. ஹட்டன் கல்வி வலயத்தைச் சார்ந்த கல்வி சார் உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்கள் எமக்கு முழு ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

ஹட்டன் மாநகரம் முழுவதும் விமர்சையாக அலங்கரிக்கப்பட்டது. ஹட்டன் நகரம் முழுதும் இதுவரை கண்டிராத அளவிற்கு வாழை மரங்களால் தோரணங்கள் கட்டப்பட்டன. விழாவிற்கு முதல் நாள் வருகை தந்த எனது முன்னால் அதிபரும், தோட்ட உட்கட்டமைப்பின் பணிப்பாளருமான சி.நவரத்தினம் அவர்கள் நகரம் இவ்வாறு அலங்கரிக்கப்பட்டது நிகழ்ச்சிக்கு முதல் வெற்றி என்று கூறினார். விழாவிற்கு வருகை தரும் விருந்தினருக்காக பல ஹோட்டல்கள் முன்பதிவு செய்யப்பட்டன. விழாவை நாடெங்கும் அறியச் செய்ய சூரியன் எப்.எம் அறிவிப்பாளர்கள், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன அறிவிப்பாளர்கள், இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள், பத்திரிகை நிருபர்கள் விசேட நிகழ்ச்சிகளை அரங்கேற்ற வந்த பல்கலைகழக விரிவுரையாளர்கள், அமைச்சு அதிகாரிகள், விருது பெற வந்திருந்தோர் ஆகியோர் விழா ஆரம்பிப்பதற்கு முதல் நாளே அங்கே வருகை தந்தார்கள்.

செப்டெம்பர் 23ம் திகதி காலை ஹட்டன் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய முன்வாயிலில் கௌரவ அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் அவர்கள் சிதறு தேங்காய் உடைத்து மாணவர்களின் ஊர்வலத்தை அரம்பித்து வைத்தார். சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இவ் ஊர்வலத்தில் பங்கு கொண்டார்கள். கோயில் பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் மேளவாத்திய முழக்கத்தோடு ஊர்வலம் ஆரம்பித்தது. அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம். பாலித எல்கடுவ மற்றும் ஏனைய உயர் அதிகாரிகளும் நகரப் பிரமுகர்களும் ஹட்டன் நகர சபை முதல்வரும் இதில் பங்கு கொண்டார்கள்.

மண்டபத்திற்குள் நுழைய முடியாமல் மாணவர்களும் மக்களும் நிலைகுலைந்தார்கள். தொலைகாட்சி வாயிலாக விழா மண்டபத்தைச் சுற்றிலும் நிகழ்ச்சிகள் பார்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பல்வேறு கண்காட்சிகள் மண்டபத்திற்கு வெளியே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குறிப்பாக உலகத்தமிழர் ஆவணக் கண்காட்சி புத்தகக் கண்காட்சி அமைச்சின் சிறுகைத்தொழில் கண்காட்சி புடவைக்கைத்தொழில் கண்காட்சி, சுற்றுலாத்துறை கண்காட்சி போன்றவைகள் இடம்பெற்றன.

ஹட்டன் மாணிக்கப் பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபம் வரலாறு காணாத அளவுக்கு மக்கள் திரளை கண்டது எனக் கூறலாம்.

இரண்டாம் நாள் பொது மக்கள் மற்றும் ஸ்ரீ பாத கல்வியற் கல்லூரி, யதன்சைட் ஆசிரியர் கலாசாலை போன்றவற்றைச் சேர்ந்த ஆசிரியர் மாணவர் மாணவியரும் ஊர்வலத்திலே கலந்து கொண்டார்கள். மலையக மக்களின் பாரம்பரிய கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலே இங்கு ஊர்வலம் இடம்பெற்றது. இரு நாட்களும் பேராசிரியர் சொலமன் பாப்பையா அவர்களின் பட்டி மன்றம் சிறப்பாக நடைபெற்றது. நம்நாட்டு கலைஞர்களும் பாப்பையா குழுவினரோடு இணைந்து பட்டி மன்றத்திலே பங்கு கொண்டனர்.

இவ்விழாவின் சிறப்பான நிகழ்வாக அமைவது விருது வழங்கும் நிகழ்வாகும். **சாதனையாளர்கள் 11 பேருக்கும், கலைஞர்கள் 11 பேருக்கும், நூல்கள் 6 பேருக்கும், என 28 விருதுகள்** கொடுத்து அனைத்து கலைஞர்களையும் கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவிற்காக விழா மலர் ஒன்றும் அமரர் தொண்டமான் அவர்கள் மறைந்து ஓராண்டு பூர்த்தியானதை முன்னிட்டு நினைவு சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. தொண்டமான் அரங்க ஆரம்பத்தை இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட கௌரவ தலைவர் அவர்களின் படத்தை அவரின் பேத்தி அனுராதா அவர்கள் திரை நீக்கம் செய்து ஆரம்பித்து வைத்தது குறிப்பிடத்தக்கதொன்றாகும். 2000 ம் ஆண்டு விழா சிறப்பாக நடந்து முடிந்தாலும் அழைப்பிதழ்கள் குறிப்பிட்ட காலபகுதியில் அனைவருக்கும் அனுப்பப்படவில்லை என்ற ஒரு பெரும் குறை இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் சாகித்திய விழா

ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய சபா

கஜலச்சுமி மண்டபம் - ஹட்டன்

2000 செப்டெம்பர் 23,24

## விருது பெற்றோர் விபரம்

### ✳ சாதனையாளர்கள்

01. கலாநிதி பி.இராமானுஜம்
02. திரு. காத்தான் மாரிமுத்து
03. திரு. முனியாண்டி நாகராஜா ( எம்.என்.ராஜா )
04. திரு. பி. முத்தையா
05. பேராசிரியர் எம். எஸ். மூக்கையா
06. பேராசிரியர் எம். சின்னத்தம்பி
07. திரு. எஸ். தேசோமயானந்தம்
08. திரு. டி. ஈஸ்வரன்
09. திரு. ஆர். ஆர். ராஜன்
10. திரு. முத்தையா முரளிதரன்
11. திரு. எம். மனோகரன்

### ✳ கலைஞர்கள்

01. திரு. எ.பி.வி. கோமஸ்
02. திரு. துரைசாமி நடராஜா
03. திரு பி.லோகேஸ்வரன்
04. திரு. வெள்ளையன் முனுசாமி
05. திரு. செல்லமுத்து
06. திருமதி வசந்தகுமாரி சூரியகுமார்
07. திரு பெருமாள் ஆறுமுகம் (மலரன்பன்)
08. திரு. முத்துசாமி மகாலிங்கம்
09. அல்ஹாஜ் எம்.எச்.எம். ஹலீம்தீன்
10. திரு. அலோசியஸ் ஸ்டீவன்
11. திருமதி. ஸர்தாஸன்

### ✳ எழுத்தாளர்கள்

01. திரு. அந்தனி ஜீவா
02. திரு எஸ்.கே.வெள்ளைசாமி
03. திரு இராமையா சடகோபன்
04. திருமதி. ரூபராணி ஜோசப்
05. டாக்டர் கனகசபை அருணாசலம்
06. செல்வி அம்பிகை வேல்முருகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சாகித்திய விழா
# மாத்தளை ஸ்ரீமுத்துமாரியம்மன்
# திருமண மண்டபம்
# 2001 செப்டெம்பர் 15, 16

2001ம் ஆண்டுக்கான சாகித்திய விழா ஏற்கனவே திட்டமிட்டபடி மாத்தளையில் நடாத்த சகல ஏற்பாடுகளும் முன்னதாகவே செய்யப்பட்டது. மாத்தளை சாகித்திய விழாவிற்கான முதலாவது பொதுக்குழுக் கூட்டம் கௌரவ தலைவர் மாகாண சபை உறுப்பினர் கௌரவ எஸ். சிவஞானம் அவர்களின் தலைமையில் மாத்தளையில் நடைபெற்றது. இங்கு பெருந்தொகையானோர் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை வழங்கியிருந்தார்கள். மாத்தளை மாவட்டத்தில் கலைஞர்கள் பெருவாரியாக வாழும் மாவட்டம் என்றபடியால் சாகித்திய விழாவிற்கு அனுகூலமாகவும், சில பொழுது பிரதிகூலமாகவும் அமைந்தது எனலாம்.

செயற்குழு தலைவர் கௌரவ சிவஞானம் அவர்களின் மக்கள் செல்வாக்கையும் அயரா உழைப்பையும், கடமையுணர்வையும் கண்டு நான் வியந்து நின்றதுண்டு. ஆனால் இறுதிக் கட்டத்திலும் சில பேருக்கு விருதுகள் வழங்க வேண்டும், என்று இவர் கோரிக்கையை முன்வைத்து விருதுகளின் எண்ணிக்கையை 44 காக உயர்த்திய போது சற்று கலக்கமாகவும் இருந்தது.

சாகித்திய விழாவின் பெருவாரியான தமிழ் மக்கள் முதல் நாள் ஊர்வலத்திலே கலந்து கொண்டார்கள். என்னைப் பொருத்தவரை கல்வி சார் உத்தியோகத்தர்களின் பங்கும் மாணவர்களின் பங்கும் குறைவாகவே இருந்ததும் அவதானிக்ககூடியதாக இருந்தது. நாட்டில் யுத்தநிலைமை உச்சகட்டத்தை எட்டிக் கொண்டிருந்த போது, இவ்விழாவிற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. தமிழர்கள் மனதிலிருந்த ஒரு வகை வேதனையுணர்வு இவ்விழாவிற்கான கருப்பொருளாக **பாரதியின் 'சரிநிகர் சமானமாக வாழ்வோம்'** என்ற அடியினை தேர்வு செய்ய வாய்ப்பளித்தது. விழாவிற்காக தமிழகத்திலிருந்து விசேட அதிதியாக கலாநிதி வலம்புரி ஜோன் அவர்கள் கலந்து கொள்ள அழைக்கப்பட்டார்கள். விழா செப்டெம்பர் 15ம் 16ம் திகதிகளில் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்திலே நடைபெற்றது.

முதல் நாள் ஊர்வலத்திலே கௌரவ முதலமைச்சர், உதவி இந்திய ஸ்தானிகர் உட்பட அரசியல்வாதிகள், ஆலயபரிபாலன சபையினர், அறநெறிப்பாடசாலை மாணவர் மாணவியரும் கலந்து கொண்டனர். உலகத் தமிழர் ஆவணக் காப்பகம் , புத்தகக் கண்காட்சி, ஓவியக் கண்காட்சி, புடவைக் கைத்தொழில் திணைக்கள சிறுகைத்தொழில் திணைக்கள கண்காட்சிகள் என்பன விமர்சையாக நடைபெற்றன.

இவ்விழாவில் **அமரர் துரை விஸ்வநாதன் அரங்கம், அமரர் இரா சிவலிங்கம் அரங்கம், அமரர் திருச்செந்தூரன் அரங்கம், அமரர் கந்தசாமி குமாரசுவாமி அரங்கம்** என நான்கு அரங்கங்கள் இடம்பெற்றன.

இவ்விழாவின் சிறப்பான நிகழ்வாக அமைந்தது விருது வழங்கும் நிகழ்வாகும். **சாதனையாளர்கள் 16 பேருக்கும், கலைஞர்கள் 17 பேருக்கும், நூல்கள் 5 பேருக்கும் விசேட விருது 6 பேருக்கும்** என **44 விருதுகள்** கொடுத்து அனைத்து கலைஞர்களையும் கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக இவ்விழாவின் வெற்றியை நினைக்கும் போது என் மனத்திற்குள் கௌரவ அண்ணன் சிவஞானம், மாத்தளை நகரசபை முதல்வர் மற்றும் நண்பர் பீர் முகமது, நண்பர் சசிகரன், நண்பர் திரு சுந்தரேஸ்வரன், நண்பர் மகாதேவன் ஆகியோர் வந்து போகின்றார்கள்.

இவ் விழாவின் வெற்றி மாத்தளை வாழ் தமிழ் பேசும் மக்களின் வெற்றி என்றே கருதுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் சாகித்திய விழா
## மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் திருமண மண்டபம்
## 2001 செப்டெம்பர் 15, 16

### விருது பெற்றோர் விபரம்

✳ **சாதனையாளர்கள்**

01. விரிவுரையாளர் எஸ்.சந்திரசேகரன்
02. திரு. சி. நவரத்தினம்
03. விரிவுரையாளர் சிவகணேசன்
04. வைத்தியர் ஈ.எஸ். மகேந்திரராஜ்
05. திரு. ராஜீ. சிவராமன்
06. திரு. ஏ. பீ. கனபதிபிள்ளை
07. திரு. பீ. இராதாகிருஷ்னன்
08. திரு. எஸ். சந்திரசேகரன்
09. திரு. எம். கருப்பையா ஜே.பீ.
10. திரு. எ.எஸ்.எம். வசீர்
11. திரு. வாமதேவன்
12. திரு. கே. ஏ. தங்கராஜா
13. திரு. எஸ். கனேசன்
14. திரு. எஸ். விஸ்வநாதன்
15. திரு கே. மயில்வாகணம்
16. பிரீடோ நிறுவனம்

✳ **கலைஞர்கள்**

01. திரு. சின்னையா சிவலிங்கம்
02. திரு. தேவதாசன் ஜெயசிங்கம்
03. மாத்தளை ரோகினி
04. திரு. ஆறுமுகம்
05. திரு. எஸ். சந்தனம்
06. திரு. கோபால்
07. திரு. எண்டனி செபஸ்டியன்
08. திரு. கே. தங்கராஜா
09. திரு. நூரானியா ஹசன்
10. திரு. ரசாக்
11. திரு. சவரிமுத்து பெனடிக்
12. திரு. மாரிமுத்து சிவகுமார்
13. திரு. தனேந்திரன்
14. திரு. மடவளை கல்லீ
15. திரு. டி. விஜயகுமார்
16. திரு. வி. பாலகிருஷ்னன்
17. திரு. செல்வமணி

✳ **எழுத்தாளர்கள்**

01. திரு நல்லையா ( சாரல் நாடன் )
02. திரு எஸ். எம். தர்மலிங்கம் ( பூண்டுலோயா தாமு )
03. செல்வி ரூபராணி ஜோசப்
04. திரு எஸ். தியாகசேகரன்

✳ **சிறப்பு விருதுகள்**

01. திரு வலம்புரி ஜோன்
02. திருமதி கமலா பீரிஸ்
03. திரு ஈ. எச். எம். பீ. எல்கடுவ
04. திரு எச். எச். விக்ரமசிங்க
05. சீடா நிறுவனம்
06. வைத்தியர் ராஜகருணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சாகித்திய விழா
# கண்டி திரித்துவ கல்லூரி
# 2002 நவம்பர் 23 , 24

திட்டமிட்டதுபோல் எமது அமைச்சின் மூன்றாவது சாகித்திய விழாவை எமது கௌரவ அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் அவர்களின் பணிப்புரையின் பேரில் மலையகத்தின் தலைநகராம் கண்டியில் நவம்பர் மாதம் 23ம், 24ம் திகதிகளில் நடாத்த தீர்மானிக்கப்பட்டது. இவ்விரு நாட்களும் தமிழ் பேசும் மக்களால் முழு கண்டி நகரமுமே ஆளப்பட்டது என்றே கூறவேண்டும்.

சாகித்திய விழா செயற்குழு தலைவராக கௌரவ அண்ணன் மதியுகராஜா அவர்கள் அமைந்தது இவ்விழாவின் வெற்றிக்கு முக்கிய காரணம் எனலாம். நாட்டில் அமைதிப்பேச்சுக்கள் ஆரம்பமாகிய காலக்கட்டத்திலே சில தீய சக்திகள் அதை குழப்பவும் முயற்சித்துக் கொண்டிருந்தன. எனவே எங்களது மத்திய குழு எமது சாகித்திய விழாவிற்கான கருப்பொருளாக **'சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத் துலங்குக வையகமே'** என்ற பாரதியின் பாடல் அடியினை எடுத்துக் கொண்டது.

நவம்பர் 23ம், 24ம் திகதிகளில் கண்டி திரித்துவ கல்லூரி மண்டபத்திலே இராமானுஜர் அரங்கம், பி.டி.இராஜன் அரங்கம், அறிஞர் சித்திலெப்பை அரங்கம், ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கம் அரங்கம் என நான்கு அரங்கங்களாக இவ்விழா விழாக்கோலம் கண்டது. இச் சாகித்தியவிழாவின் மத்திய குழு பொருளாலராக கௌரவ மாநகரசபை உறுப்பினரும் எனது நண்பருமாகிய ஆர். சரவணன் அவர்கள் அமைந்தது விழாவின் வெற்றிக்கு முக்கிய காரணமாகும். இருப்பினும் கண்டி நகர் முழுவதும் வாழை மரங்களை நாட்டி முழ நகரமுமே தமிழ் மணம் பரப்ப காரணமாக இருந்தவர் திரு. முத்துக்குமார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவின் சிறப்பான நிகழ்வாக அமைந்தது விருது வழங்கும் நிகழ்வாகும். **சாதனையாளர்கள்** 12 பேருக்கும், **கலைஞர்கள்** 7 பேருக்கும், **நூல்கள்** 5 பேருக்கும் என **24 விருதுகள்** கொடுத்து அனைத்து கலைஞர்களையும் கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

சாகித்திய விழாவின் முதல்நாள் நிகழ்வாக கட்டுக்களை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்திலே சிறப்பான பூஜை வழிபாடுகளுடன் விழாவின் சிகரமாக அமைந்த ஊர்வலம் ஆரம்பமாகியது. முழுக் கண்டி நகரமுமே வாழை மரங்களால் அலங்கரிக்கப்பட்டு, விழாக்கோலம் பூண்டிருந்தது. வரலாற்றில் முதல் தடவையாக கண்டி நகரம் முழுவதுமே இவ்வாறு விழாக்கோலம் பூண்டு தமிழ் மணம் கமழ்ந்தது இதுவே முதல் தடவை என்றால் மிகையாகாது. காலையில் ஆரம்பித்த ஊர்வலம் திரித்துவ கல்லூரி மண்டபத்தை அடைவதற்கு சுமார் 2 மணித்தியாலங்கள் எடுத்தன. முழுக் கண்டி நகரத்திலுமே போக்குவரத்து ஸ்தம்பித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மாணவர்கள், அறநெறிப்பாடசாலை மாணவர்கள், மன்றங்கள், கோயில்கள் முதலான பல்வேறு இடங்களில் இருந்தும் கலை நிகழ்ச்சிகள் வாத்திய இசை, ஊர்திகள் பெரியோர்கள் போல் மாறுவேடம் பூண்டோர் போன்ற பல நிகழ்ச்சிகள் உள்ளடக்கப்பட்டு **தமிழ்த் தாயின்** வர்ணப்படத்தை ஏந்திய யானை கம்பீரமாக முன்னால் வர ஊர்வலம் கோலாகலமாக திரித்துவ கல்லூரியை வந்தடைந்தமை அனைவரின் மனத்தையும் கொள்ளை கொண்டது.

இவ்விழாவிலே புத்தகம், ஓவியம், ஆவணக்காப்பகம், ஆடைகள் மற்றும் சிறு கைத்தொழில் திணைக்களங்கள், சமூகசேவைகள் மற்றும் கால்நடை அபிவிருத்தி திணைக்களங்கள் முதலியவற்றின் கண்காட்சி கூடங்கள் மிகச்சிறப்பாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. மற்றும் பாடசாலை மாணவர்களிக்கிடையே ஓவியப்போட்டி நடாத்தி சிறந்த ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டதோடு, சிறந்த ஓவியங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

முதலாம் நாள் நிகழ்விலே மத்திய மாகாண ஆளுனர் கௌரவ மொனண்டி கோபல்லாவ அவர்களும், பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கெஹலிய ரம்புக்வெல்ல அவர்களும் பிரதம அதிதிகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர். மற்றும் அமைச்சர்கள், பிரதித் தலைவர் உள்ளிட்ட மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் மத்திய மாகாண எதிர் கட்சித் தலைவர், கண்டி உதவி இந்தியத் தூதுவர், பேராசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டு இவ்விழாவை சிறப்பித்தனர்.

இரண்டாம் நாள் நிகழ்விலே பிரதம அதிதிகளாக கௌரவ அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களும், கௌரவ அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம்.எச்.ஏ.ஹலீம், கௌரவ சரத் சிக்குராஜபதி மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் வி.புத்திரசிகாமணி ஆகியோரும் மற்றும் கௌரவ அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க, கௌரவ பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன், கண்டி மாநகர சபை கௌரவ உறுப்பினர்கள் ஆகிய உள்ளிட்ட அனைவரும் கலந்து விழாவை சிறப்பித்தார்கள்.

இவ்விழாவிலே பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் பாரம்பரிய கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும் விழாவை மேலும் மெருகூட்டியது. ஆகவே ஒட்டுமொத்தமாக நோக்கும் பொழுது கண்டி மாநகரிலே நடைபெற்ற தமிழ் சாகித்திய விழா கண்டி தமிழ் மக்களிடையே ஒரு வரலாற்று பதிவினை ஏற்படுத்தியது என்பதில் ஐயமில்லை. இவ்விழா சிறப்புற என்னோடு உள்நின்றுழைத்த அன்பர்கள் ஆதரவாளர்கள், நண்பர்கள், அமைச்சின் காரியாலய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

## தமிழ் சாகித்திய விழா
## கண்டி திரித்துவ கல்லூரி
## 2002 நவம்பர் 23, 24

### விருது பெற்றோர் விபரம்

※ **சாதனையாளர்கள்**

01. பேராசிரியர் டபிள்யூ ஆர். பிரெகன்ரிச்
02. வைத்திய கலாநிதி விஜயரட்ணம் விஜயகுமாரன்
03. திரு. கந்தையா சாந்திகுமார்
04. திரு. கே.முருகேசு
05. திரு. கே. சுபாஸ்சந்திரபோஸ்
06. திரு. தை. தனராஜ்
07. ஜனாப் எம். வை. எம். முஸ்லிம்
08. திரு. சி. நடராஜசிவம்
09. வணக்கத்துக்குரிய பிதா போல்அந்தனி அலோசியஸ் கெஸ்பர்ஸ்
10. திரு. ஆர். மனோகரன்
11. ஜனாப் எம்.எஸ். குவால்டீன்
12. திரு. இ. மகேஸ்வரன்

※ **கலைஞர்கள்**

01. திரு. ராஜா ஜென்கின்ஸ்
02. திரு. என்.எஸ். சிவலிங்கம்
03. திரு. சந்தனம் சத்தியநாதன்
04. கலாபூஷனம் நவாலியூர் நாகன் செல்லத்துரை
05. ஜனாபா சித்தி பரீதா நெய்னா முகம்மது
06. செல்வி. கலைவாணி மாணிக்கம்
07. திரு. பொன் பூபாலன்

※ **எழுத்தாளர்கள்**

01. திரு. பெருமாள் ஆறுமுகம் (மலரன்பன்)
02. திரு. கருப்பையா மகாலிங்கம் (மொழிவரதன்)
03. மல்லிகை சி. குமார்
04. திரு. சு. முரளிதரன்
05. திருமதி. ஜே.பி.ஜேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் சாகித்திய விழா
## நுவரெலியா புதிய நகர சபை மண்டபம்
## 2003, ஒக்டோபர் 11,12ம் திகதிகளில்

2003ம் ஆண்டிற்கான தமிழ் சாகித்திய விழா ஏற்கனவே திட்டமிட்டபடி நுவரெலியாவில் நடாத்த கௌரவ அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் அவர்கள் தீர்மானித்ததற்கிணங்க, நுவரெலியா மாநகர சபை உறுப்பினர் கௌரவ ஆர். பாலகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் இவ்விழா நடைபெறுவதற்குரிய சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மூன்று சாகித்திய விழாவைக் கண்ட மலையகம், நான்காவதாக, மலைநாட்டின் இயற்கை எழில் கொஞ்சும் நகரமாகிய நுவரெலியாவில். விழாக்கோலம் காணுவது மனமகிழ்ச்சியைத் தருகின்றது. மலையக தமிழ் மக்கள் பெருவாரியாக செறிந்து வாழும் இந் நகரத்திலே இவ்வாறான விழா நடைபெறுவது அம் மக்களின் கலை கலாசார பண்பாட்டு அம்சங்களை வெளிக்கொணருவதற்கு சிறந்த களமாக அமைகின்றது என்றால் மிகையாகாது.

இவ்விழாவானது 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ம், 12ம் திகதிகளில் நுவரெலியா புதிய நகர சபை மண்டபத்திலே **விஜயரத்தின சிங்கம் அரங்கம், கிருஷ்ணன் அரங்கம், குறிஞ்சித் தென்னவன் அரங்கம், சௌமிய மூர்த்தி தொண்டமான் அரங்கம்** என நான்கு அரங்கங்களாக நடாத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விழாவிலே முதலாம் நாள் நிகழ்விலே பிரதம அதிதிகளாக பிரதி அமைச்சர் கௌரவ எம்.சிவலிங்கம் அவர்களும், மத்திய மாகாண சபை தலைவர் கௌரவ துரை மதியுகராஜா அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். விசேட அதிதிகளாக மத்திய மாகாண சபை கௌரவ உறுப்பினர்கள், நுவரெலியா மாநகர சபை மேயர் கௌரவ சந்தனலால் கருணாரத்ன அவர்களும், கௌரவ அமைச்சர் ஏ.எம்.எஸ்.எம். ஷாபி அவர்களும், மத்திய மாகாண சபை பிரதித் தலைவர் கௌரவ எம். சிவலிங்கம் அவர்களும், மற்றும் இராமகிருஷ்ணமிஷன் சுவாமி ஆத்மகனாநந்தாஜி அவர்களும், கலந்து சிறப்பிக்கின்றனர்.

கௌரவ அதிதிகளாக நுவரெலியா மாநகர சபை பிரதி மேயர் கௌரவ பொன் சிவராஜா அவர்களும், அம்பகமுவ பிரதேசசபை தலைவர், உள்ளிட்ட உறுப்பினர்கள், நுவரெலியா பிரதேச சபை தலைவர், உள்ளிட்ட உறுப்பினர்கள், ஹங்குரங்கெத்த, கொத்மலை, ஹட்டன், வலப்பனை, தலவாக்கலை மாநகரசபை தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் மத்திய மாகாண சபை உறுப்பினர்கள், மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

இரண்டாம் நாள் நிகழ்விலே பிரதம அதிதிகளாக கௌரவ அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களும், மத்திய மாகாண ஆளுனர் கௌரவ மொன்டி கொபல்லாவ ஆகியோரும் கலந்து சிறப்பிக்கின்றனர். விசேட அதிதிகளாக மத்திய மாகாண முதலமைச்சர் கௌரவ வசந்த அலுவிகார, இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் கௌரவ தி.மகேஸ்வரன், கண்டி உதவி இந்தியத் தூதுவர் அதிமேதகு அச்சல் கே. மல்ஹோத்ரா, நுவரெலியா மாநகர சபை நகர பிதா கௌரவ சந்தனலால் கருணாரத்ன மற்றும் கௌரவ அதிதிகளாக பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஆர். யோகராஜன், கௌரவ எம்.எஸ்.செல்லசாமி அவர்கள் மற்றும் வணக்கத்துக்குரிய சுவாமிஜிகள், பேராசிரியர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

நாட்டில் அமைதியான சூழ்நிலையில் தமிழ் மக்கள் அமைதிப் பெருமூச்சு விடும் இவ்வேளையிலே இவ்விழாவின் கருப்பொருளாக பாரதியாரின் **'வையத் தலைமை கொள்வோம்'** என்ற அடியினை எடுத்தோம். தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஊர்வலத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். நுவரெலியா நகரவாழ் மக்கள் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் கோயில் மன்ற உறுப்பினர்கள் கலைஞர்கள் என பெருவாரியான மக்கள் பல்வகையான கலை நிகழ்ச்சிகளையும் அலங்கார ஊர்திகளையும் வழங்கி தமது ஆற்றல்களை வெளிக்கொணருவதோடு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது பாரம்பரியங்களை கலை வடிவில் வெளிப்படுத்த இவ்விழா சிறந்த களமமைத்து கொடுக்கவிருக்கின்றது.

இவ்விழாவின் சிறப்பான நிகழ்வாக அமைவது விருது வழங்கும் நிகழ்வாகும். **சாதனையாளர்கள் 23** பேருக்கும், **கலைஞர்கள் 6** பேருக்கும், **நூல்கள் 4** பேருக்கும், **விசேட விருதுகள் 13** பேருக்கும் என **46 விருதுகள்** வழங்கி அனைத்து கலைஞர்களையும் கௌரவிக்கவிருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவிலே நுவரெலியா பிரதேச பாடசாலைகள் தமது பாரம்பரிய பண்பாட்டம்சங்களை வெளிக்கொணரும் வகையிலே பல கலை நிகழ்ச்சிகளை விழாவின் முதலாம் நாள் வழங்கி அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினர். இரண்டாம் நாள், இலைமறைகாயாய் விளங்கும் இசை நடனக் கலைஞர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையிலே தமது திறமைகளை வெளிக்கொணர வழிசமைத்துக் கொடுக்கின்றது. மலையகத்திலே அழிந்து வரும் அருமையான கலை வடிவங்கள் வரலாற்று ஆவணங்களாக மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மற்றும் இவ்விழாவின் சிறப்பம்சமாக **மலையகத் தமிழர் வரலாறு, சாகித்திய விழா சிறப்பு மலர்** என்பன வெளிவருவது குறிப்பிடத்தக்கது. புத்தகம் ஓவியம் ஆடைகள் மற்றும் சிறு கைத்தொழில் திணைக்களம் சமூகசேவைகள் மற்றும் கால்நடை அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றின் கண்காட்சிகளும் இவ்விழாவிற்கு மேலும் மெருகூட்டுகின்றன. இவ்விழா சிறப்புற எனக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

## தமிழ் சாகித்திய விழா
## நுவரெலியா புதிய நகர சபை மண்டபம்
## 2003.ஒக்டோபர் 11,12ம் திகதிகளில்

### விருது பெறுவோர் விபரம்

✳ **சாதனையாளர்கள்**

01. திருமதி டாக்டர் ஆர். சாவித்திரி
02. திரு எஸ். ஜோசப்
03. திரு சி. நடராஜா
04. திரு வி. விஜயசுந்தரம்
05. திரு பி. சுரேஷ்
06. திரு எம். இந்திரஜித்
07. திரு ஆர் செல்வராஜா
08. திருமதி எஸ். ராஜேஸ்வரி
09. திரு பி. சுப்ரமணியம்
10. திரு பி. ராஜரட்ணம்
11. கௌரவ எல். நேருஜி
12. திரு கா. சந்திரதாஸ்
13. திரு எஸ். வி. நவரட்ணம்
14. திரு எல். விஜயநாதன்
15. திரு பி. நடராஜா
16. திரு எஸ். சுப்ரமணியம்
17. இந்துக் கலாசார பேரவை, நுவரெலியா
18. உதவி இந்தியத் தூதரகம், கண்டி
19. எஸ். ஓ. எஸ். சிறுவர் நிலையம், நுவரெலியா
20. திரு கே. ஜீவராஜா
21. சந்திரசேகர சுவாமிகள், தெஹிவளை ஆஞ்சநேயர் கோயில்
22. சுவாமி தந்திரதேவா
23. திரு டீ. சி. ஆர். ராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

※ **கலைஞர்கள்**

01. திருமதி இ. ஷாமினி
02. திருமதி அ. தேவகி
03. திருமதி ஆர். குகாநந்தினி
04. திருமதி மாணிக்கவல்லி
05. திரு பி. திருநாவுக்கரசு
06. திரு பி. சி. கே. இராஜேந்திரன்

※ **சிறப்பு விருதுகள்**

01. திரு எம். எம். யூசுப்
02. திரு கே. கோவிந்தராஜ்
03. கலாநிதி துரை மனோகரன்
04. திரு எஸ். பி. பிரேமநாதன்
05. திரு எஸ். கனகமூர்த்தி
06. திரு டன்சன் செல்வராஜ் சாமுவேல்
07. திரு ரமேஷ் செல்வராஜா
08. திரு எஸ். இராமச்சந்திரன்
09. திரு டி. வி. மாரிமுத்து
10. செல்வி பரமேஸ்வரி
11. செல்வி எஸ். கணபதிப்பிள்ளை
12. திரு அருணாசலம் அன்னாதுரை
13. திரு லச்சுமனன் நாகலிங்கம்

※ **எழுத்தாளர்கள்**

01. திரு சிக்கன்னராஜு
02. திரு எஸ். முரளீதரன்
03. திரு கே. மகாலிங்கம் ( மொழிவரதன் )
04. திரு எம். வாசகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜேரட்ணம் அல்பர்ட் விஜேரத்தினசிங்கம்

*'தோன்றின் புகழொடு தோன்றுக அ∴து இலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று'*

என்கிற திருவள்ளுவன் வாக்குக்கேற்ப பிறந்தபோதே பெரும் செல்வாக்கான குடும்ப பின்னணியைக்கொண்டவராக விளங்கினார் அமரர் விஜேரத்தினசிங்கம். மலேசியாவில் 02-10-1905 ஆம் ஆண்டு பிறந்த இவர் கோலாலம்பூர் நகரிலே தனது கல்வியினைத் தொடர்ந்தார். பின்னர் இலங்கை திரும்பிய அவர் கொழும்பு கிறிஸ்து தேவ வித்தியாலயத்தில் பாடசாலை ஆசிரியராக பணி புரிந்தார். இலங்கையின் முதல்தர சாரணர் அணியை உருவாக்கி சாவதேச அளவில் கலந்துக்கொள்ளச் செய்து இலங்கைக்கு பெருமை சேர்த்தார்.

நுவரெலியா மாநகர சபையின் உறுப்பினராக இருந்த ஜரின் கியூஜின் மெண்டலின் என்கிற பெண்மணியை தன் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்ட விஜேரத்தினசிங்கம் 1945-1950 காலப்பகுதிகளில் ஹோலி டிரினிட்டி கல்லூரியில் அதிபரானார். இவருடைய காலத்தில் கல்வி அபிவிருத்திப் பணிகள் மிகவும் வேகமாகவும் சிறப்பாகவும் முன்னெடுக்கப்பட்டது என்றும் நினைவிலிருக்கும் ஒரு விடயமாகும். இன்றைய நுவரெலியாவின் புகழ் பூத்த கல்விமான்கள் அரசியல்வாதிகள் அனைவருமே இவரிடம் கல்வி பயின்றவர்கள் என்றால் அது மிகையாகாது.

பின்னர் நுவரெலியா மாநகரின் 3 ஆவது நகர பிதாவாக பதவியேற்றபின்னர் பல்வேறு சமூக நலப் பணிகளை மேற்கொண்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். 'நுவரெலியாவின் மாமன்னர்' என்ற அடைமொழிகொண்டு மக்கள் போற்றும் அளவுக்கு மக்கள் தொண்டனாக மாறி சேவையாற்றினார். 1954 ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசி இரண்டாவது எலிசபத் மகாராணி இலங்கைக்கு முதல் விஜயம் செய்தபோது மாநகர முதல்வராக இருந்து வரவேற்பு நிகழ்வினை திறம்படச் செய்தார். இதன்மூலம் நுவரெலியா நகருக்கு இங்கிலாந்து நாட்டின் உதவிகள் நிறையக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. தமிழ், சிங்கள மக்களின் நல்லுறவுக்குப் பாலமாக விளங்கிய இவருடைய காலத்திலேயே வீடமைப்புத் திட்டங்கள் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது.

நுவரெலியா வாழ் மக்களின் ஏகோபித்த நன்மதிப்பைப் பெற்றவரான விஜேரத்தினசிங்கம் அவர்களின் பெயரால் மத்திய மாகாண சாகித்திய விழாவின்போது ஒரு அரங்கம் நிர்மாணிக்கப்பட்டிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் விடயமாகும். 2003 மே மாதம் மறைந்த விஜேரத்தினசிங்கம் என்றும் மக்களின் மனங்களில் வாழ்ந்து கொண்டிருப்பார் என்பது திண்ணம்.

***இரா. பாலகிருஷ்ணன் ஜே.பீ.***
நுவரெலியா மாநகர சபை உறுப்பினர்,
சாகித்திய விழா ஏற்பாட்டுக் குழு தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுவரெலியா மாநகர சபை உறுப்பினாகள்

| | | |
|---|---|---|
| ஜே.ஜே. கனகரட்ணம் | நகர பிதா | 1949-1950 |
| எஸ்.கே. சிவலிங்கம் | உப நகர பிதா | 1949-1950 |
| வி.ஏ. விஜேரட்ணசிங்கம் | நகர பிதா | 1952-1954 |
| பீ. ஆரோக்கியசாமி | உப நகர பிதா | 1952-1954 |
| வீ. புத்திரசிகாமணி | உப நகர பிதா | 1983-1987 |
| எஸ். சதாசிவம் | உப நகர பிதா | 1988-1991 |
| கே. விவேகாநந்தன் | உப நகர பிதா | 1991-1997 |
| எல். நேருஜி | உப நகர பிதா | 1997-2002 |
| பீ. சிவராஜா (தற்போதைய) | உப நகர பிதா | 2002.04.19 லிருந்து.. |

## மாநகர சபை தமிழ் உறுப்பினர்கள்

இரா. பாலகிருஷ்ணன்

கி. சந்திரசேகரன்

டி. மாதவன்

### உயிர்க்கும் நாட்களும்... மறிக்கும் நாட்களும்...

மேற்கே நிமிர்ந்த மலைகளின்
முதுகுகள் கோதி,
சூரியக் கண்கள் துயின்றிடும்
நிமிஷங்கள் வரைக்கும்
தேயிலைத் தலையினில்
அழுந்திய கரங்களின்
கொய்தல்களில்
கசங்கிய தளிர்களின்
சுகந்தம் -
மாயமாய் போர்க்கும்!
அதை
இராத்திரி பொழுதினின்
சீழ்க்கைச் சுவாசம்
வேகமாய் உரிக்கும்!

பாரக் கூடையின் கயிறு
படிந்து தலையில் பதிந்த
தடங்களைத் தேடித் தேடி
வருடும்
'சொரத்து'ப் போன விரல்கள்!

முகத்தின் முகவரி சொல்ல
முன்னே துருத்திய
பற்களின் உரசல்கள்
முத்தமெனப் பொருள்
கொள்ளச் சொல்லும்!

விறைத்த குன்றுகளை
தடவித் தின்ற
விழிகளுக்குக் கீழே
சமவெளியென விரியும் -
அவன் மேனி.

பூப்புக்கு முதலே
போட்டுச் சுமக்கின்ற
கூடையின் புடைப்பில்
குழிந்த முதுகினில்
புதையும் முகத்தை
விடிந்ததும் மீண்டும்
தொடரும்
வேதனை நினைவுகள்
குத்தும்!

மின்னற் கணமே ஆகிய
புணர்தல் முடித்து
புரளும் இரண்டு
ஆடைகள் மூடிய
எலும்புக் குவியல்களின்
சலன உதிர்வு
அந்தகாரத்தே ஆழ்ந்த
மௌனத்தை
சிணுக்கி மீண்டும்
முடக்கும்!

மலைகளின் பரப்பை
விளைந்திடும் தேயிலை
எடைகளினால்
அளந்தபடி நகரும்
இடம்பெயர் பரம்பரையின்
ஒன்றரை நூற்றாண்டு
பாதையில்
கவிதை வரிகள்
இறந்தன!

கண்ணீர்த் துளிகள்
சிவந்தன!

உயிர்க்கும் நாட்களும்
மறிக்கும் நாட்களும்
ஒன்றே என்பதாகி
தலைகீழ் மலையாய்
தவித்தபடி
துடிக்கும்
முக்கோண இதயம்!

சு. முரளீதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

677729644

# மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா குடும்பத்தினர்

**விழாக் குழு**

தலைவர் : கௌரவ வே. இராதாகிருஷ்ணன், கல்வி அமைச்சர், மத்திய மாகாண சபை
உப தலைவர் : கௌரவ ஆர். பாலகிருஷ்ணன், நுவரெலியா நகர சபை உறுப்பினர்
செயலாளர் : திரு வி. சாந்தகுமார், இணைப்பாளர், இந்து கலாசார அலுவல்கள், மத்திய மாகாண கல்வி அமைச்சு

**விழாக் குழுவினர்**

கௌரவ துரை மதியுகராஜா, தலைவர், ம.மா.ச. கௌரவ எம். சிவலிங்கம், உபதலைவர், ம.மா.ச.
கௌரவ எஸ்.ஏ. கந்தசாமி, ம.மா.ச.உறுப்பினர் கௌரவ எம். சிவஞானம், ம.மா.ச.உறுப்பினர்
கௌரவ எம். நடராஜபிள்ளை, ம.மா.ச.உறுப்பினர்
கௌரவ எஸ். வெள்ளையன், ம.மா.ச.உறுப்பினர்
கௌரவ கே. கோவிந்தராஜா, ம.மா.ச.உறுப்பினர்
கௌரவ பொன் சிவராஜா, துணை நகர பிதா, நுவரெலியா
கௌரவ கே. சந்திரசேகரன், துணை நகர பிதா, நுவரெலியா
கௌரவ ஆர். சரவணன், கண்டி மா.ந.ச.உறுப்பினர்
திரு டபிள்யூ.பி. ஏக்கநாயக்க, செயலாளர், ம.மா.கல்வி அமைச்சு
திரு எச்.ஏ. கருணாதிலக்க, கணக்காளர், ம.மா.கல்வி அமைச்சு
திரு எம். துரைசாமி, பிரத்தியேகச் செயலாளர், ம.மா.கல்வி அமைச்சு
திரு ஆர். முத்தராமன், இணைப்புச் செயலாளர், ம.மா.கல்வி அமைச்சு
திரு மாரியப்பன், பிரத்தியேகச் செயலாளர், விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சு
திரு எஸ். முரளிதரன், தலைவர், ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி
திரு சீ. நடராஜா, அதிபர், அசோக்கா வித்தியாலயம், கண்டி
திருமதி என். பத்மநாதன், உ.க.ப., நுவரெலியா
திருமதி எஸ். கணபதி, உ.க.ப.
திரு டி. பெரியசாமி, நுவ.கல்வி வலயம்
திரு விஜயானந்தன், சீடா வள நிலையம்
திரு விஸ்வநாதன், சீடா வள நிலையம்
திரு சாரல்நாடன், கொட்டகலை
திரு டி. பெரியதுரை, கொட்டகலை
திரு எஸ். அதிமணி, தலவாக்கலை
கௌரவ ஜீ. ராஜகுலேந்திரா, ம.மா.ச.உறுப்பினர்
கௌரவ எஸ். அருள்சாமி, ம.மா.ச.உறுப்பினர்
பேராசிரியர் எம்.எஸ். மூக்கையா
கலாநிதி துரை மனோகரன்
திரு பி. இராஜநாதன்
திரு கருப்பையா, ரத்தோட்டை
திரு ஏன். பாலசுந்தரம்
திரு எஸ். ராமச்சந்திரன், நுவரெலியா
திரு எம். சந்திரமோகன், நுவரெலியா
திரு பரமசோதி, கொட்டகலை

**உபகுழு**

அதிபர், பரிசுத்த திரித்துவக் கல்லூரி
அதிபர், புனித சேவியர் கல்லூரி
அதிபர், நல்லாயன் மகளிர் கல்லூரி
அதிபர், நல் இளைப்பாற்றி மகளிர் கல்லூரி
அதிபர், பூண்டுலோயா த.ம.வி.
திரு ஜெயராமன், மாவட்டத் தலைவர், இ.தொ.கா.
திரு எம். ரங்கராஜ், உ.க.ப.
திரு சுப்பிரமணியம், உ.க.ப.
அதிபர், பீட்றோ த.ம.வி.
அதிபர், கந்தபொல மெதடிஸ் த.ம.வி.
அதிபர், கோட்லொட்ஜ் த.ம.வி.
அதிபர், ரம்பொட த.ம.வி.
அதிபர், லபுக்கலே த.ம.வி.
திரு எஸ். கோபிநாத், உ.க.ப.
திருமதி வசந்தி, உ.க.ப.
திரு பி. வேலுசாமி
திரு ஜே.எஸ்.ஜே. ஜோசப், உதவிச் செயலாளர் (கல்வி), ம.மா.கல்வி அமைச்சு

**ஊர்வலம்**

திருமதி என். பத்மநாதன், உதவிக் கல்விப் பணிப்பாளர்

**நிகழ்ச்சி மண்டப ஒழுங்கு**

கௌரவ ஆர். பாலகிருஷ்ணன், நுவ.மா.ந.ச.உறுப்பினர்
திரு கே. சுந்தரமூர்த்தி, இணைப்பாளர், ம.மா.கல்வி அமைச்சு
திரு எஸ். அற்புதராஜா
திருமதி ச. கணபதி, உ.க.ப.

**நகர அலங்காரம்**

கௌரவ பொன் சிவராஜா, பிரதி மேயர், நுவ.மா.ந.ச.
கௌரவ ஆர். பாலகிருஷ்ணன், நுவ.மா.ந.ச.உறுப்பினர்

**நூல் வெளியீடு - தமிழர் வரலாறு**

திரு சாரல்நாடன், கொட்டகலை

**நூல் வெளியீடு - சாகித்திய விழா மலர்**

திரு எஸ். முரளிதரன், தலைவர், ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி
திரு கே.எம். ரசூல், ம.மா.கல்வி அமைச்சு
செல்வி எம். கிருஷ்ணவேணி, ம.மா.கல்வி அமைச்சு
செல்வி எஸ். யோகமலர், ம.மா.கல்வி அமைச்சு
திருமதி க. கங்காதரன், ம.மா.கல்வி அமைச்சு
திருமதி கே. சோமசுந்தரம், ம.மா.கல்வி அமைச்சு
திருமதி ஆர்.எம்.கே. ஏக்கநாயக்க பண்டார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, எளிமையின் சின்னம், அமைதியின் இருப்பிடம், சிரித்த முகம், அனைவரையும் கவர்ந்திடும் பேச்சு, நல்லதை செய்ய வேண்டும் என்ற வேட்கை, எல்லோரையும் கட்டி அணைத்துச் செயலாற்றும் பண்பு, திறமைகள் அனைத்தும் ஒருங்கே அமைந்த அறிவுச்சுடர்.

இத்தனைக்கும் சொந்தக்காரர்...

மாண்புமிகு அமைச்சர்
**வே. இராதாகிருஷ்ணன்**

# 'வையத் தலைமை கொள்வோம்'

**- பாரதி -**



Digital Artwork + Concept by Jayampathi B. Heenkenda
Printed at ***Eastern Computer Printers*** *0777808778, 08-404288*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org